

விடுதலை
தந்தை பெரியார் 89ம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்

திருத்துரைப்பூண்டி
கூட்டுறவு அர்பன் பாங்க் லிமிடெட்,

நெ. 603.

திருத்துரைப்பூண்டி

தொலைபேசி எண். 21

கூட்டுறவே ! நாட்டுயர்வு !

தலைவர் திரு. என். எஸ். இராமலிங்கம், பி ஏ,
(Dip. in Pol. & Pub. Admn.)

அதிகாரம் பெற்ற மூலதனம் (Authorised Share capital	5,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (Paid-up share Capital)	2,17,715
ஷேம நிதி ((Reserve Fund)	1,10,793
இதர நிதிகள் (Other Reserves)	1,36,494
அலுவல் நிதி (Working Capital)	14,02,962
டிபாசிட் (Deposits)	9,20,751
கடன் நிலுவை (Loan outstanding)	8,96,401

30—6—67 முடிய ஆண்டின் மொத்த வரவு-செலவு
ஒன்றேகால் கோடி ரூபாய்க்கு மேலாகிறது.
தமிழ் நாட்டின் முக்கியமான எல்லா இடங்களுக்கும்
டிராஃப்டுகள் வழங்கப்படுகின்றன.
கீழ்க்கண்ட விகிதங்களில் பிக்சட் டிபாசிட்டுகள்
ஏற்றுக்கொள்ளப்படும்.

6 மாதம் வரை	6%
6 மாதத்திற்கு மேல் 12 மாதம் வரை	6½%
12 மாதத்திற்கு மேல் 36 மாதம் வரை	7%
36 மாதத்திற்கு மேல்	7½%
கால் டிபாசிட் ஒரு வார நோட்டீஸ்	5%

கரண்ட், சேவிங்ஸ் தினசரி டெபாசிட், ரெக்கரிங் டெபாசிட்
ஏற்றுக்கொள்ளப்படும்.


8800க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பாங்கின் மூலம்
பயனடைகின்றனர்.

எங்கள் சேவை மேலும் விரிவடைய பொதுமக்கள் ஆதரவையும்
ஒத்துழைப்பையும் கோருகிறோம்.

மக்கள் தேவைக்கேற்ற சேவையே எங்கள் குறிக்கோள்.

ஏனைய விவரங்களுக்கு பாங்கிற்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பி. கணபதி, பி. ஏ.,
காரியதரிசி,



காணிக்கை

பன்னெடுங்காலமாக, பழைமையின் பாதுகாப்புச் சின்னமாக நிலவும் சாதி, கடவுள், மத, மூட நம்பிக்கைகள், பார்ப்பன 'மேல்சாதி' ஆதிக்கம்--ஆகிய கொடிய நோய்களால் தாக்குண்டு புரையோடிப்போன தமிழ்ச் சமூகத்தை அறிவியகக கண்டு, தமது 'அறுவை மருத்துவம்' மூலம் தேற்றிட, அஞ்சாது-அயராது உழைத்திடும நமது ஆசானாம அய்யா அவர்கள், ஆண்டுமாறும, தமது உழைப்பின் பயனை—லட்சிய வெற்றிகளை—அறுவடை செய்தவண்ணம் உளளார்கள்; அந்தப் பெரு மகிழ்ச்சியே அவரது ஆயுளை வளர்க்கும 'அறபுத சக்தி' யாகும!

இந்திய வரலாற்றில் எங்குமில்லாப் புதுமையாக, புதுமையிலும் புதுமையாக, முற்றிலும் பகுத்தறிவுவாதிகளைக் கொண்ட அமைச்சரவை தமிழகத்தில் பூத்திடடது மட்டுமல்ல! புளகாங்கிதத்தோடு, அதனை நமது அருமைத்தலைவர் அய்யா அவர்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன் என மதிப்பிற்குரிய தமிழக முதல்வர் அவர்கள் தமிழக சட்டமன்றத்தில செய்த முழககம, தமிழர்தம் எழுச்சிவரலாற்றில் ஏற்றமிகு பொனனேடாகும!

இனவழிபபட்ட ஒருமை, இனி, எட்டாக கனி அல்ல!

அய்யாயிரம் ஆண்டுகளாக 'அம்மி'யாய் ஆக்கப் பட்ட தமிழினத்தைதமதுஅரைநூற்றாண்டு தொடாந்த தொண்டினாலே தூக்கி நிறுத்திய தூய தலைவராம நமது தந்தை அவர்களுக்கு இம்மலரை எளிய, சிறு காணிக்கையாக்குகிறோம.

நேரத்தின் நெருக்கடிக்கு இடையேயும் மணம் வீசும் தமது சிந்தனை மலர்களை, தந்துதவிய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் எமது ஆழமான நனறி.

வாழ்க பெரியார்! வளர்க புது சமுதாயம்!!

ஆசிரியர்

17-9-1967 'விடுதலை'

பொருளடக்கம்

1.	வாழ்த்துச் செய்திகள் ...	11
2.	பிறந்த நாள் விண்ணப்பம்–தந்தை பெரியார் ...	13
3.	அந்த 'வசந்தம்'—தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாதுரை ...	17
4.	மறக்க முடியாத மூன்று நாட்கள்—சட்டமன்றத் தலைவர் கி. பா. ஆதித்தனார் ...	20
5.	அரசியல் சட்டம் பூச்சாண்டி—தந்தை பெரியார் ...	22
6.	பெரியார் பரம்பரை—பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி ...	25
7.	திருவள்ளுவரும்—பெரியாரும் —குன்றக்குடி அடிகளார் ...	27
8.	வரகை சூடிய வைரநெஞ்சம்-என். வி. நடராசன் எம். எல். சி. ...	29
9.	இன்றைய காங்கிரஸ் நிலை—தந்தை பெரியார் ...	33
10.	சீர்திருத்தயுகத்தின் சிற்பி—சுகாதாரத்துறை அமைச்சர் எஸ் ஜே. சாதிக்பாட்சா ...	39
11.	ஓர் அந்தணர்—சாலை இளந்திரையன் ...	41
12.	நான் காணும் பெரியார்—டாக்டர் ரத்தின வேலு சுப்பிரமணியம் ...	47
13.	தமிழகம் அன்றும் இன்றும்—ஈ. வெ. கி. சம்பத் ...	49
14.	பெண்கள் மணவயதை உயர்த்தலாமா?—மத்திய சுகாதார அமைச்சர் டாகடர் எஸ். சந்திரசேகர் ...	51
15.	கடவுள் பக்தி—தந்தை பெரியார் ...	57
16.	பெரியாரின் சமுதாயத்தொண்டு ஒரு மதிப்பீடு—பி. சி. கணேசன் ...	59
17.	நாம் எதில் விடுதலை பெற்றிருக்கிறோம்?—தந்தை பெரியார் ...	61
18.	சர்வ சக்தியுள்ள கடவுள்—தந்தை பெரியார் ...	63
19.	பெரியார் இலக்கம்— எஸ். இராமநாதன் ...	65
20.	எனது நிலை—தந்தை பெரியார் ...	70
21.	மார்க்சீயவாதியின் கண்ணோட்டத்தில் பெரியார்—ஏ. எஸ். கே. அய்யங்கார் ...	75
22.	பெரியாரும்–தாகூரும்—பிவியார் ...	78
23.	இறைவிழ்படலம்—திருவாரூர் கே. தங்கராசு ...	81
24.	வகுப்புவாரி உரிமையும் நீதிமன்றங்களும்— பி. ரெங்கசாமி ...	85
25.	The Lion of Erode—A. P. Janarthanam	89
26.	தமிழகத்தின் பொதுச் சொத்து—திரு. க. பா. பழநி ...	91
27.	சமுதாயத்தின் கலங்கரை விளக்கம்-நெ. து. சுந்தரவடிவேலு ...	97
28.	எம் தலைவர்போல் எவரேஉண்டு?—பாவலர் பாலசுந்தரம் ...	103
29.	88—89க்கிடையே தந்தை பெரியார் சுற்றுப்பயண பட்டியல் ...	105
30.	மனிதராக வாழும் பெரியார்—பெ. எதிராஜ் எம். எல். சி. ...	112
31.	பக்தியால் அல்ல புத்தியால் ஆனது—சி. பி. சிற்றரசு ...	117
32.	கடந்த ஆண்டில் கழக டைரி ...	121
33.	கடவுள் ஒழிந்தால் சாதி ஒழியும்—சாந்த்ராம் ...	129
34.	வளர்க கல்விப்புரட்சி—பொன்னிலான் ...	132
35.	வள்ளுவரைப்பற்றி பார்ப்பனர் புரட்டு—சு. ஒளிச்செங்கோ ...	136
36.	இன்னுமா அந்தக் கிளிப்பிள்ளைப் பாடம்—கி. வீரமணி ...	137
37.	தொண்டு செய்வோம்—கலி. பூங்குன்றன் ...	141
38.	தெய்வமும் திருவள்ளுவரும்—சு. தமிழ்மறை ...	142
39.	சோவியத் சாதனையை அன்றே பரப்பியவர்—கே. டி. கே. தங்கமணி ...	144
40.	சுயமரியாதைக் களஞ்சியம்—தந்தை பெரியார் ...	145
41.	என்று தொலையும் இந்தச்சாதி?—திருமங்கலம் மணிமாறன் ...	148
42.	வீண் விரயம் தடுக்கப்படுமா?—பொருளாதாரன் ...	150
43.	செயற்கரிய செய்த செம்மல்—செல்வி பொன். பகுத்தறிவு ...	153
44.	உங்களுக்குத் தெரியுமா? ...	157
45.	மனிதன் கடவுளை நம்புகிறானா?—தந்தை பெரியார் ...	161

ஓவியம்: ஆர். டி. அரசு—முகப்புவண்ணப்படம் ஏ. சுந்தரம்

கு. காமராஜ்

போன்: 441373
8 திருமலை பிள்ளை ரோட்,
தி. நகர், சென்னை-17

14.8.67

அன்புடையீர்,

பெரியார் அவர்களின் 89-ம் ஆண்டு பிறந்தநாள் விழாவை யொட்டி மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி.

பெரியார் சமுதாயத் தொண்டு செய்து புதிய உணர்ச்சியை உண்டாக்கி வருகிறார். பெரியார் சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழகத்திலே சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கே பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். அன்னார் சமுதாயத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் தாழ்ந்த மக்களின் முன்னேற்றமே முக்கியமென கருதி வருபவர். இந்தப் பணியைத் தொடர்ந்து செய்திட நீண்ட நாட்கள் வாழ வேண்டுகிறேன்.

தங்கள்புள்ள,

காமராஜ்

(கு. காமராஜ்)

ஓய்வுபெற்ற இந்திய பிரதம நீதிபதி
ஜஸ்டிஸ் கே. சுப்பாராவ் வாழ்த்து

கே. சுப்பாராவ்

7, ரெஸ்ட் அவுஸ்
கிரசென்ட்
பெங்களூர்-1
28-8-67

அன்பார்ந்த திரு. வீரமணி,

பெரியார் ஈ வெ. ராமசாமி அவர்களது 89வது ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு தாங்கள் ஒரு சிறப்பு மலரை வெளியிடுவது அறிய மகிழ்ச்சி அடைகிறேன்.

சமூக நீதிக்காக, சுயநல மற்ற முறையில் நீண்ட நெடுங் காலமாக அவர் ஆற்றி வரும் தொண்டுதான், இளைஞர் சமுதாயத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதாகும்.

நாட்டுத்தொண்டில் திளைத்த அவர், மேலும் பல்லாண்டு வாழ்க!

தங்கள் உண்மையுள்ள,
கே சுப்பாராவ்.

செ. மாதவன்
சட்டத்துறை அமைச்சர்

செயின்ட்ஜார்ஜ்
கோட்டை
சென்னை-9
30-8-1967

தந்தை பெரியார் அவர்கள் இன்றளவும் நம்மிடையே இருந்து நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருவது, தமிழர்களுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதையே காட்டுகிறது. அய்யா அவர்களின் அயராத உழைப்பே தமிழ் மக்கள் இன்று எய்தியுள்ள சமூக விழிப்புணர்ச்சிகுக் காரணம். அவர்தம் புரட்சிக் கருத்துக்கள் பழமையைச் சாய்த்து, புதுமையை மலர வைத்துள்ளன. 'இது மட்டும் போதாது; இன்னும் சமத்துவ சமுதாயம் அரும்ப வேண்டும்' என்றுதான் தந்தை பெரியார் அவர்கள் இந்தத் தள்ளாத வயதில் வினாடியும் ஓய்வின்றி உழைத்து வருகிறார், அவர் மேலும் பல்லாண்டு வாழ்ந்து நமக்கு வழி காட்டவேண்டும். தமிழ் மக்கள் அனைவரின் ஒருமனதான எண்ணம் இதுவே.

பெரியார் அவர்களின் 89ம் ஆண்டு பிறந்த நாளையொட்டி 'விடுதலை' சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சியடை கிறேன். மலர் அழகிய முறையில் வெளிவர எனது நல் வாழ்த்துக்கள்.

செ. மாதவன்.

செட்டி நாட்டரசர்
டாக்டர் ராஜாசர் முத்தையா செட்டியார்

செட்டிநாடு அவுஸ்,
குற்றாலம்
12-8-67

அன்புள்ள அய்யா,

தந்தை பெரியார் அவர்கள் 89வது வயதை அடைந்திருக் கிறார்கள் என்பதைக் கேட்க மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

'விடுதலை' ஏடு ஒவ்வொரு முறையும் பெரியார் அவர்கள் பிறந்ததின விழாக்களை சிறப்பு மலர் வெளியிட்டு அவர்களையும், அவர்கள் தொண்டுகளையும் பாராட்டி சிறப்பிக்கிறது. இது மிகவும் போற்றத்தக்க விஷயம், பிறந்ததுமுதல் இன்றுவரை தமிழ், தமிழ் மக்கள், தமிழ்நாடு—இவைகளின் சேவையே தம் குறிக் கோளாகக் கொண்டு தம் வாழ்வையே அர்ப்பணித்து வரும் தந்தை பெரியார் அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய கடமைகளில் ஒன்றாகும்.

தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள பெருமுயற்சி வெற்றி யடைய வேண்டுமாயும், விழா மலர் 'விடுதலை' நாளிதழில் சூடிப் பிரகாசிக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
முத்தையா செட்டியார்.



பிறந்தநாள் விண்ணப்பம்

எனக்கு இன்று முதல் 89வது வயது தொடங்குகிறது. என் வாழ்வு எவ்வளவோ கவலை, தொல்லைத் துன்பங்களுக்கு, ஆட்பட்டதாய் இருந்தாலும் சராசரி மக்கள் வாழ்வுக்குக் குறைந்ததாய் இல்லாமல் மேம்பட்ட வாழ்வாகவே நடந்திருக்கிறது.

நான் என்றென்றும் சுதந்தர எண்ணமுடையவன்

நான் சிறுவயது முதற்கொண்டே சுதந்திர எண்ணமுடையவனாகவும், நான் சொல்கிறபடி மக்கள் நடக்கவேண்டுமென்கின்ற உணர்ச்சியுள்ளவனாகவுமிருந்தே வாழ்ந்திருக்கிறேனே ஒழிய மற்றொருவர் சொல்கிறபடி நடக்கவேண்டுமென்கிற எண்ணமற்றவனாகவே இருந்திருக்கிறேன். இன்றைக்கும் அப்படியே இருக்கிறேன்.

எனது சரித்திரத்தில் எனக்கு தலைவனே இருந்ததில்லை.

எனது பத்தாவது வயதில் பிரைமரி நான்காவது வகுப்பு பாஸ் செய்துவிட்டு வியாபாரத் துறையில் எனது தகப்பனார் மண்டிக் கடையில் கையாளாக ஆகி விட்டேன்.

எனது குழந்தைப் பருவ வளர்ச்சி

என் குழந்தைப் பருவத்தில் என் தாயாருக்கு உள்ள இரண்டு குழந்தைகளில் நான் இரண்டாவது குழந்தையாக இருக்கும்போது என்னை என் தகப்பனாருடைய சிறிய தாயாருக்கு வளர்த்துக்கொள்ளும்படி 'தத்து'' போல் கொடுத்துவிட்டார்கள். அதனால் நான் ஒரு அடங்காப்பிடாரியாகவும், தறுதலை என்று சொல்லும்படியாகவும், சில சமயங்களில் ஒருநாள் இரண்டுநாள்கூட வீட்டுக்கு வராமல் ஊர் சுற்றிக்கொண்டு திரிபவனாகவும் இருந்திருக்கிறேன். அப்போது என் வளர்ப்புத்தாய் நான் என்னைப் பெற்ற தாய் வீட்டிற்குப் போயிருப்பேனோ என்று தேடாமலும், கவலைப்படாமலும் இருந்துவிடுவார்கள்.

எனக்கு நானே தலைவன்

இப்படிப்பட்ட என் சிறுவயதில் இதுபோன்ற சில பையன்கள் சேர்க்கை எனக்குண்டு. அந்தச் சேர்க்கைக் கூட்டத்திற்கு நான்தான் மேலாளாக (தலைவனாக) இருப்பேன். தெரு சுற்றிக்கொண்டு திரிவதில் ஜாதி பார்ப்பதோ, எச்சில், சுத்தம், அசுத்தம் பார்ப்பதோ கிடையாது. எச்சில்பீடியைப் பொறுக்கி வந்து பீடி புகைப்போம், அப்பொழுது குழந்தைகளுக்குச் சாந்தி கழிப்பது என்ற வழக்கம் அதிகம். அமாவாசை, ஞாயிற்றுக்கிழமை வரும் அமாவாசை மற்றும் சில ''விசேஷ'' நாட்களில் சாந்திக் கழித்து அந்த சாந்திப்பண்டங்களை முச்சந்தியில் கொண்டுவந்து கொட்டிவிட்டுப் போய் விடுவார்கள். நாங்கள் அவைகளில் உள்ள பண்டங்களைப் பொறுக்கி எடுத்துவந்து பங்குப் போட்டுக்கொண்டு சாப்பிடுவோம். பத்து வயதாகி கடைக்குக் கையாளாக ஆனவுடன் இந்த நேசமும் பழக்கமும் மறைந்துவிட்டது. என்றாலும், கடைக்கு வருகிறவர்களுடன் பெரிய வாயாடிபோல் எதையாவது பேசி அரட்டை அடிப்பதில் பழக்கம் அதிகமாகி யாரும் என்னை விரும்பும்படி ஆகிவிட்டேன். கடை வியாபாரம் என்றால் அது தரகுமண்டி வியாபாரம். அதாவது கிராமத்து மக்கள், மிளகாய், மஞ்சள், மற்றும் விளைந்த தானியங்கள் முதலியவைகளைக் கொண்டுவந்து எங்கள் கடையில் போட்டு விற்றுக் கொடுக்கச் சொல்லுவார்கள். இதுபோலவே சில கிராம வியாபாரிகளும் கிராமங்களிலும் கிராமச் சந்தைகளிலும் வாங்கிய சரக்குகளை எங்கள் கடையில் போட்டு விற்றுக்

கொடுக்கச் சொல்லுவார்கள். இப்படியாக ஒருநாளைக்கு சராசரி இருபது பேரி முப்பது பேர் வருவார்கள். சிலநாளைக்கு அய்ம்பது பேர் கூட வருவார்கள். இவர்களிடம் அரட்டை அடிப்பதுதான் என் ஓழிந்த நேர வேலை. இந்த அரட்டை, எங்கள் கடைக்கும், வீட்டிற்கும் காசு பெற வரும் பக்தர்கள், புலவர்கள், பாகவதர்கள், சன்யாசிகள், இவர்களிடமும் அவர்கள் வேஷத்தையும், அவர்கள் பேசும் விஷயங்களையும் பற்றி கேலி செய்யும்படியும் வளர்ந்துவிட்டது.

எனக்குள் நான் செய்துகொண்ட வாதமே என்னைப் பகுத்தறிவுவாதியாக்கியது!

இப்படிப்பட்ட அரட்டையும், வாதமும்தான் 1900லேயே அதற்கு முன்பே என்னைப் பகுத்தறிவுவாதியாக (நாத்திகனாக) ஆக்கிவிட்டது. அப்படியிருந்தாலும் ஆத்திகமான காரியங்களில் கலந்து கொள்வதில் நான் பின்வாங்குவதில்லை. அதில் ஏற்படும், அதனால் வரும் பெருமைகளை அடைவதில் நான் தவறுவதில்லை.

காரணம் அக்காலத்தில் ஈரோட்டில் எங்கள் கடைதான் பெரிய கடை. எங்கள் வீடுதான் பெரிய வீடு; எங்கள் தகப்பனார்தான் ஊருக்குப் பெரிய மனிதர். ஒரு அளவுக்குப் பணக்காரரும்கூட!

இந்த நிலையில் எல்லா காரியங்களிலும் கலந்துகொள்வதுபோல் ஆத்திகக் காரியங்களிலும் கலந்துகொள்ளுவேன்.

என் முழு முதற்பணி, மூடநம்பிக்கை ஒழிப்பே!

நான் தேவஸ்தான கமிட்டி, செகரட்டரியாக, தலைவனாக 15 ஆண்டு போல் இருந்திருக்கிறேன். அந்தக் கடமைகளிலும் நான் தவறவில்லை. ஆனாலும் மக்கள் மூட நம்பிக்கைகளை ஒழிக்கவேண்டுமென்பதிலும் மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக ஆக்க வேண்டுமென்பதிலும் எனக்கு 1925-ஆம் ஆண்டு முதல் உறுதியான எண்ணமும் ஆசையும் உண்டு. இதற்குக் காரணம் ஆத்திகத்தினால் (கடவுள், மத நம்பிக்கை ஆதிக்கத்தால்) தான் இந்த நாட்டில் ஜாதி (பார்ப்பான் "பிராமணனாய்" வாழ்வதும்) அரசியல் மத ஆதிக்கத்தில் பார்ப்பான் இருந்துகொண்டு சமுதாய வளர்ச்சியையும், அறிவு (விஞ்ஞான) வளர்ச்சியையும் தடைசெய்துகொண்டு இருக்கிறான் என்பதும் எனது உறுதியான எண்ணம் என்பதோடு நான் எந்த ஸ்தாபனம் வைத்திருந்தாலும், எந்தக் கட்சியை ஆதரித்தாலும், யாரோடு சேர்ந்தாலும், யாரை விரோதித்தாலும் அவற்றிற்கெல்லாம் இதுவே காரணம்.

இப்போதும் காங்கிரஸ்காரர் பலரை வெறுக்கிறேன் என்றாலும் தி. மு. க. காரர் பலரை நேசிக்கிறேன் என்றாலும் இதுவேதான் காரணம்.

இந்திய சரித்திரத்திலேயே புத்தன், அசோகன் ஆட்சிக்குப் பிறகு நமது நாட்டுக்கு இன்றுதானே பகுத்தறிவாளர் (நாத்திகர்) ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. இதை ஆத்திகர் எதிர்க்கலாம். ஆனால் பகுத்தறிவாளர் (நாதிகர்) என்பவர்களின் கடமை என்ன? அரசியல் குறை எலலா ஆட்சியிலும் நடக்கும்

அரசியல் "குற்றம் குறை" என்பது யாருடைய ஆட்சியிலும் எந்த அளவுக்காவது நடந்துதான் தீரும்.

அக்காலத்தில் ஜஸ்டிஸ் (திராவிடர் கழக) ஆட்சியைக் காங்கிரஸ்காரர்கள் எப்படி யெப்படி யெல்லாம் எதிர்த்தார்களோ ("தாலி யறுத்தார் இராமசாமி முதலியார்" என்று சொல்லி) அப்படியெல்லாம இப்போதும் சொல்லுவார்கள்; எதிர்ப்பார்கள். தப்பு பிரச்சாரம் செய்வார்கள். நல்ல காரியம் எதையும் செய்யவிடாமல் தடுப்பார்கள்; கலகம் குழப்பம் செய்வார்கள் நமது மக்களுக்கு அவற்றை உணரும் சக்தியில்லை; இருக்காது என்றாலும் இதில் சுயமரியாதை இயக்கத்தார். திராவிடர்கழகத்தார் கடமை என்ன வென்பதை நல்லவண்ணம் சிந்தித்து நடந்துகொள்ளவேண்டும்.

காங்கிரஸ்பிரசாரமுறை மாறவேண்டும்!

இந்தியாவில் சரிபகுதி காங்கிரசிற்கு எதிர்ப்பாகிவிட்டது. என்றாலும் காங்கிரசார் மக்களைத் தங்கள் பக்கம்திருப்ப மக்களிடம் பிரசாரம் செய்வதை விட்டு விட்டு எதிர்ப்பு ஸ்தாபனங்களை அழிக்கப்பாடுபடுகிறார்கள். இது "தும்பை விட்டு விட்டு, வாலைப் பிடிக்கிற கதை"யாகத்தான் முடியும். காங்கிரசார் தங்களைப் பகுத்தறிவுவாதி

கள் என்று காட்டிக்கொள்ளாதவரை நாம் எப்படி இன்று காங்கிரசை ஆதரிக்க முடியும்?

சு-ம, தி. க.வை எதிர்த்தால், தி. மு. க. படகு கவிழ்ந்துவிடும்!

தி. மு. க. காரரும் என்ன செய்தாவது பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டு மென்கின்ற ஆர்வத்தில் தாங்கள் இருக்கும் படகில் ஓட்டை ஏற்படும்படிச் செய்து கொள்வதும் ஒருவழியென்று நினைப்பார்களானால் அது தங்களைக் காப்பாற்றிக் கொள்வதாகாது. மூழ்கடித்துக் கொள்வதுதானாகும். அவர்கள் முயற்சியில் கூடியவரை சுயமரியாதைக்காரரையும் திராவிடர்கழகத்தாரையும் விரோதித்துக் கொள்ளாமல் பார்த் துக்கொள்ளவேண்டும். தங்கள் மக்களுக்கு அடக்கத்தைப் போதிக்கவேண்டும். சிறு தகராறு, கோளாறுகளை சிறிது விட்டுக் கொடுத்தாவது பொறுமைகாட்டி சரிப்படுத் திக் கொள்ளவேண்டும். இன்னும் இரு கூட்டத்திலும் தங்களை ஒருவருக்கொருவர் விரோதிகள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். அது தவறு.

இன்று பார்ப்பனரும் காங்கிரசாரும் ஒன்றாகிவிடவில்லையா? ஒருவருக்கொருவர் எவ்வளவு சிபாரிசு! எவ்வளவு ஆதரவு!! அந்தப் புத்தி நமக்கு வரவேண்டாமா?

பகுத்தறிவுப் பிரசாரத்தில் ஈடுபடவேண்டும்

தலைவர்களுக்கு மிக்க பொறுப்பு வேண்டும். என்னைப் பொறுத்தவரை நான் அடக்கிக்கொண்டுதான் வருகிறேன். ஒருநாள் இரண்டுநாள் அல்ல இன்னும் நாலரை வருடம் இருக்கிறது. அடுத்த எலக்ஷன் எப்படி ஆனாலும் எனக்கு கவலையில்லை. அது வரை தி. மு. க. ஆட்சி நல்லபடி நடக்கவேண்டும். பல அரிய காரியங்களைச் செய்ய வேண்டும். கட்டுப்பாடு, ஒற்றுமை, எதிர்க்கட்சியாரிடம் பொறுமை, அடக்கம் வேண்டும். நமது தோழர்கள் இனி பகுத்தறிவுப் பிரசாரத்தில் தான் கவலை கொள்ளவேண்டும் மக்க ளிடம் இலட்சக்கணக்கில் அவர்களைப் பகுத்தறிவுவாதிகள் என்று கையொப்பம் வாங்க வேண்டும். கையொப்பம் வாங்க அலவன்ஸ் கொடுத்துத் தொண்டர்களை நியமிக்க வேண்டும். தங்களுக்கு வேலை இல்லையென்று யாரும் நினைக்கக் கூடாது. இதுதான் நமது நிர்மாணத்திட்டம்.

நான் எதற்கும் தயார்! உங்கள் கடமை என்ன?

எனது காயலா சற்று கடினமானதுதான். எளிதில் குணமாகாது. மூத்திரவழி யில் கற்கள் இருக்கின்றன. அவை கரைய மாதக்கணக்கில் காலமாகும். ஒருசமயம் ஆபரேஷன் (அறுவை சிகிச்சை) தேவை இருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் நான் பயப்படவில்லை. எதற்கும் தயாராக இருக்கிறேன். மணியம்மையார் கவனிப்பும், உதவியும் அளவிடற்கரியது. உங்கள் கடமையிலிருந்து தவறாதீர்கள்.

17-9-1967

வாழ்த்து

மதுரைப்பல்கலைக் கழகம்,
மதுரை-2.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்,

துணைவேந்தர். 8-9-67

பெரியார் ஈ. வெ. ரா.வின் கொள்கையை முழுவதும் ஒப்புக் கொள்ளாதவர்களும், தத்தம் பழைய கொள்கைகளின் அடிப் படையை அறிவுக் கண்கொண்டு ஆராய்ந்து முடிவு செய்துள்ளார் கள். எனவே இதுவும் ஒருவகையில் வெற்றியே எனலாம். 89 ஆண்டுகளாகச் சமூகநலத் தொண்டாற்றி வரும் பெரியார் நூறாண்டுக்கு மேலும் வாழ்வாராக!

அன்பன்,

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

சர். இராமசாமி முதலியார்,

"டியூம் அவுஸ்"
நார்த் பீச்ரோடு
சென்னை-1

ஏற்கெனவே ஒப்புக்கொண்ட தவிர்க்க முடியாத வேறு அலுவல்கள் காரணமாக, பெரியார் அவர்களது 89வது பிறந்தநாள் விழாவில் நேரில் கலந்துகொள்ளும் பெரும் பேற்றினைப் பெற இயலாதவனாக நான் ஆகப்பட்டபோதிலும்கூட, சமுதாயத்தில் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவதற்காக கடந்த அரைநூற் றாண்டுக் காலத்திற்கு மேலாக தொண்டாற்றிவரும் மாபெரும் புரட்சி வீரராம் அந்தச் சமுதாய ஊழியர் குறித்து அறிந்த சிலவற்றை அடக்கத்துடன் இங்கு சான்றுகாட்ட விரும்புகிறேன்.

நீதிக்கட்சி என்றழைக்கப்படும் சிறப்புவாய்ந்த இயக்கத்தின் துவக்கநாட்களில் அதன் மாபெரும் தலைவரான டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் சமுதாயச் சமத்துவம் பற்றியும், சாதி முறையினால் நாட்டில் ஏற்பட்ட தடைகள் ஒழிக்கப்படவேண்டியது பற்றி யும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

ஆனால அவரது அவ்வேண்டுகோள் சமுதாயத்தின் படித்த கூட்டத்தினராகிய சிலர் வரை எட்டியது.

அவ்வியக்கத்தினை மக்கள் இயக்கமாக பெரியார் அவர்கள்தான் மாற்றினார்கள்.

ஏழை எளிய பாமரமக்களிடம் அதன் லட்சியங்களைப் பரப்பி, அவர்களை மன தார அந்த லட்சியபாதைக்குத் திருப்பிய சாதனை பெரியார் அவர்களுடையதேயாகும்.

ஏறத்தாழ நாற்பதுஆண்டுகளுக்கு மேல் நான் இத்தகைய பணிகளில மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்திருக்கிறேன்.

பெரியார் துவக்கிய சுயமரியாதை இயக்கமும், படித்தோர் – பாமரர் ஆகிய அனை வரிடமும் நாடு முழுவதும் அவ்வியக்கம் பரவும அளவிற்கு செய்த அவரது அயராத பணி யும், இந்திய சமூகவியலில் எல்லாத்துறைகளிலும் உள்ள வெகுசிலரது சாதனைகளோடு மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய என்றென்றும் அழியாத நிலையான மிகச் சிறப்பு வாய்ந்த சாதனைகளாகும்.

எங்கோ ஒரு பளிங்குமண்டபத்தில் உட்கார்ந்து அங்கிருந்தவாறே சிலரை மிரட்டியும் வேறு சிலரை மருட்டி வசப்படுத்திக்கொண்டும் உள்ளவரல்ல அவர்; மக்க ளோடு இரண்டறக் கலந்து உலவும் உண்மைத் தலைவராவார் அவர்!

இவ்வளவு முதிர்ந்த வயதிலும் கூட அவர் அதே பணிகளைத் தொடர்ந்து நடத் திக்கொண்டு வருகிறார்!

சமூக நீதி, சமத்துவம் இவை மலர்வதற்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் செயல்வீரர் அவர்!

அவரது நல்ல தொண்டு நாட்டில் மேலும் தொடர்ந்திட அவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து நூற்றாண்டு காணும் தலைவராக ஆகவேண்டும் என்று வாழ்த்துகிறேன்!

—ஏ. இராமசாமி முதலியார்.

மா. முத்துசாமி
உள்ளாட்சித்துறை அமைச்சர்

கோட்டை
சென்னை-9.
26-8-1967.

அன்புடையீர்,

வணக்கம். தந்தை பெரியார் அவர்களின் 89வது ஆண்டு பிறந்த நாள் விழாவினையொட்டி "விடுதலை" சிறப்பு மலர் ஒன்று வெளிவர இருப்பதறிந்து அக மகிழ்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களை இத்தர ணிக்குத் தந்தவர்! எம்மையெல்லாம் பொதுப்பணிக்கு ஆளாக்கிய வர். தாழ்ந்து கிடந்த தமிழர் சமுதாயத்தை தட்டியெழுப்பிய சீர் திருத்தமேதை. கண்மூடிப்பழக்கங்களை மண்மூடிப் போகச் செய்து புதியதோர் சமுதாயத்தை படைத்த சிற்பி! இந்த தள்ளாத வயதிலும் பொல்லாத கருத்துக்களுக்கு எதிராகப் போர் முரசு கொட்டிவரும் வெண்தாடி வேந்தர்—அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, தமிழர்களின் காவியமாய், ஓவியமாய், வழி காட்டியாய் என்றும் விளங்கவேண்டுமென்று உளமார விழைகின்றேன்.

இங்ஙனம்,
மா. முத்துசாமி

அய்யா அவர்களுக்குத் காணிக்கையாக்கப்பட்ட....
பத்தறிவாளர்களது அமைச்சரவை



அந்த 'வசந்தம்'

முதல் அமைச்சர் அறிஞர் அண்ணாதுரை

எனக்கென்று ஒரு 'வசந்தகாலம்' இருந்தது நீண்ட நாட்களுக்குப் பிறகு ஆண்டு பலவற்றுக்குப் பிறகு— அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலைமிக்க நாட்களிலே எழுமுடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன்.

பெரியாருக்கு அந்த 'வசந்தகாலமும்' தெரியும். இன்று நான் 'பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

'வசந்தகாலம்' என்றேனே, அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் 'காடுமேடு' பல சுற்றி வந்த நிலை.

அந்தக் 'காடுமேடு'களில், நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப்பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன்; நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது 'கலவரம் எழாமல்' ஒரு பொதுக்கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்திட முடிந்தால் போதும்—பெரிய வெற்றி என்றே பெருமிதம் தோன்றும்.

புறப்படு முன்னர் தலை போகும்—தாடி போகும்—தடி போகும்—உயிர்போகும் என்ற மிரட்டல் கடிதங்களைப் படித்திட வேண்டிய நிலை.

அண்ணாதுரை! இதைப் பார்த்தாயா என்று ஒரு கடிதத்தை வீசுவார்—ஆமாமய்யா! என்று பொருளற்ற ஒரு பதில் தருவேன். வருகிறாயா என்று என்னைக் கேட்க மாட்டார்—வருவேன் என்பது அவருக்கு நன்கு தெரியுமாதலால். செல்வோம், பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில், உருட்டல் மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின் அடுத்த கூட்டத்திற்கு அவர் அய்யாவிற்காக 'மாலை' வாங்கிக்கொண்டுதான் வருவார்; அத்தகைய தெளிவும், வாதத்திறமையும் பேச்சில் கிடைக்கும்.

அத்தகைய தெளிவுரை பெற்றுப் பெற்று, தமிழரில் பலர், பலபலர், திருந்தினர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

ஒருவர் புறப்பட்டு, ஓயாது உழைத்து உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றிபெற்ற வரலாறு இங்கின்றி வேறெங்கும் இருந்ததில்லை.

அந்த 'வரலாறு' துவக்கப்பட்டபோது நான் சிறுவன்.

அந்த வரலாற்றிலே புகழேடுகள் புகுது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே, ஒரு பகுதியில், நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன்' அந்த நாட்களைத் தான் என் வசந்தம்' என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். அவருடன் மற்றப் பலரை விட இடைவிடாது இருந்திடும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள் இன்றும் நினைவிலே கொண்டுவரும்போது இனிமை பெறுகின்றேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின்மூலம் தந்திருக்கிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார்.

பொதுத்தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், அசுமகிழ்வும், மனநிறைவும் பெற்றிடச் செய்தார்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; உன்னை எனக்குத் தெரியும்போ! என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன்; ஒருநாள்கூட என்னிடம் அவர் அவ்விதம் நடந்துகொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்று, தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது குடும்பத்தில் பிறவாத 'பிள்ளை' எனக் கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான்--

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார்—நான் அவருடன் இணைந்த போது; முப்பது ஆண்டுகளுக்கு முன்பு.

அதற்கு முன்பு முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.

இந்த 'ஆண்டுகள்' தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள்; திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே!—என்று கூறியும், விட்டு வைக்கக்கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்!—என்று மிரட்டியும்—, தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர்; ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர்; ஆனால் அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர்; மூலையில் நின்றாகிலும்; மறைந்திருந்தாகிலும்! அந்தப் பேச்சு அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது; எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோ தானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர் கொதித்தவர்கள் அடங்கினர், மிரட்டினோர் பணிந்தனர், அலட்சியம் செய்தேதீர்ர் அக்கரை காட்டினர்; அவருடைய பேச்சோ! அது தங்கு தடையின்றி, வேகம் குறையாமல், பாய்ந்தோடி வந்தது; மலைகளைத் துளைத்துக் கொண்டு, கற்களை உருட்டிக் கொண்டு காடுகளைகழனி வளம்பெறசெய்து கொண்டு ஓசைநயத்துடன், ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார், இங்கே பேசுகிறார், அதைக் குறித்தும் பேசுகிறார், இது குறித்துப் பேசுகிறார்-என்று தமிழகம் இந்த அய்ம்பது ஆண்டுகளாகக் கூறி வருகிறது.

மனதிற் பட்டதை எடுத்துச் சொல்வேன்—எது நேரிடினும்—என்ற உரிமைப் போர் அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர் அந்த வெற்றியின் விளைவுகளை. இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன் மனதிற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல்கட்ட வெற்றிஇது! இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார்! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு, மிகமிகப் பெரிது.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலை, இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாது, பிற பகுதியினர் இது பற்றிக் கேள்விப்படும்போது, வியர்த்துப் போகின்றனர். அப்படியா!—முடிகிறதா!—நடக்கிறதா!—விட்டு வைத்திருக்கிறார்களா! —என்று கேட்கிறார்கள்; சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு.

அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா, கான்பூர், காசி, லாகூர், அலகாபாத், அமிர்தசரஸ் மேலும் இது போன்ற பல நகர்களில், என்னையும் உடன் அழைத்துக் கொண்டு பெரியார் சுற்றுப்பயணம் செய்தபோது ஒவ்வொரு ஊரிலும் இது போலத் தான் கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவுவாதிகள்!!

அந்த இடத்துப் பகுத்தறிவுவாதிகள் படிப்பார்கள்--பெரிய பெரிய ஏடுகளை! எழுதுவார்கள் அழகழகான கட்டுரைகளை! கூடிப் பேசுவார்கள் சிறிய மண்டபங்களில், போலீஸ் பாதுகாப்புப் பெற்றுக் கொண்டு! இங்கு?

இங்கா! அவர் பேசாதநாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத 'பழமை' உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்! எதற்கு அவர் பணிந்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது! ஏ! அப்பா! ஒரே ஒருவர், அவர் நமமை அச்சு வேறு, ஆணி வேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே, என்று இந்நாட்டை என்றென்றும் விடமிபோவதில்லை என்று எக்காளமிட்டுக்

கொண்டிருந்த 'பழமை' அலறலர்யிற்று! புதுமைபுது பொருள் கொடுத்தும். பூச்சு மெருகுகொடுத்தும் இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்றாலும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப்போய் விட்டிருக்கிறது என் பதனை அறியாதார் இல்லை!

எனவேதான் பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வர லாறு என்றல்ல. ஒரு சகாப்தம் ஒருகால கட்டம்...ஒரு திருப்பம்.... என்று கூறுவது வாடிக்கை.

அக்கிரமம் தென்படும்போது, மிகப் பலருக்கு அது தன்னைத் தாக்காதபடி தடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ண மும், ஒதுங்கிக்கொள்வோம் என்ற பாது காப்பு உணர்ச்சியுந்தான் தோன்றும். எதிர்த்து நிற்கவேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை.

பெரியார், அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படி னும், எத்துணை பக்கபலத்துடன் வந்திடி னும், அதனை எதிர்த்துப் போரிடத் தயங் குவதில்லை.

அவர்கண்ட களம் பல; பெற்ற வெற்றி கள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்த படி இருக்கிறது! அவர் வயது 89! ஆனால் போர்க்களத்திலேதான் நிற்கின்றார்!

அந்தப் போரில், ஒரு கட்டத்தில் அவ ருடன் இருந்திடும் வாய்ப்பினைப் பெற்ற நாட்களைத்தான் 'வசந்தம்' என்று குறிப் பிட்டேன்.

மேலும் பல ஆண்டுகள் அவர் நம்மு டன், நமக்காக, வாழ்ந்திருக்கவேண்டும். தமிழர் வாழ்வு நல்வாழ்வாக அமைவதற்கு பன்னெடுங்காலமாக இருந்துவரும் கேடு கள் களையப்படுவதற்கு அவருடைய தொண்டு தொடர்ந்து அளிக்கப்பட்டுவரும் என்பதில் அய்யமில்லை.

வாழ்க பெரியார்!



மறக்க முடியாத மூன்று நாட்கள்

சட்ட மன்றத் தலைவர் திரு. சி.பா. ஆதித்தனார்

சென்னை மத்திய சிறைச்சாலைக் கொட்டறைகளின் கதவுகள் பொழுது புலர்ந்தவுடன் திறக்கப்படுகின்றன.

"நேற்றிரவு நல்லாத் தூங்கினிங்களா?"

"மூட்டைப் பூச்சி கடி உபத்திரவம் அதிகம் இருந்ததா?"

"அனல்காற்றை தாங்க முடிந்ததா? ஒரே புழுக்கமாக இருந்ததா?"

இப்படித் தாயன்பை அருவியென அள்ளிச் சொரியும் அடுக்கடுக்கான கேள்விகள்! கேட்டவர்—தந்தை பெரியார் அவர்கள், இத்தகைய அன்புக்கேள்விகளுக்கு பாத்திரமானவன்—நான்.

ஆம்! 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ஆம் தேதி தந்தை பெரியார் தனித் தமிழ்நாடு கோரிக்கைக்காக நடத்திய, 'இந்திய தேசப்பட எரிப்புப் போராட்டத்தில்' கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு, நாங்கள் சென்னை சிறைக் கோட்டத்தில் வைக்கப்பட்டோம்! நல்ல வேளையாக தந்தையவர்கள் வைத்திருந்த கொட்டறைக்கு அடுத்தாற் போல் எனக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தது.



முதிர்ந்த வயதில் சுகபோகங்களைத் துறந்து, தொண்டால் பழுத்த தூய பழமாம் அய்யா அவர்கள் அப்போது என்னிடத்தில் காட்டிய பரிவும், பாசமும் தொண்டர்களிடம் அவர்கள் கொண்டுள்ள அன்புபிடிப்புக்கு எடுத்துக்காட்டாக இருந்தன. அவர்களின் ஆணைக்குக்கட்டுப்பட்டு, பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள், போராட்டத்தில் தயக்கமின்றி குதிப்பதற்கு காரணம் இன்னதென்று நான் தெரிந்துகொள்ள முடிந்தது மூன்றுநாட்கள்தான்! ஆனால் மூன்றுநாள் நிகழ்ச்சிகள் எப்போதும் என் நெஞ்சை விட்டு அகலாத காட்சியாக இருக்கின்றன. அவர்கள் உடனிருந்தவர்களுக்கு ஊட்டிய உற்சாக அன்புரைகள், வாஞ்சைமிக்க விசாரிப்புகள், சின்னஞ்சிறு காரியங்களில்கூட காட்டிய அக்கறைகள் – இவைகள் மறக்க முடியாதவைகள் மட்டுமல்ல — வார்த்தைகளால் வருணிக்க முடியாதவைகளுமாகும்.

மூன்று நாட்கள், அருகாமையில் இருந்த போது, அவர்கள் கூறிய கருத்துக்கள் என் நினைவில் இருக்கின்றன. போராட்டங்களை நடத்துகிறவர்கள், அவற்றை எப்படி நடத்த வேண்டும் என அவர்கள் கூறியவைகளை ஒரு புத்தகமாகவே எழுதிவிடலாம். "தையும் மாசியும் வையத்துறங்கு" என்பதைப்போல், சிறை செல்வது—ஆகஸ்ட் மாதம் போக வேண்டும், வெளிப்பக்கொடுமை இல்லாமல் இருக்கும். ஜூன் மாதம் என்றால் கோடை யின் கொடுமையை கொட்டறைக்குள் தாங்க முடியாது. சிறைபுகும் தொண்டர் களுக்கு மிகவும் தொல்லையாக இருக்கும்!

போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன் ஒரு தலைவர் எந்தெந்தகோணத்தில் அதன் விளைவுகளைக் கணித்து, தோழர்களுக்கு இக்கட்டோ, இடையூறோ தவிர்க்கப்பட வேண்டும் என்று கருதினார் பாருங்கள்! இதைத்தான் நான் தாயன்பு என்று குறிப் பிட்டேன்.

தந்தை பெரியார் அவர்களை நேரில் 1939-ல் பார்த்து, தனித்தமிழ்நாடு என் பதைப்பற்றிப் பேசினேன். அதற்குமுன் ஏழெட்டு ஆண்டுகள் அவர்களுடைய பிறந்த நாளை மலாய்நாட்டில் ஆண்டுதோறும், விழாவாகக் கொண்டாடி இருக்கிறேன்.

மலாய்நாட்டில், 1930-ல் தந்தையவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது, எங்கள் வீட் டில் தங்கியிருந்தார்கள். அந்த சுற்றுலாவுக் குப்பிறகு, மலாய்நாட்டில் வாழுகிற தமிழர் களுக்கு, புத்துணர்ச்சி ஏற்பட்டு, சாதிப் பிடிப்பு மறைந்து, தமிழர்கள் ஓரினமாக இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

பெரியாரவர்கள் செய்துள்ள சீர்திருத் தங்களை கடல் கடந்து வாழும் மலேயாத் தமிழர்கள் உணர்ந்திருப்பது மட்டுமல்ல, மறக்காமலும் இருக்கிறார்கள். "தமிழர் சீர்திருத்தச் சங்கம்" என்ற நிறுவனம், சிங் கப்பூரில் செயல்பட்டு வருகிறது. நான் அண்மைக்காலம்வரை அந்த நிறுவனத்தின் "டிரஸ்டி"யாக இருந்து வந்தேன். தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழா, மிகவும் கோலாகலமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. பெரியார் அவர் களின் திருஉருவப்படத்தை மேடையில் வைத்து, தமிழ்மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடி நடத்துகிற விழாவை ஒரு "தேசத் திருவிழா" என்று வருணிக்கலாம்.

நான் 1939-ல் மலாய்நாட்டிலிருந்து தாய்த்தமிழகம் திரும்பியபோது, சென்னை துறைமுகத்தில் வந்து இறங்கியவுடன், நேராக பெரியார் அவர்களைத்தான் பார்க் கச்சென்றேன். அப்போது திருக்கழுக்குன் றத்தில் மாநாடு நடந்துகொண்டிருந்தது. அங்கே போய், பெரியார் அவர்களிடமும் அறிஞர் அண்ணாவிடமும் கலந்து பேசி விட்டு, பிறகு மதுரைக்குப்போனேன்.

1942-ல் மதுரையிலிருந்து "தமிழன்" பத்திரிகை தொடங்கிய நேரத்தில், "தமிழர் ஒருவர் பத்திரிகை தொடங்கியிருப்பதை வாழ்த்தி வரவேற்கிறோம்" என்று எனக்கு பாராட்டுக்கூறி உற்சாகப்படுத்தியதைத் தான் மறக்க இயலுமா?

தந்தை பெரியார் என்னிடம் காட்டிய, காட்டுகிற அன்புக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்; நன்றி செலுத்து கிறேன். அவர்கள் தமிழகத்தில் தோற்றுவித்துள்ள மறுமலர்ச்சிக்காக, தமி ழுணர்வுக்காக, தன்மான உணர்ச்சிக்காக தமிழினம் பாராட்டுகிறது.

மூன்றுநாட்களுக்குப்பின் சிறைக்கதவு திறந்தபோது, இன்னும கொஞ்சநாள் பெரி யார் அவர்களுடன் கூடஇருக்காமல் போக வேண்டியதிருக்கிறதே என்றுதான் வருந்தி னேன்! நான் மறக்கவில்லை! தமிழகம் பெரியாரை மறக்காது!

வாழ்க பெரியார்!

அரசியல் சட்டப்பூச்சாண்டி

தந்தை பெரியார்

இந்தி மொழி சம்பந்தமான பிரச்னையில் தமிழ்நாடு மந்திரி கனம் மாதவன்,

"அடக்கு முறைக்கு அஞ்சமாட்டோம்—மிரட்டலுக்குப் பணியமாட்டோம். சட்டத்தைக் காட்டி எங்களைப் பணியவைக்க முடியாது. இந்தியை எந்தச் சக்தியாலும் திணிக்க முடியாது. இந்தியை ஒருபோதும் ஏற்கமாட்டோம்" என்று டில்லியில் சட்ட மந்திரிகள் மாநாட்டில் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.

இப்படிப் பேசினாரோ இல்லையோ; இதுதான் இந்தி விஷயமாய் தமிழ் நாட்டிலுள்ள சுத்தத் தமிழர்கள் 100க்கு 100 பேருடைய கருத்து என்பது எனது உறுதி. இந்தக் கருத்து இல்லாத் தமிழனும் இந்தக் கருத்தையே கொள்ளவேண்டும் என்பது எனது ஆசை.

தமிழனுக்கும் இந்திக்கும் என்ன சம்பந்தம்? என்ன அவசியம்? தமிழன் தனது கலாச்சாரம், மொழி, உடை, உணவு முதலியவற்றில் வடவரிடமிருந்து மாறுபட்டவனா அல்லவா? அதுவும் சரித்திரம் காணாத காலத்திற்கு முன்பிருந்தே பல ஆண்டுகளாகவே மாறுபட்டவனா இல்லையா?

பல சுதந்தர நாடுகளாக இருந்த இந்தியா

இந்தியா பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பல நாடுகளாக இருந்து வந்திருக்கிறது. பல நாடுகளும் தனித்தனியே பூரண சுதந்தர நாடாகவே இருந்து வந்திருக்கிறது.

தமிழரசர்கள் ஆண்ட காலத்திலும், அன்னியன், முஸ்லீம், வெள்ளையன் ஆண்ட காலத்திலும் பல சுதந்தர நாடுகளாகவே இந்தியா இருக்கச்செய்தே ஆண்டு வந்திருக்கிறார்கள்!

இந்து (பார்ப்பன) மதத்திற்காக என்றே கற்பனை செய்த மத நூல்களிலும் பல சுதந்திர நாடுகளாகவே இந்தியாவை சித்தரித்திருக்கிறார்கள். "சுதந்திரம் பெற்றோம்" என்ற காலத்திலும் "பிரிக்க முடியாத இந்தியா" என்று சொல்லிக்கொண்டே இந்தியாவின் நடுவிலுள்ள வங்காளம் என்ற நாட்டை இரண்டாக வெட்டி மதம் காரணமாக என்று கூறி முஸ்லீம்களுக்குக் கொடுத்தாகி விட்டது! பஞ்சாப் நாட்டைச் சார்ந்த மதம், சரித்திரம் சம்பந்தமுள்ள நல்ல பாகங்கள் முஸ்லீம்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன்—முஸ்லீம்—உதைக்கத் தயாராய் இருந்தான்! அதற்குப் பயந்து இந்தியாவின் கண், இருதயம், பாதுகாப்பு ஸ்தலம் போன்ற நாடுகளை மரியாதையாய் பாத காணிக்கையாக அன்னியனுக்கு ஒப்படைத்தாய்விட்டது! ஒப்படைத்தது மாத்திரமல்லாமல், அவனைக் கண்டு இந்தியா நடுங்கிக் கொண்டே இருக்கிறது! அவனிடமிருந்து தப்பிப் பிழைப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை இராணுவத்திற்கென்று செலவழித்துக் கொண்டே இருக்கிறது. செத்தவனுக்கும் தாலி அறுத்தவளுக்கும் சம்பந்தமில்லை என்கிறமாதிரி வடநாட்டான்—பிழைக்க, அவன் பெண்டு பிள்ளைகள் வாழ, நம் பணம் பலகோடி செலவழிகிறது!

நாம் சுதந்தரம் கேட்பது தவறா?

இந்த நிலையிலிருக்கும் இந்தியாவோடு நம்மை (தமிழ்நாட்டை) இணைத்து சட்டத் தால் கட்டி விட்டதால் நாம் பூரண சுதந் திரம் கேட்கக் கூடாது என்பது தேசக்கட் டளையா என்று கேட்கிறேன்.

நான் (தமிழ்நாடு) பூரண சுதந்திரம் பெறக்கூடாது என்பதற்கு வடநாட்டானா அதிகாரி?

இது அடிமைநாடா? சுதந்திரநாடா?

ஒரு நாடு சுதந்திரம் பெறவேண்டுமா? வேண்டாமா? ஒரு மொழி ஏற்றுக்கொள்ள படவேண்டுமா? வேண்டாமா? என்பதற்கு வேறு நாட்டான்களா அதிகாரிகளாய் இருப் பது? இது சொந்த நாட்டானுக்கு எவ்வ ளவு அவமானம்!

"எனக்கு இந்த காண்டாக்ஷி வேண் டாம்"

"எனக்கு இந்திமொழி வேண்டாம்" என்றால் இது சட்ட விரோதம் என்று பதி லளித்தால் இது அடிமை நாடா? சுதந்திர நாடா?

எனது சுதந்திரத்தை மறுக்க அன்னியனுக்கு என்ன அதிகாரம்?

ஒரு ஊரில் ஒரு பகுத்தறிவுவாதி (அடங்காப் பிடாரி) இருந்தான். அவன் மீது மூடநம்பிக்கைக்காரர்களுக்கு வெறுப்பு. அவனுக்கு ஒருநாள் ஒரு மயக்கம் வந்து ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போனார் கள். அங்குள்ள டாக்டரைக் கொண்டு அந்த மயக்கமாய்க் கிடந்தவனை செத்துப் போய் விட்டான் என்று சொல்லிவிடு. நாங் கள் மூட்டைக் கட்டிக் கொண்டு போய்ப் புதைத்து விடுகிறோம் என்று சொல்லி டாக்டரைக் கொண்டு மயக்கமாய்க் கிடக் கிறவனை இவன் செத்துப் போய்விட்டான் என்று சொல்லும்படி செய்துவிட்டார்கள்.

உடனே ஆஸ்பத்திரி ஆட்கள் இவனை ஒரு கோணிப்பைக்குள் திணிக்கத் தலை யைத் தூக்கி பைக்குள் திணித்தார்கள். அதற்குள் மயக்கக்காரனுக்கு மயக்கம் தெளிந்துவிட்டது. உடனே தன் தலையை தூக்கினவர்களைப் பார்த்து "என்னை என்னச் செய்யப் போகிறீர்கள்" என்று கேட்டான். அதற்கு அந்த ஆட்கள் 'நீ செத்துப்போய்விட்டாய். உன்னைப் புதைப் பதற்காகத் தூக்குகிறோம்" என்றார்கள். அதற்கு மயக்கம் போட்டுக் கிடந்தவன் இதைக் கேட்டவுடன் தடபுடலாய், "யார் சொன்னான் நான் செத்துப் போய்விட்டே னென்று? நான் உயிரோடு இருக்கிறேன்! என்னை இப்படிச் சொல்கிறீர்களே! இது என்னடா அக்கிரமம்!" என்றான். அதற்கு அந்த ஆட்கள் "நீ செத்துவிட்டாய் என்று டாக்டர் சொல்லிவிட்டார். நீ யார் சாக வில்லை என்பதற்கு? நீ என்ன டாக்டரா ஒரு மனிதன் செத்தானா இல்லையா என் பதற்கு டாக்டருக்குத்தான் உரிமை உண்டு அவர் படித்தவர், நீ யார் அதை மறுக்க?', என்று சொல்லி சாக்குப்பையை அவன் தலையில் போட்டார்கள். உடனே அந்த மயக்கக்காரன் தன் மடியிலிருந்த கத்தியை எடுத்து ஆளுக்கு இரண்டு குத்துக் குத்தி னான். ஆட்கள் ஓடிவிட்டார்கள். அவன் வீட்டிற்கு சுகமே திரும்பிவந்தான் என்கிற ஒரு கதை உண்டு.

அதுபோல் "எனக்கு சுதந்திரம் வேண்டுமென்றால் சட்டத்திற்கு விரோதம் எனக்கு இந்தி வேண்டா மென்றால் அது சட்டத்திற்கு விரோதம்" என் பதாக சட்டத்தைக் காட்டிக் கொண்டே எத்தனை நாளைக்குப் பிற நாடுகளை அடிமையாக்கிக்கொண்டு பிற மொழிகளைப் புகுத்திக்கொண்டு ஆதிக்கம் செய்யலாம் என்று வடவர்களும் அவர்கள் கூலிகளும், காத்திருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்க வில்லை. மொழிப் பிரச்னை நமக்கு நல்ல வாய்ப்பு என்றுதான் கருதுகிறேன்.

இதிலிருந்துதான் பூரணசுயேச்சை தோன்ற வாய்ப்பு ஏற்படும்.

எப்படிப்பட்ட சட்டத்திற்கும் அதன் மதிப்பிற்கும் எல்லை உண்டு.

எது சட்ட விரோதம்?

அதோடு சட்டத்திற்கு மாறான கொள்கையை பனிதன் நினைக்காமல் வெளியிடாமல் அதற்காக முயற்சிக்காமல் இருக்க முடியுமா? நான் நாத்திகன் "கோயில்களை யெல்லாம் இடிக்கவேண்டும்" "பாரதம், இராமாயணம், கீதை, கந்தபுராணமெல்லாம் கொளுத்தப்படவேண்டும்' என்கிறேன் பார்ப்பான்—பணக்காரன ஒழியவேண்டுமென்கிறேன். நம்நாடு ரஷ்யா ஆக வேண்டுமென்கிறேன். இது சட்ட விரோதமாய் இருக்கலாம். இதற்காக நான் சட்ட சபை மெம்பராயிருந்தால் இராஜினாமா செய்யவேண்டுமா? சட்டத்தில் கள்ளை நிறுத்தவேண்டுமென்றிருக்கிறது. பல நாடுகள் கள்ளை அமுலுக்குக் கொண்டு வந்து விட்டன.

சட்டத்திற்குக் கீழ்ப்படிவதாக சத்தியம் செய்துவிட்டு வந்த சட்டசபை மெம்பர் தலைவரையே அவமானப்படுத்துகிறான். தலைவர் கட்டளையை அலட்சியப்படுத்துகிறான். இவர்களையெல்லாம் மொரார்ஜி என்ன செய்துவிட்டார்? சர்வாதிகாரமுள்ள இராஷ்டிரபதி என்ன செய்துவிட்டார்?

காங்கிரசில் துரோகிகள் மலிந்து விட்டனரே!

காங்கிரஸ் டிக்கெட் கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சிக்குப் போய் காங்கிரஸ் அபேட்சகரை - தலைவரைத் தோற்கடித்து விட்டார் ஒரு காங்கிரஸ்காரர். அவரைப் பற்றிய பேச்சு மூச்சே யில்லையே! காங்கிரஸ் தலைவரைக் கொல்ல உதவியாக இருந்தவர்கள் இன்னமும் காங்கிரஸ் பிரமுகராகவே இருக்கிறார்கள் நெருக்கடியான சமயத்தில் ஆட்சியைக் காட்டிக் கொடுத்தவர்கள் இன்னமும் காங்கிரசில் பெரிய மனிதர்களாகவே இருக்கிறார்கள்.

சட்டப்பூச்சாண்டி இனியும் பலிக்காது!

சட்டத்தை வைத்துக்கொண்டு, சட்டத்தைக் காட்டி மற்ற நாடுகளை அடிமைப் படுத்தி நீண்டநாள் வாழலாம் என்பது இனி பலிக்காது! கண்டிப்பாய்ப் பலிக்காது!!

அரசாங்கம் எப்படி நடந்து கொண்டாலும் சரி, தமிழன் உரிமைக்கு ஆகவே தமிழ்நாடு பூரண சுயேச்சைப் போராட்டம் கிளம்பியே தீரும்! அதன் அவசியத்திற்கு மேலும் பல காரணங்கள் இருக்கின்றன.

தமிழர்கள் தங்கள் தன்மானத்தை நினைத்துப் பார்க்கவேண்டும்!

வடவரும் தங்கள் சக்தியை அளவிட்டுப் பார்க்கவேண்டும்!

சட்ட பலத்தையே நம்பியிருக்க வேண்டாம் என்று எச்சரிக்கை செய்கிறேன்!

பிரேமா கம்பெனியின்

ஸ்டீல்பீரோ, டேபிள், கட்டில், சோபா

சோபா கம்பெட் முதலியவைகள்

சுலபமான தவணைமுறையில்

கிடைக்கும்.

தேவைக்கு எமது ஷோ ரூமுக்கு வருகை தரவும்.

அங்கீகாரம் பெற்ற வினியோகஸ்தர்கள் :

எஸ். வி. ஆர். & கோ.

(பழைய பஸ் நிலையம் எதிரில்)

பென்னாகரம் ரோடு, தர்மபுரி–2.

பெரியார் பரம்பரை

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி

வீழ்ந்து கிடந்த தமிழகம், வீறுகொள்ளும்படிச் செய்த வீரர். மூடத்தனத்தின் முடைநாற்றத்தைப் போக்கிய கற்பூரம் பூங்கா. சாதிவேற்றுமையின் ஆணிவேரை அறுத்த ஞானவாள். அறிவொளி பரப்பிய எழு ஞாயிறு. பகுத்தறிவைப் பரப்பும் இரண்டாம் புத்தர். வள்ளுவர் நெறியே தமிழர் நெறி என்று உணர்த்திய தமிழர் தலைவர். அறிவும் செல்வமும் ஓங்கும் புதிய தமிழகத்தை உருவாக்கும் சிற்பி. இந்தச் சிறப்புக்கள் அனைத்தும் கொண்டவர்தான் —தந்தை பெரியார்!

பெரியாருக்கு நிகர் சரித்திரத்தில் இல்லை

தமிழர் வாழ்வில் புதிய மறுமலர்ச்சி வரலாற்றின் காப்பிய நாயகனாகத் திகழ்பவர் பெரியார். ஆராய்ச்சிக்கு அகப்படாத பெரிய கருத்துக்கள், அரிய யோசனைகள் இவருடைய இயற்கை அறிவில் உதிப்பதை இன்றும் காணலாம். பகுத்தறிவு, சமூக சீர்திருத்தம், சமதர்மம், சமூகநீதி ஆகிய உணர்வுகள் அவரால் புதிய வலிமை பெற்றன. அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியது போல, தமிழகத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும் அவருடைய ஒளிச் சிதறல்களிலிருந்து வளர்ந்தவை. பல கட்சிகளுக்கு கொள்கை அடிப்படையையும் வளர்ச்சிக்குரிய உயிர்ப்பினையையும் தந்து உதவியவர் பெரியாரே ஆகும்

குறிப்பிட்டுச் சொல்லுவதென்றால், ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற குறள் நெறியை மிகச் சாமானிய மக்களும் உணர்ந்து கொள்ளும்படியும் செய்து, மனதில் பதிந்து கொள்ளும்படியும் செய்து, சமத்துவ உணர்வைப்பரப்பியதில், பெரியாருக்கு நிகரான தலைவர்கள் தற்கால சரித்திரத்திலேயே இல்லை. அவருடைய சமத்துவத்தத்துவம் பொருளாதாரத்துடன், சமூக உறவுடன் நிற்கவில்லை. பிறப்பை வைத்து உயர்வு தாழ்வு பாராட்டப்படுவதை அன்றே எதிர்த்தார். இந்தக் கொள்கைக்காகவே வைக்கம் அறப்போரை நடத்தினார்.

பெரியார்தம் பலதிறப்பட்ட தொண்டு

இந்திய தேசிய காங்கிரஸ், பாமர மக்களும் பங்குகொள்ளும்படியான விடுதலை இயக்கமாக வளர்ச்சி பெற்றதற்கு, பெரியார் ஆற்றிய பணி மிகப் பெரிது. பட்டிதொட்டி எங்கும் சென்று தேசியஉணர்ச்சியைப் பரப்பியவர்களில் அவர் முன்னோடியான தலைவர். முன்னேறுவதற்குரிய வாய்ப்பின்றி பின்னணியில்தள்ளப்பட்டுக் கிடந்த மக்கள் நியாயமான உரிமைகள் பெறவேண்டும் என்பதற்கான நீதிக் கட்சியின் வாயிலாகப் பணியாற்றினார். சுதந்திர உணர்வு முன்னேற்ற நாட்டம் அனைத்துக்கும் அடிப்படையானது தன்மான உணர்வுதான் எனக் கண்டு தன்மான இயக்கம் தொடங்கினார். அதுவே பின்னர் திராவிடர் கழகமாக மாறிற்று. இந்தப் பொதுப்பணிப் பயணம்நெடுகிலும் பெரியார் கண்ட எதிர்ப்புகள் எண்ணிலடங்காதவை. அத்தனை எதிர்ப்பையும் தாங்கினார். பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் பொதுப்பணியாற்ற அவரது ஆணையை நாடிவந்தனர். புதிய சமுதாய சீர்திருத்த இயக்கம் மாநிலமெங்கும் பரவியது.

புரட்சிக்கு முன்னோடி

நாட்டின் நலனுக்குஇன்றியமையாதவை என்று இன்று கருதப்படும் பல திட்டங்களுக்கு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே வித்திட்டவர் பெரியார். குடும்பக் கட்டுப்பாடு, பெண்களுக்குச் சம உரிமை, கலப்பு மணம், மூட நம்பிக்கை ஒழிப்பு முதலிய சீர்திருத்தங்களுக்கு மக்களை ஆயத்தப்படுத்தினார். காலத்துக்கு ஏற்ற திருத்தம் என்று கூறி, கொள்கையை மாற்றாதவர் பெரியார். அவருடைய கொள்கைகள் காற்றைப்போல், நீரைப்போல் அடிப்படைத் தேவை வகையில் சேர்ந்தவை. நீதியைத்

போலவும், சத்தியம் போலவும் வலிமை வாய்ந்தவை.

பெரியாரின் கொள்கைகள் திராவிட கழகத்துக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் மட்டும் உரியவை அல்ல. அவை எல்லாக் கட்சிகளுக்கும் உரியவை. மக்களுக்குச் சரிசம உரிமை, தாழ்த்தப்பட்ட, மக்கள் முன்னேற வாய்ப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, அறிவு வளர்ச்சி ஆகியவைதான் பெரியாரின் கொள்கைகளின் அடிப்படை. நாட்டு முன்னேற்றத்துக்காக இந்த நெறிகளை ஏற்று இயங்கும் பரம்பரை இன்று வளர்ந்து வருகிறது.

நியாயத்துக்குத் தயங்காது போராடுபவர்

பெரியாரை வகுப்புவாதி என்றும், வகுப்புத் துவேஷி என்றும் ஏசிய காலம் மாய்ந்து விட்டது. திராவிட இயக்கத்தவரை 'பிரிட்டிஷ் தாசர்கள்' என்று ஏசி வந்தவர்கள்கூட, பெரியாரை நோக்கி இன்று அந்தச் சொல்லைக்கூறக் கூசுகின்றனர். அவரைக்கூறமாட்டாமல்முன்னேற்றக்கழகத்தினரைப்பார்த்து பிரிட்டிஷாருக்கு வால் பிடித்தவர்கள் என்று கூறுகிறார்கள். தி. மு. க. வை ஏசினால், அதற்காக பெரியார் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் தாம் பதிலளிக்க வேண்டிய கடமையும் நியாயமும் இருப்பதாக பெரியார் கருதினார். "இன்றைய தி. மு. க. தலைவர்கள், வெள்ளைக்காரர்கள் வெளியேறிய நாள் வரை என் கட்சியில் என் ஆணைப்படி செயல்பட்டு வந்தவர்கள். 'பிரிட்டிஷ் தாசர்' என்று சொல்லுவதானால் என்னைப் பார்த்துக்கேள், சொல்லுகிறேன்" என்பதாக பெரியார் பதில் கொடுத்தார்.

நியாயத்துக்காகப் போராடுவது பெரியாரின் குணம். அலுப்பு சலிப்பில்லாமல் உழைப்பது அவருடைய இயல்பு. ஒரு வீண் செலவு இல்லாமல் காசுகாசாய்ச் சேர்த்து, கல்விக்கும் இதர அறப்பணிகளுக்கும் லட்சம் லட்சமாய்க் கொடுப்பது அவரது பெரும் சிறப்பு.

தமது கொள்கைகளை நிறைவேற்ற சக்திவாய்ந்த பரம்பரையைத் தோற்றுவித்து, வளர்த்து, பெருக்கிய பின்பும், பெரியார் இன்றும் இந்த 89 ஆம் ஆண்டிலும் உழைத்தபடி இருக்கிறார். அவரது வாழ்க்கை பொதுப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் புதுத் தெம்பும் வலிமையும் தருவதாகும். வாழ்க பெரியார்! வளர்க பெரியார் பரம்பரை!! ∴

பீப்பிள்ஸ் பிஸ்கட் பாக்டரி

24, அரித்ராநதி தெற்கு வீதி,

மன்னார்குடி.

எங்கள் பாக்டரியில் உயர்தரமான கேக்கு வகைகள், ரொட்டி வகைகள், பன்கள் முதலியன சிறந்த முறையில் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

வாடிக்கைதாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் தந்தை பெரியார் அவர்களின் 89-ம் பிறந்த தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மன்னார்குடியில் விற்பனை நிலையங்கள்:
தேரடி, பந்தலடி, பஸ் ஸ்டேண்ட்
அன்னவாசல் தெரு.

உரிமையாளர்கள்:
க. நல்லதம்பி.
வி. அருணாசலம் B.A.

திருவள்ளுவரும் பெரியாரும்

திவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழகம் கண்ட புலவர்களுள் திருவள்ளுவர் தலையாயவர். இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்குமுன்பு தமிழினத்தில்-தமிழ்க்குடியில் தோன்றிய மாமேதை. தமிழ்க்குடிமகனாகவே பிறந்து, சிந்தனையால்-கருத்தால் உலகக் குடிமகனாக விளங்குபவர். திருவள்ளுவர் செய்த திருக்குறள் தமிழினத்தின் தனிமறை-உலகத்தின் பொதுமறை

குறளை பெரியார் எதிர்ப்பதில்லை

திருவள்ளுவர் செய்த திருக்குறளில் தந்தை பெரியார் அவர்கட்கு மிகுதியும் உடன்பாடு இல்லையாயினும் திருக்குறளைத் தந்தை பெரியார் அவர்கள் எதிர்ப்பதில்லை. காரணம் திருக்குறள் ஓர் அறிவு நூல் என்பதே. அறிவுக்கும் எதார்த்த வாழ்க்கைக்கும் புறம்பான செய்திகளைத் திருக்குறள் பேசவில்லை, அதனால் அதில் எதிர்ப்பதற்குரிய செய்தி ஏதும் இல்லை.

தந்தை பெரியார் அவர்கள் வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் எதையும் ஏற்றுக்கொள்வதில்லை; அப்படியே பிறர் ஏற்றுக் கொள்வதையும் கண்டிக்கிறார். எந்த ஒன்றையும் அறிவினால் ஏன்? எதனால்? என்று ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது அவர்களின் கொள்கை. அறிவுக்கு உடன்படாதனவற்றைப் பெரியார் ஏற்கத் தயங்குகிறார். வரட்சித்தன்மையுடைய ஆத்திகர்கள் அறிவினால் ஆய்தல் போதாது-அறிவினால் ஆய்ந்து-காணமுடியாததும் உண்டு என்பர். உயிரோட்டமுள்ள-அனுபவம் பெற்ற அருளாளர்கள் அறிவைப் புறக்கணிப்பதில்லை. இறைவனையேகூட-பேரறிவினனாகக்கண்டு காட்டியுள்ளார்கள். திருவள்ளுவர் ''வாலறிவன்'' என்று பேசுகிறார்.

பெரியார் தொண்டு

'கற்றவர்தாம் தொழுதேத்த நின்றான்' என்பது திருமுறை. திருவள்ளுவரும் மனிதன் பெறக்கூடிய உடைமைகள் எல்லாவற்றுள்ளும் அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இரண்டுமே சிறப்புடையன என்று குறிப்பிடுகின்றார். இந்த நூற்றாண்டில் தந்தை பெரியார் அவர்கள், தமிழர் இந்த இரண்டு உடைமைகளையும் பெற்று விளங்கச் சிந்தனையாலும், செயலாலும் உழைத்து வருகிறார்கள்.

ஒழுக்கம் சமுதாயப் பொதுச்சொல்

ஒழுக்கம் என்ற சொல் ஒரு பொதுச் சொல. மனித சமுதாயக்கூட்டு அமைப்பிறகு இசைவானவாழ்கை, நெறிமுறைகள் ஒழுக்கம் என ஏற்றுப் போற்றப்பெறும். இந்த ஒழுக்கம் எனபதும் காலம், இடம், சமுதாய அமைப்பு ஆகியவைகட்கு ஏற்றவாறு மாறக் கூடியதேயாம். அது ஒரே மாதிரியாக இருக்கக்கூடியதன்று. இதுவே ஒழுகத்தைப் பற்றிய இன்றைய அறிஞர் உலகத்தின் முடிவு. திருக்குறள் ஒரு சிறந்த ஒழுக்க நூல். விலங்குணர்ச்சியில் வீழ்ந்து கிடகும் மனிதனைப் பல்வேறு அறநெறிகளில்-வாழ்க்கை முறைகளில் ஈடுபடுத்தி பைய வளர்க்கிறார் திருவள்ளுவர். தமிழினத்தின் சமுதாய ஒழுக்க நெறி சாலச் சிறப்புடையது. அது வரண்ட கற்பனை. சித்தாந்தங்கள் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டதன்று; அது நல்லெண்ணத்திற்கும் நம்பிக்கைக்கும் உரியது. இதன் உயிர்நாடி பிறருக்குத் தீமையின்றிப் பலரோடு கூடி ''ஒத்தது அறிந்து உயிர் வாழ்தலேயாகும்.''

ஆரிய மரபு என்பதே உண்மையை மறைப்பதுதான்

ஆரிய மரபுப்படி உண்மை என்பது பலருக்குத் தீமை தந்தாலும் உள்ளதைக் கூறுவதேயாகும். தமிழ் மரபுப்படி பிறருக்குத் தீமைதராத சொற்களே வாய்மை என்பதாகும். ஆரிய மரபுப்படி, உண்மை உபத்திரவமும் தருவதாகும். தமிழ் வாய்மையோ வெல்லும்; வாழ்வும் அளிக்கும். ஆரிய மரபு உயர்வு தாழ்வு கற்பிக்கும்; கற்பிப்பதோடு மட்டுமன்றி அந்த உயர்வு தாழ்வுகளின் வரம்பு கடவாமல் கடைப்பிடிப்பதே ஒழுக்கம் என்று பறை சாற்றும். தமிழ் மரபு 'ஒன்றே குலம்' என்பதாகும். இது திருமூலர் வாக்கு. ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்பதாகும்; இது திருவள்ளுவர் வாக்கு.

இந்த இனிய தமிழ் மரபு தடம்புரண்டு தமிழ்ப் பெருங்குடி மக்களிடத்திலும்கூட

ஆரியமரபினைச் சார்ந்த கருத்துக்களே மேலோங்கி ஆட்சி செய்தன-ஆட்சி செய்து கொண்டிருக்கின்றன. அதனாலன்றோ தமிழரில் சிலர் தம்மைத்தாமே ''சற்சூத்திரர்'' என்று அழைத்துக்கொள்ள ஒருப்பட்டார்கள்! இந்த இருண்ட காலத்தில்தான் தமிழகத்தில் ஒளி ஞாயிறு என தந்தை பெரியார் அவர்கள் தோன்றினார்கள். அவர்கள் தமிழரிடத்தில், அவர்கள் அறியாமலேயே மண்டிக் கிடந்த தற்குறை மனப்பான்மை, இழிவு மனப்பான்மை ஆகியவைகளை எதிர்த்துத் தன்மான உணர்வை எழுப்பினார்கள். அவர்கள் ஏற்றிவைத்துள்ள தன்மான உணர்ச்சியினை மூச்சாகக் கொண்டு வளர்ந்த அருமைச் சகோதரர்கள் இன்று தமிழகத்தின் ஆட்சியில் அமர்ந்துள்ளனர். தந்தை பெரியார் அவர்கள் இந்த நூற்றாண்டில் நமக்குக் கிடைத்த இனப்பாதுகாப்பாளர்.

திருக்குறள் உலகப்பொதுமறையாயினும் மொழிவழிப்பட்ட அல்லது இன வழிப்பட்ட குடியினைக் காக்கும் கடமையினை ஒரு ஒழுக்கம் என்றே எற்புறுத்திக் கூறுகிறது. ''குடி செயல்வகை'' என்றே ஓர் அதிகாரம் வகுத்துள்ளார் திருவள்ளுவர். திருக்குறளில் இந்த அதிகாரத்திற்கு இசைய வாழ்ந்துகாட்டுபவர் தலைவர் பெரியார். தமிழ்க்குடியினை ஏழ்மையினின்றும், ஏளனத்தினின்றும் பாதுகாக்க வேண்டும் என்பதே தந்தை பெரியார் அவர்களது வாழ்க்கையின் குறிக்கோள். தமிழர்கள் பெறவேண்டியனவெல்லாம் பெற்றுப் பெருமையுடன் வாழவேண்டும் என்பதே அவரது உள்ளக்கிடக்கை.

குடிசெயல் வகையில்:

குடிசெய்வார்க்கு இல்லைபருவம்; மடிசெய்து மானம் கருதக்கெடும்-என்கிறது குறள்

இத்திருக்குறள் எழுத்துப் பிறழாமல் தந்தை பெரியார் அவர்களது வாழ்க்கையில் விளங்கிக் காணக்காண்கிறோம்.

கடமையாற்றுவதில் பெரியார் இன்னும் இளைஞரே

பருவம்: நாளும் கோளும் பார்த்தல், இராகுகாலம், எமகண்டம் பார்த்தல் இது தந்தை பெரியார் அவர்களிடம் இல்லை; சோதிடத்தைக் கடுமையாகச் சாடுகின்ற இயல்பு உண்டு. தந்தை பெரியார் அவர்களுக்கு வயது 89 என்று ''விடுதலை'' சொல்கிறது - கழகத்தோழர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவரது வாழ்க்கையில்-கடமைகளைச் செய்யும் ஆர்வத்தில் முதுமை தென்படவில்லை! நாளை என்று எந்தஒரு செய்தியையும் ஒத்திப்போடும் பழக்கம் அவருக்குக் கிடையாது. தமிழ்நாட்டிலேயே ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சியைத் தள்ளாமல்-ஒத்திப் போடாமல் சென்று கலந்துகொள்ளும் தலைவர் ஒருவர் உண்டு என்றால் அவர் தந்தை பெரியார் அவர்களேயாம். சிந்தனை, எழுத்து பேச்சு ஆகிய துறைகளில் சுறுசுறுப்பெனச் சுழன்று பணி செய்யும் அவர்தம் ஆள்வினை ஏற்றுப் போற்றத்தக்கது.

தமிழனை முன்னேற்றுவதே பெரியாரின் கொள்கை

மானம்: இது கருதக்கூடிய இடமும் உண்டு; கருதக்கூடாத இடமும் உண்டு. பகைவர், அந்நியர் ஆகியோரிடம் மானம் கருதலாம்; அது பிழையாகாது. ஆனால் ஒன்றிஇருந்து - உடனிருந்து-வாழ்க்கையில் பங்கு கொள்கிறவர்களிடம் மானம் கருதக் கூடாது. அய்யகோ! இன்றையத்தமிழ்ச் சமுதாயத்தினர் பரிவும் பாசமும் காட்டவேண்டிய இடத்தில் மானம் பார்க்கின்றனர். இந்தக்கொடுமை மறையும் நாளே தமிழரின் புதிய வரலாறு தொடங்கும் நாள். தந்தை பெரியார் அவர்கள் தம்மை அவமதிக்கின்ற வர்தமிழராயினும் அவர் நலம்பெறவேவிரும்புவார். தம்மை ஏற்றுப் போற்றினாலும் அவருக்கு அந்நியர் அந்நியரே. தம்மை நாடினாலும், நாடாது போனாலும் தமிழரை-அவர்தம் உரிமைகளைப் பெருமைப் படுத்துவார்-பாதுகாப்பார். அவருக்கு ஒரே ஒரு கொள்கைதான் உண்டு! அது தமிழினம் மேம்பாடடைய வேண்டும், அவர்கள் அனைவரும் தம்முள் ஒத்த கருத்தினராகச் சமதர்ம வாழ்க்கைநெறியினை மேற்கொண்டு வாழவேண்டும் என்பதே. இந்த இலட்சியத்தை அடைவதற்காக அவர்கள் எவ்வகைத் துன்பத்தையும் ஏற்பார்கள்–ஏற்றுக் கொண்டு வந்துள்ளார்கள் இலட்சியம் நிறைந்த உள்ளத்தின் வேகத்தோடு அவர் உடல் பூரணமாக ஒத்துழைப்பதில்லை; எனினும் அவர் தாம்மேற்கொண்ட தமிழினத்தின் பாதுகாப்புப் பணியைத் தொடர்ந்து செயல்படுத்துகிறார். இந்த நூற்றாண்டில் நம்மிடையே வாழும், திருவள்ளுவர் காட்டும் பெரியார்–நம்முடையதலைவர்-தந்தை பெரியார். அவர்தம் இனநெறி போற்றி அவர்தம் இலட்சியத்தை முடித்து வைப்போம் என்று உறுதி எடுத்துக்கொள்வதே தந்தை பெரியாருக்கு ஏற்ற காணிக்கை.

வாலை சுருட்டிய வைரநெஞ்சம்

என்.வி.நடராசன் எம்.எல்.சி.

மனிதசமுதாயத்தில் மலிந்திருந்த மூடப் பழக்கவழக்கங்களையும், சாதி-மத ஏற்றத் தாழ்வுகளையும் இனவெறி போன்ற கொடுமைகளையும் வீழ்ச்சியுறச் செய்து மக்களுக்கு நல்வாழ்வு அளித்திடுவதற்காக உலகில் சீர்திருத்தச் செம்மல்கள் சிலர் தோன்றினார்கள். தங்களால் இயன்ற அளவு அரும்பணியினையும் ஆற்றியிருக்கிறார்கள். எனினும் சமுதாய சீர்திருத்தப் பணிக்காக மாபெரும் இயக்கமாக ஒன்றை அமைத்து வளர்த்து அதன் வழி நின்று அரும்பணியாற்றிட ஆயிரக் கணக்கான இளைஞர்களையும், பெரியோர்களையும் ஒன்று திரட்டிய பெருமை பகுத்தறிவியக்கத் தந்தை பெரியார் அவர்களுக்கே உரித்தானதாகும்.

குறிப்பாகத் தமிழ்நாட்டில் வாழ்க்கைத் துறையின் எல்லா நலன்களையும், குறிப்பிட்ட ஒரு வகுப்பினர், அதுவும்சிறுபான்மை வகுப்பினர்-நம் நாட்டுக்கு குடியேறியவர்கள் தங்களுக்கே உரித்தானது என்று கூறி அனுபவித்து வந்தனர். இவ்வாறு உரிமை கொண்டாடியதற்கு அவர்களுக்கு பக்கத் துணையாயும், ஆதாரங்களாகவும் எடுத்துக் காட்டப்பட்டுவந்தவைகள் புராணங்களும் சாஸ்திரசம்பிரதாயங்களேயல்லாது, வரலாற்று சம்பந்தமான ஆதாரங்கள் அல்ல; வரலாற்று ஆதாரங்களை ஆராய்ந்தால் அவர்கள் எவ்வித உரிமையும் நம் தென்னாட்டில் கேட்பதற்கில்லை.

ஈடுபட்டவர்களே பலிகொள்ளும் சமுதாயப் பணி

பொதுவாக அரசியல் விடுதலைப்பணிகளில் சிரமங்களிருப்பினும் தொடர்ந்து அந்தச் சிரமங்களைமேற்கொண்டு பணியாற்றினால் வெற்றிபெற்றுவிடலாம். ஆனால் சமுதாயவிடுதலைப் பணியிருக்கிறதே அதில் ஈடுபட்டவர்களையே அது பலியாக்கியிருக்கிறது. இன்று உலகப் பொதுமக்களால் போற்றப்படும் கலிலியோ, சாக்ரடீஸ்போன்ற மேதைகளை அன்று மக்கள் படுத்திய கொடுமை சொல்லத்தரமன்று ! வைதீகபுரியினரின் சாஸ்திர-சம்பிரதாய — புராணக்கதைகளும், ஆதிக்கமும் மாமன்னர்களையும் மேதைகள் என்றோரையும்கூட ஆட்டிப் படைத்திருக்கிறது. எனவேதான் சமுதாய விடுதலையில்லாத-அதாவது மக்கள் பகுத்தறிவு பெறாத எந்த அரசியல் விடுதலையும் சமுதாயத்திற்கு முழுப் பலனை அளிக்காது என்பது இன்று திட்டவட்டமாகத் தெரியவருகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் அரசியல் விடுதலையைத் தேடித் தந்தவர்களில் முதல்வராய் விளங்கிய காந்தியாரைச் சுட்டுக்கொன்றவன் அரசியல்வாதியல்ல; மதவெறியன் கோட்ஸே! அரசியல் பணியில் மட்டுமே தீவிரமாக ஈடுபட்டிருந்த காந்தியாரை ஆரியர்கள் மிகமிகப் போற்றினார்கள். ஆனால் அவரது பிற்காலத்தில் எல்லாமதமும் ஒன்று, எல்லா கடவுள்களும் ஒன்று என்று ஓரளவு சீர்திருத்தம் பேச முற்பட்டதும் வைதீகபுரியினர் காந்தியாரைத் தீர்த்துக் கட்டிவிட்டனர். ஆக, மூடப் பழக்க வழக்கங்களை மூலதனமாக வைத்து மனித சமுதாயத்தை ஆட்டிப்படைத்து வந்த கூட்டத்தினர் கடற்படை, வீமானப் படை போன்ற பாதுகாப்புக்களை வைத்துக்

கொண்டு நம் நாட்டை அடிமைப்படுத்தி வந்த வெள்ளையர்களைவிட பேராபத்தை விளைவிக்கக் கூடியவர்கள் என்பதை மக்களுக்குத்தெளிவாக எடுத்துக்காட்டி அதனின் கோரப் பிடியிலிருந்து மக்களை விடுபடச் செய்தவர்களில் நடுநாயகமாக விளங்கி வருபவர் பெரியார் அவர்களேயாகும்.

கருத்துப் புரட்சி

"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்று அரசியல் மேடைகளில் எழுச்சிமிக்க பாடுவர் அந்நாட்களில்! அந்த அடிப்படையில் சுதத்திரப்போராட்டம் நடந்ததா என்பது விவாதத்திற்குரியது! ஆனால் சாதிமத சாத்திரக் கொடுமைகளின் கோரப்பிடிப்பிலிருந்து மக்களை விடுவித்த பகுத்தறிவியக்கம் கத்தியின்றி இரத்தமின்றி போர் நடத்தி வெற்றியும் பெற்றுள்ளது என்பதை மறுப்பதற்கு எவராலும்இயலாது! அவ்வித மகத்தான கொள்கையை அறவழியில் நின்று சாதித்த பெரியார் அவர்கள் நம் நாட்டுக்கும், நமக்கும்மட்டுமல்லாமல் பகுத்தறிவாளர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் அந்த நாடு கட்கெல்லரம் உடைமையாக ஆகிவிட்டார்கள்!

மலேஷியா அனுபவங்கள்

அண்மையில் நானும் நண்பர் திண்டுக்கல் தங்கவேலர் அவர்களும் மலேயா, சிங்கப்பூர் ஆகியநாடுகளில் சுற்றுப்பயணம் செய்து வந்ததை நண்பர்கள் அறிவீர்கள். நாங்கள் அந்த நாட்டில் இருந்தபோதும் ஏன்? இப்போதும் அடையும்பெருமைக்கு, பெருமிதத்திற்கு அளவேயில்லை. மலேயாவாழ் மக்களின் அன்றாட வாழ்வில் பெரியார் அவர்களின்—சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் நிலையான இடம்பெற்றுள்ளன.

மலேயாவாழ் தமிழர்களிடையே மூடப் பழக்க வழக்கங்கள் காணப்படவில்லை.

தேர்-திருவிழாக்களின் பெயரால் பாடுபட்டு சேமிக்கும் பொருளைப் பாழாக்கும் கண்மூடித்தனமும் மிகவும் குறைந்திருக்கிறது.

சாதிமத ஏற்றத்தாழ்வுகளும் வெறியாட்டம் போடவில்லை! அதற்குபீ பதிலாக கலப்புத் திருமணங்கள் மிகச் சாதாரணமாக நடைபெறுகின்றன.

அந்த நாட்டில் பிச்சைக்கார்ர்களையே காணமுடியவில்லை! பாடுபட்டு உழைப்பதற்கான உடல்வலிமையைப் பெற்றிருந்தும் பக்தர்வேடம் பூண்டு, ஆண்டவன் பேரால் பிச்சை எடுக்கும் அநாகரிகமான ஒருவரைக் கூட அந்நாட்டில் நாம் காண்பது அரிதிலும் அரிது! இன்னும் சொல்லப்போனால நம் நாட்டை விட மலேயா நாட்டில பகுத்தறிவியக்கக் கொள்கைகள் வேகமாக வளர்ந்து வருகிறது! இந்த வளர்ச்சிக்குக் காரணம் என்ன?

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பு நமது மதிப்பிற்குரிய பெரியார் அவர்கள் மலேயா நாடு சென்று பகுத்தறிவியக்கக் கொள்கைகளைப் பரப்பினர்கள். அங்கு வாழும் மக்களின் இதயங்களில் சிறப்பான இடத்தையும் பெற்றார்கள்.

பெரியார் அவர்கள் மலேயாநாடு சென்றபோது அந்நாட்டின் அரச பீடத்திலே அமர்ந்திருந்தவர்கள் வரவேற்று உபசரித்து ஆதரவு தந்தார்களில்லை. பெரியார் அவர்கள மதத்திற்கு விரோதி - நாத்திகர் அவரது வருகையால் ஆத்திகம் அழிந்துவிடும்-அமைதிகெடும்-அக்கிரமங்கள் மேலோங்கும் என்றெல்லாம் வைதீகபுரியினர் விஷமப் பிரசாரம் செய்து மலேயா நாட்டுக்குள் பெரியார் அவர்கள் வருவதைத் தடுத்தார்கள்-தடைவிதித்தார்கள், இரண்டு மூன்று நாட்களாகக் கப்பலிலேயே அதாவது கடலிலேயே தங்கியிருந்தார்கள். பிறகு அந்நாட்டு அரசுக்கு ஓரளவு தெளிவு ஏற்பட்டு பெரியார் அவர்களை நகருக்குள்ளே செல்ல அனுமதித்தனர்.

இவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையேதான் பெரியார் அவர்கள் மலேயாவில் பகுத்தறிவியக்கக் கொள்கையைப் பரப்ப முனைந்தார்கள். சுயமரியாதை இயக்கத்தை வளர்த்ததே வைதீகபுரியினரின் முரட்டுத்தனமான எதிர்ப்பு அல்லவா! அதேபோல மலேயா-சிங்கப்பூரிலும் சுயமரியாதை இயக்கக் கொள்கை எதிர்ப்புகளைத் தாண்டி மேலோங்கி வளர்ந்துள்ளதைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன்.

மலேயாவாழ் மக்களது இல்லங்களில் பெரும்பாலும் பெரியார் அவர்களின் திருஉருவப்படம் அமையப்பெற்றிருக்கிறது. அரசியல் துறையில் வேறுபாடுடையவர்கள் இல்லங்களிலும் பெரியார் அவர்

களின் பொதுத் தொண்டினை விளக்கிக் காட்டும் நூல்களும், பிறவும் இருக்கக் கண்டேன்.

மலேயா நாட்டில் மட்டும் ஏறத்தாழ 60 திராவிடர் கழகக் கிளைகள் இயங்கி வருகின்றன. நான் எனது சுற்றுப்பயணத்தின்போதும் புதிதாக ஒரு திராவிடர்கழகக் கிளையைத் துவக்கிவைக்கும்படியான வாய்ப்பினைப் பெற்றேன்.

கட்சிஎல்லை தாண்டி சுயமரியாதை

அகிலமலேயா மத்திய திராவிடர்கழகத்தினர் தங்கள் அலுவலகத்திற்கு என்னையும், தோழர் தங்கவேலரையும் வருகைதரச் செய்து அன்புடன் உபசரித்தார்கள். திராவிடர்கழக அலுவலகத்தில் நமது அண்ணா அவர்களின் திருஉருவப்படம் அலங்கரிக்கப் பட்டிருந்தது கண்டு மகிழ்ச்சியடைந்தேன் அங்கு திராவிடர் கழகம் - திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய தோழர்களிடையே குரோதமோ, விரோதமோ சிறிதுகூட இல்லை.

அகில மலேயா காங்கிரஸ் தோழர்களும் பெரும்பாலோர் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை வரவேற்று நடைமுறையிலும் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியார் அவர்களின் உடல் நலனைப் பற்றியும். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஆதரவுகாட்டி வருவதைப் பற்றியும் ஏராளமான தோழர்கள் புதிய தோர் உற்சாகத்துடன் கேட்டனர். ஆக, இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால்உள்ள மலேயா-சிங்கபூர் நாட்டிலும் நமது பெரியார் அவர்களின் தூய்மையான தொண்டும் பகுத்தறிவியக்கக் கொள்கையும் அணையா விளக்குகள் போன்று ஒளி வீசுகிறது!


"வள்ளுவன்தனை உலகிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று கூறும்போதெல்லாம் தமிழ்நாடும், தமிழ்ப் பெருமக்களும் எவ்வாறு தனிச்சிறப்புக்கு உரிமையுடையவர்களாக ஆகிறோமோ அதுபோலவே, பகுத்தறிவியக்கத்தைத் தென்னாட்டில் - திருவிடத்தில் தோற்றுவித்து, வளர்த்து அதன்பயனை மனித சமுதாயத்திற்கு அளித்ததுமட்டுமல்லாமல் பாரின் பல திக்குகளிலும் அத்தூய்மையான கொள்கைகளை பரவிடச்செய்த பகுத்தறிவு மேதையார் பெரியார் அவர்களைப் பெற்ற தமிழ்நாடும், தமிழ் மக்களும் பெருமைக்குரியவர்கள் என்று கூறின் மிகையாகாது.

மக்களின் வாழ்வில் மலிந்திருந்த இருளை நீக்கி விளக்கேற்றிவைத்து மங்காத ஒளிவீசச்செய்த சீர்திருத்தச் செம்மலாம் அறிவுலகமேதை பெரியார்அவர்களின் 89-வது பிறந்தநாளை நாம் கொண்டாடுவதன் வாயிலாக நம் நாடும், நம் மக்களும், நமது மொழியும், பண்பும் கலாசாரமும் பிற நாடுகளோடு, பிற நாட்டு மக்களோடு சரிநிகர் சமமாகத் திகழ்வதற்கு மேலும் வழிவகை அமையும் என்று உறுதி கொள்வோமாக!

கண்மூடிவழக்கத்தையெல்லாம் மண்மூடச்செய்ததுமட்டுமல்லாமல் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உரிமையையும், அந்த வாழ்வும் தன்மானவாழ்வாக அமைதல் வேண்டும் என்றும் எடுத்துக்கூறி அம்மகத்தான கொள்கைக்காக தம்மையும் தாம் கண்ட பகுத்தறிவு இயக்கத்தையும் காணிக்கையாக்கிய பெரியார் அவர்களை வாழ்த்தும் தகுதியை நாம் பெறாவிட்டாலும் அவர்கள் மேலும் நீடுழிவாழ்ந்து இப்போதுமலர்ந்துள்ள நல்லாட்சிக்கு — மக்களாட்சிக்கு அவர் வாழ்த்துக்கூறி வளரச்செய்ய வேண்டுமென்று இதயபூர்வமாக ஆசைப்படுவோமாக!


அறியாமை எனும் இருளை அகற்றி மக்களின் வாழ்வில் விளக்கேற்றிவைத்த வைக்கம் வீரராம் பெரியார் அவர்கள் தந்த கொள்கையை நமது வாழ்க்கையில் கூடுமானவரை மேற்கொள்வதே அவருக்கு நாம் அளிக்கும் பிறந்தநாள் காணிக்கையாகும்! பெரியாரின் பிறந்தநாளன்று அத்தகு உறுதியைக் கொள்வோமாக!

வாழ்க பெரியார்! வெல்க அவரது தூய கொள்கை!!



தமிழர்கட்கு தன்மானம் ஊட்டிய தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களது 89-வது' பிறந்தநாளில் கழகத் தோழர்கள் 'விடுதலை வளர்ச்சிக்குப் பாடுபட உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்.

17—9—67 முதல் 'விடுதலை'ப் பத்திரிகைக்கு மூன்று ஆண்டு சந்தா செலுத்துபவர்கட்கு 8 ரூபாய் சலுகை கொடுத்து பத்திரிகை அனுப்புங்கள். எனது மூன்றாண்டு சந்தா நூறு ரூபாய் கட்டியிருக்கிறேன்.



எம். சதாசிவம்

பெரியார் மணிமண்டபம்

குணியமுத்தூர் அஞ்சல், கோவை மாவட்டம்.

இன்றைய காங்கிரஸ் நிலை!

— தந்தை பெரியார்

25-8-67 தேதிய (அதிகார பூர்வமான) காங்கிரஸ் பத்திரிகை 'நவசக்தி'யில்,

'தி மு.க. கட்சியின் நாஸ்திகப் போக்கு' என்கிற தலைப்பில் ஒரு காங்கிரஸ்காரர் (பார்ப்பனர்) எழுதிய கடிதம் (என்பதாக) ஒன்று முதல்பக்கத்தில் கொட்டைஎழுத்துத் தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அக்கடிதம் வேறு எந்தவிதமான யோக்கியப் பொறுப்பான நேர்மை காரணமின்றி, காங்கிரசிற்கு எதிர்க்கட்சியான தி. மு. க.—இன்று ஆட்சியிலிருக்கும்—கட்சி மீது மக்களை ஏமாற்றிப் பழிசுமத்தவேண்டும் என்ற சிறுமதி எண்ணத்துடனேயே எழுதப்பட்டிருப்பதாகும் என்பது ஒருபுறமிருந்தாலும், நாத்திகம் என்பது பொல்லாத ஒரு கொள்கை (கருத்து) என்பதாக மக்கள் கருதும்படி அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருப்பதாக நான் கருதுவதால் அவ்வண்ணம் பரவக்கூடாது என்றும், மக்கள் யாவரையும் (பகுத்தறிவு வாதிகளாக) நாத்திகர்களாக ஆக்கவேண்டும் என்கிற எனது அரைநூற்றாண்டுக் கருத்தை (ஆசையை) முன்னிட்டு இக்கட்டுரையை எழுதுகிறேன்.

இனி இக்கட்டுரையாளருக்கும், பத்திரிகையாளருக்கும் யோக்கியப்பொறுப்புணர்ச்சி இருந்தால் ஆதாரத்தோடு, விளக்கத்தோடு நாத்திகத்தைக் கண்டிக்கும் கருத்துக்களை, கட்டுரைகளை வெளியிடச்செய்ய வேண்டும் என்றும் ஆசைப்பட்டே எனது கடமையை முன்னிட்டு சற்று தீவிரமாகவே எழுதுகிறேன்.

உலகமே நாத்திகமயமாகவேண்டும்

ஏனெனில் நான் உலகமே நாத்திக (பகுத்தறிவு) மயமாக வேண்டும் என்பதற்கு ஆகவே உயிர்வாழ்பவன்,

ஏனெனில் நமது நாடு 'ஆத்திகம்' காரணமாக மிகமிகக்கீழான நிலைக்குப் போய்விட்டது. மக்களுக்கும் அத்து இல்லாமல் மானம், வெட்கம், சுயமரியாதை என்பவை அடியோடு பாழ்படுத்தப்பட்டு விட்டன. இதை இனி 'இரணசிகிச்சை' மூலம் தான் சரிப்படுத்த முடியுமே தவிர எப்படிப்பட்ட மேதாவி மருத்துவராலும் (நேரில் விவாதித்து) மருந்து கொடுத்து சரிப்படுத்த முடியாத நிலை அடைந்து விட்டது.

எதனால் இப்படிச் சொல்லுகிறேனென்றால் பார்ப்பான் மாத்திரம் இன்று நம்மை வேசிமகன், சூத்திரன், கீழ்மகன், கடைஜாதி, நாலாவது ஜாதி என்று சொல்லுவதில்லை; நம்மவர்களே மடாதிபதிகள், மேதாவி புலவர்கள், அமைச்சர்கள், கவர்னர்கள், கலெக்டர்கள், கோடீஸ்வரர்கள், மருத்துவநிபுணர்கள், விஞ்ஞான நிபுணர்கள் முதல் 100க்கு 90க்கு மேற்பட்ட தமிழ் மக்களுந்தான் தன்னை அப்படிப்பட்ட இழிமகன் என்றே ஒப்புக்கொண்டு, பல பெரியவர்கள் பார்ப்பனர் காலில் விழுந்து கும்பிட்டு பாததீர்த்தம் வாங்கிக் குடிப்பதும், பார்ப்பான் மணி அடிக்கும் கல்லுருவம் உள்ள கோயில்களில் தானாகவே தன்னை மேற்சொல்லப்பட்ட கீழ்மகன் என்று நினைத்துக் கொண்டு அறைக்கு வெளியில் நின்று வணங்குவதும், இவற்றிற்கு ஆதாரமான பாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய வர்ணாச்சரம நூல்களைத் தங்கள் மதநூல், கடவுள் நடப்புநூல் என்று தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டாடுவதுமான இழிநிலையிலிருக்கிறார்கள்! பல ஆயிரம் ஆண்டாக இருந்தார்கள்; இன்றும் இருக்கிறார்கள் என்பதோடு மேலும் இவர்களின் பின் சந்ததிகளும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு அவ்வண்ணமே இருக்கத் திட்டம் போட்டு வேலை செய்து வருகிறார்கள்! இவர்களைத் திருத்துவது என்றால், திருத்த முடியாவிட்டாலும் இவர்களது பின் சந்ததிகளையாவது மானம், வெட்கம், சுயம

மாதை உள்ள சமுதாயமாக ஆக்க வேண்டு மானால் நமது கடமை என்ன?

இழிதன்மையை நீக்க முயல்வது நமது கடமை

கிருஸ்துவனையோ, முஸ்லீமையோ, ஜப்பான், ரஷ்யாக்காரனையோ கொண்டு வந்து நம் மக்களைத் தங்கள் மக்கள்போல் திருத்தும்படிச் செய்வது அவ்வளவு எளி தான காரியம் ஆகிவிடுமா? அப்படி முயற் சிப்பவனை இவர்கள் கொன்றுவிடுவார்கள். ஆனாலும் அதனால் நாம் சும்மா இருக்க முடியுமா? ஏதோ நம்மாலான முயற்சியை நாம் (நமது உயிர் போகுமளவும்) செய்து தான் ஆகவேண்டும்.

இந்த முயற்சியில்லாதவன் எவனாக இருந்தாலும் இந்த நாட்டிற்கு பாரம் என் பது மாத்திரமல்லாமல் தான் இழிமகனாக இருப்பதில் வெட்கப்படாதவன் என்றுதான் சொல்லவேண்டும். இந்த முன்னுரையோடு துவங்குகிறேன்.

இந்துமத தேவஸ்தான இலாகாவிற்கு ஒரு சாரங்கபாணி முதலியாரை மாற்றி விட்டு அந்தப் பதவியில் மற்றொரு ராதாகிருஷ்ணநாயுடுவை நியமித்தால் எந்த விதத்தில் இன்றைய அரசாங்கம் 'நாஸ்திகப் போக்குடையதாக" ஆகிவிட்டது?

இதில் மற்றொரு அபாண்டப் புளுகு என்னவென்றால், இந்த மாற்றத்தைத் "திடீ ரென்று மாற்றிவிட்டார்கள்" என்பது. இப்படி எழுதியது ஒரு பிராப்பனர் ஆவார்! பார்ப்பானுக்கு (அவனுடைய தர்ம சாஸ் திரப்படி) யோக்கியம், நாணயம், மானம், வெட்கம் இருக்க முடியாது. (இராமன் கதைபோல) அவர்கள் "எதுவும் செய்ய லாம். தங்கள் நலம் (தர்மம்)காக்க எந்த அதர்மத்தையும் செய்யலாம்" என்பது அவர் களுக்கு மனுவிதி.

ஆனால் நமக்கு அறிவிருக்கவேண் டாமா?

சாரங்கபாணி முதலியாரை திடீரென்று மாற்றவிலலையே! ஒரு மாதத்திற்கு முன்பே "சாரங்கபாணி முதலியாரை (இந்த 6 வருஷ மாக) ஏன் மாற்றவில்லை?" என்கிற கேள்வி சட்டசபையில் கிளம்பி "கவனிப்பதாக" மந்திரி பதில் சொல்லி இதை மக்களுக்குத் தெரிவித்துவிட்டு 1 மாதம் பார்த்து பின்பே மாற்றி இருக்கிறார்கள்.

எந்த உத்யோகஸ்தர்களையும் மாற்று வதற்கு அரசாங்கம் மாற்றுதல் உத்தரவில் கையெழுத்தும் போடும்வரை வேறு யாருக் கும் தெரிவிக்கக் கட்டுப்பட்டதல்ல. இது அரசியல் A. B. C. தெரிந்த எந்த அசட்டுக் கும் தெரிந்த சாரியமேயாகும் மற்றும் சாரங்கபாணி முதலியாரை அகாலத்தில் மாற்றவில்லை; 3 ஆண்டு கழிந்த உடன் மாற்றலாம் என்ற பொதுவிதிக்கு விரோத மாக அப்பதவியில் அவரை ஆறுவருட காலம் எல்லாவிதத்திலும் எல்லாவித சுக போகங்களையும் அனுபவிக்கவிட்டு பிறகு தான் மக்கள் பிரதிநிதிகள் வேண்டுகோள் மீது மாற்றப்பட்டதாகும். அந்தப் பதவி தன்றாகக் கொள்ளையடிக்கக் கூடிய பதவி.

டிரஸ்டி நியமனங்களில் லஞ்சக்கொள்ளை

ஒரு டிரஸ்டியை நியமிக்க ஒரு அபேட்ச கர் ரூ. 250 முதல் ரூ. 2000 வரை கொடுக்க முன்வருவார். சிறு கோவிலுக்கு ரூ. 250 குறைந்த ரேட்டு; பழனி, திருவண்ணாமலை காஞ்சி, மதுரை, சீரங்கம் போன்ற பெரிய கோவில்களுக்கு ரூ 2000 வரை மேலும் கொடுக்க வருவார்கள்.

நான் தேவஸ்தான கமிட்டி செக்ரட்டரி யாக, பிரசிடெண்டாக சுமார் 15 வருடம் இருந்தவன். நான் வாங்காவிட்டாலும் என் னுடன் இருந்த சகமெம்பர்கள் சிலர் வாங்குவார்கள். நான் மெஜாரிட்டி விரும் பும்படி நடக்க வேண்டியவன்.

கொடுமுடி, பவானி, அவினாசி, சென்னி மலை, ஈரோடு முதலிய கோவில்கள் உட்பட சுமார் 80 கோவில்கள் என் கமிட்டிக்கு உட் பட்டது. ஈரோடு, பவானி, திருப்பூர், தாரா புரம் முதலியவை 4, 5 தாலுக்காக்களாகும். இவைகளே பல கமிட்டிமெம்பர்களுக்கு ஜீவனத்திற்குப்போதுமானதாகும். அப் போது ஒரு மெம்பருக்கு சாகும்வரை மெம் பர் பதவி உண்டு! நான் சில சீர்திருத்தம் செய்தேன் என்றாலும் இந்த விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்போதே அவைகளுக்கே அவ்வளவு கிராக்கி, வரும்படி இருக்கும்போது மாகாணம் பூராவும் உள்ள பதவிகளுக்கு சொல்லவேண்டுமா? இப்படிப் பட்ட ஒரு பதவியில் ஆறு வருடம் ஒருவர்

இருப்பதென்றால் அதன் பெருமையை யாரால் வர்ணிக்க முடியும்? பனகால் இராஜா முதன்மந்திரியாய் இருந்த காலத்தில் சர். டி. சதாசிவ அய்யரை தேவஸ்தான இலாகா கமிட்டித் தலைவராகப் போட்டார். அப்படிப்பட்ட பதவி ஒரு சப் ஜட்ஜுக்குக் கொடுக்கப்பட்டு ஆறு வருட காலம் அவர் அதில் இருத்தப்பட்டார் என்றால், அவர் பிழைக்காவிட்டாலும் அவர் பெயரைச் சொல்லி அந்தக் கூட்டத்தில் வேறு எத்தனை பேர் பிழைத்திருப்பார்கள்!

கோயில் டிரஸ்டிகள் சுயநலக் கொள்ளை

இவர்களால் நியமிக்கப்பட்ட எவ்வளவு டிரஸ்டிகள் பணக்காரர்களாக இருந்தாலும், வருஷம் 10 ஆயிரம் 5 ஆயிரம் இன்னும் சம்பாதிக்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகத்தெரியும். இதில் அரசியல் புகுந்து விட்டால், எம். எல். ஏ க்களுக்கும் மந்திரிகளுக்கும் பங்கு போகும். மந்திரி சொற்படியே டிரஸ்டிகள் நியமிக்கப்படுவதானால் அவருக்கும் பங்குபோடுவதில் கஷ்டம் இருக்காது; ஏன் எனில் இது இலஞ்சம் அல்ல.

சாரங்கபாணி முதலியாரை அறநிலையப் பாதுகாப்பு டிரஸ்டியாகப் போடும்போது மந்திரிக்கு வேண்டியவர், பயன்படுபவர் என்பதல்லாமல் சம்பிரதாயப்படி அவருக்கு அந்த பதவி வகிக்கத் தகுதி இருக்கவில்லை.

(காங்கிரஸ் ஆட்சியின் யோக்கியதைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.) தகுதிக் குறையை சரிப்படுத்த தனி ஜி. ஓ. போடப்பட்டது எப்படியோ இருக்கட்டும். ஆறு வருடத்திற்கு அப்புறம் எதற்காக சாரங்கபாணி முதலியார் போய்விட்டாரே என்று ஒலமிட வேண்டும்? வரும்படி, அதிகாரம், ஆதிக்கம் முதலியவைகள் போய்விட்டதே என்றா? வேறு காரணமா?

இது நாத்திகமா ?

தவிர சாரங்கபாணிமுதலியாரை மாற்றி விட்டதால் அரசாங்கம் எப்படி நாத்திகப் போக்காய் விடும்? அவருக்கு பதிலாகப் போடப்பட்டிருப்பவர் நாத்திகரா? அரசாங்க தேவஸ்தான இலாகா மந்திரி பச்சைநாத்திகராயிருக்கும்போது பச்சை நாத்திகர் என்று தெரிந்தே இந்நாட்டுப் பெரும்பான மக்கள் அவரைத் தெரிந்தெடுத்து மந்திரியாக்கி இருக்கும்போது இந்த தோல்விடைந்த திரு உருவங்களுக்கு நாத்திகரல்லாத ஒரு அதிகாரியைப் போட்டதுபற்றி இவ்வளவு கவலை ஏன்?

மலத்தை எடுத்து மேலே பூசிக்கொள்வதுபோல் இப்படிப்பட்ட விஷயங்களில் இவ்வளவு ஆத்திரம், பழி சுமத்தல் முதலிய காரியங்களில் ஏன் பிரவேசிக்க வேண்டும்? பத்திரிகைகளுக்கு கவுரவம் வேண்டாமா?

இதனால் இந்தக் கூட்டத்திற்கு இன்றைய அரசாங்கத்தின் மீது குறைசொல்ல யோக்கியமான, நாணயமான குறை இல்லை என்றுதானே காண்கிறது?

காங்கிரஸ்காரர்கள் அறிவாளிகளாகவும், யோக்கியப் பொறுப்புள்ளவர்களாகவுமிருந்தால் தி. மு. க. ஆட்சியைமேல் விழுந்து ஆதரிக்க வேண்டும். காங்கிரசிற்கு எதிராயுள்ள 10 மாகாண ஆட்சியில் இங்குதான் ஒரு கொள்கை உள்ள கட்டுப்பாடான, நிலையான ஆட்சி நடைபெறுகிறது.

ஜனநாயகமுறைப்படி நடக்கும் ஆட்சி

இந்த ஆட்சி சரியாகவோ, தப்பாகவோ இந்தியாவின் ''ஜனநாயகத்தை'' ஒரு அளவுக்கு காப்பாற்றுகிறது. மற்ற எதிர் ஆட்சிகள் ஜனநாயகத்தை சிரிப்பாய் சிரிக்க வைக்கின்றன. இதைப் பார்த்த மற்ற நாட்டான் என்ன நினைப்பான் என்பதை எண்ணிப் பார்த்தால் ஜனநாயகவாதிகள்வெட்கப்படத்தான் வேண்டும்.

எப்படியோ ஒரு கட்சிக்காரர்கள் இந்தியாவிலேயே இந்தத் தமிழ் நாட்டிலேதான் பதவியேற்றிருக்கிறார்கள். மற்ற காங்கிரஸ் ஆட்சி உள்ள நாடுகளும் பெரிதும் முடை நாற்றமாகத்தான் இருக்கிறது. இது காங்கிரஸ் பிரமுகர்களுக்கே தெரியும்.

மத்திய ஆட்சிகூட ஒரு ஒற்றுமையான ஆட்களைக் கொண்ட ஆட்சி என்று சொல்வதற்கில்லாமல்தான் இருக்கிறது.

ஆகையால் தமிழ்நாடு ஆட்சியைக் கவிழ்க்க இவ்வளவு கீழ்த்தரமான தன்மையில் இறங்கியது சிறிதுகூட புத்திசாலித்தனமாகாது. இதற்குக் காரணம் நான் அறிந்தவரை சிலருக்குப் பதவி இல்லாமல்

வாழமுடியவில்லை. சிலருக்கு பிழைப்புக்கே தாளம்போட வேண்டியதாகிவிட்டது. சிலருக்கு மரியாதையும் பேரும் வேறு வழியில் சம்பாதிக்க முடியவில்லை; சிலருக்கு கொள்ளையடிக்க முடியவில்லை; இன்னும் இப்படிப்பட்ட பல காரணங்கள் சேர்ந்து இவ்வளவு கீழ்நிலைக்கு வரவேண்டியதாகி விட்டது.

காங்கிரசின் வேதனைக்குரிய போக்கு

உண்மையிலேயே நான் காங்கிரசின் போக்கைக் கண்டு வேதனையடைகிறேன். நான் நினைக்கிறேன்: இன்றையதினம் காங்கிரஸ் பதவிக்குவர குறைந்தது நாலரை வருடம் காத்திருக்க வேண்டும். அப்போதும் முடிகிறதோ இல்லையோ சந்தேகம்தான்.

ஆதலால் குறுக்குவழியில் அரசியலைக் கைப்பற்ற முயற்சிக்கிறது. அதாவது "இந்த (தி.மு.க.) ஆட்சியில் சட்டம்-அமைதி-பாதுகாப்பு சரியாகக் காக்கப்படவில்லை; ஆதலால் அரசாங்கத்தை இராஷ்டிரபதியே நேரே கைப்பற்றி ஆளுகிறார்" என்று பெயர் செய்ய—கைப்பற்ற முயற்சிக்கிறது.

இந்தப்படி செய்வதற்கு முதல் வேலையாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானமும் போட்டுக் கொண்டது. எதனால் என்றால் அரசியல் சட்டத்தில் இந்தப்படி ஒரு பிரிவு இருக்கிறது. அதாவது, அரசியல் சட்டத்தில் நெருக்கடி நிலைமை (Emergency Provisions) 356வது பிரிவுப்படி,

"எந்த ஒரு மாநிலத்திலிருந்து அந்த கவர்னர் தரும் அறிக்கையின் பேரிலோ அல்லது வேறு வகையிலோ ஜனாதிபதி அவர்கள் அம்மாநிலத்தில் அரசியல் சட்ட விதிகட்கு உட்பட்டு அரசாங்கம் நடத்த இயலாத ஒரு நிலவரம் ஏற்பட்டுள்ளது என்று திருப்தி அடைவாரானால் அவர் ஒரு பிரகடனம் மூலம் மாநில ஆட்சியை அவரே எடுத்து நடத்த முனையலாம்; எல்லா அதிகாரங்களையோ அல்லது சில அதிகாரங்களையோ மட்டும் எடுத்து நடத்தலாம்!"

—இம்மாதிரி பிரகடனம் அறிவித்த இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் ஒப்புதல் தீர்மானங்களைப் பெறவேண்டும்.

ஆறுமாதம் வரை அது அமுலில் இருக்கும்போது, அந்தத்தவணை முடிவடையும் போது மற்றொரு ஆறுமாத காலம் அதை நீட்டுவதற்கு பாராளுமன்றம் மீண்டும் ஒப்புதல் தரவேண்டும்.

இப்படி ஒவ்வொரு ஆறுமாதத்திற்கும் ஒரு முறை பார்லிமெண்டின் இரு சபைகளின் ஒப்புதல் தீர்மானங்களை பெற்று நீட்டினாலும் அதிகபட்சம் மூன்று வருடத்திற்குமேல் ஜனாதிபதி ஆட்சி இருக்க முடியாது என்பதாகும்.

அதை நம்பி அதற்கு ஆதாரம்தேட அசிங்கமாக நடந்து கொள்கிறார்கள் என்பது எனது எண்ணம்; இது நடக்கிற காரியமல்ல. இராஷ்டிரபதி ஆட்சி நடந்தாலும் ஆறு மாதம்தான்; பிறகு நீட்டினாலும் 3 ஆண்டுக்குமேல் நீட்டமுடியாதே! பிறகு எலெக்ஷன் வந்துதானே தீரவேண்டும்? அதில் காங்கிரஸ் ஜெயிக்க புதிய வாய்ப்பு என்ன வரப்போகிறது?

இராஷ்டிரபதி ஆட்சியென்றால் இன்றைய நிலையில் பெரிதும் அராஜகம் அல்லது அடக்குமுறை—இராணுவ ஆட்சியாகத்தான் இருக்கமுடியுமே தவிர, சட்டம்-சமாதானப் பாதுகாப்பு ஆட்சியாய் இருக்க முடியாது. ஏனென்றால் காங்கிரசின்போக்கு, அதன் தூண்டுதல் அந்த பாணியிலிருக்கிறது. வங்காளம் போன்ற நாடுகளைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம்.

காங்கிரசாரின் பதவிப்பேராசை

காங்கிரஸ் தலைவர்கள், பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள், தொண்டர்கள், பிரசாரகர்கள், லைசென்ஸ்—பர்மிட்காரர்கள், பொறுக்கித்தின்ற சில சட்டசபை அங்கத்தினர்கள் காங்கிரஸ் தோற்றதும் தாங்கள் நிர்வாணமாக நிற்பதாக பதறுகிறார்கள்; துடிக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு வாரம் பத்துநாளில் மறுபடியும் தாங்கள் பதவிக்கு வந்து ஆகவேண்டும் என்று நெருப்புமீது நிற்பவர்கள் போல் துள்ளுகிறார்கள்.

காங்கிரஸ்

காங்கிரசின் யோக்கியதையை நான் நன்றாக அறிந்தவன். என்வயது 88; காங்

கிரஸ் வயது 82; காங்கிரஸ் தோழர்கள் காங்கிரசைப் பற்றி சரியாகத் தெரிய வேண்டுமானால் 1885 முதல் 1954 வரை காங்கிரஸ் சரித்திரத்தை, அது எடுத்த பிறவிகளைப் படித்தும், அனுபவஸ்தர்களிடம் தெரிந்தும் பார்க்கட்டும்.

இராஜாஜியே ஒரு சமயத்தில் சொன்னார். காங்கிரஸ் சுதந்தரம் வாங்கிய யோக்கியதை எனக்குத் தெரியாதா? என்று காங்கிரஸ்காரனையே கேட்டார்! மற்றும் ஒரு சமயம் காந்தியின் கருத்தை மறுத்துப் பேசும்போது சொன்னார் "காந்தி பெரியவர்தான் நான் மாத்திரம் சிறியவனா?" என்றார்! காந்திக்கு அடுத்த பெரியவராக இராஜாஜிதானே இருந்தார்.

1921-ல் காந்தி சட்டசபையைக் கேவலமாகப் பேசும்போது "மக்கள் பற்றில்லாத சுயநல பதவிவேட்டைக்காரன்தான் சட்ட சபைக்குப் போவான்" என்றார்.

வெள்ளையர் ஆட்சியைப் போற்ற ஏற்பட்ட ஸ்தாபனம்

1885ல் காங்கிரஸ் ஏற்பட்டதே வெள்ளையன் ஆட்சி பற்றி பெருமையாக மக்களிடம் பிரசாரம் செய்ய கூலிகளை ஏற்படுத்திய ஸ்தாபனம்தான் காங்கிரஸ். 1920 வரை காங்கிரசிலிருந்தவர்கள் அந்த கூலிகளும், அவர்கள் பரம்பரையும்தானே?

முஸ்லீமும் கூலிவாங்க வந்து விட்டான். பார்ப்பனரல்லாதவர்களும் கூலி வாங்க வந்து விட்டார்கள் என்கின்ற பெரிதாமையால் ஏற்பட்டதுதானே! வெள்ளைக்காரனை எதிர்த்த ஸ்தாபனங்கள் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை, பட்டினி; ரயிலைக் கவிழ்த்தல், வெடி குண்டு எறிதல், வெள்ளையனைக் கொல்லுதல், வெள்ளைக்காரன் சாமானை பகிஷ்கரித்தல் முதலிய மற்ற காரியங்கள் எல்லாமுமே கூலி, பதவிப் போராட்டம்தானே?

வரிமேல் வரி போட்டும் பள்ளி மூடின?

வெள்ளையனே வெளியேறு! என்ற தெல்லாம் 1942ல்தானே, வரி வரி என்று ஜஸ்டிஸ் கட்சிமீது இப்போதுபோல விஷமப் பிரசாரம் பண்ணி 1937ல் காங்கிரஸ் பதவிக்கு வந்தவுடன் 19 வரிகளைப் போட்டு 100க்கு 7 பேரே படித்திருந்த காலத்தில் 2500 பள்ளிகளை மூடியதுதானே காங்கிரஸ் ஆட்சி! மறுபடியும் 1952ல் 100க்கு 9 பேர் படித்திருந்தபோது 6000 பள்ளிகளை மூடி ஜாதித்தொழிலைச் செய்யச் சொன்னதுதானே காங்கிரஸ்!

யார் தேசத்துரோகி?

வெள்ளையனே வெளியேபோ' என்றது எதற்காக? ஜெர்மன்காரனையும் ஜப்பான் காரனையும் இந்தியாவை ஆளச்செய்வதற்கு அல்லாமல் வேறு எதற்கு? நேதாஜியே ஜப்பானியனை, ஜெர்மானியனைக் கூப்பிடத்தானே போனார்?

சண்டையின்போது பட்டாளத்திற்கு ஆள் சேரக்கூடாது, சண்டைக்கு செலவுக்குப் பணம் கொடுக்கக்கூடாது, இந்திய பட்டாளத்தை சண்டைக்குப் பயன்படுத்தல் கூடாது என்றனரே இதற்கு என்ன அர்த்தம்? எதிரியை ஆளக் கூப்பிடுவதன் அறிகுறிதானே அது!

இதை நான் தடுத்ததற்காக என்னை தேசத்துரோகி என்றார்கள். என்கிறார்கள்! தேசத்துரோக பரம்பரை என்கிறார்கள் தி.மு.க.வை! அறிவுடைய மக்களே சிந்தியுங்கள், யார் தேசத்துரோகி என்று!

காமராசரால் காங்கிரசு மானம் காக்கப்படுகிறது

இப்படிப்பட்ட யோக்கியதை உள்ள காங்கிரஸ் இன்று மானத்தோடு உலவுகிறது என்றால் காமராசர் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு வந்தது அல்லாமல் வேறு காரணம் என்ன?

நாளைக்கும் காங்கிரஸ் — மைனஸ் (கழித்தல்) காமராசர் என்று—ஆனால் மிச்சம் 0 என்ற சைபர்தானே (வெங்காயம்), வேறு ஆள் யார்? இங்கே பக்தவத்சலம், சுப்ரமணியம்; அங்கே மொரார்ஜி, நந்தா, பட்டீல், அம்மா இந்திரா இவர்கள் தானே! இவர்கள் யோக்கியதை என்ன? அறிவு என்ன? ஆற்றல் என்ன? சரித்திரம் என்ன? இவர்களில் தி.மு.க. மந்திரிகளை விட மேலானவர்கள் எத்தனைபேர்? யார்? யார்?

தி.மு.க.வை எதிர்ப்பதன்மூலம் காங்கிரஸ் கசுமாலத்துணியை கசுக்க வைக்

கிற்து. காங்கிரசின் போக்கு மாறி ஆகணும் இல்லாவிட்டால் அது மறுபடி பதவி பெற முடியாது.

இரண்டு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் கள் உயிரோடு பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டார்கள்.

ஜெயிலை உடைத்துக் கைதிகள் வெளி யாக்கப்பட்டார்கள்.

ரயில்வே ஸ்டேஷன் கொளுத்தப் பட்டது.

முனுசீஃப்கோர்ட் கொளுத்தப்பட்டது.

போஸ்டாஃபீசுகள் கொள்ளையிடப் பட்டு நாசமாக்கப்பட்டன.

தந்திக் கம்பிகள், டெலிஃபோன் கம்பி கள் துண்டிக்கப்பட்டன,

பல பஸ்கள், கார்கள் கொளுத்தப் பட்டன.

கலெக்டர் முன்னிலையில் ரயில் வண்டி கொளுத்தப்பட்டது.

கலெக்டர் முன்னிலையில் போலீசு கூட்டத்தினிடையே சட்டங்கள் மீறப்பட் டன. முன்பு இருந்த ஆட்சியாளர் இதிலும் தோற்று வெளியாக்கப்பட்டபின் சொல் கிறார்கள் அய்யா. "அண்ணாதுரை ஆட்சி யில் சட்டம் சமாதானம் பாதுகாப்பு இல்லை" என்று! வாசகர்களே! பொது மக்களே சிந்தியுங்கள்! இலட்சுமிகாந்தம் நடை பத்திரிகைகளைக் கண்டு ஏமாறாதீர் கள்!

காமராசர் தலைமையில் காங்கிரசு சீரடைய வேண்டும்

நான் இன்னமும் காமராஜர் தலை மைக்கு உள்பட்ட காங்கிரஸ்தான் சிறு மாறுதல்களுடன் இந்நாட்டை ஆளவேண்டு மென்று ஆசைப்படுகிறவன். காங்கிரசால் தான் மக்களுக்கு வேண்டிய பல காரியம் நாடு முழுவதும் செய்யமுடியும். அதுதான் இந்தியா முழுவதிலும் உள்ள கட்சி அதற்குப் பலம் குறையக்கூடாது. ஆகவே அது நாணயம், கண்ணியம், நேர்மையுடன் அடுத்த தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்கின்ற கவலையிலேயே இருக்கிறேன்.

ஆனால் இந்தியா முழுவதிலும் இன்று நடைபெறும் அரசியல் போக்கு அரா ஜகத்தையும் குழப்பத்தையும் காலித்தனத் தையும், வளர்ப்பதாகவே இருக்கிறது. இந் தப் போக்கால் அடுத்த தேர்தல் என்ன ஆகுமோ என்று பயமாக இருக்கிறது. ஃ



சீர்திருத்த யுகத்தின் சிற்பி

சீர்காழித்தலைமையமைச்சர் திரு. எஸ்.ஜே.சாதிக் பாட்சா

பிறப்பை வைத்து உயர்வு தாழ்வு பாராட்டுவதையும், சாதி வேற்றுமைகளையும் ஒழித்து, சம உரிமையையும், சம நீதியையும் நிலைநாட்டிய தலைவர்—நமது பெரியார்.

வாய்மை நெறி வழுவாமல், நியாயத்தை நிலைநாட்டுவதற்கான அறப் போரில் யாருக்கும் அஞ்சாமல், மக்கள் பொதுநலனைப் பேணி உழைத்தவர்களின் வரலாற்றில் பெரியார் அவர்களுக்குத் தனி இடம் உண்டு.

இது புதுயுகம்! அதாவது 'சாதிக்கு ஒரு தொழில்—சாதிக்கு ஒரு நீதி' என்ற கொடுமை ஒழிக்கப்பட்ட சீர்திருத்த யுகம்! இந்தச் சீர்திருத்த யுகத்தின் சிற்பியே தந்தை பெரியார்.

சீர்திருத்தம் என்பது தேவையின் அடிப்படையில் பிறந்தது அல்ல. அது நியாய உணர்வின் விளைவு. இந்த உணர்வின் விளைவை பகுத்தறிவுக் கண்ணோட்டத்தோடு ஒரு தனிச் சித்தாந்தமாக்கியவர் பெரியார். இச்சித்தாந்தத்தை வகுப்பு வாதம் என்று கேலி செய்து அதை அழிக்க முயன்றவர்கள் உண்டு. ஆனால் அனைவருமே அதில் தோல்வி கண்டார்கள். அவருடைய சித்தாந்தம் புடம்போட்ட தங்கமாக ஒளி வீசிக் கொண்டே இருக்கிறது.

சாதி ஏற்றத் தாழ்வு உணர்ச்சியை ஒழிக்க திருவள்ளுவர்முதல் எத்தனையோ பெரியோர்கள் பாடுபட்டார்கள். அத்தகைய பெரியோர்களின் பரம்பரையிலே வந்தவர் நமது பெரியார்.

அவருடைய வாழ்நாளில் சாதிக் கொடுமையை எதிர்த்து நிகழ்த்திய போராட்டங்கள் ஏராளம். அதன் காரணமாக அவர் அடைந்த கல்லடியும் சொல்லடியும் கணக்கில் அடங்காதவை.

இன்று தமிழ்நாட்டில் சாதிக் கொடுமை சருகெனக் காய்ந்து உதிர்ந்து வருகிறது. இத்தகைய நிலைமைக்கு பெரியாரவர்களும் அவர் வழிவந்தோருமே காரணம் என்பது வெள்ளிடைமலை.

இந்தியை எதிர்த்து நடத்திய போராட்டங்கள் காரணமாக பெரியாரவர்கள் பன்முறை சிறை புகுந்தார். அவரைச் சிறை வைத்தால் தமிழர் கிளர்ச்சி அடங்கிவிடும் என்று அன்றைய அரசாங்கம் நினைத்தது. ஆனால் அந்த நினைப்பு வீணாயிற்று. அவரது வீர உரைகள் தமிழர் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன. பெரியார் விதைத்த விதைகள் ஒன்றேனும் பழுதுபடவில்லை. செழித்து வளர்ந்து அன்று முதல் இன்று வரை நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல பலன் அளித்து வருகின்றன.

பெரியார் இன்று ஓர் ஒப்பற்ற தலைவராக விளங்குவதற்குக் காரணம் அவரிடம் உள்ள அஞ்சாமையே ஆகும். தமது கொள்கையை அஞ்சாமல் சொல்வார்

கொள்கையை விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை இவரிடம் எப்போதும் இருந்த தில்லை தமது கருத்தைத் தெளிவாகக் கூறுவார். எதையும் தானே முழுதுணர்ந்து சிந்திப்பார். பிறகு செயலில் இறங்குவார், அப்போது எந்த எதிர்ப்பு வந்தாலும் பொருட்படுத்த மாட்டார். அவர் இலக்கு எடுத்த காரியத்தின் வெற்றியை நோக்கியே இருக்கும்.

நாடும், அரசியலும் இன்று வளம் பெற்ற மறுமலர்ச்சி அடைந்து வருகின்றன. இதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கி வைத்தது அவருடைய சாதனைகளின் தனிச் சிறப்பு.

இருபதாம் நூற்றாண்டின் இந்த இணையற்ற சாதனையாளர் தற்போது 89-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார். சாதி ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, பெண் ணுரிமை போன்றவைகளின் பொருட்டு எண்ணற்ற போராட்டங்களை நடத்திய பகுத்தறிவு மேதை பல்லாண்டுகள் வாழ்க! வளர்க அவர் தொண்டு!

கைத்தறி துண்டுகளில் சிறந்தது!

இடைப்பாடி சொஸைட்டி கைத்தறித் துண்டுகளே

எங்கள் சங்கத் துண்டுகள்

எல்லா கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும்,
கைத்தறி மாளிகையிலும் கிடைக்கும்.

S. 921, இடைப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு

உற்பத்தி & விற்பனைச் சங்கம். (வரையறுக்கப்பட்டது.)

இடைப்பாடி அஞ்சல்.
சேலம் மாவட்டம்.

வாழ்க பெரியார்! வளர்க அவர் தொண்டு!

சேலம் ரெஸ்டாரெண்ட்

மிலிடரி ஓட்டல்,
பஸ் நிலையம்
தர்மபுரி : : அரூர்

சாப்பாடு, பிரியாணி, கறிவகைகளுக்கு
சிறந்த இடம் சேலம் ரெஸ்டாரெண்ட்.
பொது மக்களின் பேராதரவை என்றும் விரும்புகிறோம்.

B. M. ஹனீப்
உரிமையாளர்

B. S. ஹமீது
உரிமையாளர்

ஓர் அந்தணர்!

சாகல இளந்திரையன்



[26—8—67 அன்று, சென்னையில் டாக்டர் சுந்திரவதனம் அவர்களது மருத்துவ மனையில் சிகிச்சைபெற்றுவரும் நிலையிலேயே தந்தை பெரியார் அவர்கள், நடிகவேள் M.R. ராதா அவர்கள் அருமைச்செல்விகளின் மணவிழாவினை, முன்பே ஒப்புக் கொண்டபடி டாக்டர்கள் அனுமதிபெற்று சென்று நடத்தி வைத்து மீண்டும் மருந்துவ மனைக்குத் திரும்பினார். கடமையேஉயிரெனக் கருதும் தந்தை பெரியார் அவர்கள் வாழ்க்கையில், அம்மாதிரி நிகழ்ந்த பழைய நிகழ்ச்சி ஒன்றை கவிதையில் சுவைபடச் சொல்லுகிறார் கவிஞர். —ஆசிரியர்]

(1)

முனுசாமி மிக ஏழை
நாட்டு வாழ்வின்
முதுகெலும்புக் கூட்டத்துள்
ஒருவன்... ஆமாம்,
மினுங்காத பழந்தங்கம்
வறுமைத் தூசி
மிகப்படிந்த வாழ்க்கையினான்
தமிழன் பிள்ளை...

சாதிகளால் படித்தரங்கள்
அமைத்து வைத்துத்
தலைமைகளால் சமூகத்தைக்
குமைத்துப் போட்ட
'மூதி'களை ஏறெடுத்தும்
பாராப் பிள்ளை,
முனுசாமி தமிழ்நெறியே
வளர்ந்த பிள்ளை...

சாதிமத பேதமெனும்
மூடக் கோட்டை
தகர்ந்துவிழக் குரலெடுத்த
'பெரியார்' என்றால்
பாதிநிலா வாயிருக்கும்
வாழ்வும் இன்ப
வட்டநிலா ஆனதுபோல்
மகிழ்ச்சி கொள்வான்!

(2)

பெரியோர்கள் பலரிருந்தார்
தமிழகமே;
விண்ணளவு புகழ்கமழும்
குறளைத் தந்த
பெரியாரின் பின் இந்தத்
தாடிக் காரப்
பெரியார்போல் ஒரு பெரியார்
பிறந்த தில்லை!

பாழடைந்து கூன் விழுந்த
தமிழ்ச் சமூகம்
வண்ணமுற்று நேர்நிமிரச்
செய்த தீரன்
ஏழடுக்குத் துணிவுடைய
பெரியா ரேதான்
என்றுரைத்தால் யாரதனை
மறுக்கக் கூடும்?

செயற்கரிய செய்பவரே
பெரியார்; இங்கே
செத்துக்கொண் டேயிருந்த
நாட்டை, ஒற்றை
முயற்சியினால் எழுப்பிவிட்ட
மனிதத் தீரன்
முழுமை பொருத்தப் பேர்பெற்றார்
'பெரியார்" என்றே

'பெரியார்" என் றால்தமிழை
அறிந்த பேர்க்கு
வீரந்தான், தியாகந்தான்
வெற்றியே தான் ..
பெரியாரால் அல்லவோ
இரண்டு காலில்
மிகுதமிழர் இன்றைக்கு
நடக்கின்றார்கள்!

'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்'
என்று பாடி
வீற்றிருந்த நற்றமிழைக்
கீழே தள்ளிப்
பிறப்பாலே தாழ்வுயர்வு
கட்டி வைத்த
பிச்சருக்கோ இப்பெரியார்
எச்ச ரிக்கை!

அசையாத கோட்டையினை
அசைத்துத் தள்ளி
அதற்குள்ளே சிறையிருந்த
தமிழர் வாழ்வை
விசையாக மீட்டமைத்த
பெரியார் மீதில்
மெய்யன்பு யார்கொள்ளார்
தமிழ ராவார்?

எத்தமிழன் நெஞ்சத்தைத்
திறந்து பார்ப்போம்;
இப்பெரியார் உருவந்தான்
அங்கி ருக்கும்!
பத்திஎல்லாம் இப்பெரியார்
மீதே;—சாமி
படமெல்லாம் சிலைஎல்லாம்
வெளிப்ப கட்டே!

(3)

அப்படிக்கே முனுசாமி
இதயத் துள்ளும்
அரசடியார் போல்பெரியார்
அமர்ந்து விட்டார்...
இப்படியே முனுசாமி
நாட்கள் வாழ்ந்தான்;
இல்லறத்துக் கச்சாரம்
போட்டு விட்டான்

தன்னுள்ளம் கவர்ந்தஒரு
கிள்ளை யோடு
தமிழ்சொன்ன படிவாழ
விழைந்த தோழன்
'உன் முன்னே அன்றோ நான்
மணமுடிப் பேன்!'
என்றோடிப் பெரியாரின்
முன்னே நின்றான்...

பெரியாரோ அதற்குள்ளே
நடைமு றைகள்
பெரிதாக வைத்துவிட்டார்
"மணம் நடத்த
வரவேண்டும் என்றாலே
ரூபாய் நூறு
வரவேண்டும்" எனத்திட்டம்
விதித்தி ருந்தார் ..

'பகுத்தறிவுத் திட்டங்கள்
பரப்பு தற்குப்
பணம்வேண்டும், அப்பணத்தை
இப்ப டிக்கு
மிகுமகிழ்ச்சிச் சமயத்தில்
திரட்ட வேண்டும்...'
பெரியாரின் திட்டமிது,
வருவாய்த் திட்டம் ..

முனுசாமி நூற்றுக்குப்
போவ தெங்கே?
முத்தான சித்திரத்தைக்
கூத லாலே
துணையாகக் கொள்ளவந்த
அவனுக் குள்ள
சொத்தெல்லாம் அன்பென்ற
செல்வம் ஒன்றே! ..

அன்பனைநன் கறிந்தஒரு
பெரியார் வந்தார் :
'அய்யா, இப் பிள்ளையிடம்
நூறு கேட்டால்
தன்னுடலைப் பசிபோட்டுத்
தருவான் . ஆனால்
நம்வழியும் இறைவன்வழி
அன்றே!' என்றார்.

புன்முறுவல் தவழ்ந்தந்த
மீசை தாடிப்
புதருக்குள்! உற்சாக
மாயெ ழுந்தார்;
"நின்மணத்தை நான்நின்று
நடத்தி வைப்பேன்
தேதி, மணி சொல்லிப்போ"
என்று சொன்னார்...

தலைகாலே புரியவில்லை
முனுசா மிக்கு :
தமிழ்நாடே தன்மணத்தை
நடத்த வந்தால்,
தலைஎங்கே காலெங்கே!—
இன்ப வெள்ளம்
தான்பொங்கிப் பரவுகையில்
கரைகள் எங்கே!

(4)

இன்னுமொரு மூன்றேநாள்
திரும ணத்துக்கு
இருக்குது : அப்போது
வந்த சேதி
தன்னுரிமைக் காதலியாள்
மனத்தை வாட்டத்
தனிநின்று முனுசாமி
தவிக்க லானான் :

'உடல்நலத்துக் குறைவாலே
பெரியார் அங்கோர்
உயர்சிகிச்சை மனையினிலே
சேர்ந்துள் ளாராம்!'
திடமெடுத்த முனுசாமி
உள்ளத் தெம்பும்
சிறுமடலாய்ச் சிறுமடலாய்க்
கழன்ற தம்மா!

தவிப்போடு போயினவே
இரண்டு நாட்கள்;—
தக்கென்று வந்து நின்றது
அந்த நாளும்!
புவிப்பாரம் தாங்குவதும்
எளிதாம்;—சிக்கல்
பொழுததனைத் தாங்குவதோ
கடினம், அம்மா!

என்செயலாம் என்செயலாம்?
என்ற நெஞ்சுக்கு,
'இதுசெயலாம்' என்றுரைக்க
முடிய வில்லை...
தன்செயலாய் முனுசாமி
ஓடிச் சென்றான்
தமிழ்ப்பெரியார் சிகிச்சைபெறும்
அம்ம னைக்கே.

"யார்? அந்தப் பெரியவரா?
முழுதும் இன்னும்
இதமாகவில்லை; அதற்
குள்ளே, காலை,
யார்சொல்லும் கேளாமல்
போய்விட் டாரே!"
என்றுரைத்தாள் அங்கிருந்த
தாதி யம்மாள்.

"ஏன் போனார்? எங்கென்று
தெரியு மா'ம்மா?"
இவன் கேட்டான், அவள்சொன்னாள்:
"அந்தத் தாத்தா
தான்போன போக்கன்றோ
போவார்: பத்து
நாள்மட்டும் ஓய்வெடுக்கச்
சொல்லி யுள்ளோம்!"

'ஓய்ந்திருக்கப் போனாரா?
ஊட்டி கோடை
உயர்மலைக்கோ, திருச்சிக்கோ
எங்கே போனார்?'
மாய்ந்திரங்கிப் புலம்பியது
நெஞ்சம்: நின்று
மண்மகளை விரக்தியுடன்
குனிந்து பார்த்தான்.

எங்கேயோ போய்வந்த
நண்பன், "ஓ, நீ
இங்கேயா இருக்கின்றாய்?"
என்று வந்தான்...
மங்காத புகழ்ப்பெரியார்
கதையைக் கேட்டான்
வா'என்று முன் நடந்தான்
துணிவி னோடே...

பெரியாரின் நல்வீட்டை
அணுகி னார்கள்;
வெண்தாடி கண்டார்கள்;—
திகைப்புற் றார்கள்!
பெரியார்நல் லாடைகளை
அணிந்த வாறே
வெளித்திண்ணை தனிலன்றோ
காத்தி ருந்தார்!

அழுகைக்குக் கசியாத
கண்ணை வீரன்
ஆனந்தக் கண்ணீரால்
நனைத்து நின்றான்...
தொழுகைக்கு முன்சென்ற
கையைக் கண்டார்
சுறுசுறுப்பாய்த் தடியூன்றி
எழுந்தார் தந்தை...

(5)

காலையிலே ஒருபாவை
வந்து நின்றாள்;
கைகால்கள் முகங்கழுவத்
தண்ணீர் தந்தாள்;—
சேலையினால் பேரழகைப்
பொதிந்து கொண்டே
சிறுநகையில் அதைச் சற்றே
பார்க்கத் தந்தாள்..

காலை வந்த இளம்பரிதி
புதிதாய் வந்தான்;
காளையையும் கன்னியையும்
ஒன்றாய் கண்டான்
ஓலையிலே இணைக்கிளிகள்
இருக்கக் கண்டால்
ஒளியோனும் மிக்கஒளி
கொள்வான் தானே?

அங்கொருத்தி இங்கொருத்த
னாயி ருந்தோர்,
அயலயலின் இருபூக்க
ளாகி விட்டார்
மங்களப்பொன் ஒளிதந்து
மலர்ச்சி தந்த
மாண்புதனை முனுசாமி
நினைத்துக் கொண்டான்

'எனக்காக நினைவாகக்
காத்தி ருந்தார்,
என்பெரியார் வந்தெமக்கு
மணமு டித்தார்;
தனக்காக வாழாத
பெரியோன் தன்னை
நான் கண்டு நன்றிசொல்ல
வேண்டும்' என்றான்

வந்தவளும் அவன் மனத்தில்
வளர்ந்தா ளன்றோ ?
மணவாளன் நிழலாக
உருவம் கொண்டாள் !
கொந்தவிழும் குளிர்மலரும்
பழமும் தட்டில்
குவித்தெடுத்தாள் : முனுசாமி
முன்ந டந்தான் .....

(6)

வெண்தாடித் தந்தை அங்கே
வீட்டிலில்லை :
வெளியூர்க்குப் போனாரோ
என்றால். இல்லை !
கண்ணாரக் காணவந்த
கல்யா ணர்கள்
காதாரச் சேதிசொல்ல
யாரு மில்லை.

பக்கத்து வீட்டம்மா
வெளியில் வந்தாள்;
வந்துநின்ற சிறுசுகளை
உற்றுப் பார்த்தாள்
'தெற்குத்தேன் தனைமொய்க்கும்
இருதே னீக்கள்'
எனத்தெரிந்தாள்; சிரித்தபடி
சேதி சொன்னாள்:

''அய்யாவைப் பார்க்கவா ?
அவர்தான் மீண்டும்
அப்படியே சிகிச்சைமனை
போய்விட் டாரே!
பொய்யென்றா பாசிக்கின்றீர்?''
என்றாள் ; வந்த
பூவிரண்டும் பார்த்தனவே
ஒன்றை ஒன்று .....

(7)

நேற்றிருந்த சிகிச்சைமனை
மங்கை யேதான்
சீற்றத்தோடு ஏதேதோ
பேச லானாள் ;
''நேற்றெழுந்து போ''ம் போதே
வேண்டாம் என்றோம் ;
திருமணமாம், இவரின்றி
நடைபெ றாதாம் .....

போய்வந்தார், புன்முறுவல்
பூத்து வந்தார் ;
புதுத்தெம்பு கொண்டவர்போல்
வந்து நின்றார் ;
நோய்வந்தால் தீரும்வரை
ஓய்வு வேண்டும் ;
தெரிந்தோரும் கேட்கா'ட்டால்
என்ன செய்வோம்!''

பொரிந்தபடி யேயிருந்தாள்
'வெள்ளை' யம்மாள் ;
முனுசாமிக் கல்யாணர்
வாடிப் போனார் ;
தெரிந்திருந்தால் அய்யாவுக்
கிந்தச் சின்னச்
சிரமமவன் கொடுத்திருக்க
மாட்டான் உண்மை

உள்ளேறிப் பெரியாரை
வணங்கி னார்கள் ;
ஒருபெரியார் மகிழ்வுடனே
எழுந்துட் கார்ந்தார்...
''கள்ளாளிப் பயல்களிட்ட
மூட வேலி
கடந்தேறி வாழுங்கள்''
என்றி சைத்தார்.

வாயோடு கண்துடிக்கப்
புதுமாப் பிள்ளை
''மன்னிக்க வேண்டுமையா
அய்யா வுக்கு
நோயோடு பெருந்தொல்லை
கொடுத்து விட்டேன் ;
சோர்வடையச் செய்துவிட்டேன்''
என்று சொன்னான்

''அடபோப்பா, யார் சொன்னா ?
நர்சு தானே ?
அவளுக்கு வேறென்ன
வேலை ? வாழ்க்கைபீ
படகோட்ட நீங்களிரு
பேர்கள் நின்றால்,
வழியனுப்ப வருவதுமோ
பெரிய தொல்லை ?

'ஓய்வெடுங்கள் ஓய்வெடுங்கள்'
என்கிறார்கள் ;
ஓய்வென்ன, வெங்காயம்!—
மக்கள் அன்பில்
தோய்வதினும் ஓய்வென்ன
வேண்டும்? உங்கள்
சுகத்துக்குத் தானே'ப்பா
நான்வாழ் கின்றேன்."

என்றபடி முனுசாமி
தோளில் தட்டி
இன்முறுவல் வழக்கம்போல்
எடுத்தார் தந்தை;
நின்ற இரு பிஞ்சுகளும்
நெஞ்சம் தாங்கா
நிறைமகிழ்வுக் குளத்தேனில்
நீந்தி னார்கள்.....

'தம்முடலும் பாராமே
எம்ம ணத்தை
நடத்திவிட வந்தாரே
பெரியார்! இந்தத்
தன்மையினை உடையஇவர்
அந்த ணாளர்,
தடையில்லை இவரேயே
அந்த ணாளர்!

'இப்பெரிய தமிழ்நாட்டில்
யாரோ நாங்கள்;
ஏழ்மையின் உரிமையினர்
இளையர் நாங்கள்!
இப்பெரியார் எம்மையுமேர்
பொருட்டாய் எண்ணி
எழுந்துவந்தார்' என்றார்கள்
கண்ணீ ரோடே...

(ம)

சூரியனுக்கு இவ்வுலகின்
பெரிய பூவும்

துளிச்சின்னஞ் சிறுபூவும்
ஒன்றே யன்றோ?

காரியமே கண்ணாவார்
யாவ ரேனும்

கதிரோனின் கருணையவர்
இயல்பே யன்றோ?

குறிப்பு :—கவிஞர் திரு. சாலை இளந்திரை யன் (எம்.ஏ., எம்.லிட்.) அவர்கள் டெல்லி பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களு டைய அற்புதமான கவிதைகள் அடங் கிய 'காலநதி தீரத்திலே...' என்ற கவி தைத் தொகுப்பு நூலிலிருந்து இக் கவிதை எடுக்கப்பட்டது. தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு உண்மைச் சம்பவத்தை கவிதைத் தேனில் சுவைபடக் குழைத்துத்தருகிறார் திரு. சாலை இளந்திரையன். இக் கவிதைத் தொகுப்புநூல் எல்லோரும் விரும்பிப் படித்துப் பாராட்டக்கூடிய ஒரு அரிய நூலாகும். இந்நூல்-சாலை வெளியீடு; விற்பனை உரிமை: பாரிநிலையம். விலை ரூ. 2-00.

நாவிற்கினிய மட்டன், சாப்பாடு வகைகளுக்குச்
சிறந்த இடம்

ஆனந்தவிலாஸ்

பிரியாணி ஹோட்டல் - இராஜபாளையம்.

உங்கள் வருகையை அன்புடன் எதிர்பார்க்கும்

உரிமையாளர்: M. V. பீமராஜா.

நான் காணும் பெரியார்!

டாக்டர் ரத்தினவேலு சுப்ரமணியம், M.D., M.R.C.P. (LOND)

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களது 89-வது ஆண்டு பிறந்தநாள் விழாவில் அவரைப் பற்றி சிறு குறிப்பு ஒன்றினை எழுதுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த இருபத்திஅய்ந்து ஆண்டுகளாக அவருடன் தொடர்புகொண்ட மருத்துவராக இருக்கும் நற்பேற்றினை நான் பெற்றிருக்கிறேன் என்பதை முதலில் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அவர் தமது உணர்ச்சிகளை சிறிதும் அச்சமின்றி உணர்த்தும் பாங்கு, அவருடன் நான் கொண்ட முதல் தொடர்பிலேயே, அதுவும் எடுத்த எடுப்பிலேயே என்னை பெரிதும் கவர்ந்தது.

துரதிர்ஷ்டவசமாக சில நேரங்களில் அவை ஆத்திரமூட்டக்கூடிய வகையில் அமைந்த போதிலும்கூட, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசக்கூடிய சிலரைப் போல் இல்லாமல், அவர் தமது உள்ளத்து உணர்ச்சிகளை மறைப்பது கிடையாது.

தம்மிடம் தொடர்பு கொண்டோருடன் பெரியார், மிக்க அன்புடனும், பிரியத்துடனும் பழகும் எளிய சுபாவம் உள்ளவர் என்பது அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புப்பெற்ற ஒரு சிலருக்கே தெரியும்.

எனக்கு அவருடன் ஏற்பட்ட தொடர்பு டாக்டர்—சிகிச்சைப் பெறுவோர் என்ற அடிப்படையிலேயே அமைந்த ஒன்றாகும். சிகிச்சைபெறும் காலத்தில், அவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நான் கூறுகிறேனோ அதை அப்படியே கேட்டு நடப்பவர் அவர்.

எனக்குத் தெரிந்தவரையில் அவரது தத்துவமெல்லாம் (ஒரு ராணுவ வீரனைப் போல) எதற்கென்ற கேள்வியைக் கிளப்பாமல், காரியம் செய்வதிலும், அவசியம் ஏற்படுமானால் அதற்கே தமது உயிரையே அர்ப்பணிப்பதுமேயாகும்.

அவர் நோய்வாய்ப்பட்டபோதெல்லாம், அவர் உடல்நலம் விரைவில் தேறி விடுவது எனக்கு ஏற்படும் ஒரு அதிர்ஷ்டவசமான வாய்ப்பாகும்.

அவருக்கு சிகிச்சையளிக்கும் டாக்டர்களாகிய எங்களுக்குத்தான் அவரது ஓய்வு பற்றிய கவலை இருக்குமே தவிர அவர் அதைப்பற்றி நினைப்பதேயில்லை!

ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கப்பட்ட உடனேயே அவர் ஒவ்வொரு முறையும் பல ஊர் பொதுக்கூட்டங்களில் பேசினார் என்று பல பத்திரிகைகளில் படிப்பதுண்டு; அதுவும் அவ்வூர்கள் ஒன்றுக்கொன்று 100 மைல் அல்லது அதற்குமேல் இடைவெளி உள்ள ஊர்களாக இருக்கும்!

என்றபோதிலும்கூட அவர் எப்பொழுதும் சுறுசுறுப்புடனே இருப்பவராவார். அவருக்குத் தோன்றிய வழியில் அவர் நாட்டுக்குத் தொண்டு செய்து வருகின்றார்.

மனித சமுதாயத்தை அவர் எவ்வளவு அழகாக, ஆழமாக கணித்து புரிந்து

வைத்திருக்கிறார் என்பதற்கு நான் ஒரு சம்பவத்தை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஒருமுறை அவர் சொன்னார்: ''நீங்கள் ஒரு மனிதருக்கு நூறுதடவை உதவி செய்திருக்கலாம்; ஆனால் 101-வது தடவையில் ஏதாவது சிலகாரணத்தால் அவருக்கு உதவமுடியாமல் போனால் அவர் அந்த 101-வது தடவை உதவி கிட்டாமல் போனதைத்தான் ஊராருக்குத் தப்பட்டை அடிபீபார்.

கடவுளை நீங்கள் 100 தடவை அலட்சியப்படுத்தி ஒருதடவை நினைத்துக் கொண்டால், கடவுள் அந்த 100 தவறுகளையும் மறந்து ஒருமுறை நினைத்ததையே பெரிதாக நினைவில் கொள்வார்'' என்றார்.

பொதுவாழ்வில் நாத்திகத்தை வெளிப்படையாக பரப்பும் ஒருவரிடமிருந்து நான் கேட்ட மிகவும் விசித்திரமான விமரிசனம் இது!

ஏதேனும் முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டுமானால்—கட்சிக்கு நிதிதிரட்டுவதற்காக—அவர் அதற்குச் சிறு கட்டணம் விதிப்பது வழக்கம் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒரு முறை எனது, பெண்கள் உயர்நிலைப்பள்ளி வளர்ச்சிநிதிக்காக நிகழ்ச்சி ஒன்றை நடத்தினோம். அவர் மீது எங்களுக்குள்ள அளவு கடந்த மரியாதை காரணமாக நாங்கள் முயற்சித்து அழைத்து வந்தோம். அவர் அவ்வழைப்பை ஏற்று வருகை தந்ததோடு எங்களிடம் கட்டணம் வசூலிப்பதற்குப்பதிலாக ரூபாய் அய்நூறு நன்கொடையாக கொடுத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

நன்கொடைக்காக நாங்கள் பெரியார் அவர்களை அழைக்கவில்லை என்றாலும் கூட அவரது தாராள சிந்தையைப் புலப்படுத்தும் இந்தச் செயல் கூட்டத்திலிருந்த அனைவரது உள்ளங்களையும் தொட்டது.

நாட்டுக்குப் பயனுள்ள தொண்டு செய்ய பெரியார் அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென்பது எனது இதய பூர்வமான பிரார்த்தனையாகும்.

D. K. கிருஷ்ணன்

கண்ணாடி, படம், வியாபாரம்

பஸ் நிலையம்

தருமபுரி

எங்களிடம், கண்ணாடி, படங்கள்,

மொத்தமாகவும், சில்லரையாகவும்

மலிவான விலைக்குக்கிடைக்கும்

D. K. கிருஷ்ணன்

உரிமையாளர்

போன்: 331

உயர்ந்த ரக உணவு வகைகளுக்கும்

உளம் கனிந்த உபசரிப்புக்கும்

சிறந்த இடம்

ராயல் சென்ட்ரல்

பிரியாணி ஓட்டல்

பஸ் ஸ்டாண்டு,

கும்பகோணம்.

Prop. K. K. B.

தமிழகம் அன்றும் இன்றும்!

ஈ.வெ.கி.சம்பத்

இருபத்தி அய்ந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழகத்துக்கும் இன்றைய தமிழகத்துக்கும் பெரிய மாற்றத்தைக் காணுகிறோம். அரசியல் துறையில் ஏற்படும் மாற்றங்கள் எல்லோர் கண்களிலும் படுகிறது. அடிக்கடி விவாதிக்கப்படுகிறது, விளக்கவும் படுகிறது. ஆனால் சமூக மாற்றங்கள் சரிவர கணிக்கப்படுவதும் இல்லை, கவனிக்கப்படுவதும் இல்லை.

அன்று, தமிழர் சமுதாயம் ஜாதீயத்திற்கும், கடவுள் மதம் ஆகியவற்றின் பெயரால் மூடநம்பிக்கைகள் பலவற்றுக்கும் ஆளாகிக்கிடந்தது. அறிவற்ற, ஆண்மையற்ற சிந்திக்கும் திறனற்ற, மானஉணர்ச்சி அற்ற சமுதாயமாகவே அறிவுலகத்தின் கண்ணுக்கு அன்றைய தமிழர் சமூகம் கர்ட்சியளித்தது. சமுதாயத்தின் பெரும்பகுதி பல இழிவுகளையும், கொடுமைகளையும் மனமார ஏற்றுக்கொண்டு மதத்திற்காகவும், கடவுளுக்காகவும் அத் தொண்டினைச் செய்வதாக எண்ணி வாளா விருந்தது.

இந்த மடமையினை தந்திரக்காரர்களும், ஏமாற்றுக்காரர்களும் தமது ஆதிக்கத்திற்கும், சுரண்டலுக்கும் வழிதேடப் பயன்படுத்திக் கொண்டனர் சமூகம் ஒன்றுபட வழியின்றி கற்பனை பேதங்களால் பிளவுபட்டு சக்தியின்றிச் சீரழிந்து கிடந்தது.

பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கம் தோன்றி இத்த இழிநிலையினைப் போக்கப் போர் தொடுத்தது. சமூகத்தின் கேவலமான தன்மானமற்ற இழிநிலையால் தமது வாழ்வில் ஏற்றமும் பயனும் தொடர்ந்து அனுபவித்த கூட்டம், சுயமரியாதை இயக்கத்தின் மீது கடவுள் விரோத இயக்கம், மதவிரோத இயக்கம் என்றெல்லாம் பாணங்கள் தொடுத்தனர். ஆனால் அதற்காக பெரியாரோ அவரது தொண்டர்களோ சிறிதும் அஞ்சவில்லை. ''இத்தகைய சமுதாய அமைப்புதான் அந்த மதம் என்ருல் பூண்டோடு அழியட்டும் அம்மதம்'', ''இத்தகைய இழிநிலையிலும் சமூக பேதங்களிலும்தான் ஒரு கடவுள் வாழுகிறூர் என்ருல் அது ஒழியட்டும்'' என சுயமரியாதை மேடை முழங்கிற்று. பலத்த எதிர்ப்புகளுக்கிடையிலும் அம் மேடை நாளும் வலுவடைந்தது. சமூகத்தின் நம்பிக்கைகள் பல மாறத் தலைப்பட்டன.

திருமணங்களில் புரோகிதமும், வடமொழி மந்திரங்களும். அர்த்தமற்ற சடங்குகளும் ஒழியத் தலைப்பட்டன. ஒருவரை கீழ்ஜாதி என்றோ இழிந்த ஜாதி என்றோ சர்வசாதாரணமாகக் கூறி அழைக்கும் அல்லது அதட்டும் ''உரிமை''யை மேல் ஜாதியினர் இழந்தனர்.

அன்று சாமியாடுவது, பேயாடுவது தமிழகமெங்கும் சாதாரணக் காட்சியாக இருந்தது. பேய்கள் பெண்களையே பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தன. அதிலும் இளம் பெண்களையே இந்தப் பொல்லாத பேய்கள் பிடிக்கும்! பூசாரிகள் என்ற பெயரில் உலவிய தடியர்கள் பேயோட்டுவார்கள். மந்திரங்கள், ஜெபங்களைவிட, பேய் பிடித்த பெண்ணை புளியம் விலாரால் அடிப்பதும், ஆபாசமாக மிரட்டுவதும்தான் அவர்கள் சோலியாக இருந்தது. எந்த ஊரில் பார்த்தாலும் சில குறிப்பிட்ட புளிய மரங்களில், வேப்பமரங்களில் பெண்களின்

(பேய்பிடித்த) தலைமுடியில் சிறிது பிய்த்து ஆணி அடிக்கப்பட்டிருக்கும்.

இப்பொழுது பேயாட்டங்கள் பெரும் அளவுக்குக் குறைந்துள்ளன. மாமியார் கொடுமையும், கணவனது கொடுமையும், அலட்சியமும், வீட்டில் உள்ள மற்றவர்கள் படுத்தும் பாடும் வீட்டுக்கு வரும் மருமகளைப் பேயாக்கிவிடுவதும், பின் எல்லோரும்சேர்ந்து அந்தப்பேயை அடித்து, மானம் கெடுத்து ஊரறிய அடக்கி ஊர்வலம் விட்டும் ஓட்டுவதும் அந்தக்கால சமூக வழக்கம்! இன்று பெண்ணுரிமை ஓங்கி வலுப்பெற்றுள்ளதாலும், பெண் கல்வி பெருகியிருப்பதாலும், வீட்டுக் கொடுமைகளுக்கான வாய்ப்புகள் குறைந்துள்ளமையாலும் 'பேய்களை'க் காணோம்!

காவியுடைபூண்ட ஆயிரக்கணக்கான சாமியார்கள் ஊரெங்கும் திரிந்துகொண்டிருந்த அன்றையத் தமிழகம் முழுக்க உருமாறி யிருக்கிறது! பிள்ளைவரம் தருவோனும், புதையல் இருக்குமிடம் கூறுவோனும், காணாமற்போன தனம், பிள்ளைகளைக் கண்டு சொல்வோனுமாக விதவிதமான சித்துக்கள் புரியும் சாமியார்கள் மக்களை ஏய்த்துப் பிழைத்து வந்தனர். பகுத்தறிவுப் பகலவன் தமிழகத்தில் உதித்தபின் சமீப காலத்தில் எத்திப் பிழைக்கும் காவியுடைக் கும்பல் வெகுவாகக் குறைந்திருக்கிறது. பில்லி, சூனியம், மலையாள மந்திரம், ஏவல் ஆகியவைகள் தமிழகத்தை அனேகமாகக் காலி செய்துவிட்டுப் பக்கத்து மாகாணங்களுக்கு ஓடிவிட்டன!

சாதி ஒழிப்பும், மூடநம்பிக்கை ஒழிப்பும் பெண்ணடிமை எதிர்ப்பும், சுயமரியாதை உணர்ச்சிப் பெருக்கும் பெரியாரின் பெரும்பணிகள். அவைகள் வெற்றிபெற்ற தமிழகத்தையே இன்று காணுகிறோம். இவ்வளவு பெரிய மகத்தான சமூகப் புரட்சியை செய்து முடித்த பெரியார் அவர்கள் இன்றும் நம்மோடிருந்து தன்மானத் தொண்டும், பகுத்தறிவுப் பணியும் ஆற்றிவருவது நமது நல்வாய்ப்பே ஆகும். ஃ

சுப்பிரமணியம் ஸ்டோர்ஸ்,

கடைவீதி, தருமபுரி-2.

எங்களிடம் மொத்தமாகவும், சில்லரையாகவும் கைத்தறி, மில், சில்க், நைலான் நைலக்ஸ், டெரிலின் மற்றும் திருமண விழாக்களுக்குத் தேவையான பட்டுப் புடவைகளும், சரிகை வேட்டிகளும் விலை மலிவாகக் கிடைக்கும்.

சு. தங்கவேல்,

உரிமையாளர்.

"ஸ்டூடியோ பேலஸ்"

பஸ் ஸ்டாண்ட்,

தருமபுரி.

எங்கள் ஸ்டூடியோவில் சிறந்த முறையில் புகைப்படம் எடுக்கப்படும். டெவலப்பிங், பிரிண்டிங், என்லார்ஜிங் ஆகியவைகளும் செய்யப்படும்.

உரிமையாளர்,

K. நடராஜ குப்புசாமி.

பெண்கள் மண வயதை உயர்த்தலாமா?

மத்திய சுகாதார அமைச்சர். டாக்டர். எஸ். சந்திரசேகர்

நம் நாட்டு பெண்கள் திருமணம்செய்து கொள்ளும் வயது பற்றியும், அந்தத்திருமண வயது நம் நாட்டு மக்கள் தொகையால் விளையும் மாபெரும் சிக்கலை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றியும் நான் இங்கு ஆராய விரும்புகிறேன். நம் நாட்டு வளம் போதாத காரணத்தால் மக்கள் தொகைப் பிரச்சினை மிக நெருக்கடியான ஒன்றாக மாறியுள்ளது என்பதை இன்று சிந்தித்துப் பார்க்கும் எல்லா மக்களும் ஒத்துக் கொள்ளுகின்றனர் மேலும் நம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால் மக்கள் பிறப்பு விகிதத்தை நாம் குறைக்கவேண்டும் என்பதையும் அவர்களே ஒத்துக்கொள்ளுகின்றனர்.

நம் நாட்டு மக்கள் தொகை 50 கோடியையும் கடந்து இன்று ஏறத்தாழ 52 கோடியாக உள்ளது. ஆண்டுதோறும் ஏறத்தாழ ஒரு கோடியே முப்பது லட்சம் மக்கள தொகை கூடுகிறது. நம் இந்தியநாடு இம் மக்கள் பெருக்கத்தினை தாங்க முடியாது. ஏனென்றால் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கே கூட நாம் உணவும், உடையும், உறையுளும், கல்வியும், மருத்துவ வசதியும் வழங்க முடியவில்லை. சில ஆசிய நாடுகளோடுகூட ஒப்பிடுகின்றபோது நம் நாட்டிற்குக் குறைந்த அளவே வாழ்க்கை வசதிகள் கிடைக்கப் பெறுகின்றன. முன்னேற்றமும் வளமும் பெற்ற மற்ற நாடுகளோடு நம் நாட்டை இவ்வகையில் ஒப்பிடவே முடியாது.

இப்போது இந்திய நாட்டில் மக்கள் பிறப்பு விகிதம் ஆண்டுக்கு ஆயிரத்துக்கு நாற்பதாக உள்ளது. இதனை ஆண்டுக்கு ஆயிரத்துக்கு இருபது அல்லது இருபத்தைந்தாக எப்படிக் குறைக்க முடியும்? இன்னும் ஒரு பத்தாண்டுகளுக்குள்ளாவது நாற்பது என்னும் இப்பிறப்பு விகிதத்தை பாதியாகக் குறைத்தாகவேண்டும். இதனை நாம் இரண்டு வழிகளில் நிறைவேற்றலாம். ஒன்று மருத்துவத் துறைவழியாக; மற்றொன்று மற்ற துறைகள் வழியாக.

கருத்தடைக் கருவிகள் பயன்படுத்துவதன் மூலமாகவும் அறுவை மருத்துவம் (Sterilisation) மூலமாகவும் குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதும், ஒரு குழந்தை பிறப்புக்கும் அடுத்த குழந்தை பிறப்புக்கும் கால இடை வெளி மேற்கொள்ளுவதுமே மருத்துவத்துறை வழியாகும். இந்த மருத்துவத்துறை வழி பல வகைகளைக்கொண்டது: உறைகள் (Sheaths) தடைக் கருவிகள் (Diaphragm & jelly), நுரை மாத்திரைகள் (Foam tablets), கருத்தடை வளையங்கள் (IUCDS), உண்ணும் மாத்திரைகள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் அறுவை முறைகள் முதலியன இவற்றுடன் மனைவியோடு உறவு கொள்ளாமை (Abstinence), கால இடையீட்டுப் புணர்ச்சி (Rhythm), இடையீட்டுப் புணர்ச்சி (Coitus interuptus), கருச் சிதைவு ஆகிய நான்கினையும் மேற்கொள்ளலாம். ஆனால் இந்த நான்கும் விஞ்ஞான முறையில் அமைந்த கருத்தடை முறைகள் அல்ல.

மருத்துவ முறையில்லாத மற்ற முறைகளில் பெண்களின் திருமண வயதை உயர்த்துவதுபோன்று பயன் தருவது வேறொன்றும் இல்லை. சட்ட முறைப்படி சொல்ல வேண்டுமானால் இது திருமண ஒப்புதல் வயது (Age of consent) அல்லது மணம்

பூண்டு இல்லற உறவு கொள்ளும் வயது என்பதாகும். இந்தத் திருமண ஒப்புதல் வயது முக்கியமான ஒன்றாகும். ஏனென்றால் இது பெண்கள் உடல் நலம், பெண்கள் குடி மகளாகவும் தாயாகவும் மனைவியாகவும் ஆகும் தகுதி, ஒழுக்க நெறிகள், மத நம் பிக்கைகள், சமூக ஒழுக்கங்கள் ஆகியவற் றைப் பாதிக்கிறது. அவை மட்டுமல்லாது மிக முக்கியமாக அது நாட்டின் பிரச்சி னையை வளர்க்கும் மக்கள் தொகையினை யும் பாதிக்கிறது.

நம் நாட்டைப் பொறுத்த வரையில் மக் கள் தொகைப் பிரச்சினையை மதநம்பிக்கை களின் அடிப்படையில் தீர்க்கமுடியாது. கார ணம் இங்கே சில தடைகள் இருக்கின்றன. உயிரியல் நெறி (Animism) முதற்கொண்டு சொராத்திர நெறி (Zoroastrianism) வரை இந்தியாவில் வேறுபட்ட பல்வேறு மதங்கள் வழங்குகின்றன. இதுவே முதல் தடை. இரண்டாவதாக நம் இந்திய நாடு மதச் சார்பற்ற ஒரு குடியரசு. ஆகவே ஒரு குறிப்பிட்ட மதத்தின் தேவையின் அடிப் படையில் நாடு முழுவதற்கும் பொருந்தும் படி ஒருசட்டம் மேற்கொள்ளுதல் முடியாது. மூன்றாவதாக ஒரு குறிப்பிட்ட மதத்தில் கூட அவ்வக் காலங்களில் பல்வேறு கொள் கைகள் மேற்கொள்ளப்பட்டும் பின்கைவிடப் பட்டு வந்துள்ளன.

உதாரணமாக இந்து மதத்தில் சிறு பிள்ளைத் திருமணம் (Child marriage) ஒரு மதக் கொள்கையாகச் சில காலங்களில் கரு தப்படுகிறது. ஆனால் பழங்காலத்தில் இந்து சமூகத்தில் சிறு பிள்ளைத் திருமணம் மிகமிக அரிதாகவே நடந்தது என வரலாற் றிலிருந்து தெளிவாக அறிகிறோம், மேலும் வேதகால இந்தியாவில் (கி. பி. 500க்கு முன்) பெண்கள் பதினாறாம் வயதிலோ அல்லது அதற்கு மேற்பட்ட வயதிலோதான் திரு மணம் செய்து கொண்டனர். பிற்காலத்தில் தோன்றிய தரும சாஸ்திரங்களும் ஸ்மிருதி களும்தான் (கி. பி. 300 முதல் 1000 வரை) பெண்கள் பருவமடைகிறபோதோ அல்லது அதற்கு முன்பாகவோ திருமணம் செய்து விடவேண்டும் என வற்புறுத்தத் தொடங் கின. சில அறிஞர்கள் இது அரசியல் சூழ் நிலை கெட்டதன் காரணமாகத்தான் ஏற் பட்டது என்பர். இஸ்லாமியர் ஆட்சி ஏற் பட்டபோது வட இந்தியாவில் இந்துக்களி டையில் சிறுபிள்ளைத் திருமணமும் பருவ மடைவதற்கு முற்பட்ட திருமணமும் பெரு வழக்காகிப் பரவலாக நடைபெற்றன. ஆனால் இவ்வழக்கத்திற்கும் இந்து சமயத் திற்கும் இந்து தத்துவத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை

இவ்வாறாக ஆங்கிலேயர் வந்தபோது சிறுபிள்ளைத் திருமண வழக்கம் நிலை பெற்ற ஒன்றாகி விட்டது. ஏனென்றால் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் உள்நாட்டு மத ஒழுக்கங்களில் தலையிட விரும்பவில்லை. சென்ற நூற்றாண்டின் கடைசியிலும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் நடை பெற்ற சிறு பிள்ளைத் திருமணங்கள் - அது வும் குறிப்பாக இல்லற உறவுரிமை ஒன்றி னையே கருத்தில் கொண்ட அறிவற்ற ஆண் மக்களுக்குச் செய்து வைக்கப்பட்ட திரு மணங்கள் பெண்களின் உடல்நல, மனநலப் பெருங்கேட்டிற்கு வழி வகுத்து விட்டன. இக்கேடுகள் இந்தியச் சமூகத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டு வந்த இந்திய நாட்டு அயல் நாட்டு அறிஞர்களின் இரக்க உணர்ச்சியைக் கிளப்பி விட்டன இந்த நிலைமையே இந்துமத சீர்திருத்தவாதிகள் தோன்றி நாடு முழுவதும் ஒரு கிளர்ச்சியை நடத்த வழிவகுத்தது. இந்தச்சீர்திருத்தவாதி கள் 'பெண்கள் குழந்தை பெறுவதற்கான உடற்பக்குவத்தைப் பெறுவது வேறு என வும் ஒருகுடிமகளாகவும் தாயாகவும் மனைவி யாகவும் தாம் வாழவேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப வாழுவதற் குத் தேவையான உடல் உள்ள வளர்ச்சி களும் தகுதிகளும் பெறுவது' வேறு எனவும் எடுத்துக் கூறினர்.

இவர்கள் நடத்திய கிளர்ச்சிகளின் விளைவாகவே ஹரிபிலாஸ் சார்தா என்ப வரால் 1927-ல் இந்தியச் சட்ட மன்றத்தில் திருமணத்திற்கான குறைந்த அளவு வயதை உயர்த்தும் சட்டம் "சாரதாச் சட்டம்" ஒன்று கொண்டு வரப்பட்டது. இந்தச் சட் டம் முறைப்படி ஆராயப்பட்டுச் சட்டமன் றத்தின் பொறுக்குக் குழு ஒன்றுக்கு அனுப் பப்பட்டது. அப்பொறுக்குக் குழு இந்தச் சட்டத்தை விரிவுபடுத்தி அதனை எல்லாச் சமூகத்தினருக்கும் பொருந்தும்படி அமைத் தது; குறைந்த அளவுத் திருமண வயது பெண்களுக்கு 14 எனவும் ஆண்களுக்கு 18 எனவும் வரையறுக்கப்பட்டது. பொறுக்குக் குழு வகுத்த முறையிலேயே இந்தச் சட்டம் 1929-ஆம் ஆண்டில் செப்படம்பர் 28-இல் நிறைவேறி 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி நடைமுறைக்கும் வந்

தந்தை பெரியார் 89-வது ஆண்டு
பிறந்த நாள் விழாவில் எமது
வாழ்த்துக்கள்.

டி. பி. சீனுவாசன், பி. ஈ.

இன்ஜினீயர் & காண்டிராக்டர்

திருச்செங்கோடு

(சேலம் மாவட்டம்)

27, சேர்வை முனுசாமி முதலி தெரு,

வேலப்பாடி, வேலூர்.

(வ. ஆ. மாவட்டம்)

த்து. இந்தச் சட்டத்திற்குத்தான் 1929-ம் ஆண்டுச் சிறுபிள்ளைத் திருமணத் தடைச் சட்டம் என்பது பெயர். இதுவே எல்லோரும் அறிந்த சாரதாச் சட்டம் ஆகும்.

இவ்வாறாக 1930-இலிருந்து சாரதாச் சட்டம் பெண்களுக்குப் பதினான்கு வயதிற்குக் கீழும் ஆண்களுக்குப் பதினெட்டு வயதிற்குக் கீழும் நடைபெறும் திருமணங்களை எல்லாம் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கொள்ளுகிறது. ஆனாலும் இவ்வாறாக நடந்தேறிய திருமணங்களை இந்தச் சட்டம் செல்லாதவை என்று கூறவில்லை. இந்தச் சட்டம் இந்திய நாட்டு எல்லாக் குடிமக்களுக்கும் பொருந்துவதாகும். இந்து சட்ட திருத்த மசோதா (1948) (The Hindu Code Bill) கொண்டு வரப்பட்டபோதுகூட இந்த நிலை மாறவில்லை. ஏனெனில் இந்து சட்டத் திருத்த மசோதாவின் ஒரு பகுதியாகிய இந்து திருமணச் சட்டம் (1955) குறைந்த அளவுத் திருமண வயது ஆண்களுக்கு 18 எனவும் பெண்களுக்கு 15 எனவும் வரையறுக்கிறது.

ஆனாலும் இந்தச் சாரதாச் சட்டத்தின் விதிகள் அடிக்கடி புறக்கணிக்கப்பட்டு மீறப்படுகின்றன என்பதும் உண்மைதான். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று சட்டத்தை மீறிய மணமகனையோ, மணமகளையோ பெற்றோரையோ வழக்கு மன்றத்திற்குக் கொண்டு வந்து வழக்குத் தொடுக்கும் முறை சிக்கலாக உள்ளது. இரண்டு, சாதாரண இந்தியக் குடிமகனின் வயதிற்கான சான்றுகளைக் கண்டு பெறுவதில் உள்ள தொல்லைகள்.

பெரும்பாலும் சிற்றூர்களில் குழந்தைகள் பிறப்பினை எப்போதும் பதிவு செய்வதே இல்லை; அவ்வாறு அவற்றைப் பதிவு செய்தாலும் அவை சரியாக இருப்பதில்லை. பிறந்த நாளுக்கான சான்றுகளைத் தகுதியுள்ளோரிடமிருந்து பெற்றுக்கொண்டு வரும்படி கேட்கும் பழக்கமே அண்மைக் காலத்திலிருந்து தான் ஆகும். ஆனால் கிட்டத்தட்ட இதே காலத்தில் சாரதாச் சட்டம் எழுந்த காலத்தை ஒட்டிச் சிறு பிள்ளைத் திருமணங்களின் எண்ணிக்கையும் குறைந்து போய்விட்டது என்பதையும் சொல்லியாக வேண்டும். தம் பெண்களின் திருமண வயதும்கூட உயர்ந்துகொண்டே வந்திருக்கிறது. இவ்வகையில் இந்தச் சாரதாச் சட்டம் சில நன்மைகளையும் செய்தது.

இந்தச் சட்டத்தால் இத்தகைய நன்மை விளைந்துவிட்ட காரணத்தால் சிற்றூர்களில் குழந்தைகள் பிறப்பினை இனிமேலும் நன்கு பதிவு செய்யக் கூடாது என்பதில்லை. இப்படிப் பதிவு செய்வது சாரதாச் சட்டத்துக்குத் துணை செய்வதாகும். பெண்களின் திருமண வயது 1911–இல் 13 ஆக இருந்தது. அது 1961-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி 16 ஆக உயர்ந்துள்ளது. இன்று நம் பெண்களின் சராசரித் திருமண வயது கேரளாவில் 19.97 ஆகவும் மத்தியப் பிரதேசத்தில் 13.87 ஆகவும் உள்ளது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்தி பேசும் மாநிலங்கள்தான் மிகமிகப் பிற்போக்கான நிலையில் உள்ளன! இதன் காரணம் என்ன என்பதும் விளங்கவில்லை.

கீழ் வரும் பட்டியல் 1961-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தின் குறைந்த அளவுத் திருமண வயதை எடுத்துக் காட்டுகிறது :—

மாநிலம்	ஆண்கள்	பெண்கள்
அசாம்	25.73	18.54
வங்காளம்	24.18	15.86
பிகாரும் ஓரிசாவும்	19.55	14.81
பம்பாய்	22 42	15 74
ஆந்திரம்	22 21	15.26
மத்தியப் பிரதேசம்	18.37	13.87
தமிழகம்	25.15	18 14
மைசூர்	22.44	16 33
பஞ்சாப்	21.73	17.46
ராஜஸ்தான்	19 09	14 22
உத்தரப்பிரதேசம்	18.75	14.43
கேரளம்	26.33	19.97

இதற்கும் மேலாக ஓர் அதிர்ச்சி தரும் செய்தியும் உண்டு. நம்நாட்டில் 1961-இல் 10-19 வயதினருள் கிட்டத்தட்ட 2 கோடிப் பெண்கள் திருமணமானவர்கள். இவ்வெண்ணிக்கை, இவ்வயதுடைய எல்லாப் பெண்களுள்ளும் 40 சதவீதம் ஆகும். இளம் பருவத்துத் திருமணம் பற்றி இத்தகைய அதிர்ச்சி தரத்தக்க புள்ளி விவரங்களைக் காட்டக்கூடியது உலகிலேயே நம் நாடாகத் தான் இருக்கும்!

மக்கள் கணக்கெடுப்பு அறிக்கைகள், வேறு சில ஆய்வுகள் முதலியவற்றிலிருந்து கிடைக்கும் சான்றுகளால் தென்னிந்தியா

வில்தான் பெண்கள், வட இந்தியப் பெண்களைவிட அதுவும் குறிப்பாக இந்தி பேசும் மாநிலத்துப் பெண்களைவிட வயது கடந்து திருமணம் பூணுகின்றனர் எனத் தெரிய வருகிறது. அடுத்து இரண்டாவதாக நம்நாட்டுப் பல்வேறு மதத்தினரிடைக் குறைந்த அளவுத் திருமண வயது கிறிஸ்தவரிடம்தான் உயர்ந்துள்ளது; அதே சமயத்தில் இந்துக்களிடம் அவ்வயது மிக மிகக் குறைந்துள்ளது. மூன்றாவதாக இந்துக்களிடையேயும் தாழ்த்தப்பட்ட மக்களிடையேதான் அவ்வயது மிக மிகக் குறைந்துள்ளது. நான்காவதாகக் கிராமத்துப் பெண்களைவிட நகரத்துப் பெண்களிடம்தான் திருமண வயது உயர்ந்துள்ளது. மேலும் படிக்காதப் பெண்களைக் காட்டிலும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்துப் பட்டம் பெற்ற பெண்களிடம்தான் மணவயது உயர்ந்துள்ளது.

நம் நாட்டில் பெண்களின் சராசரித் திருமண வயது 1901-11-ல் 13 ஆக இருந்து 1951-61-இல் கிட்டத்தட்ட 15.5 ஆக உயர்ந்துள்ளது என மக்கள் கணக்கெடுப்புக் குறிப்புக்களிலிருந்து தெரிய வருகிறது. ஆனாலும் இது ஒரு மெதுவான மாற்றமே இவ்வாறாக நம் இந்தியச் சமூகம் இத்திருமண வயதைப் பொறுத்தவரையில் மாற்றம் உற்றே வந்திருக்கிறது. இருந்தாலும் இம்மாற்றம் மக்கள் தொகை நெருக்கடியைத் தீர்க்கக்கூடிய அளவு வேகமானதாக இல்லை

கீழ் வரும் பட்டியலில் ஒரு சில ஆசிய நாடுகளிலும் அராபிய நாடுகளிலும் ஆண்களும் பெண்களும் திருமணம் செய்துகொள்ளும் குறைந்த அளவு வயது தரப்படுகிறது. முன்னேற்றமடைந்த நாடுகளின் விவரம் இங்குத் தரப்படவில்லை. காரணம் நம் நாட்டுப் பொருளாதாரச் சமூக நிலைகள் அய்ரோப்பிய நாடுகளைவிட ஆசிய நாடுகளுடன்தான் ஒப்பிடத்தக்கனவாக இருக்கின்றன. நமமைப் போன்றே பண்பாடு பெற்ற ஆசிய நாடுகளுடன்கூட ஒப்பிடுகின்றபோது நாம் பிற்பட்டிருக்கிறோம் என்பது தெரிகிறது.

நாடுகள்	ஆண்கள்	பெண்கள்
இலோன்	26.1	20.0
இந்தியா	22.2	16.2
இஸ்ரேல்	26.4	22.1
ஜப்பான்	25.8	23.1
மலேசியா	23.9	18.2
பிலிப்பைன்ஸ்	24.1	21.1
சிங்கப்பூர்	25.8	21.1
தாய்லாந்து	23.7	20.0
துருக்கி	23.3	19.5
அரபு நாடுகள்	25.2	19.4

இந்நிலையில் நம் பெண்களின் திருமண வயதிற்கும் நம் நாட்டின் மக்கள் பிறப்பு விகிதத்திற்கும் என்ன உறவிருக்கிறது? விளக்கமான மக்கள் தொகை ஆராய்ச்சிக்கோ அல்லது சிக்கலான புள்ளிவிவரக் கணக்குகளுக்கோ இது இடம் அல்ல. இருந்தாலும் இங்கு ஒரு சில சிறு குறிப்புக்கள் நம் நாட்டு மக்கள் தொகைப் பிரச்சினையைத் திருமண வயது பாதிக்கும் தன்மையை விளக்கும்.

ஒரு பெண்ணின் கருதரிக்கும் காலம் கிட்டத்தட்ட 15-ஆம் வயதிலிருந்து 45-ஆம் வயது வரையாகும். இது 30 ஆண்டு காலமாகும். அதாவது தன் 15-ம் வயதில் திருமணம் செய்துகொண்டு 45-ம் வயது வரைத் தன் கணவனோடு வாழும் காலமான 30 ஆண்டுக் காலத்திற்கு ஒரு பெண் கருதரிக்கும் வாய்ப்பைப் பெறுகிறாள். அவள் தாராளமாக 15 அல்லது அதற்கும் மேலான குழந்தைகளை அக்காலத்தில் பெறலாம். ஆனால் ஒரு பெண் தன் 25-ஆவது வயதில் திருமணம் செய்துகொண்டால், அவள் 20 ஆண்டிற்கு மட்டுமே கருதரிக்கும் வாய்ப்பினைப் பெறுகிறாள். இவ்வாறாகவே திருமண வயது ஏற ஏற கருத்தரிக்கும் வாய்ப்புக் குறைகிறது. இளம் பருவத்துத் திருமணம் நிறையக் குழந்தைகளைப் பெறுவதற்கு வாய்ப்புத் தருகிறது. அதுபோலவே திருமண வயது தள்ளிப்போதலும் குறைந்த குழந்தைகளைப் பெறவே வாய்ப்புத் தரும். உதாரணமாகத் திருமண வயது 16-இலிருந்து 20 அல்லது 21 ஆக உயருமானால், பிறப்பும் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் ஆகக் குறையும். இந்தியாவில் வயதிற்கும் கருதரிக்கும் விகிதத்திற்கும் உள்ள உறவின் அடிப்படையில் அமைந்த ஒரு சில கணக்கீடுகளால் இதனை விளக்கிக் காட்ட முடியும். இந்தியாவில் பெண்கள் 20 வயதுக்கு முன் திருமணம் செய்துகொள்ளவில்லையானால் அல்லது 20 வயதுக்கு முன் குழந்தை பெறவில்லையானால் ஏறத்தாழ 20 ஆண்டுகளில் நம் நாட்டின் பிறப்பு விகிதத்தை மூன்றில் ஒரு பங்காக அல்லது நான்கில் ஒரு பங்காகக் குறைக்க முடியும்.

பெண்களின் திருமண வயது உயர உயரக் குழந்தைகளின் சராசரி

எண்ணிக்கை பொதுவாகக் குறைகிறது என்ற ஒரு பொதுக்கருத்து இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் குறிப்புகளைக் கொண்டு இப்பிரச்சினைகள் பற்றி நடத்திய ஒரு சில ஆராய்ச்சிகளால் தெளிவாகிறது. ஆனால் இது ஒரு சாதாரணமனிதனுக்கு விளங்காது. அவன் ஒரு பெண் 25-ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டும் 10 குழந்தைகளைப் பெறலாம் நினைக்கலாம். கொள்கையளவில் ஒரு தனிப்பட்ட மனிதனின் அனுபவமாக இது நடக்கலாம். ஆனால் மொத்தமாகப் பார்க்கும்போது இங்குச் சொல்லப்படும் மக்கள் பிறப்பு வளம் (Fertility) தவறாகாது. எடுத்துக்காட்டாக இந்தியாவில் மனிதனின் சராசரி வாழ்க்கையாக எதிர்ப்பார்க்கப்படுவது 50 ஆண்டுகளே என்று ஒருவர் சொன்னால் விவரம் தெரியாத ஒருவன்தான் 'இராஜாஜி 90 ஆண்டுகள் வரை வாழ்கிறாரே' என்று கூறி மறுப்பான்!

நம் நாட்டில் இனி நடக்க இருக்கும் திருமணங்களை இரண்டாண்டுகளுக்குத் தள்ளிவைத்தால். நம் நாட்டு மொத்தப் பிறப்புவளம் நிச்சயமாகக் குறையத்தான் செய்யும். ஆகவே நம் பெண்களின் திருமண வயதை 15-இலிருந்து 20 ஆக உயர்த்துவது நல்லதுதான். மக்கள் தொகைப் பெருக்கத் திற்குத் தீர்வுகாண வேண்டும் என்கின்ற முறையிலேயும் ஒரு சமூக சீர்த்திருத்தம் என்கின்ற முறையிலும் நாம் இதனைச் செய்ய வேண்டும். நாம் இதன் பொருட்டு ஒரு சட்டம் இயற்றி நம் பெற்றோருக்கு விளக்கியுரைத்தால் பெரும்பாலான பெற்றோர் அச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளுவர்.

ஆனால் ஒரு சிலர் பெண்களின் திருமண வயதை உயர்த்துவதை எதிர்க்கின்றனர். நம் சமூகத்துப் பெண்கள் பலர்—பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட—இதனை எதிர்க்கிறார்கள் என்பது நம்ப முடியாததாகவே இருக்கிறது. "நம் பெண்கள் தம் 15-ஆவது வயதில்தான் எழிலும், இனிமையும் கொண்டு விளங்குகிறார்கள்; வயது சென்றபின் அவர்களை நல்ல மனைவியராக உருவாக்க முடியாது" என்ற அளவுக்குக்கூட ஒருவர் பேசுகிறார்! நம் பிள்ளைகள், தங்கையர் ஆகியோருடைய எழிலும் இனிமையும் 15-வது வயதுடனேயே திடீரென முடிந்து விடாது என நாம் நம்புவோமாக! ஆராய்ச்சியும், வாதமும், பொது மக்களிடைப் பேச்சும் நமக்குத் தேவை; அது மட்டுமல்ல; அவை குடியாட்சியின் உயிர் மூச்சுமாகும். ஆனால் மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு மாபெரும் பிரச்சினை என்பதையும் அது சிக்கலானது என்பதையும் கருத்தில் கொண்டு செய்யும் விவரம் அறிந்த ஒன்றாக அவ்வாதம் இருக்க வேண்டும். அது மடடும் அல்ல; நம் வாதத்திற்கடிப்படையான புள்ளிவிவரக் கணக்கீடுகளையும் அந்த வாதம் கருத்தில் கொள்ள வேண்டும்.

பெண்களின் திருமண ஒப்புரல் வயதை உயர்த்துவதன் மூலமாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று யாரும் கூறவில்லை நம் மக்கள் தொகைப் பிரச்சினை பல கோணங்களிலிருந்தும் தீர்வு காணவேண்டிய அளவு ஒரு தீராப் பிரச்சினையையேயாகும். நம்முடைய பண்பாட்டிற்கும், சமூகத்திற்கும் ஏற்ற முறையில் பல வேறு முறைகளை நாம் ஆராயவேண்டும். எந்த முறைகளை நாம் பின்பற்றினாலும் சரி, புதிதாகத் திருமணம் செய்து கொள்ளுவோர் ஒன்றினை உணர்ந்து கொள்ளும்படி அறிவுறுத்த வேண்டும். தனி வாழ்க்கைக்கே உரிய அந்த இல்லற உறவு, பொருளாதார சமூக அரசியல் நிலையில் குடும்ப, தேசிய, அனைத்துலகப் பொது வாழ்க்கையினை மிகப்பெரிய அளவில் பாதிக்கிறது என்பதே அதுவாகும். தனி மனிதன் மேற்கொள்ளும் செயல்களில் இந்த இல்லற உறவு போன்று பொதுவாழ்க்கையில் ஒரு கொடுமையினைச் செய்வது வேறு ஒன்றும் இல்லை போலும்! ஆகவே இந்தச் சிறு இல்லற உறவு ஒரு பொறுப்புவாய்ந்த செயலாகவும், ஒரு புனிதமான செயலாகவும் இருக்கவேண்டும். மேலும் அது நாட்டின் சமூக முன்னேற்றத்திற்கும் வாழ்க்கைச் செழிப்பிற்கும், கணவன் மனைவி குடும்பத்தினர் ஆகியோரின் உடல் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் துணை செய்வதாகவும், அவ்வாறு துணை செய்வதற்கு ஏற்ப அதன் விளைவுகள் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியனவாகவும் இருத்தல்வேண்டும். நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றமும் சமூகக் கட்டுகளிலிருந்து நம் பெண்ணினம் பெறும் விடுதலையும் போன்று புனிதமான பணிகள் வேறில்லை. ∴

கடவுள் பக்தி

பெரியார் ஈ.வெ.ரா.

உலகில் மனிதனுக்குத்தான் கடவுள் கற்பிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய மற்ற ஜீவராசிகளுக்கும், புல், பூண்டு, தாவரங்களுக்கும் கடவுள் என்கிற உணர்ச்சியே கிடையாது. ஆனால் அவையெல்லாம் மனிதர்களைப் போலவே தோன்றி, வாழ்ந்து, செயல்பட்டு, அழிந்து மாய்ந்து போகின்றன.

தோன்றி, வாழ்ந்து, அழிந்து, மாய்ந்து போவதில் மனிதர்களுக்கும் மற்ற ஜீவராசி புல், பூண்டு, தாவரங்களுக்கும் மற்ற பொருள்களுக்கும் எவ்விதமாறுதலும் காண முடிவதில்லை!

பிறவியில் இயற்கையாய் உள்ள பேதங்களால் சில மாறுதல்களைக் காண்கிறோம். அம்மாறுதல்களின் அடிப்படையில் பேதம் எதுவும் காண்பதற்கில்லை.

ஜீவநூல் ஜீவஆராய்ச்சி வல்லுநர்கள் ஆதியில் அதாவது உலகம் ஏற்பட்ட, தோன்றிய காலத்தில் மனிதனும் மற்ற மிருகாதிஜீவபிராணிகளும் ஒன்றுபோலவேதான் நடந்து வாழ்ந்து வந்தன என்று குறிப்பிடுகிறார்கள்.

மனிதனுக்கு மற்றஜீவராசிகளைவிட அறிவுத் துறையில் சிறிது மாற்றம் இயற்கையில் இருந்து வருகிற காரணத்தால் மனிதனுக்கு ஆசைப் பெருக்கெடுத்து வாழ்க்கையில் பெரும்கவலைக்கு ஆளாகி அதனால் துக்க சுகத்திற்கும் ஆளாகி உழலுகிறான். ஆசையும் மடமையும் சேர்ந்தே மனிதனுக்கு கடவுள் கற்பிக்கப்பட்டு புகுத்தப்பட்டு அறிவின் பயனைக் கெடுத்துக்கொண்டு கவலைக்கும், துக்க சுகத்திற்கும் ஆளாகி அழிகிறான்.

கடவுள் புகுத்தப்படாமலிருந்தால் ?

மனிதசமுதாயத்தில் கடவுள் கற்பனைப் புகுத்தப்படாமல் இருந்தால் மனிதர் நிலையே இன்று வேறாக இருக்கும்

அதாவது கவலையற்ற, துக்கமற்ற வாழ்வு வாழும்படியான நிலையை மனிதன் எய்தி இருப்பான்.

இன்று கவலையும் துக்கமும் இல்லாத மனிதனைக் காண்பதே அரிதாயிருக்கிறது. எந்த உயர்நிலையில் இருப்பவனுக்கும் கவலையும், துக்கமும் குடி கொண்டிருக்கிறது. கடவுள் எண்ணத்தை ஒழித்தவர்களுக்கு கடவுள் இல்லை. எல்லாம் இயற்கை என்று எண்ணியிருப்பவர்களுக்கு துக்கம் கவலை இல்லாமல் இருக்கலாம் அப்படிப்பட்டவர்களைத்தான் ஞானிகள்—முற்றும் துறந்த மெய்ஞானிகள் என்று சொல்லுவார்கள். அந்த நிலையை மனிதன் எய்துவது எளிதல்ல. ஞானம் தோன்றும், துறவு தோன்றும். தோன்றியவன் உலகில் மக்களிடையில் வாழ்வதால் அடிக்கடி சறுக்கி விழுந்து கவலைக்கும் துக்கத்திற்கும் ஆளாகி விடுகின்றான். என்றாலும் நாம் அறியாமல் நமக்குத் தெரியாமல் யாராவது இருந்தாலும் இருக்கலாம்.

மோக்ஷம் என்ற சொல்லுக்கும், முக்தி என்ற சொல்லுக்கும் உண்மையான கருத்து (அர்த்தம்) கவலையற்றத் தன்மை, துக்க மற்றத் தன்மை என்றுதான் பொருள். மோக்ஷம் (அல்லது முக்தி)—துக்க நாசம். இந்த நிலை கடவுள் (ஒருவர் அல்லது பலர்) இருக்கிறார் என்கின்ற எண்ணமுடையவனுக்கு என்றுமே தோன்றாது.

கடவுளும் கவலையும் !

எவ்வளவுக் கெவ்வளவு கடவுள் கருத்து ஆழமாகப் பதிகிறதோ—உடைத்தானவனாய் இருக்கிறானோ அவன் ஆயுள் பரியந்தம் துக்கமும் கவலையும் கொண்டவனாகத்தான் இருப்பான், பேராசைக்காரனாகத்தான் இருப்பான். பொதுவாகவே இன்று பார்க்கிறோமே: கடவுள் பக்தன், கடவுளை வணங்குகிறவன் அவன் முட்டாளானாலும் 'அறிவாளி'' ஆனாலும் எதற்காக வணங்குகிறான்? என்ன எண்ணத்தில் வணங்குகிறான்? ஏதோ ஒரு வேண்டுகோளின்மீதுதானே! எதையோ எதிர்பார்த்து ஆசைப்பட்டுத்தானே வணங்குகிறான்!

''எனக்கு ஒன்றுமே வேண்டாம்'' என்று சொல்பவனாய் இருந்தாலும் ''உன் பாதாரவிந்தம் வேண்டும்'' என்றாவது சொல்லித்தானே கும்பிடுவான். இவன் யாருக்கு சமம் என்றால், எனக்குப் பின்புறம் பிடரியில் ஒரு கண் இருக்கவேண்டுமென்று கடவுளை வணங்குகிறவனுக்கு சமமானவன்தானே!

ஏதாவது ஒன்றை வேண்டித்தானே பக்தி, வணக்கம், பூசை, தொழுகை, பிரார்த்தனை முதலியவை யெல்லாம். ஒன்றும் வேண்டாதவனுக்கு கடவுளிடம் என்ன வேலை?

அதிலும் தவறுசெய்தவன், மோசடி செய்தவன், செய்கிறவன், பேராசைக்காரன் ஆகியவர்களுக்குத்தான் கடவுள் பக்தி, பூசை முதலியவை அதிகமாக இருப்பதைக் காண்கிறோம்.

எனக்கு சுமார் பத்து ஜெயில்களில் இருந்த அனுபவம் உண்டு. கொலைக் கைதி முதல் ஒவ்வொரு கைதிகளும் அவனவன் அறைகளில் ஏதாவது ஒரு சாமிப்படம், சிலர் ஏதாவது ஒரு புராணம், ''பக்திநூல்'' வைத்து பூசை பிரார்த்தனை செய்து கொண்டு இருப்பதைத்தான் பார்த்தேன். ராஜமுந்திரி (கோதாவரி) ஜெயிலில் ஒரு கைதி கொலை செய்தவன், அயுள் தண்டனை அடைந்தவன், அவன் காலை 10 மணிக்குக் குளித்துவிட்டு அரை மணி நேரம் ஒற்றைக்காலில் நின்றுகொண்டு கைகளை தலைக்குமேல் தூக்கி கூப்பிக் கும்பிட்டுக் கொண்டு எதையாவது சொல்லிக்கொண்டே நிற்பான். அவன் படித்தவன் கொஞ்சம் பணக்காரனும் கூட. எதற்காக இவ்வளவு பக்தி பூஜை என்று கேட்டதற்கு ''சீக்கிரம் விடுதலையாவதற்கு'' என்று சொன்னான். இப்படி எத்தனையோ கைதிகள் குளித்தவுடன் சாம்பலைப் பூசிக்கொண்டு சாமி கும்பிடுவதைப் பார்த்தேன்.

பக்திவேஷம் !

லஞ்சம் வாங்கும் சைவன், இலஞ்சம் வாங்கும் வைணவன், லஞ்சம் வாங்கும் முஸ்லீம், லஞ்சம் வாங்கும் கிருஸ்தவன் முதலிய இவர்கள் பெரிதும் பூசை, வணக்கம், தொழுகை, பிரார்த்தனை இவைகளில் மிகக்கண்டிப்பாக—தவறாமல் நடந்து கொள்கிறார்கள்.

அதிக பக்தி, பூசை, தானம், தர்மம் உபயம், கட்டளை உள்ள வியாபாரிகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆகவே மனிதனிடம் கடவுள் நம்பிக்கை, கடவுள் பக்தி இருப்பதெல்லாம் ஆசை காரணந்தானே ஒழிய மனிதனை ஒழுக்கமுடையவனாக்கவோ, மற்றவர்களுக்குப் பயன்படும் படிச்செய்யவோ அல்ல என்பதை ஒவ்வொருவரும் நம்பவேண்டுமாய் வேண்டுகின்றேன். ❖

பெரியாரின் சமுதாயத்தொண்டு ஒரு மதிப்பீடு

பி.சி.கணேசன்

தமிழக வரலாற்றில் பெரியார் ஒரு சகாப்தம். தமிழக அரசியலில் பெரியார் ஒரு ஸ்தாபனம். தமிழகச் சிந்தனையில் அவருடைய சாதனை ஒரு மைல் கல். தமிழகத்தின் எதிர்காலச்சந்ததியாருக்கு அவருடைய வாழ்க்கையும் பணியும் என்றென்றும் வழி காட்டியாக விளங்கியபடியேதான் இருக்கும்.

கடுமையான மொழிகளில் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லும் பெரியார், அனுபவ வாழ்க்கையில் மிகவும் பண்பட்ட முறையில் அனைவரிடமும் பழகுகிறார். சிலர் இது எப்படி அவருக்குச் சாத்தியமாகிறது. என வியப்போடு வினவுகிறார்கள். தன்னுடைய எண்ணங்களிலும் கருத்துக்களிலும் பெரியாருக்கு எந்தவிதமான குழப்பமும் இருப்பதில்லை. தான் சரி எனக் கண்டு தெளிந்த பிறகே தன்னுடைய முடிவுகளை அவர் வெளியிடுகிறார். அதனால் அவற்றில் ஒரு அழுத்தமும் நியாயபூர்வமான வேகமும் காணப்படுகிறது. பெரியாரின் கருத்துக்களிலிருந்து மாறுபடுகிறவர்கள் கூட அவருடைய நியாயவுணர்வைச் சந்தேகிக்க முடியாது. இதுதான் தமிழகப் பொது வாழ்க்கையில் அவருக்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது. இப்படி கருத்தில் பிடிவாதமான பிடிப்புக் கொண்டுள்ள பெரியார் தனிப்பட்ட மனிதர்களைப் பற்றியோ, அல்லது வெவ்வேறு அமைப்புகள் பெற்றிருக்கின்ற விலாசங்களைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. மனிதர்களும் அமைப்புகளும் அவரைப் பொறுத்த வரையில் வெறும் கருவிகளே! லட்சியம் எது என்பதிலே அவர் நூற்றுக்கு நூறு தெளிவானவர். அதனால் தனி மனிதர்கள் மீதோ அல்லது அமைப்புகள்மீதோ அவருக்கு நிரந்தர பாசமும் கிடையாது. வெறுப்பும் கிடையாது. இதனால் கொள்கை விளக்கத்தின்போது கடுமையான சொற்பிரயோகம் செய்யும் பெரியார் தனி மனிதர்களிடம் பழகும்போது விழுமிய பண்பாட்டுணர்வோடும் உள்ளார்ந்த அன்போடும் பழகுகிறார்!

அடிப்படையில் பெரியார் ஒரு சமூக சீர்திருத்தக்காரர். அரசியல் அவருக்கு இரண்டாம் பட்சம். அரசியல், சமுதாய முற்போக்கு எண்ணங்களுக்கு ஏற்றவகையில் உருக்கொள்ளவேண்டுமென விரும்புகிறார். அதேசமயம் தன்னுடைய இயக்கம் அரசியலில் நேரடியாக ஈடுபட்டால் அதனுடைய சமுதாயப் பணியில் சில விட்டுக்கொடுக்கும் நிலைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்ற எண்ணத்தில், முழுக்க முழுக்க ஒரு சமுதாய சீர்திருத்த அமைப்பாகவே தன்னுடைய இயக்கத்தை நடத்தி வருகிறார்.

இந்த நிலைதான் பெரியாரின் சமுதாய சீர்திருத்தப்பணியைப் பெருமளவுக்குவெற்றி பெறச் செய்திருக்கிறது. சமுதாய உணர்வை தட்டி எழுப்புவதின்மூலம்—சமூக அபிவிருத்தி பிரயங்களை சில பல திசைகளில் உருவாக்குவதின்மூலம்—அரசியலில் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி சமுதாய மாற்றத்தைக் கொண்டு வந்துவிட முடியும் எனப் பெரியார் நம்புகிறார். அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை என்பதைக் கடந்த பதினைந்து ஆண்டு காலத் தமிழக வரலாறு தெளிவாக நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

ஒரு அரசியல்வாதியின் கண்ணோட்

டத்தை மட்டும் கொண்டு பார்த்தால் பெரியார் பல தவறுகள் செய்திருக்கிறார்—செய்து கொண்டிருக்கிறார்—என்று எண்ண இடமுண்டு. ஆனால் அவைகளை ஒரு சந்தர்ப்பவாதியின் தவறுகள் போல காட்ட முயல்வது பெரியாரைப் பற்றிய தவறான கண்ணோட்டமாகவே முடியும். ஆளும் கட்சி எதுவாக இருந்தாலும் பெரியார் அதை ஆதரிக்கக்கூடியவர் என்ற ஒரு பேச்சு அடிபடுவதை சமீப காலமாக நான் கேட்கிறேன். இது சில அவசரக்காரர்கள் ஆத்திரத்தில் செய்யும் அர்த்தமற்ற மதிப்பீடு! ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் ஆளும் கட்சியாக இருந்தபோது பெரியார் அதைக் கடுமையாக எதிர்த்தும் பெரும் பெரும் கிளர்ச்சிகள் செய்திருக்கிறார் என்பதனை இவர்கள் ஏனோ மறந்தே விடுகிறார்கள். ராஜாஜியின் காங்கிரஸ் ஆளும்கட்சியாக இருந்தபோது முழுமூச்சோடு எதிர்த்த பெரியார் காமராசரின் காங்கிரசைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தார் என்பதில்தான் பெரியாரின் சமுதாயப் பணிக்கான பின்னணியே இருக்கிறது.

கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக தன்னலமற்ற சேவையின் மூலமாக தமிழ்ச் சமுதாயத்தில் பெரியார் பெரியதொரு மாற்றத்தையே கொண்டுவந்திருக்கிறார். சாதிப் பிரிவினைகளால் விளைந்த கேடுகளைக் களைவதில் பெரியார் முழு வெற்றி காணவில்லை என்றாலும் கணிசமான அளவுக்கு வெற்றி கண்டிருக்கிறார். அவருடைய எண்ணங்களும் சிந்தனைகளும் தமிழ்மக்களிடத்திலே ஒரு சமத்துவ உணர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளதை அவருடைய பரம விரோதியும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். பெரியாரின் சுயமரியாதைப் பாசறையில் தயாரானவர்களில் பலர் இன்று தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்று மக்களின் ஆதரவைப் பெற்ற தலைவர்களாய் விளங்கி வருகிறார்கள் என்பதே பெரியாரின் பெரும்பணி அவர் விரும்பிய பலனைத் தந்திருக்கிறது என்பதற்குச் சரியான அடையாளமாகும்.

பெரியார் ஒரு அரசியல்வாதியல்ல ஆனால் அரசியலில் அவருடைய செல்வாக்கைப் புறக்கணித்து யாரும் செயல்படுவது சாத்தியமில்லை. பெரியார் ஒரு சித்தாந்த வாதியல்ல. ஆனால் அவருடைய எண்ணங்களும் சிந்தனைகளும் தொன்று தொட்டு நிலவிவரும் பல சித்தாந்தங்கள் பற்றி புதிய கண்ணோட்டத்தினை ஏற்படுத்தி இருக்கின்றன. பெரியார் ஒரு விஞ்ஞானி அல்ல விஞ்ஞானப் பார்வையின் பழமைக் குட்டையில் ஊறிய ஒரு சமுதாயத்தில் ஏற்படுத்தி வெற்றி கண்ட பெருமை அவருக்கே உண்டு.

பெரியாருக்கு இப்போதும் பெரும் எதிர்ப்பு இருக்கிறதே என்கிறார்கள் சிலர்! எதிர்ப்பில்லாத சீர்திருத்தவாதியை வரலாற்றில் இதுவரை எங்கே பார்த்திருக்கிறோம். எதிர்ப்பில் வளர்க்கப்பட வேண்டிய பணி பெரியாரின் பணி அதை அவர் கடைசி மூச்சுள்ள வரை செய்வார். அதுதான் தமிழ்ச் சமுதாயத்தின் பலம்—நம்பிக்கை!

பெரியார் பல்லாண்டு வாழவேண்டும்! சேவை செய்யவேண்டும்!

இதுவே நம் ஆசை! வாழ்த்து! ∴

தரத்தில் சிறந்தது

எல்லோரும் விரும்புவது

T. R. S.

ஸ்டார்பிராண்டு சீயக்காய்தூள் &

மஞ்சள் தூள்

T. R. S. கம்பெனி,

தர்மபுரி-3.

நாம் எதில் விடுதலை பெற்றிருக்கிறோம்?

உலகிலே இந்துக்கள் (இந்தியர்கள்) பரம முட்டாள்களாகக் கருதப்படுகிறவர்கள் ஆவார்கள். இதற்குக் காரணம் அவர்களது (இந்துக்கள்) மதமும், கடவுள்களும் சாதிகளும்தான்.

உலகில் மற்ற நாடுகளில் கடவுளுக்காக மதங்கள் இருக்கின்றன. இந்தியாவில் இந்துக்களுக்கு, மதத்திற்காக கடவுள்கள் இருக்கின்றன.

உலகத்தில் மற்ற இடங்களில் கடவுள் அல்லது மதத்திற்கு ஆக சாதிகள் இருக்கின்றன. இந்தியாவில் சாதிகளுக்காகவே கடவுள்கள், மதங்கள் இருக்கின்றன.

மனிதனை முட்டாளாக்கும்
கடவுளும் மதமும்

மற்ற உலகில் அறிவு வளர்ச்சிக்காக கடவுள், மதம் இருக்கின்றன. நமது நாட்டில் மனிதனை முட்டாள் (மூடநம்பிக்கை காரனாக) ஆக்கவே கடவுள், மதம் இருக்கின்றன.

மற்ற நாடுகளில் மக்களை ஒன்றுபடுத்தவே கடவுள், மதம் இருக்கின்றன.

நமது நாட்டில் மக்களை வேறு வேறாகப் பிரிக்கவே கடவுள், மதம் இருக்கின்றன.

மற்ற நாட்டில் மனிதனிடம் மனிதனுக்குப் பற்றும் அன்பும் உண்டாக்கவே கடவுள், மதம் இருக்கின்றன. நமது நாட்டில் மனிதனுக்கு மனிதன் வெறுப்பும் வேற்றுமையும் உண்டாக்கவே கடவுள், மதம், சாதி இருக்கின்றன.

பேத நிலை காக்கும் ஆட்சி!

மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் நமது நாட்டில் (இந்தியாவில்) மேற்கண்ட தன்மைகளை காப்பதையே மூலாதார உரிமையாகக் கொண்ட ஆட்சி (அரசாங்கம், அரசியல் சட்டம்) இருக்கின்றது.

அதிலும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் இப்படிப்பட்ட ஆட்சிக்குத் தலைவனாக, இத்தன்மைகளைக் காப்பாற்ற வேண்டிய அவசியமுள்ள, இவற்றால் தனிப்பட்ட நன்மை அடையும் மக்களே, ஆட்சித் தலைமையாளராக இருந்து வருகிறார்கள்.

பேதம் போக்கிய வெள்ளையனுக்கு எதிர்ப்பு

நல்லவாய்ப்பாக வெள்ளையர் ஆட்சியினால் இந்த நாட்டுப் பெருங்குடி மக்கள் இந்தமாதிரியான பேதங்களையும், கேடுகளையும் ஒருவாறு உணரமுடிந்தது. இதன் காரணமாகவே வெள்ளையன்மீது வெறுப்பை உண்டாக்கும் கிளர்ச்சியை பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும், முட்டாள்களும் ஆரம்பித்தார்கள்.

உலக யுத்தத்தின் காரணமாக உலகில் வெள்ளையர்கள் ஆதிக்கத்திலிருந்த இலங்கை, ஃபிரஞ்சு இந்தியா போன்ற சிறு சிறு நாடுகள் உட்பட எல்லா நாடுகளும் பூர்ண சுதந்தரம் அடைந்ததுபோல இந்தியாவும் வேறு யாருடைய முயற்சியாலும் இல்லாது தானாகவே பூர்ண சுதந்தரம் அடைந்தது.

என்ன புதிய மாற்றம் காண முடிந்தது?

இந்தியா பூரண சுதந்திரம் அடைந்தவுடன் பார்ப்பனர் "இந்த நாடு எந்தவித சமுதாய மாறுதலும் அடையக்கூடாது" என்கிற தன்மையில் மனுதர்மத்தையே அரசியல் சட்டமாக ஆக்கி, சாதி, மதம் கடவுள்கள் முதலிய கொடுமையும் முட்டாள் தனமுமான தன்மையில் யாரும் கைவைக்கக் கூடாது என்கின்ற திட்டங்களை மூலதாரக் கொள்கையாக ஆக்கிக்கொண்டார்கள்.

இதன் காரணமாக இந்த 20 ஆண்டு காலத்தில் 'பறையன்' - 'சக்கிலி' - 'அரிசனன் ஆனான்; 'சூத்திரன்'-'முதலியார்' - 'கவுண்டன்' - 'படையாச்சி' – 'செட்டி'- 'நாயக்கன்' ('Non Brahmin') 'நான் பிராமின்' ஆனான் என்பதைத்தவிர வேறு மாறுதல் இல்லை .'பிராமணன்,' பிராமணனாகவே சாதி உரிமையோடு அரசியல் பொருளாதார வாழ்வு, கல்வி, உத்தியோகம் ஆகிய துறைகளில் அவன் உரிமைக்குமேல் 10 பங்கு அதிகமாகவே அனுபவிக்கிறான். நாம் (பெருங்குடி மக்கள்) 100க்கு 75 பேர்கள் 'தகுதி-திறமை' என்னும் இழிவால் தாழ்த்தப்பட்டுக் கிடக்கிறோம்.

புரட்சி அவசியமாகும்

இன்றைய நிலைமையில் இந்தியாவில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டு, அரசியல் சட்டம் கொளுத்தப்பட்டு, வேறு உண்மையான சமதர்ம ஆட்சி ஏற்பட்டால் ஒழிய, அல்லது அன்னிய படையெடுப்பினால் நாடு திருத்தப்பட்டால் ஒழிய, இந்நாட்டில் இன்று மூலதாரப் பாதுகாப்பாய் இருந்துவரும் மேற்கண்ட கடவுள்கள், மதங்கள், சாதிகள் சம்பந்தமான இழிவுகளும் பேதங்களும் ஒழியாது; ஒழியச் செய்ய முடியாது என்பது எனது (இன்று 88 வயது முடிந்து 89 தொடக்கம்) 75 ஆண்டைய உறுதியான கருத்தாகும்.

இன்றைய நிலை சுதந்தர வாழ்வாகுமா?

அரசியலின் பேரால் தங்கள் வாழ்வை நிறுவிக்கொண்ட மக்களுக்கு மானம், வெட்கம், இழிவு தோன்றாது. ஆதலால் அவர்கள் இன்றைய நம்மக்களின் வாழ்வை, 'விடுதலை வாழ்வு' என்று கூறுவார்கள்.

நான் அரசியல் மதத்துறையின் பேரால் அயோக்கிய மூட சுயநல மக்களால் வெறுக்கப்பட்டவன்; துன்பப்பட்டவன்; நட்டப்பட்டவன்; மானத்தையும் பறிகொடுத்தவன்; மந்திரி பதவியை உதறித் தள்ளியவன். ஆனதால் எனக்கு இந்த இழிவாழ்வு வெறுப்பாகத் தோன்றுகிறது.

—ஈ. வெ. ராமசாமி.

சர்வ சக்தி உள்ள கடவுள்!

பெரியார் ஈ.வெ.ரா.

'கடவுள் நன்மை செய்தவனுக்கு நன்மை செய்வார்".

"கடவுள் தீமை செய்தவனுக்குத் தீமை செய்வார்". என்று கடவுள் பிரச்சாரர்கள் சொல்கிறார்கள்.

அப்படியானால்,

மனிதனை நன்மை செய்யச் செய்தவன் யார்? தீமை செய்யச் செய்தவன் யார்?

ஒரு மனிதனை தீமை செய்யாமல் இருக்கச் செய்ய முடியவில்லையானால் கடவுள் எப்படி சர்வ சக்தி உள்ளவனாவான்?

கடவுள் மனிதனுக்கு, அறிவைக் கொடுத்துவிட்டார். அந்த அறிவை மனிதன் பயன்படுத்துவதில் தீமை ஏற்பட்டால் கடவுள் தண்டிக்கிறார்.

அப்படியானால் கடவுளுக்குப் புத்தி யிருக்கவேண்டாமா? இவனுககு அறிவைக் கொடுத்தால் தீமை செய்வான்; ஆதலால் இவனுக்கு அறிவும் சுதந்திரமும் கொடுக்கக் கூடாது என்று அறிவுள்ள கடவுள் சிந்திக்க வேண்டாமா?

"மனிதனுக்குத்தான் கடவுள் அறிவைக் கொடுத்தார்."

விஷமூட்டும் பாம்பு, தேள், கொல்லும் புலி, சிங்கம், சிறு பிராணிகளைத் தின்றே வாழும் பெரும் ஜீவன்கள் ஆகிய இவைகளைக் கடவுள் ஏன் உண்டாக்கினார்?

இதற்குப் பெயர் காருண்யமா? ஒரு நாளைக்கு எத்தனைக் கோடி கோடி பூச்சிப் புழுக்களை பட்சிகள் தின்கின்றன. எத்தனை கோடி பட்சிகளை மனிதன் கொன்று தின்கிறார்கள். எத்தனை கோடி மீன்களை மக்களும், மற்ற உயிர்களும் கொன்று தின்கிறார்கள்.

எத்தனைக் கோடி கோடி எத்தனை இலட்சம் ஆடுகள், எத்தனை ஆயிரம் மாடுகள் ஆகியவைகளை உலகில் மக்கள் கொன்று சாப்பிடுகிறார்கள். சர்வ சக்தியுள்ள, கருணைக் கடாட்சம் பொருந்திய கடவுளுக்கு இதுதான் வேலையா அல்லது கடவுள் சம்மதமில்லாமல் அவர் சக்திக்குமீறி இக்காரியங்கள் நடைபெறுகின்றனவா? சர்வ சக்தியுள்ள கடவுள் ஜீவராசிகள்-மரம், புல், பூண்டு வகைதனை எதற்காக தோற்றுவிக்கவேண்டும்?

இவைகள் பெரிதும் எல்லாம் அழிந்து தானே போகின்றன. அழியும்போது இம்சை நோய், வேதனைப் பட்டுத்தானே அழிகின்றன. இப்படிப்பட்ட ஜீவனை உண்டாக்கி இப்படி அழியச்செய்வதில் கடவுளுக்கு என்ன மகிழ்ச்சி? கடவுள் சக்திக்கு என்ன பெருமை? சர்வ சக்தி என்பதின் தத்துவம் இதுதானா?

பிரார்த்தனை

மனிதன் பிரார்த்தனை, தொழுகை, பூசை செய்வதால் கடவுளுக்கு என்ன இலாபம்? காரியத்தில் செய்தவனுக்கும் செய்யாதவனுக்கும் பேதம் என்ன?

கடவுளை வணங்காதவன், கடவுளை நம்பாதவன் ஆகியவர்கள் கடவுளுக்கு விரோதியா? அவ்வளவு ஆணவம் பிடித்தவனா கடவுள்?

"கடவுளை" வணங்குவது என்பதே அடிமைத்தனத்திற்கு முதல் படியாகும், அது கடவுளையும் கெட்டவனாக்குவதாகும்.

"கடவுள்" அதை உணருகிறவனல்லவே அதை எதிர்பார்க்கிறவனுமல்ல. உனக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம் என்பது உனக்கே தெரியாதே!

என்னமோ அவன் இவன் சொன்னதைப் பார்த்து, பண்ணுவதைப் பார்த்து நீயும் என்னமோ பண்ணுகிறாய்! இதனால் நீ எப்படி அறிவுள்ள மனிதனாவாய்?

—"சித்திரபுத்திரன்"

மறைந்த பெரியார் தொண்டன் ஆசிரியர் சந்தானகிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய கழகப்பணி ஆக்கத்தோடும் ஊக்கத்தோடும் அடக்கத்தோடும் ஆர்வத்தின் எழுச்சியோடும் தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் விளங்கிற் றென்பதை அய்யா அவர்களின் 89-வது பிறந்தநாள் விழாவின்போது அவரை நினைவுகூர்ந்து அவர் விட்ட பணிகளைத் தொடர்ந்து செய்ய முயற்சிக்கின்றோம் என்பதாக உறுதி எடுத்துக்கொள்கின்றோம்.

இன்னணம்,

திரு. கு. கிருட்டினசாமி (சிதம்பரம்) தெ. ஆ. மா. தி. க. தலைவர்.
திரு. நா. நடேசன் (பண்ருட்டி) தெ.ஆ.மா. தி. க. துணைத் தலைவர்
திரு. மு ராமச்சந்திரன் (விழுப்புரம்) தெ. ஆ. மா. தி க. செயலாளர்.
திரு. மு. சுப்பிரமணியம் (நெல்லிக்குப்பம்) தெ. ஆ. மா. தி. க. செயலாளர்,
திரு. கோ. பாண்டுரங்கம் (கடலூர்) தெ. ஆ. மா. தி. க. துணை செயலாளர்.
திரு, சாமிதுரை M, A, B. L. (கள்ளக்குறிச்சி) தெ. ஆ. மா. தி. க, பொருளாளர்.
மற்றும் தெ. ஆ. மா. தி. க. நிர்வாகக்குழு உறுப்பினர்கள்.

வாழ்க பெரியார்! **பெரியார் ஆண்டு 89**

"எனக்குப் பிறகு யார் என்று கேட்கிறார்கள். இது அர்த்தமில்லாத கேள்வி. எனக்குப் பிறகு எனது கொள்கைகள்; அவைகளைக் கூறும் எனது நூல்கள்தான்.

ஆணவமாக இதைச் சொல்லவில்லை. உண்மை நிலை அதுதான்"

"தந்தை பெரியார்"

இந்த ஆண்டு பெரியார் பிறந்தநாள் விழாவில் இதை நினைவு கொள்வோம்.

O. V. K. நீர்காத்தலிங்கம் & சன்ஸ்

பழக் கமிஷன் வியாபாரம்

138, வடக்குமாரட் வீதி; மதுரை-1.

பாப்பீஸ் கன்பெக்ஷனரி

3, ராஜேந்திரபிரசாத் ரோடு, மதுரை-2.

உரிமையாளர்கள்: O. V. K. நீர்காத்தலிங்கம்.
R. சந்திரா.

பெரியார் இயக்கம்

முன்னாள் அமைச்சர் திரு.எஸ்.இராமநாதன்

இராமசாமிப் பெரியாருடைய புகழ், உலக சரித்திரத்தில், நிலைநிற்குமானால் அவரது சுயமரியாதை இயக்கத்தின் வலுவினால் தான் நிற்கும். ஏனெனில் அது உலக முற்போக்கிறகு 'சயின்ஸ்' காட்டும் முறையில் போய்க்கொண்டு இருக்கிறது. பெரியார் இயக்கமானது பல நாடுகளில் பல்வேறு பேரால் வழங்குகிறது. பொதுவாக அது Rationalism, Free thought, Secularism, Humanism என்று மேற்கு தேசங்களில் வழங்கிவருகிறது மனித சமுதாயம் பிரிக்கமுடியாத ஒன்று. ஜாதி, மத, நிறபேதங்களால் அதைப் பிரித்து வைப்பது தவறு. இதுதான் அடிப்படை இந்த உண்மையை நாற்பது வருஷங்களுக்கு முன் தமிழ்மக்களிடையே பரப்பிய பெருமை சுயமரியாதை இயக்கத்தையே சாரும்.

சரித்திரத்தில் இந்தியாதான், மதத்திற்குத் தாயகம் என்று பெயர் வாங்கியிருக்கிறது. அதைப்பற்றி நமதுமக்களும் பெருமை அடைகிறார்கள், உலகத்திற்கு நாம்தான் (Spiritual)'ஆன்மீகவழிகாட்டியாய்வி'ளங்குகிறோம்! இவ்வளவு தூரம மதப்பித்து தலைக்கேறிய ஜனங்களிடையே கடவுள் இல்லை என்னும் கொள்கையை ஸ்தாபிப்பது முடியாத காரியம். அந்த முடியாத காரியத்தை முடித்து வைத்த பெருமை பெரியாரையே சாரும். உதாரணமாக, தமிழ்நாட்டைத் தவிர, வேறு எங்குசென்றாலும் கடவுள் இல்லை, மதம் கூடாது; என்று சொல்லுகிறவர்களை கல் எடுத்து அடிப்பார்கள். தமிழ் நாட்டிலோ என்றால் கூட்டம் போட்டுப் பேசலாம். ஜனங்கள் ஆரவாரத்தோடு கை கொட்டி ஆதரிப்பார்கள்.

இதற்குக் காரணம் தமிழ்நாட்டில் பெரியார் உண்டு. மற்ற நாட்டில் இல்லை. இந்தநிலையை பெரியார் இயக்கம் இன்று அடைந்திருந்தபோதிலும், இயற்கையில் மற்ற எந்தப் பொருளையும்போல, அதுவும் ஒரு வளர்ச்சியாகும். ஒரு காரணத்தால் தோன்றி சரித்திரத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளால் உந்தப்பட்டு, மெதுவாக வளர்ச்சியடைந்து வருகிறது.

குருகுலத்தில் சாதி வேற்றுமை!

நாற்பது வருஷங்களுக்கு முந்தி காந்தீய எழுச்சியில் ஈடுபட்ட ஒரு பார்ப்பன தேசபக்தர் வ.வெ.சு. அய்யர் என்று ஒருவர் இருந்தார். தேசபக்தியும், தியாக உணர்ச்சியும் உள்ளவர். அவர் சிறுவர்களுக்கு என ஒரு பள்ளிக்கூடம் அமைத்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொருளுதவி வேண்டினார். ரூபாய் 5000, கமிட்டியார் கொடுத்தார்கள். வேறுயாருக்கும் அவ்வளவு பொருள் கொடுத்திருக்க மாட்டார்கள், அவரிடம் அவ்வளவு நல்லெண்ணமும், நம்பிக்கையும் உண்டு. மேலும் கொடுப்பதாகவே இருந்தார்கள். ஆனால் திடீரென ஒரு தகவல தமிழ் நாட்டையே கலக்கி விட்டது, அய்யர் பள்ளிக் கூடத்தில் ஜாதிவித்தியாசம கொண்டாடுகிறார் என்று! இந்த அபவாதத்தை அய்யர் மறுக்கவில்லை. குழந்தைகளின் பெற்றோரின் விருப்பப்படிதான நடப்பதாகவும் தன்னைப் பொறுத்தமட்டில் ஜாதி வித்தியாசம் பாராட்டுவதில்லை என்றும், ஈன' ஜாதிப் பிள்ளைகளுடன், கடலை முதலிய வஸ்துக்களை தான் உண்பதாகவும், வேறு உணவு வகைகளை, பிராமணப் பிள்ளைகளுக்கு அடுப்பங்கரைப் பக்கத்திலும், பாக்கி ஜாதிப் பிள்ளைகளுக்கு வெளியிலும் கொடுப்பதாகவும் சொன்னார் இப்படிச் சொன்னது நிலைமையைப் பின்னும் மோசமாக்கிவிட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் கோபமேலீட்டினால் அய்யரைக் கண்டித்து, மனிதருக்குள் பாரபட்சம் காட்டி பிறவி காரணத்தினுல் ஏற்றத்தாழ்வு கற்பிப்பது கூடாது எனத் தீர்மானம் செய்தனர்.

இதில் அதிசயம் என்னவென்றால், ஏக முகமாக, பார்ப்பன அங்கத்தினர்கள் அனை

வரும் அய்யர் பக்கத்திலும், மற்றவர்கள் யாவரும் அய்யரை எதிர்த்ததும் ஓட்டுச் செய்தனர். அய்யர் தோல்வி அடையவே அவரை ஆதரித்த பார்ப்பனர் அனைவரும் தங்கள் பதவியை ராஜினாமாச் செய்தனர். அப்படி ராஜினாமா செய்தது யார், யார், எனறு தெரியுமா? அதை நினைக்கும்போது மனம்நடுங்குகிறது. இந்த தேசத்தின் 'விதி' இப்படி ஆச்சே என்று! தலைவர்களில், தலைசிறந்தவர் எனக் கருதபீபட்ட அத்தனைபேரும் இருந்தனர்! திருவாளர்கள் ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், கே. சந்தானம் போன்றவர்கள். இத்தோடு நிற்கவில்லை; மேலே அப்பீல் செய்தார்கள். அகில இந்திய ஹைகமாண்ட் தீர்ப்பு அய்யருக்கு விரோதமாய் இருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் அப்படித் தீர்மானம் செய்ய அதிகாரம் உண்டு எனவும், ராஜினாமாசெய்தவர்கள் வாபஸ்வாங்குவதுதான் சரி என்றும் தீர்ப்பு வந்தது. போனவர்கள் திரும்பி வந்தார்கள். நிலைமையில் மாறுதல் இல்லை. ஆகவே சுயமரியாதை இயக்கம் அவசியம் ஆயிற்று.

சுயமரியாதை இயக்கம் தோன்றியது

காங்கிரஸுக்கு வெளியில் காங்கிரசுக்கு விரோதமாகத்தான் சுயமரியாதை இயக்கத்தைத் துவக்க வேண்டும் என்றாயிற்று வெளியில் வந்து காங்கிரஸ் கொள்கைகளை திட்டங்களை, பகுத்தறிவு என்னும் ஆயுதத்தினால் சோதனை செய்து பார்த்ததில் சாயம் வெளுத்துக்கொண்டே வந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் போயிற்று காங்கிரஸ் இயக்கம் காந்தியின் தலைமையில் திட்டம் வகுத்திருந்தது. அதற்கு நிர்மாணத்திட்டம் எனறு பெயர். ஆதியில் நான்கு கால்கள் உள்ள ஒரு மண்டபத்திற்கு அதை ஒப்பிட்டுச் சொல்லப்பட்டது இந்து முஸ்லீம் ஒற்றுமை; ஹரிஜன முன்னேற்றம்; அஹிம்சை கதர்-எனப்பட்டவை நான்கு கால்களாகும்:

பிறகு அது மாறி பல கிரகங்களினால் சுற்றப்பட்ட ஒரு சூரிய மண்டலத்திற்கு ஒப்பிடப்பட்டது. சூரியன் கதர்! அதைச் சுற்றிவரும் கிரகங்கள், இந்து முஸ்லீம் ஒற்றுமை, ஹரிஜன முன்னேற்றம், மதுவிலக்கு, ஆதாரக் கல்வி, கிராமக் கைத்தொழில் முதலிய 18 கிரகங்கள் உண்டு. சுயமரியாதை இயக்கத்தின் ஆயுதமாகிய பகுத்தறிவைக் கொண்டு சோதித்தபோது இந்த சூரியனிலும், அதைச் சுற்றி வரும் கிரகங்களிலும் எந்தவித உண்மையும் இல்லை எனப் புலப்பட்டது.

கதர் விளைத்த கேடுகள்

முதலில் கதரை எடுத்துக்கொள்வோம். பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே, இந்தியாவில் பஞ்சாலைகள் இருந்தன உலகத்து வியாபாரிகள், வியக்கத்தக்கமாதிரியில் துணி உற்பத்தி இந்த நாட்டில் இருந்தது. சுதந்தரம் வந்த பிறத இப்போது பல ஆலைகள் மூடப்பட்டு, பாக்கி ஆலைகளும் மூடும் தறுவாயில் அவதிப்படுகின்றன. கதரோ என்றால் 30 கோடி மானியம் அனுபவிக்கிறது. அதற்குத் தலைமை தாங்கும் காதி கமிஷன் அங்கத்தினர்கள் எப்போதும் ஆகாய விமான யாத்திரை செய்கிறார்கள்! இதில் வருஷம் 3 கோடி ரூபாய் வீணாகச் செலவாகிறது என்று பார்லிமெண்டில் கணக்குத் தணிக்கை செய்த கமிட்டியார் சொன்னார்கள். இது எப்படி முடிந்தது என்றால், காங்கிரஸ் கட்சியினரின் மூட நம்பிக்கையாலும், மூர்க்கப் பிரசாரத்தினாலும், "துப்பாக்கி பிரங்கி, வெடிகுண்டு முதலியவை, நினற விடத்திலேதான வெடிக்கும்; ராட்டையைச் சுற்றினால் இந்த ஆயுதம் 6000 மைல்களுக்கு அப்பால் உளள இங்கிலாந்தில் வெடித்து வெள்ளையனைப் பணியச் செய்யும்" என்று கூறினர்! இந்த முட்டாள் பிரசாரத்திற்கு, காந்தியிருந்தபோதே லட்சக் கணக்கில் பணம் சேகரித்தனர். பிறகு எல்லா அதிகாரமும், அரசாங்கப் பொக்கிஷமும், காங்கிரஸ் கைப்பற்றவே இப்போது கோடிக் கணக்கில் பணம்செலவுசெய்கிறார்கள். இதில் பத்தில் ஒரு பங்கு உதவி பஞ்சாலைக்குக் கிடைக்குமானால் இந்தத் தொழில் உலகத்தில் முன்பு ஏற்பட்டிருந்த உன்னத நிலைமையை அடையும். கதர் என்ற பெயரில் பஞ்சு வீணாக்கப்படுகிறது. அதை அறிவுள்ள மக்கள் துணி என்று வாங்க மாட்டார்கள். ஆகையால், கவர்மெண்ட் சிப்பந்திகள், பஸ் கண்டக்டர், டிரைவர், போஸ்ட் சேவகர்கள் தலையில் கட்டி கட்டாயம் போட்டுத்தான் ஆகவேண்டும் என்று யூனிஃபாரம் ஆக்கியிருக்கிறார்கள். கீழ்த்தர சிப்பந்திகள் யாரிடம் முறையிடுவார்கள்? சாக்கை எடுத்துக் கொடுத்தாலும் போட்டுக் கொண்டுதானே ஆகவேண்டும்? ஆனால் தேசத்துக்கு நஷ்டம். நல்ல தொரு தொழில்-மில் தொழில் நாசமாய்ப்

போயிற்று. பஞ்சுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இந்த நாளில் பஞ்சை நாசம் செய்யும் வேலையை கதர் செய்கிறது. ஏழைகள் பணம் இந்தப் பஞ்சகாலத்தில் கோடி கோடியாய் விரயமாகிறது ஆனால் காங்கிரஸ்காரர்களுக்கு சம்பளமும், ஆகாய விமானப் பயணமும்! இதுதான் கதர் சேவை!

அரசியலில் மதம் ஊடுருவுவதா?

கதர் என்ற சூரியனை சுற்றிவரும் கிரகங்களின் கதியும இப்படித்தான். இந்து–முஸ்லீம் ஒற்றுமை இந்தியாவில் அவசியம் தான். தாராளமாய் இரு சமூகத்தாரும் விட்டுக்கொடுத்து அமைத்தால், இது நீடிக்கும். ஆனால் அரசியல் தந்திரத்தால் கொண்டுவருவது நீடிக்காது. கலிஃபா என்றால் இஸ்லாமிய மதகுரு. கத்தோலிக்க கிருஸ்தவர்களுக்கு போப்பாண்டவர் இருப்பது போல முஸ்லீம்களுக்கு கலிஃபா. ஆனால் முகமது நபி காலந் தொட்டு கலிஃபா அந்த தேசத்து அரசன் அரசியலிலும் மத இயலிலும் கலிஃபா முஸ்லீம்களுக்குத் தலைவன். இப்படி அரசியலையும் மத இயலையும் ஒன்றாக போட்டுக் குழப்புவது முகமதுநபி காலத்துக்குச் சரி. இப்போது முடியாது. கிருஸ்தவ போப் கூட, தன் வீட்டைச் சுற்றியுள்ள 'வாட்டிகன்' என்ற சில ஏக்கர் பூமிக்கு மாதிரம் அரசனே ஒழிய கிருஸ்தவ மக்கள் வாழும், ஃபிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி போன்ற தேசங்களுக்கு அரசு உரிமை கொண்டாடுவதில்லை.

கமால் பாட்சாவின் சீர்திருத்தங்கள்!

முஸ்லீம் மக்களில் முற்போக்கு மனப்பான்மையுடையவர்கள், கலிஃபாவின் அரசுரிமையை வெறுத்து வந்தார்கள். அப்படிப்பட்ட முற்போக்கு மனப்பான்மைதான் கமால்பாட்சாவுக்கும், ஜின்னாவுக்கும் இருந்து வந்தது. கமால்பாட்சாவே முன்னின்று துருக்கி தேசத் தலைவன் என்ற ஹோதாவில், கிலாஃபத்தை முறியடித்து வீழ்த்தினார். முஸ்லீம்களை, (Fez) குல்லாய்ப் போடாமல், அய்ரோப்பியன் போல தொப்பி [Hat] போடவைத்தார். பெண்கள் படுதாவுக்குள் அடைப்பட்டு இருந்ததை நீக்கி, வெளியில் வந்து, ஆண்களோடு, சரிநிகர் சமானமாக எல்லாவேலைகளிலும் ஈடுபடச் செய்தார்! இம்மாதிரி மூடப் பழக்கவழக்கங்கள் எல்லாம் போகவேண்டுமென்றும் கூறி துருக்கியில் ஒரு சுயமரியாதை இயக்கத்தையே துவக்கி வைத்தார் கமால்பாட்சா! இதற்கு விரோதமாக, முஸ்லீம்களை பழைய குப்பைகூளத்தில் சேர்த்துவைத்தது காந்தியாரின் கிலாஃபத்து இயக்கம். கிலாஃபத்து இயக்கம் அழிந்த பிறகாவது அந்த இயக்கத்தை நிறுத்தியிருக்கவேண்டும். அப்புறமும் 'ஈஸ்வர் அல்லா தேரேநாம்' என்று 'பஜனை' பண்ணினால் முஸ்லீம்களுக்குக் கோபம் வராதா, அப்படிப்பட்ட முட்டாள்கள் என்று தங்களைக் கருதியதைப் பற்றி? ஆகையினால் தேசத்திற்கும் தங்களுக்கும் உள்ள சம்பந்தத்தை அறவே ஒழித்து விட்டார்கள். கிலாஃபத் இயக்கத்தின் முடிவே பாகிஸ்தான். அதனால் பலகோடி மக்கள் உயிரிழந்து, நாடிழந்து, பரதேசியானார்கள். இந்து முஸ்லீம் ஒற்றுமை பிரசாரம் இந்தக் கதியாயிற்று.

காந்தியார் குதர்க்கம்

கதர் என்னும் சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களில் மறறொன்று ஹரிஜன், தாழ்த்

வாழ்க பெரியார்!

தூத்துக்குடி நமது இயக்க ஆதரவாளர் ஆன ஒரு அன்பர் தந்தை பெரியார் அவர்களின் 89-வது ஆண்டு பிறந்ததினவிழா "விடுதலை" சிறப்பு மலருக்கு ரூ. 30- அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்கள்.

நன்றி

பி. எஸ். சண்முகம்
நகர தி. க.
செயற்குழு
உறுப்பினர்

பெ. பால்
தலைவர்
நகர திராவிடர் கழகம்
தூத்துக்குடி.

தப்பட்ட மக்களுக்கு விஷ்ணு பக்தர்களாக ஹரிஜன் எனப் பெயரிடப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் இந்துக்களே அல்ல. இந்து ஆனவர்களிலும் பெரும்பாலோர் சிவ பக்தர்களே ஒழிய வைணவர்கள் அல்ல. இவர்களுக்கு சிவகணங்கள் என்று பெயரிட்டாலாவது பொருந்தும். தான் (காந்தி) வைணவர் ஆதலால், உலகில் எல்லோரும் வைணவர்கள் ஆக வேண்டுமென்றால் பொருந்துமா?

இது கிடக்க; தீண்டாமையைவிட்டால் ஜாதியேது? ஜாதியமைப்பின் ஒருபாகமே பஞ்சமர்கள். ஜாதியை வைத்துக்கொண்டு தீண்டாமையை எதிர்ப்பதாக பாசாங்கு செய்வதுதான் ஹரிஜன இயக்கம்! ஜாதியமைப்பைப் புகழ்ந்து பேசியும், எழுதியும் வந்திருக்கிறார்கள்! மகாத்மாகாந்தி யெழுதியதைத் திரட்டி பல லட்சம் செலவு செய்து மத்திய கவர்மெண்டார் பல வால்யூம்களாக பிரசுரம் செய்து வருகிறார்கள் சாதியைப்பற்றி ஆத்திரத்தோடு காந்தி எழுதியதில் ஒருவரிகூடப் போடவில்லை. இப்படி காந்தியைச் சீர்த்திருத்துகிறார்கள் கவர்மெண்டார்! காந்தியார் சாகிறவரையில் ஜாதியைப் புகழ்ந்து வர்ணாசிரமத் தர்மத்தை திருப்பித் திருப்பி ஆதரித்து வந்தார். ஏனெனில் வர்ணாசிரமத்திற்கு அடிப்படை பகவத் கீதை. பகவான் சொல்லியிருக்கிறார், 'சாதுர்வர்ணம் மாயச்ருஷ்டம்' என்று. இந்தக் கீதையை ஒழித்துத்தான் ஜாதியை ஒழிக்க வேண்டும். இங்கேதான் டாக்டர் அம்பேத்காருக்கும், காந்திக்கும் வித்தியாசம். டாக்டர் அம்பேத்கார் கீதையை ஒழிக்க முற்பட்டார். காந்தி இதற்கு ஒருப்படவில்லை. ஹரிஜனங்கள் வைணவர்கள் ஆயிற்றே! இதுதான் ஹரிஜன இயக்க மோசடி.

மதுவிலக்கு மாய்கை

இந்த செயற்கைச் சூரியனைச் சுற்றி வரும் கோளங்களில் மதுவிலக்கு ஒன்று. இது காந்தியாரின் சிருஷ்டியில்லை திரு ராஜகோபாலாச்சாரியார் சிருஷ்டித்தது! இதைப்பற்றிய சந்தேகங்கள் கேட்டால் தனக்கு இந்த விஷயம் தெரியாது என்றும் திரு. ராஜகோபாலாச்சாரியாரிடம் போய்க் கேட்கும்படியும் காந்தியார் சொல்லிவிடுவார்.

புஸ்ஸிஃபுட் ஜான்ஸன் என்ற ஒருவன் அமெரிக்காவில் மதுவிலக்குப் பிரசாரம் செய்து வந்தான். அவனுடன் தொடர்பு கொண்டார் நமது ராஜகோபாலாச்சாரியார். அதுதான் இந்தப் பிரசாரத்திற்கே காரணம். ஏழைகள் குடித்துக் கெட்டுப் போகிறார்கள் என்பது பொய். மதுவிலக்கு இருக்கிற காலத்தில்தான் ஏழைகள் சாராயத்தைக் குடித்துக் கெட்டுப் போகிறார்கள்

சமீபத்தில் சென்னையில் பல நூற்றுக் கணக்கான ஏழைமக்கள் ஃபிரெஞ்சுப் பாலிஷ் என்ற வார்னீஷைக் குடித்துச் செத்தார்கள். இதில் பலர் பெண்மணிகள். ஏற்கனவே மதுபானம் சட்டப்படி அனுமதித்த காலத்தில் கடையில்தான் குடிக்கவேண்டும். இப்போது ரகசியக் குடி மிஞ்சியிருக்கும் காலத்தில் வீட்டில் கொண்டுவந்து குடிக்கின்றனர். வீட்டில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் குடிக்காமல் இருக்க முடியாது. ஆகவே இந்தச் சட்டத்தினால், குடி, பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் பரவுகிறதே ஒழிய குடி குறையவில்லை.

இந்த அனுபவம் ஏற்பட்ட பின்புதான் அமெரிக்காவில குடி எதிர்ப்பு மசோதாவை ரத்து செய்தார்கள். இந்த மசோதா அமுலில் இருந்தபோது, கள்ளச் சாராயம் விற்பனை அமெரிக்காவில் பெரிய தொழிலாயிற்று. அத்தொழிலில் ஈடுபட்டவர்கள் கோடீஸ்வரர்கள் ஆனார்கள். அவர்களுடைய பணப் பெருக்கத்தினால் அரசாங்கமே நடுங்கி வீழ்ச்சி அடையும் தருவாயில் வந்தது. கள்ளச்சாராய வியாபாரிகள் போலீசுக்கும், ஜட்ஜ்களுக்கும் ஏராளமாக லஞ்சம் வழங்கினார்கள். இந்த லஞ்சம் சர்க்காரிடமிருந்து அவர்களுக்கு வரும் சம்பளத்தைவிட பல மடங்கு அதிகமாயிருந்தது. ஆகவே, போலீசும், ஜட்ஜ்களும் கள்ள வியாபாரிகளின் பக்கம் வேலை செய்தார்களே ஒழிய அரசாங்கத்திற்கு சட்டத்தை நிலை நாட்ட வேலை செய்யவில்லை. இந்தப் பயங்கர நிலை ஏற்பட்டதனால்தான் அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் ஒழிந்தது. அதே நிலைமை இப்போது இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக என்னுடைய கிராமத்தை எடுத்துக் கொள்கிறேன். கிராமத்திற்குப் பக்கம் 5 மைலில் காரைக்கால் உள்ளது. காரைக்காலில் மதுவிலக்குச் சட்டம் இல்லை. ஆகையால், என்னுடைய ஊர்க் குடியான

வர்கள் காரைக்கால் சென்று குடித்து விட்டு வருகிறார்கள்! எல்லையிலுள்ள நமது போலீஸ் அவர்களைக் கைது செய்கிறது. ஏன் என்றால், இவர்கள் ஏன் காரைக்கால் சென்று குடிக்கிறார்கள், உள்ளூரிலேயே கள்ளச்சாராய வியாபாரிகள் போலீசுக்கு லஞ்சம் கொடுத்துக் கொண்டு இருக்கும் போது அந்த வியாபாரத்தை ஆதரிக்காமல் ஏன் பிற ஊர்களில் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் வியாபாரத்தை ஆதரிக்கிறார்கள்? சென்னையில் ஒருவன் பிரஞ்சு பாலீஷைக் குடித்துவிட்டு ஆஸ்பத்திரியில இருந்தவனைக் கேட்டதில் தான் குடிப்பதை ஒப்புக்கொண்டான். தொழிலாளி தினமும் வேலை செய்து வரும் போது குடித்துத்தான் ஆகவேண்டும். குடிப்பதால் சில சமயத்தில் உயிருக்கே ஆபத்து நேரிடும் என்பதை அறிந்திருக்கிறான். சில சமயம் போலீஸ் பிடித்து அவனை ஜெயிலில்போட்டு இருக்கிறார்கள். அபராதம் விதித்திருக்கிறார்கள். இப்படிப் பல தடவைகளில் அவதிப்பட நேர்ந்த போதிலும் அவன் குடித்துத்தான் ஆக வேண்டும். பிடித்து அபராதம் போட்டால் பணம் இருந்தால் கொடுக்கிறான், இல்லையென்றால் சிறைக்குப் போகிறான், எப்படியும் வேலை செய்து திரும்பும்போது உடல் வலிபோக அவனது கஷ்டநிலை மறந்து போக குடிக்கவேண்டியது அவசியமாகிறது. இந்த நிலையில் எவனும் குடிக்காமல் இருக்கமாட்டான், குடிப்பது மனித இயல்பு.

மனித இயல்பை தடுக்க முடியாது

உலகத்தில் எல்லா தேசங்களிலும் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதைத் தடுப்பது மனித இயல்பைத் தடுப்பதாகும், முடியாத காரியமுமாகும். இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத பல ராஜ்யங்களில் கவர்மெண்டார் இந்தச் சட்டத்தை நீக்கி விட்டார்கள், நமது ராஜ்யத்திலும் சடுதியில் நீக்கி பொதுமக்களின் அவதியைத் தடுப்பார்களாக! இதன் மூலம் சர்க்காரின் பணக் கஷ்டமும் ஒரு சிறிதளவாவது நீங்கும்.

'இந்தி' கிரகமும் இங்கிலீஷ் அவசியமும்

இந்தி என்ற மற்றொரு கிரகம் கதர் எனும் சூரியனைச் சுற்றி வருகிறது. இந்த ஆபாசத்தைப் பற்றி தமிழ் நாட்டாருக்கு நான் ஒன்றும் புதிதாய் சொல்லத் தேவையில்லை. தமிழ் பாஷையை எதிர்ப்பது மூடியாத காரியமாகும் என்று கண்டுகொண்டார்கள் ஆகவே நேர்முகமாக தமிழோடு ஹிந்தி போரிட்டால் ஆபத்து. எப்படியாவது இங்கிலீஷை வீழ்த்திவிட்டால், ஹிந்தி அந்த இடத்திற்கு வந்துவிடும் என்று சதி செய்கிறார்கள், தமிழைப் புகழ்கிறார்கள். இதில் தமிழர் ஏமாந்துவிடுவார்கள் என்று கனவு காண்கிறார்கள். இந்த சதிகாரர்கள் ஒரு விஷயத்தை மறக்கக் கூடாது. உலகப் போக்கு என்று ஒன்று இருந்திருக்கிறது. யாரும் எதிர்க்க இயலாது. என்னதான் சட்டங்களைத் திருத்தி அமைத்தாலும் இங்கிலீஷின் வளர்ச்சியைத் தடைப்படுத்த முடியாது. இங்கிலீஷ் ஆட்சி போனபிறகு இந்தியாவில் இங்கிலீஷ் பாஷை பத்திரிகைகளும், புத்தகங்களும் பெருகி வருகின்றன. உத்தரபிரதேசம் முதலிய ஹிந்தி பிராந்தியங்களில் பிள்ளைகள் இங்கிலீஷ் பாஷையில் போதனாமுறை யிருக்கும் பள்ளிகளில் கூட்டம், கூட்டமாகப் போகிறார்கள். ஹிந்திபாஷைப் பள்ளிகள் காலியாகக் கிடக்கின்றன. ஜப்பான், சீனா ரஷ்யா முதலிய தேசங்களில் மாணவர்கள் இங்கிலீஷ் பாஷையை விரும்பிப் படிக்கிறார்கள் காரணம் அந்தப் பாஷையிலுள்ள இயல், இசை, நாடகம் அல்ல இங்கிலீஷுக்குத் தனிப் பெருமை, அந்தப் பாஷையிலுள்ள சயின்ஸ், விஞ்ஞான அறிவு, ஏதோ காரணத்தால் உலக முழுதும் விஞ்ஞான அறிவு இங்கிலீஷ் மூலம் பரவுகிறது, இந்தியாவிலும் அப்படியே. விஞ்ஞானம் வேணடும் என்பவர் இங்கிலீஷ் படிக்கிறார்கள். பழமை விரும்பிகள் மதச் சேற்றில் அகப்பட்டவர்கள் இங்கிலீஷை வெறுக்கிறார்கள்

பெரியாரின் பொறுப்பு

ஆதாரக் கல்வி, சிறிய கைத்தொழில் போன்ற இன்னும் பல கிரகங்கள் கதரைச் சுற்றி வருகின்றன. இவற்றையெல்லாம் பற்றி எழுதுவதென்றால் பல வால்யூம்கள் (Books) எழுதவேண்டும். இவற்றையெல்லாம் பகுத்தறிவு என்னும் ஆயுதங்கொண்டு ஆராய்ச்சி செய்ய வேண்டியது பெரியார் இயக்கத்தின் வேலை. பெரியாரின் ஆயுள் நீடிக்குமானால், அந்த வேலையைப் பெரியாரே செய்து முடிப்பார். இயற்கை சதி செய்யுமானால், அவ்வேலையை பெரியாரின சந்ததியார், பெரியார் தொண்டர்கள் செய்யவேண்டும்.

எனது நிலை

தந்தை பெரியார்

நான் அரசியலில் கலந்துகொள்ளா விடினும், அதாவது அரசியல் சம்பந்தமான பதவிகள் எதிலும் நான் ஈடுபடாமல், வலிய வந்த பதவிகளையெல்லாம் நான் வெறுத்து ஏற்காமல் இருந்து வந்தாலும், பதவி பெற்று ஆட்சி நடத்துகிற அரசாங்கம் ஒவ்வொன்றி லும் நான் சில சுடமைகள் ஏற்று ஆதரித் தும் எதிர்த்தும் வந்திருக்கிறேன். இதற்குக் காரணம் நல்ல ஆட்சி கெட்ட ஆட்சி என்பதைக் கூட அதிகம் சிந்திக்கா மல் பார்ப்பனர் ஆட்சி; பார்ப்பனர் அல்லா தார் (தமிழர்) ஆட்சி என்கின்ற தத்துவத்தை அடிப்படையாய் வைத்து தீவிரமாகக் கலந்து கொண்டு வந்திருக்கின்றேன்.

அரசியல் கட்சித் தொடர்பும் எனது அனுபவமும்

1920ல் நான் காங்கிரசுக்காரனாக இருந்து அன்று இராஜாஜியின் சிஷ்யன் போலவே நான் நடந்துகொண்டிருந்ததால் அவரது கருத்துக்கு இணங்கி ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியை நான் நேரிடையாய் எதிர்க்காவிடி னும் அக்கட்சி தேர்தலில் தோல்வி அடையத் தக்க காரியத்திற்கு உதவிசெய்து வந்தேன்.

அந்தக் காலத்தில் இராஜாஜியிடம் மாத் திரம் அல்லாமல் எல்லாப் பார்ப்பனரிடமும் நெருக்கமாகவே பழக்கம் ஏற்பட்டதாலும் காங்கிரசின் அந்தரங்க கருத்து ஆட்சியை பார்ப்பனர் ஆட்சியாக மாற்ற வேண்டும் ஆக்க வேண்டும் என்பதே என்றும் நான் உண்மையாய் உணர்ந்ததால் காங்கிரசை எதிர்த்தும் ஜஸ்டிஸ்கட்சி ஆட்சியை ஆதரித் தும் தொண்டாற்றினேன். ஜஸ்டிஸ்கட்சி இழந்த ஆட்சியை மறுபடியும் கைப்பற்றவும் பாடுபட்டுச் செய்தேன்.

பார்ப்பனரல்லாதார் நலம் காத்தது ஜஸ்டிஸ் ஆட்சியே!

அந்தக் காலத்தில் 1927 முதல் 1937 வரை ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாத மக்கள் நலனுக்கு நல்ல அளவு நன்மை செய்து கொண்டே வந்தது.

அந்தக் காலத்தில் காந்தியின் பெயரை வைத்துக்கொண்டு சி. பி. சுப்பையா; அண்ணாமலைப்பிள்ளை, உபயதுல்லா, "கோடை இடி" குப்புசாமி, தேவ நாயகய்யா போன்ற தகரப்போணிகளையே படையாக வைத்துக்கொண்டு காங்கிரஸ் (பார்ப்பனர்) ஆடிய ஆட்டத்தின் பயனாய் இன்று 1967-எப்படி காங்கிரஸ் இங்குகவிழ்ந் ததோ அதேபோல் அன்று 1937-ல் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி கவிழ்ந்து விட்டது.

பார்ப்பனரின் கட்டுப்பாடான சூழ்ச்சிகள்

இரண்டிற்கும் முக்கிய காரணம் பார்ப் பனர் மிகமிக கட்டுப்பாடான ஜாதி; சூழ்ச்சியில் தேறிய ஜாதி; இவை இரண்டி லும் பரம்பரையாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அனுபவம் பெற்ற ஜாதி ஆனதனாலாகும்.

தமிழரின் இன உணர்ச்சியற்ற இழிநிலை

பார்ப்பனரல்லாதவர் (தமிழர்) இதற்கு நேர்விரோதம் என்பதோடு, புத்தி மூட நம்பிக்கையால் விளைந்ததனால் கட்டுப்பாடு அறவே கிடையாததும் இன உணர்ச்சியும் கிடையாததுடன் சூழ்ச்சி அறிவு என்பது தங்களுக்குள் சூழ்ச்சி செய்து தம் இனத்தை துணிவாய்க் காட்டிக் கொடுத்து ஒருவனை

ஒருவன் ஒழித்துக் கட்டத்தான் கற்றிருப் பார்களே தவிர, பார்ப்பான் நமது சமுதா யத்திற்கு பிறவி எதிரி என்பதை 10,000த்தில் ஒரு தமிழனுக்குக்கூட புரிந்திருக்காது. புரிந் திருந்தாலும் தன் இனத்தைக் காட்டிக் கொடுத்து பார்ப்பான் காலில் விழுந்து ''ஆசீர்வாதம்'' (பதவி) பெறுவதில் தான் கெட்டிக்காரர்களாக இருப்பார்களே தவிர, தன் இன உணர்ச்சி உள்ளவர்களைக் காண்பதோ கருத்தில்கொள்ளுவதோ அரிது! அரிதரிது!

இந்தக் காரணங்களால் பார்ப்பனர் ஆதிக்கம் ''வெட்ட வெட்ட தழையும்'' மரம் போல் வளர்ந்து கொண்டே வருகிறது. நம் ஆதிக்கம் எவ்வளவு உயர்ந்தாலும் அடிக்கடி சறுக்கி நழுவி கீழ்நிலைக்கே வந்துவிடு கிறது!

தமிழர் நல ஆட்சிக்கே எனது ஆதரவு

என்றாலும் எனனைப் பொறுத்தவரை சரிந்தபோதெல்லாம் அரசியல் கொள்கை என்பவற்றைப்பற்றி சிறிதும் கவலை செலுத்தாமல், இன உணர்ச்சியை முக்கிய மாக வைத்து பார்ப்பனரல்லாதார் ஆட்சி என்றால் அதை பார்ப்பனர்க்கு அடிமைப் பட விடாமல் வலியப் போய் ஆதரித்தே வந்திருக்கிறேன்.

உதாரணத்திற்கு அதிக தூரம் போக வேண்டியதில்லை. இன்றைய தி. மு. க. ஆட்சிக்கு முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சியை 1937 முதல் 1954 வரை நான் எதிர்த்து வந்தவன்; முழுமூச்சாய் ''பலாத் காரத்தில் இறங்குவேன்'' என்று மிரட்டியும் மந்திரிகள் தாராளமாய் நடமாட முடியாத அளவுக்கும் எதிர்த்தும் வந்திருக்கிறேன். அந்தச் சமயங்களில் காமராசர் அவர்களைப் பற்றி எனக்கு அதிக அறிமுகம் கூட இல்லை. அவரோடு நான் கலந்து ஒரு இரண்டு நிமிடம் பேசிய வாய்ப்புக் கூட எனக்கு ஞாபகம் இல்லை. ஆச்சாரியார் (பார்ப்பனர்) ஆட்சி ஒழிந்து தமிழர் கைக்கு ஆட்சிவந்தது என்கின்ற ஒரே எண்ணத்தில் வலிய ஆதரித் தேன். தொடர்ந்து 13 ஆண்டு ஆதரித்தேன்.

நன்றியை எதிர்பாராத ஒத்துழைப்பு

இதற்கு காங்கிரஸ்காரர்களால் (காம ராஜரைத் தவிர்த்து) ஒரு தொண்டரிடம் இருந்து கூட ஒரு பாராட்டுதலையோ ஒரு சொஸ்தி (முகஸ்துதி) வார்த்தையோ கூட நான் நாளதுவரை அடைந்ததில்லை; பெற்ற தில்லை. மாறாக பல அலட்சியக் குறிப்பை வெறுப்புக் குறிப்பை தாராளமாய் பெற்று இருக்கிறேன்!

இன்றைக்கும் காங்கிரஸ்காரர் என் கின்ற முறையில் ஒரு தலைவரோ, மந்திரியோ தொண்டரோ, M. P. யோ M. L. A.வோ எனக்கு நட்போ கலந்துமனம் விட்டுப் பேசும்படியான சலுகையோ கூட கிடையாது. பல அலட்சியங்களையும் அடைந்து வந்திருக்கிறேன். ஆனாலும் காங்கிரசு ஸ்தாபனத்தை காங்கிரஸ் ஆட்சியை பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்கின்ற தன்மையில் சிறிது கூட தவறாமல், நான் தொண்டாற்றி ஆதரவு காட்டி வந்திருக்கிறேன்!

காங்கிரசுக்கு முழு ஆதரவு தந்ததேன்?

காரணம் காங்கிரஸ்ஆட்சி இந்த 14 ஆண்டு காலத்தில் மக்களுக்கு அபார நன்மை செய்திருக்கிறது. நாடு அபார வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது! இதற் குக் காரணம் தலைவர்களும் மந்திரிகளும் தொண்டர்களும் அல்ல என்பது எனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும், அதாவது காமராசர்தான்—காமராசர் ஒருவருடைய முயற்சியேதான்—என்று தெரிந்திருந்தாலும் காங்கிரசுக்கு முழுமரியாதை கொடுத்து ஆதரித்து வந்திருக்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியில் பார்ப்பனரல்லா தார் சமுதாயத்திற்கு கேடாகவும் எதிர்ப்பா கவும் காரியங்கள் செய்யப்பட்ட, வேதனை தரப்பட்ட காலங்களில் கூட தனிப்பட்ட நபரையும் தனிப்பட்ட அதிகாரியையும் மாத் திரம்தான் குறைகூறி இருப்பேனே தவிர கிளர்ச்சி செய்து காட்டி இருப்பேனே தவிர எந்த சந்தர்ப்பத்திலும் காங்கிரசுக்கு ஒரு சிறு அசவுகரியம் ஏற்படும்படிக் கூட நடந் திருக்க மாட்டேன்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் என் எண்ணத்தை, நடத்தையைக் காட்டிக் கொள்ளவே அல்லாமல் இதற்கு ஆக நன்றி பெறுவதற்கு அல்ல.

எப்போதும் நான் நன்றி பெறுவதில் கவலைப்படுவதே இல்லை. அது மனித சமுதாயத்திற்கு அவ்வளவு எளிதான காரிய

மல்ல. துஷ்ட மிருகங்களால் மக்களுக்கோ அல்லது எந்த ஜீவனுக்கோ நன்றி காட்ட முடியுமா ?

அதுபோல்தான் மனித ஜீவனிடம் நன்றி எதிர்பார்ப்பது அறிவில்லாத தன்மையே யாகும். ஏன் எனில் மனித ஜீவன் துஷ்ட ஜெந்துக்கள் இனத்தில் சேர்ந்த ஜீவனாகும்.

மனிதன் சுயநலவாதியே

மனிதன் என்பவன் தன்னலத்திற்கு என்பதாக வாழவேண்டியவனே ஆவான்.

உலகில் எனக்குத் தோன்றிய அளவில் நாய் ஒன்றுதான் நன்றி காட்டும், விசுவாசம் காட்டும் ஜீவன். இதைபற்றி இங்கு அதிக மாக விவரிக்க நான் விரும்பவில்லை.

காங்கிரசு பதவிக்கு வருவதே மேல்

எப்படி இருந்தாலும் காமராஜர் உயி ருள்ளவரை நான் காங்கிரஸ் பதவிக்கு வர வேண்டுமென்றுதான் மனதார ஆசைப் படுகிறேன்.

இன்றைய நிலையில் காங்கிரஸ் ஒன்றி னால்தான் நாட்டில் அமைதியான ஆட்சி நடத்த முடியும். மற்றகட்சிகள் எதுவானா லும் கிளர்ச்சி, கேடு, நாசவேலை, துரோகம் முதலியவைதான் செய்ய முடியும். ஏனெனில் காங்கிரஸ் ஒன்றுதான் இன்று எல்லா இந்தியஸ்தாபனமாக இருக்கிறது. மற்றவை அந்தந்த நாட்டுக்குள் தான் ஆளமுடியும்!

வேறு ஆட்சி வந்தால் தமிழனுக்கு நல் லாட்சியாய் இருந்தால் ஆளட்டும்! வேண் டாம் என்று சொல்லவில்லை.

ஆட்சி மாற்றத்துக்குப்பின் எதிரிகள் (பார்ப்பனர்) நிலை

எப்படியோ இன்று தமிழ்நாட்டில் காங் கிரஸ் தோல்வி அடைந்து மாற்றான்—எதிரி ஆட்சியாகவே ஏற்பட்டுவிட்டது. அந்தப் படியே எதிரிகளும் நினைத்து மகிழ்ச்சி அடைந்தார்கள்; நானும் நினைத்துக் கவலைப்பட்டேன்; துக்கப்பட்டேன்; என்னமோ நமது நல்ல வாய்ப்பின் காரண மாய், எதிரியின் புத்தி இல்லாத தன்மையின் காரணமாய் பெரிதும் தங்களால், தங்கள் முயற்சியால் ஏற்பட்ட ஆட்சியை அனுப விக்க வாய்ப்பு பெறாமல் ஒரே முழுக்கில் மண்ணெடுக்க ஆசைப்பட்டு ஆட்சியாளர் களை சங்கடமான நிலைக்குக் கொண்டுவர ஆசைப்பட்டதால் ஆட்சியாளர் நேர்மை யைக் கடைப்பிடிக்க ஆரம்பித்ததும், ஆட்சி யாளர்களை ஒழிக்கத் திட்டம்போட்டு விட்டார்கள்.

பார்ப்பனரல்லாதார்க்கு நல்வாய்ப்பு

இது நமக்கு ஒரு நல்வாய்ப்பாய் வாய்த் தது என்று கருதி இந்த ஆட்சியை கவிழா மல் செய்து, அது உள்ளவரையிலாவது மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படும்படி செய்ய முடியுமா என்று சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பார்ப்பனர் ஏமாற்றம்

பெரிதும் பார்ப்பனர்முயற்சியால் ஆட்சி தி. மு. க.வுக்கு கிடைக்கும் வாய்ப்பு வந்தது என்றாலும் தி மு க பார்ப்பனர் அல்லா தார் என்பதையும், அதிலும் அவர்கள் பகுத்

வாழ்த்துகிறோம்!

நெற்றிக்குறி இட்டுக் கொள்ளா மலும், கோவிலுக்குப் போகாமலும், ஜாதி மதம் இல்லாமலும் வாழும் தமிழக பகுத்தறிவாளர்கள் "அய்யா" அவர்களின் பிறந்த நாளில் பல்லாண்டு வாழ்க! என வாழ்த்து கிறோம்.

"எதிஸ்ட்"

சுயமரியாதை இயக்கம்

இருப்புலிக்குறிச்சி.

தறிவுவாதிகள் என்பதையும், இவர்கள் பதவிக்கு ஆக பார்ப்பனர் ஆதரவைத் தேடினார்களே ஒழிய பார்ப்பனர்களுக்கு அடிமையாக இருக்க அல்ல என்பதையும் பார்ப்பனர் மறந்து, தடபுடலாக அடிமை கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆட்சியாளர்-பார்ப்பனர் பலப்பரீட்சை

தி. மு. க பார்ப்பனர்களை வாழவைக்க என்று பதவியை விரும்பினவர்கள் அல்லவே! அவர்களுக்கு பதவி வேண்டும். அதுவும் நிலைக்கவேண்டும்; தொல்லை இல்லாமலும் நடைபெறவேண்டும் என்கின்ற எண்ண முடையவர்கள்!

அதோடு தி மு.க.வுக்கு நாட்டில் பார்ப்பனர் செல்வாக்கு எவ்வளவு, பார்ப்பனரல்லாதார் செல்வாக்கு சக்தி எவ்வளவு என்பதும் தெரியும். பார்ப்பனருக்கு பத்திரிகைகள். அனுகூலம்; கோர்ட்டுகள் அனுகூலம்; அயோக்கியத் தன்மை பொருந்திய வக்கீல் கூட்டம் அனுகூலம் உண்டு.

ஆனால் பார்ப்பனரல்லாதவர்களுக்கு இவற்றைப் பற்றிக் கவலைப்படாத மக்கள் ஏராளமானபேர் இருக்கிறார்கள்; கிளர்ச்சிக் காரர்கள் இருக்கிறார்கள்!

பார்ப்பனர்களுக்கு கிளர்ச்சிக்கு ஆட்கள் வேண்டுமானால் பார்ப்பனரல்லாத ஆட்களைக் கொண்டுதானே கிளர்ச்சி செய்ய வேண்டும்? இந்த நிலையில் மோதல் ஏற்பட்டால் யார் வெற்றி அடைய முடியும்? இதை ஆட்சியாளர்கள் சிந்திக்கமாட்டார்களா?

முந்தைய ஆட்சிகள் கவிழ்ந்ததேன்?

1927ல் ''சுயேச்சை'' (காங்கிரஸ்) மந்திரி சபை ஏன் கவிழ்ந்து சுயமரியாதை மந்திரி சபை ஆயிற்று?

1937ல் புயல்போல் வெற்றி பெற்ற காங்கிரஸ் மந்திரிசபை கவிழ்ந்து ஏன் 'பெரியார்' சொல்லுகிறபடி நடக்கிற [ஜஸ்டிஸ்கட்சி] அட்வைசர் மந்திரிசபை ஆயிற்று?

1947ல் காங்கிரஸ் (பிரகாசம்) மந்திரி சபை மாறி இராமசாமி ரெட்டியார் மந்திரி சபை ஆயிற்று?

பிறகு 1954ல் இராஜாஜி மந்திரிசபை மாறி காமராஜர் மந்திரிசபை ஆயிற்று?

பார்ப்பனர் வெற்றி கனவுபோல் மாறிவிட்டது

அப்படிப் போல்தானே 1967லும் பார்ப்பனர் வெற்றிபெற்ற மந்திரிசபை லேபிள் மாற்றுவதுபோல் பார்ப்பனரல்லாதார் மந்திரி சபை ஆகிறது.

இவ்வளவுக்கும் நான் பங்காளியாக சம்பந்தப்பட்டவனுக்கு, பாடுபட்டவனுக்கு இருந்து வந்திருக்கிறேன். என்னாலாயிற்றா? இயற்கையாக ஆயிற்றா? என்பது வேறு விஷயம், ஆனால் இவற்றிற்கு என் பங்கு உண்டு என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

இந்த நிலையில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்னை தி. மு. க. மதித்தாலும் சரி, மதிக்காலிட்டாலும் சரி.

காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் மந்திரி சபை என்னை மதித்ததா? அழைத்ததா? புன்முறுவலாவது காட்டிற்றா?

''பட்டுச் சேலையை இரவல் கொடுத்து விட்டு ஜமக்காளம் எடுத்துக் கொண்டே இரவல் வாங்கியவளின் பின்னால் திரிந்து தொடர்ந்தது'' போல்,

அதாவது பட்டுச்சேலை, அதை இரவல் கேட்டார்கள்; கொடுத்துவிட்டோம்; அதை வாங்கி கட்டிக்கொண்டவள் நினைத்த பக்கத்தில் போய் உட்கார்ந்தாளேயானால் சேலை அழுக்குப் பட்டுப் போகும்; கறைபட்டுப்போகும்; எண்ணெய் பட்டுப்போகும்; கட்டிக்கொண்டவளுக்கு கவலை இல்லை; ஊரார் வீட்டு சேலைதானே என்று அலட்சியமாய் உட்காருவாள். கவலை சேலைக்காரிக்குத் தானே இருக்கும்? ஆதலால் வாங்கிக் கொண்டவளின் பின்னாலேயே சொந்தக் காரி ஒரு ஜமக்காளம் எடுத்துக்கொண்டு அவள் பின்னாலேயே போய் அவள் உட்கார ஆரம்பித்தால் உடைமைக்காரி உடனே ஜமக்காளத்தை விரிப்பாள்.

அதுபோலவே நமது கதி; மந்திரி பதவி தி. மு. கவுக்கு கவுரவம், அதன் பலம் நமக்கு! நம்முடையது!

அது கறைபடாமல் அழுக்குபடாமல் பாதுகாக்க வேண்டிய காரியம் நமக்கு இருக்கிறது; அது எல்லோருக்கும் இருக்காது. உடைமைக்காரி ஆகிய நமக்கு— தி. க. காரர்களுக்குத்தான் இருக்க முடியும்.

மற்றவர்களோ அது நமக்கு வராதோ என்கிற கவலைக்காரர்கள் ஆகத்தானே இருக்கிறார்கள்? பார்ப்பனர் (கம்யூனிஸ்ட்) பார்ப்பனர் (சுதந்தரா) மற்றும் பல பார்ப்பனர் பல கட்சி பேரால் இருக்கிறார்கள்.

கடைசியாக யாராலாவது கவிழ்ந்து மறுபடியும் நம்ம கைக்கு வராதா என்கிற கருத்தில் காங்கிரசு உள்ளது!

நாம் அப்படிப்பட்டவர்கள் அல்லவே! தி. மு. க. கவிழ்வதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. அதுவரையில், மற்றும் அப்புறம் என்ன ஆகும்? இது இரண்டையும் பற்றி "பட்டுச்சேலைக்காரியான" நாம் தானே பாடுபட வேண்டும்? ஆட்சி நமக்குத் தானே சொந்தம்? மற்றவன், சுரண்டின வரை லாபம் என்பவன்தானே? காங்கிரசும் அப்படித்தானே? அது பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனம் அல்லவே—காமராசர்தானே நம்முடையவர், நம்மவர்.

காங்கிரசாருக்கு இன உணர்ச்சி உண்டா?

இதே தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைக்கு பக்தவத்சலனார் வரலாம். சுப்ர மணியம் வரலாம்; காங்கிரசில் டிக்கெட் இல்லை என்ற உடன் சுதந்திரா டிக்கெட் கேட்பவனே வரலாம்; இப்படியானவர்கள் யாருக்காவது பார்ப்பனரல்லாதார் என் கின்ற கவலையோ, உணர்ச்சியோ உண்டா?

லட்சிய விரோதமெனில் எதிர்த்தே தீருவோம்

நமது இலட்சியத்திற்கு எதிர்ப்பு ஏற் பட்டால் நாம் யாரையேனும் என்பது எனது நண்பர்களுக்கும் பொதுமக்களுக்கும் கண் டிப்பாய் சொல்லுகிறேன். வழமைபோல் எப்படிப்பட்ட ஆட்சியானாலும் எதிர்த்தே தீருவோம்!

புத்தன் யார்?

புத்தியைப் பயன்படுத்தும் எவரும் புத்தரே.

—பெரியார்

"புத்தர் என்றால் என்ன?" அறிவு, ஞானம், சத்திய தரிசனம் இவற்றோடு வாழ்க்கையை முன்னேற்றி அழைத்துச் சென்று, தனது ஞானத்திலும் தயை, பொறுமை குணங்களிலும் எவன் அவற்றின் எல்லையை அடைகின்றானோ அவனே புத்தன். உயிரானது தனது முயற்சியால்—எந்த இந்திரனின் தயையாலோ, பிராமணரின் கிருபையாலோ அல்லாமல் தனது சொந்த முயற்சியாலே வாழ்க்கையை அபிவிருத்தி செய்து கொண்டு புத்தனாகிவிடுகிறது. இந்த சாக்கிய புத்தர் அப்படிப் பட்ட புத்தனே. இத்தகைய புத்தர்கள் முன்னரும் இருந்தார்கள். இனியும் இருக்கப் போகிறார்கள்.

".....கௌதமர் தம்முடைய சித்தாந்தங்களை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு ஒவ்வொருவரும், தங்களுடைய அறிவையும் அனுபவத்தையும் உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்று கூறியதாகக் கேள்விப் பட்டேன்."

— பேராசிரியர் ராகுல சாங்கிருத்தியாயன்
'சிந்து முதல் கங்கை வரை' நூலில்.

மார்க்சீயவாதியின் கண்ணோட்டத்தில் பெரியார்

ஏ.எஸ்.கே.அய்யங்கார்

தமிழ்நாட்டின் அரசியல் உலகில் சென்ற 50 ஆண்டுகளுக்குமேல் மக்கள் கவனத்தைப் பல்வேறு முறைகளில் ஆகர்ஷித்து வந்துள்ள பெருமை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைச் சாரும். இந்த 50 ஆண்டுகளில் அவரைத் தூற்றியவர் சில பலர். அவரைக் கண்டு அஞ்சியவர் சிலர். அவரைப் போற்றிப் புகழ்ந்து பின்பற்றி நன்மை அடைந்தவர்கள் லட்சக்கணக்கான மக்கள்.

சிறந்த தேசபக்தர், சமுதாயக் கொடுமைகளை எதிர்த்து விடாப்பிடியாகப் போராடி வரும் அறப்போர் வீரர். மூட நம்பிக்கை, கடவுள் வழிபாடு, சமுதாய சாத்திரங்களுக்கு அடிமை, ஜாதிப் பற்று, மதப் பற்று இவைகள் அனைத்தும் மக்களை மாக்களாக்கி வைத்திருப்பதைக் கண்டுணர்ந்த ஈ. வெ. ரா. தன் வாலிப பருவத்திலேயே இவற்றை கடுமையாக எதிர்த்துப் போர் தொடுத்தார்,

நாஸ்திகர் ஈ. வெ. ரா. நல்லவர் என்பதை அவர் வாழ்க்கையே எடுத்துக் காட்டுகிறது. பகுத்தறிவைப் பறைசாற்றினார் ஈ. வெ. ரா. வேதங்களும், வேதியர்களும், ஓதி வந்த மடைமையைப் போக்கி, தமிழனுக்குத் தன்னம்பிக்கையையும் தன்மானத்தையும் ஊட்டி, அறிவையும் ஆற்றலையும் அள்ளி அள்ளித் தந்த பெருமை பெரியார் ஈ. வெ. ரா. வைச் சாரும்.

தொல்லைகளைத் தொலைத்து, அடிமைத் தனத்தை அறவே ஒழித்து புதிய தோர் சமுதாயத்தை சமைத்து ஆட்சியில் அமர்ந்த ரஷியத் தொழிலாளி வர்க்கத்தைப் போற்றிப் புகழ்ந்தவர் பெரியார் ஈ. வெ. ரா. 1931-ம் ஆண்டு சோவியத் யூனியனுக்கும் மற்றும் சில மேல்நாடுகளுக்கும சென்று வந்து, தமிழக மக்களுக்கு சோவியத் ஆட்சியின் சிறப்பை எடுத்துரைத்தார்.

பொருள் முதல் வாதந்தான் (மெட்டீரியலிசம்) உண்மையை அப்படியே எடுத்துக் கூறுகிறது என்பதை நன்கு உணர்ந்தார். மக்களின் மூடநம்பிக்கைகளைக் கண்டு ஆத்திரமடைந்தார். மடமையைப் போக்க எளிதில் மக்களைப் புரியவைக்க பிள்ளையாரை உடைத்தார். இதைக் கண்டு சில பலர் கோபாவேசம் கொண்டனர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதும், பொய், புனைசுருட்டு, ஏமாற்று, லஞ்சம், ஊழல், குடியைக்கெடுப்பது இவைஅனைத்தையும் கொண்ட இந்த ஆஸ்திகர்கள், கடவுள் வழிபாடும், சமயநம்பிக்கையும் போர்வையாகக் கொண்டுள்ளனர் என்பதை பெரியார் ஈ, வெ. ரா. அம்பலப்படுத்தினார்.

பெரியார் ஈ. வெ. ராவின் வாழ்க்கைச் சரிதம் வானவில் போல பிர்மாண்டமானதும், தமிழக வானத்தை ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை எட்டிப் பிடிப்பதுமாகவும், வானவில்லின் வர்ணங்கள்போல் உள்ளத்தை கவருவதாகவும் உள்ளது.

1949-ஆம் ஆண்டில் மணியம்மையாரை மணம் செய்து கொண்டார். இது ஒரு பெரிய தவறாகக் கருதப்பட்டு, திரு. சி. என். ஏ. யும் மற்றும் சிலரும் தி. க. விலிருந்து பிரிந்து தி. மு கவை நிறுவினர்.

பிரிட்டிஷ் தத்துவஞானி பெர்ட்ராண்டு ரசல் 80-வது வயதில் நான்காவது முறை

யாக பதினெட்டே வயதுள்ள தன் ''செக் ரெட்டரி''யை திருமணம் செய்து கொண் டதை, உலகில் யாருமே தவறென்று கூற வில்லை; ஏதோ அடாத காரியம் செய்துவிட் டது போல் அவரை யாரும் பகிஷ்கரித்ததும் கிடையாது.

பெரியார் 1919--ல் காங்கிரசில் சேர்ந்து இருமுறை காந்திஜி தலைமையில் நடை பெற்ற ஒத்துழையாமை போராட்டங்களில் பங்கெடுத்து சிறை சென்றார். தான் கதர் உடுத்தியதோடு மட்டுமின்றி தன் குடும்பத் தார் அனைவரையுமே கதர் உடுத்தும்படிச் செய்தார்.

1925-ம் ஆண்டில் காங்கிரசிலிருந்து வெளியேறி, ''குடி அரசு'' பத்திரிகையை நடத்தி வந்தார். இப்பத்திரிகை அக்காலத் தில் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்தது. சுயமரியாதை இயக்கத்தின் சமூக சீர்திருத் தப் பிரசாரத்தைத் தீவிரமாக இப்பத்திரி கைச் செய்து வந்தது, ஜாதி ஒழிப்பு, மூடப் பழக்கவழக்கங்களை ஈவிரக்கமின்றி அம்ப லப் படுத்துவது, மதஒழிப்பு இப்பத்திரிகை யின் தலையாய கடமையாக இருந்தது. பெரி யாரின் கருத்துக்கள் எண்ணற்ற வாலிபர் கள், தொழிலாளர்களை அப்படியே கவர்ந் தன.

1928-ம் ஆண்டில் தென்இந்திய ரயில்வே தொழிலாளர்களின் மாபெரும் பொதுவேலை நிறுத்தம், தலைவர்கள் தோழர்கள் ம. சிங்காரவேலு, டி. கிருஷ்ண சாமிப்பிள்ளை (ரயில்வே தொழிற்சங்கத் தின் தலைவர்), முகந்தலால் சர்க்கார் (ஏஐ டி.யு.சி.யின் பொதுச் செயலர்) தலைமையில் தீவிரமாக நடைபெற்றது, பிரிட்டிஷ் ஏகாதி பத்திய ஆட்சியாளர் நல்வாழ்விற்காகப் போராடிய தொழிலாளர்கள் மீது கோர அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டனர். பெரியார் ஈ.வெ.ரா. அன்று ரயில்வே தொழிலாளர்போராட்டத்தை ஆதரித்த தற்காக, பெரியாரை பிரிட்டிஷ் சர்க்கார் கைது செய்து சிறையிலடைத்தது. தலைவர் கள் ம. சிங்காரவேலு, டி. கிருஷ்ணசாமிப் பிள்ளை, முகுந்தலால் சர்க்கார், ரயில்வே தொழிற்சங்க நிர்வாகிகள் அனைவர்களை யும் பிரிட்டிஷ் சர்க்கார் கைது செய்து, திருச்சி மத்தியசிறையில் அடைத்தது. ரயில்வே சதிவழக்கு ஒன்றை ஜோடித்து அனைவருக்கும் கொடிய தண்டனையை அனுபவிக்கச் செய்தது. இத்தலைவர்களைக் கொடிய முறையில் தண்டித்த திருச்சி செஷன்ஸ் ஜட்ஜை, அன்று 'சென்னை வெள்ளை கவர்னர் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாக நியமித்தார்.

''எந்த ஒரு காரியத்தையும் மனிதன் அவனுடைய பெருநாளையப் பழக்க வழக் கம், நம்பிக்கை ஆகியவைகளுக்கு விரோத மாக ஆக்க முயற்சித்தால் அதைப்புரட்சி என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் அனுகூல மடைகின்றவர்கள் அதை நன்மை யான காரியம் என்று சொல்லி இகழவும், சரி யான முறையில் எதிர்க்கச் சக்தி இல்லாத வர்கள் தப்பர்த்தம் கற்பித்தும் மக்களுக்குள் புகுத்தி அதன்மூலம் எதிர்ப்பு ஏற்படச் செய் வார்கள். ஆனால் மனித சமூகத்தில் புரட்சி என்பது மிகச் சாதாரணமாய் இருந்து, காரியத்தில் நடைபெற்றுத்தான் வருகின்றது.''

''மனிதனுக்கு முற்போக்கு அறிவும் அக் கறையும் ஏற்பட ஏற்பட, புதிய புதிய உணர்ச்சிகள் தோன்றத் தோன்ற மாறுதல் கள் என்ற புரட்சிகள் உண்டாகிக் கொண் டேதான் இருக்கும்,'' என்று புரட்சியைப் பற்றி பெரியார் கூறுகின்றார்.

பெரியார் ஈ. வெ ரா. அவர்கள் 1931ம் ஆண்டு சோவியத் யூனியனுக்குச் சென்று சோவியத் ஆட்சியின் மகத்தான சாதனை களை நேரில் கண்டறிந்தார். பெரியாருடன் தோழர் எஸ். ராமனாதன் அவர்களும் சென் றிருந்தார்.

பெரியார் ஈ வெ. ரா. இங்கிலாந்திற்குச் சென்றிருந்தபோது, கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் சக்லத்வாலாவைக் கண்டு பேசி னார், பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் லான்ஸ்பரியைக்கண்டு பேசினார். தொழி லாளர் கூட்டத்தில் பெரியார் லண்டனில் பேசினார்.

லண்டனில் தோழர் சக்லத்வாலா எம். பி. அன்பளிப்பாக பெரியாருக்குக் கொடுத்த சோவியத்யூனியன் 5 ஆண்டு திட்ட ஆங் கில நூலை, பெரியார் தமிழ்நாட்டிற்கு வந்த பிறகு தமிழாக்கம் செய்து வெளியிட் டார். நவம்பர் சோஷலிஸ்ட் புரட்சியின் 50-வது ஆண்டு விழாவை உலகம் பூராவும் கொண்டாட தயாரிப்பு நடைபெறும் இன்று, தமிழ் நாட்டில் 35 ஆண்டுகட்குமுன் சோவி யத் 5 ஆண்டு திட்டம் பற்றி தமிழில் பெரி யார் உதவியோடு அன்று வெளிவந்த புத்த கத்தை நாம் அனைவரும் இன்று படித்துப்

பார்ப்பது நல்லது, சோவியத் 5 ஆண்டு திட்டம்பற்றிய நூலை தமிழில் முதலில் வெளியிட்ட பெரியாரை நாம் வாழ்த்தக் கடமைப் பட்டுள்ளோம்.

சோவியத் யூனியனிலிருந்து பெரியார் தமிழ்நாட்டிற்கு 1932ல் வந்த பிறகு, தமிழ கமெங்கும் சோவியத் சாதனைகளையும், சோஷலிஸ்ட் கொள்கைகளையும் விளக்கி, அன்று பெரியார் ஈ. வெ. ரா., ம. சிங்கார வேலு, ப. ஜீவா முழங்கியுள்ளதை இன்று தமிழக மக்களுக்கு பெரியார் பிறந்ததினத்தை ஒட்டி சுட்டிக் காட்டவேண்டும்.

35 ஆண்டுகளுக்கு முன்னர் ''குடி அரசு'' பத்திரிகை சோஷலிசம் பற்றி தாராளமாகவும், ஏராளமாகவும் கட்டுரை களை வெளியிட்டு தமிழகவாலிபர்களையும், தொழிலாளர்களையும் பெரிதும் ஆகர்ஷித் ததை இன்று பெரியார் பிறந்ததினத்தில் சுட்டிக் காட்டுகிறோம்.

1932-ல் பெரியார் ஈ வெ. ரா. அவர்கள் ஈரோட்டில் தன் இல்லத்தில் ஒரு கூட்டத் தைக் கூட்டினார். தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் இக் கூட்டத்தில் பங்கெடுத்து சுய மரியாதை–சமதர்மத் திட்டத்தை விளக்கிப் பேசினார். இதை சிலர் எதிர்த்து சுயமரி யாதை இயக்கம் சமூக சீர்திருத்த இயக்க மாகத்தான் இருக்கவேண்டுமென்று பேசி னார்கள். தோழர் ம. சிங்காரவேலு அவர் கள் வெற்றி பெற்றார்.

1933-ல் கோவை ஜில்லா சுயமரியாதை சமதர்ம மகாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் திரு. வி. க, லெனின் படத்தைத் திறந்து வைத்து பின்வருமாறு கூறினார்.

''சுயமரியாதை இயக்கத்திற்கு நாயக்கர் அவர்கள் தந்தை ஆவார். நான் தாய் ஆவேன். நாங்கள் இருவரும் மாதவரம் சமரச சன்மார்க்கக் கூட்டத்தில் சேர்ந்து பெற்ற பிள்ளையே சுயமரியாதையாகும். அக்குழந்தை தாயுடன் வாழாது இதுகாறும் தந்தையுடன் சேர்ந்து வாழ்கிறது. அதன் வளர்ச்சியைக் கண்டு யான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்''.

இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும் என்று தலையங்கம் எழுதிய ஈ.வெ. ரா. சிறையில் அடைக்கப்பட்டார். வழக்கு மன்றத்தில் ஈ. வெ. ரா. முழங்கி னார்.

''நான் 7, 8 வருடகாலமாய் சுயமரி யாதை சமதர்மப் பிரசாரம் செய்து வரு கிறேன். சமூக வாழ்வீலும் பொருளாதாரத் திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழ வேண்டும் என்பது அப்பிரசாரத்தின் முக் கியத்துவமாகும்.

இப்படிப்பட்ட ஒரு மாறுதல் உண்டாக ஆசைப்படுவதும், அதற்காக பலாத்காரம் துவேஷம் இம்சை ஆகியவைகள் இல்லா மல் பிரசாரம செய்வதும் குற்றமாகாது.

இந்நிலையில் சர்க்கார் என்னைத்தண் டித்தாலும் சரி, அல்லது இந்த பிரசாரத் துக்கும் போதிய ஆதாரமில்லை என்று நியாயத்தையுத் சட்டத்தையும் லட்சியம் செய்து வழக்கைத் தள்ளிவிட்டாலும் சரி இப்படிப்பட்ட அடக்குமுறையை வரவேற்கு மாறு எனது தோழர்களுக்கு வழிகாட்ட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்,''

இதற்கு வெள்ளையன் ஆட்சி கொடுத்த பரிசு, ஈ வெ. ரா. விற்கு 9 மாத சிறைதண் டனையும், ரூ 300 அபராதமும், கட்டத் தவறினால் மீண்டும் ஒரு மாதம சிறை தண் டனை. ஈ வெ. ரா. வின் பெயரும் புகழும் வானை எட்டிற்று. மக்களின் ஆதரவிறகு எல்லையே இல்லை. காங்கிரஸ்காரர்களும் ஜஸ்டிஸ் கட்சியினரும் ஈ. வெ. ராவை தங் கள் சொத்தாக்கிக் கொள்ள முயன் றனர். ஈரோடு திட்டத்தை ஏற்றால் சேர்ந்து வேலை செய்வதாகக்கூறி, இத் திட்டத்தை காங்கிரஸ், ஜஸ்டிஸ் கட்சி களுக்கு பெரியார் ஈ. வெ. ரா. அனுப்பி வைத்தார்.

இத்திட்டத்தை தமிழ் நாடு காங்கிரஸ் மகாத்மாகாந்திஜிக்கு அனுப்பி வைத்தது. காந்திஜி இத்திட்டத்தை ஏற்க மறுத்து விட் டார்.

ஜஸ்டிஸ் கட்சி இத்திட்டத்தைஏற்றுக் கொள்வதாகக் கூறிற்று, எனவே, ஈ. வெ ரா. அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக் கத் தொடங்கினார்.

இப்படி அவர், அவரது கொள் கையை ஏற்றுக் கொள்ளும் எவரையும் ஆத ரிப்பார். தோழர், ஜீவா அவர்களது சிலை திறப்பு விழாவின்போது அவர் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு கூறிய அறிவுரைகள் மிகவும் சிந்திக்க வேண்டியவைகள்.

மலையின் பெருமை தள்ளி நின்று பார்ப்பவருக்கே புரியும்! தள்ளிநிற்பவர் களும் பார்த்துப் பாராட்ட வேண்டியது அவ ரது தொண்டு!

பெரியாரும் தாகூரும்!

பிவியார்

பகுத்தறிவு இயக்க மூலவர், தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கும் உலக இலக்கியச் சிறப்புச்சான்றாம் நோபிள் பரிசு இலட்சம் பொன்பெற்ற வங்கநாட்டு மாமேதை. புதுமைநாடக இயக்க மூலவர் கவியரசர் இரவீந்திரநாதத்தாகூர் அவர் களுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு என் றிடின் வியப்பும்திகைப்பும் எய்திடலாம், பல் லோரும்—"தாடியிலா!"—என்றும் நகைச் சுவையுடன் வினவிடலாம். அறிவியக்கம், இலக்கிய இசை நாடகம், விஞ்ஞானக் கலை களின் மாமேதைகளில், ஏறக்குறைய அனை வோருமே வெண்தாடி வேந்தர்களே! அவர் தம் அறிவொளியின் வேள்த்தோற்ற கதிர்களோ; வெள்ளி ஒளிதாடி என்று எண்ணச்செய்திடும்,

பெரியார் அவர்களுக்கும் கவியரசர் தாகூர் அவர்களுக்கும் இடையே, அறி வொளி, வெண்தாடி ஒற்றுமையும் மாத்திர மல்லாமல்; மத சமுதாய சீர்திருத்த, கொள்கை கோட்பாடுகளிலே, மூடநம்பிக் கைகள் சடங்குகள் ஆகியவற்றைச் சாடு வதிலே, பழைமை விஷப் பாசியை அகற்று வதிலே. ஒருவருக்கொருவர் இளப்பமான வர்களல்லர்—

பெரியாரவர்கள் தமிழக கருத்து விளக் கக்கட்டுரைகள். கருத்துரைகளிலே, இவ் வகைத்தொகுப்பு நூல்களிலே இத்தகைய சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்டுவந் துள்ளார்—வெளியிட்டுவருகிறார். இயக்கம் தொடர்ந்து முதல் பொன்விழா ஆண்டான இதுவரையிலும்-தமது தொன்னூறாவது வயது தூவக்கமான இன்போதும்.

கவியரசர் தாகூர் தமது கட்டுரைகளில் இலக்கிய சொற்பொழிவுகளில் மாத்திரமல் லாமல் தாம் தொகுத்த பாட்டுகளிலும் அமைந்து நடித்த புதுமை நாடகங்களிலும் பெரியாரவர்களின் பகுத்தறிவுக் கொள்கை கைகளுக்கு ஆதரவான கருத்துக்களை அள்ளித் தெளித்திருக்கிறார்.

மக்களிடையே, பிறவியில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் சாதி இனவேற்றுமைகள் கிடையவே கிடையாது; கல்வியறிவும் அவ் வழியில் பகுத்தறிவும் பெற்றிடில் அனை வோர் வாழ்க்கையும் உயர்ந்திடும். சிறப் பொளி பெற்றிடும் என்பதே இருபெரியார் களின் இணை மனதாள ஒருமித்த கோட் பாடு.

"பாமரராய் நலிவுற்ற
ஊமையராய் வாழும்மக்கள்
வாய்திறந்து பேசச் செய்திடும்
சீர்திருத்தத் தொண்டில் நான்
நாள் என்றும் ஈடுபட வேண்டும்
சோர்வுற்று வாடி வதங்கி
செயலற்று—மனம் உடைந்து
ஏங்கிப் கிடப்போரின் உள்ளத்தில்.
வாழ்க்கையில் நன்னம்பிக்கை
ஊட்டிடல் வேண்டும் என்றும்"

—என கவியரசர் "எத்தனை மாற்றிடு வாய்" என்ற பாவில் தெரிவித்துக் கொண் டுள்ளார்.

இவ்விதம் நலிவுற்று, சுரணையற்று ஊமையராய் வாழ்ந்திடும் மக்கள் வாய் திறந்து தத்தமது கருத்துக்களை வெளியிட பேசிடச் செய்யவே—அவர்களது மடமையை நீக்கிட பகுத்தறிவொளி அளித்திடவே பெரியாரவர்களும் பகுத்தறிவு இயக்கத் தைத் தோற்றுவித்தார்; அறிவொளிக் கதிர வனாகி, தென்னகம் எங்கும் இத்தகைய பகுத்தறிவொளியை பரப்பினார்—வீ சி னார்—பரப்பி வருகிறார்.

நல்ல புதுமை எது?

'பொருளாதார சமுதாய வாழ்க்கைத் துறையில் புதிய புதிய சாதனைகள் செய் தால் மாத்திரம் வாழ உறுதியான வழி அமைந்து விடாது—நல்வாழ்வு மலர்ந்து விடாது. சிந்தனைத் துறையிலும் காலத்துக் கேற்ற புதுமைகள் மலர்ந்தாக வேண்டும்" என்பது இந்த இரு மேதைகளின் நற்பலன் தரும் அறிவொளி வழிதுறை.

இவ்விதம் சிந்தனையில் புதுமைகள் மலர்ந்திடில், பேச்சில் எழுதிய செயலில் புதுமைகள் மலர்ந்திடும். உறுதியான நற் பலன் சேர்த்திடும். பழமைப்பாசி பிடித்த எண்ணப் பாங்கில் புதுமைகள் கண்டிடிலோ, செய்திடிலோ, பழையக் கட்டிட கட்டுக் கோப்புக்குப் புது அலங்காரம் செய்ததுபோல அலங்கோல மாகிவரும்—காலத்துக்கு ஏற்ற—கைமேல் பலன்தரும் வெற்றிகிட்டாது.

புதுமை மலர்ச்சி சிந்தனையால்தான் ஒவ்வொருவரின் வாழ்க்கையின் உண்மை நோக்கம், குறிக்கோள்; அதற்கான நடை முறைகள் ஆகியவற்றை ஆய்ந்தறிந்திட, அவ்வழி செயல்பட, பலன்பெற நல்வாழ்வு, செல்வவாழ்வு—மகிழ்வாழ்வு பெற்றிட வியலும்.

நமது சிந்தனையங்கம் பகுத்தறிவில் விரிவடைய விரிவடைய நமது உள்ளக் கடலும் செயல் திட்டங்களில் நிறைவு காணும்.

எல்லாம் ஆண்டவன் செயலா?

"எல்லாம் ஆண்டவன் செயல்' என்ற பகுதறிவுக்கு ஒவ்வாத சோம்பேறி வாதத்தை, கவியரசர் வன்மையாக சாடுகிறார். இதை விட்டொதுக்கும்படி அறிவுறுத்துகிறார்..." இந்த எண்ணப் பகுத்தறிவு மழுங்கிய—மழுக்கப்பட்ட குருட்டு நம்பிக்கையால். மடமை எண்ணத்தால் உண்டாகிறது. இன்று மாமக்களின் மனம் இத்தகைய குருட்டாம் போக்கு மூடநம்பிக்கை பழக்கவழக்க அடிமைத்தளையில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது—அறிவுக்கேற்ற செயலில் ஈடுபட முடியாதபடி மனம் முடக்கு நோய்பட்டுத் தவிக்கிறது—" என்றுக காட்டி 'இதைவிட மானக் கேடானது வேறு எது இருக்க முடியும்?" என்று வேதனை வினாவும் எழுப்புகிறார்.

"இவ்விதம் பல யுகங்களாக நாம் செய்து வந்த தவறுகள் நம்மீது பெரும் கனச்சுமையாகி, நாம் மேலடைய முடியாதபடி, நம்மை அழுத்துகிறது. இதனால் ஆண்மை வீரவுணர்ச்சி, அறிவெழுச்சி குன்றிவிட்டது. பகுத்தறியும் சக்தியும் கூட நம்மை விட்டு அகன்றுவிட்டது. இந்த மடமை நம்பிக்கைகளால்—அவ்வழிச் செயல்களால், பல நூற்றாண்டு நூற்றாண்டாக, குவிந்திருக்கும்

போன்: நெ. 30

தந்தை பெரியார் பல்லாண்டு வாழ்க!

நவின நாகரிகத்திற்கு ஏற்ற புதுமுறையான குளிர்ச்சி
கண்ணாடிகளுக்கும், உயர்ந்த சாலஸ்திர
கண்ணாடிகளுக்கும் சிறந்த இடம்

பெரியார் தொண்டன்: ப. கனகலிங்கம்
76-78, ஜவகர்லால் தெரு,
பாண்டிச்சேரி.

குப்பைக்கூளங்களை எல்லாம், உறுதியுடன் ஊக்கத்துடன் ஒதுக்கித் தள்ளவேண்டிய நாள் வந்து விட்டது'' என்று வலியுறுத்திக் கூறுகிறார்; பெரியார் அவர்களைப்போன்றே


இப்படி ஏன் சொல்கிறார் இந்த கவிப் பெரியார் இரவீந்தரரும்?

''நாம் உலகொப்ப முன்னேறாதபடி தடுக்கும் பழமை நம்மைப் பின்னுக்குப் பிடித்து இழுக்கும் பது, நாம் பழைமையில் கொண்டுள்ள மோகமேயாகும் இன்றும்கூட அந்தப் பழைமைமோகம் என்ற 'மோகினிப் பேய்' நம்மை மயக்கி நமது இப்போதைய வாழ்க்கையை மாத்திரமல்லாமல் நமது எதிர்கால வாழ்க்கையையும் சீர்குலைக்கப் பார்க்கிறது'' என்று சுட்டிக்காட்டுகிறார்.

'பழைமை என்னும் துரும்பு தூசு சருகு குப்பைக் கூளங்கள் பறந்து பறந்து வருகின்றன. புதுமையுகக் கதிரவன் தோன்றுவதை நாம் காணவொட்டாது நமது அறிவுக்கண்களை மறைக்கின்றனவே! புதுப்புது முயற்சிகளில் ஆர்வம் கொண்டு, இளமையுடன் விளங்கச் செய்யும் சக்திவாய்ந்த நன்னெறிப் பார்வைக்கு திரையிடுகின்றதே. இந்த அறிவுமலர்ச்சியுகத்திலேனும், இனிமேலாயினும் அந்தப் பழையதுகள் சுமையை. பரிவு அனுதாபம் காட்டாது, தூக்கித் தூர எறியவேண்டும். இந்த நிலைமையிலிருந்து நாம் விடுதலை பெற வேண்டும். அப்போதுதான் நாம் நிலையான உறுதிப்பாடுடன் முன்னேறவியலும். சிறந்த மனிதப் பண்பாடுகளுடன் இணைந்து வாழமுடியும்.

இதுநாள்வரை நாம் இந்த பழைமை சுமையைத் தாங்கி தழுவிக் கிடந்து முற்போக்கு நல்வாழ்வுலகின் தலையிறக்கத்துடன் வாழ்ந்தது போதும். இனிமேலாயினும் நல்ல மனிதப்பண்புகள் கொள்ள வேண்டும். எதிர்ப்பையும் சாவையும் வெல்லும் ஆற்றல் படைத்து, எப்போதும் விழிப்புடன், என்றென்றும் புதுமையை நாடிடும் சக்தியாகும் பகுத்தறிவு—புதுமை ஆர்வசக்தி அறிவொளிக் கதிரவனை வீசி, மெய்மைக்கு வழிகாட்டுவது இதுவேயாகும்'' என்றும் நல்லறிவு துவக்க விளக்கம் அளித்திருக்கிறார்.

ஒவ்வொரு யுகத்திலும் புதிய புதிய துறைகளில் ஈடுபட்டு, செயல்பட்டு வெற்றிச் சங்கு முழக்கி, புதுமையின் ஒலி எங்கெங்கும் ஒலித்திடச் செய்வதுதான் அறிவுபடைத்த



தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகுதொழும்
மனக் குகையில் சிறுத்தை எழும்
அவர்தாம் பெரியார்!

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

மனிதப்பண்பு என்றும் தாகூர் அவர்கள் நன்மதி கூறியுள்ளார்.

இதற்கான சுலபமான சாதனை யாது?

யுக மாறுதலுக்கேற்ப, மக்கள் மனப்பாங்கும் மாறச் செய்தால், தீராத—தீர்க்க முடியாத பிரச்னை எதுவுமே இல்லை. அய்ரோப்பிய நாடுகள் விஞ்ஞான ரீதியில், இயற்கை உண்மைகளை கண்டன, தமது அறிவை, புதுமைத் துறைகளில் விரிவாக்கிக்கொண்டன. மத்தியகாலப் பிற்போக்கு நிலைமையிலிருந்தும், இக்கால முற்போக்கு நிலைமையை அடைந்துள்ளன. இது போன்றே நாமும் பழைமை—மதத்துறை கட்டுதிட்டங்கள் மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிலிருந்து மீண்டாகவேண்டும். இத்தகைய மீட்சியுகம் மலர்ந்திடில். மதச்சமுதாய, வகுப்பு வேற்றுமைச் சச்சரவுகள் நீங்கிவிடும்—நாட்டில் எல்லோரிடையேயும் சகோதர மனப்பாங்கும் ஒற்றுமையும் ஒருமைப்பாடும், நாட்டுப் பொதுசெயல்களும் எளிதில் அமையும். இந்த முயற்சிகளும் விரைவில் பலனளிக்கும்—வெற்றி கூட்டுவிக்கும் என்றும் நமது ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும், சுலபமான, நம்பகமான, உறுதியான வழி அமைத்துத் தந்தும் இந்த பகுத்தறிவு—மடமை ஒழிப்புப்பணியை கிராமங்களில் முதன்மையாக பரந்த அளவில் செய்தாக வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் பெரியார்!

இறை வீழ் படலம்!

திருவாரூர் கே.தங்கராசு

அம்மா மன்னனை—"குன்றெடுத்தப் பெருந் தோளான்-கொடை கொடுக்கும் கையான்"

"வெஞ்சமரில் சாதல் வர நேர்ந்திடினும் சூழ்ச்சி விரும்பாத பெருந்தகையான்"

"என் தமிழர் மூதாதை! என் தமிழர் பெருமான் இராவணன் காண்!"

என ஏற்றி இசைத் தமிழ்ப் பாப் புனைந்து சென்றுள்ளார், இன்று தமிழரி தம் இதயமெங்கும் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் புரட்சிப்பாவேந்தர் பாரதிதாசனார்!

இராம காதையை—அஃது எம்மொழியில் யாவரால் இயற்றப் பெற்றதாயினும் உய்த்து உணர்வோர் அனைவரும் அறிவர் இராவணனது ஏற்றத்தை—எழிலை-அன்பினை—அறத்தை-அனைத்தையுமே!

கம்பனது காவியத்திலுங்கூட கார்மூடிய கதிரோனுக் கொப்பாக அப்பெருமன்னனது ஏற்றம் புலர்ந்த வண்ணமேயுளது!

அத்தகு சூழ்ச்சி விரும்பாத பெருந்தகையை வீழ்த்த சூழ்ச்சியினையே தேடுகின்றனர் தேவர்களும் அவர்தம் தலைவர்களும்.

அறவழி நின்று-அனைத்துயிர் சமமென்றெண்ணி-கொலை வெறி தவிர்த்து—கொடும் வேள்வி தடுத்திட்ட அக்கோமானை;

குடிவெறிமிகுத்து-கொலைவேள்வி நடத்தி-பழிமிகக் கொண்ட பாதகர்களாம் ஆரியர்கள்;

தங்களது வழமைபோல வஞ்சம்புரிந்து தீர்த்திருக்கின்றனர்!

இப்பெரும் பழியினை மறைத்திட அப்பெருமானைப் பெண்பித்தனென்றும்-இரக்கமென்ற ஒரு பொருள் இல்லாத அரக்கனென்றும் ஏசல் மொழி பல கூறி இழித்துள்ளனர்!

சிந்தனை அறிவற்ற நம் முழு மக்களும் ஆரியர்தம் இக்கூற்றினை அப்படியே ஏற்றுக் கொண்டு எதிரிகள் தம் சூழ்ச்சி வலையில் மயங்கிக் கிடக்கின்றனர் இன்னமும்!

அத்தகு மாக்களது அகக் கண் திறப்பான் வேண்டி இவண் கம்பனது காவியத்திலிருந்தும், வால்மீகியினது மூலத்திலிருந்தும் சில எடுத்துக்காட்டுகளைத் தர விழைகின்றேன்!

"சீதா-லோகமாதா-இலட்சுமி தேவியின் அம்சம் அத்தனைக்கும் மேலாக அன்னியது பாரியை (மனைவி) அவளை சிறையெடுத்துச் சென்று விட்டான் அப்பாதகன்!

"அனுமன் தூதனாகவந்து நீதிகளை யுரைத்தும் உடன் பிறந்த விபீஷணன் நியாயங்களை கூறு கூறாக அலசி யெடுத்துச் சொல்லியும் அறவழிநிற்க மறுத்து விட்டான்—அன்பிற்கே அவனது இதயத்தில் இடமில்லாது செய்து விட்டான். ஆகவேதான் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் அவதாரமாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி அக்கொடியவனைக் கொன்றார்"

என்பதாக கிளிப்பிள்ளைகளைப்போல பலர் இன்னமும் சொல்லித்திரிகின்றனர்!

அவர்கள் எல்லாம் உணரவேண்டும்- சீதையை இராவணன் சிறையெடுத்தக் ''குற்றத்துக்காக'' அல்ல இராமன் அவனைக் கொன்றது- இராவணனைக்கொல்லவேண்டுமென்பதற்காகவே 'நாராயணன்' இராமனர்கப் பிறக்கின்றான்!

இதோ கம்ப இராமாயணம் பாலகாண்டம். திரு அவதாரப் படலம்-200வது பாடல்

''மச ரத மனையவர்
வரமும் வாழ்வுமோர்
நிச ரத கணைகளால்
நீறு செய்ய யாம்
கச ரத துரக மாக்
கடல் கொள் காவலன்
தசரதன் மதலையா
வருதுந் தாரணி''

''பொய்த் தேருக்கு ஒப்பான ஆற்றலும் வரமும் வாழ்வும் படைத்த இராவணாதியர்களை எனது சத்தியமாகிய பாணங்களால் சாம்பலாக்க தசரதனுக்குப் பிள்ளையாகப் பிறந்து உலகிற்கு வருகின்றேன்; என்று தன்னை வணங்கிய தேவர்களுக்கு விஷ்ணு ஆறுதல் கூறுகின்றான்!

அதன்படியே பிறக்கின்றான்,

சீதையை அனுப்பி சூழ்ச்சி செய்கின்றான்.

இறைவனை (இராவணனை) வீழ்த்துகின்றான்!

இவற்றினுக்கு இன்னும் ஆதாரங்கள் வேண்டுமாயின் அதே திரு அவதாரப்படலம் 199ம் பாடலையும் சற்றும் பாருங்கள்.

''வானுளோர்(அ)னைவரும்
வான ரங்களா
கானினும் வரையினுங்
கடி தடத்திலும்
சேனையோ டவதரித்
திடுமின் சென்றென
ஆனனம் மலர்ந்தனன்
அருளின் ஆழியான்''

போருக்கு எத்தனை ஆயத்தமாக வானிலுள்ள 'தேவர்கள்' அனைவரையும் காட்டிலும் மலையிலும் வாசமிகுந்த மலைச்சாரல்களிலும் 'சேனையோடு' அவதரிக்கச்சொல்லி திருவாய் மலர்ந்த பின்னரேயன்றோ நாராயணன் இராமனாகப் பிறக்கின்றான். எனவே, திட்டமிட்டு இவ்வாறு சதி செய்து வந்த காரணத்தாலேயே;

வால்மீகி இராமாயணம், ஆரண்யகாண்டம் 9வது சருக்கம் 24 முதல் 33 வரையிலுள்ள சுலோகங்களில் சீதை இராமனைப் பார்த்துக் கீழ்க்கண்டவாறு கூறுகின்றாள்.

''ஹே ராமா! ஆயுதங்களை வைத்துக் கொண்டிருந்தால் நெருப்பை வைத்துக் கொண்டிருப்பதுபோல மனம் விகாரமடைவதற்கு காரணமாகுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்; ஆகையால் நீர் வில்லைத் தரித்துக்கொண்டு பகையில்லாமலே இந்த தண்டகாரண்யத்திலே வசிக்கின்ற அசுரர்

மாடர்ன் ஷோ மார்ட்

ஃபேளக்ஸ், பாட்டா காலணிகள்

விற்பனையாளர்

பஸ் ஸ்டாண்ட்

தர்மபுரி-2.

காலத்திற்கேற்ற

நவீன ரக காலணிகளுக்கு

தருமபுரியில்

சிறந்த இடம்

கள்ளை வதைப்பது ஒருபோதும் செய்யத் தகாதது என்று எனக்குத் தோன்றுகிறது! குற்றமில்லாமலிருக்கிற ஜனங்களைக் கொல்வதில் எனக்குப் பிரியமில்லை''

இதிலிருந்து நாம் பெறுவது இராவணப் பெருந்தகைமை மட்டுமல்ல. ஆரிய முறைகளுக்கு மாறான கலை, நாகரீகம், பண்பாடுகளைப் படைத்த திராவிட மக்களை (அசுரர்களை) அழிப்பதே இராமவதார சூழ்ச்சி என்பதல்லவா!

இதோ அதற்கும் ஆதாரம் பாருங்கள்! சீதை மேற்கண்டவாறு கூறியதற்கு விடையாக இராமன் கூறுகின்றான்! இதுவும் அதே வால்மீகி இராமாயணம் ஆரண்யகாண்டம் 10வது சருக்கம் 17 முதல் 23 வரையிலுள்ள சுலோகங்களில்;

''சீதா! என் பிராணனையும் உன்னையும் லட்சுமணனையும் விட்டாலும் விடுவேனேயல்லாமல் சொன்ன சொல்லைத் தப்பி நடக்க மாட்டேன். பிராமணர்கள் எல்லோருக்கும் முன்னாலே செய்த பிரதிக்ஞை தப்பி நடக்கலாகாது.''

'பிராமணர்களுக்கு' (!) என்ன பிரதிக்ஞை செய்து கொடுத்திருக்கிறான்?

இராவணனையும் அவனது இனத்தையும் தன்னுடைய பானங்களால் நீறு (சாம்பல்) செய்துவிடுவதாக, இல்லையா!

பிறகேன் நொண்டிச் சமாதானம்? இராவணன் சீதையை எடுத்துப்போய் விட்டான்! அனுமான் வாலிலே பந்தத்தைக் கட்டி விட்டான்! விபீடணனை விரட்டி விட்டான் என்பதாக!

ஆகவே,

அன்றந்த லங்கையினை ஆண்ட மறத் தமிழன் அய்யிரண்டு திசைமுகத்தும் தன் புகழை வைத்தோன் அனியாயமாக ஆரியத்தால்-வஞ்சத்தால் சதியால் சாய்க்கப் பெற்றான் என்பதனை உணர்வோம்!

நம் மிறை வீழ்ந்த அப்பெரும் படலந் தன்னை நம்மிதயந்தன்னில் நிறைபோம்.

வஞ்சக ஆரியத்தின் வீழ்ச்சிக்கு வழி வகை காண்போம்!

என்று,

இன உணர்ச்சி கொண்ட இளைஞரேறுகள் அனைவரையும் அழைக்கின்றேன்! ஃஃ

நாகம்மையார் உணவு விடுதி

ஜவகர் கடை வீதி,

கரூர்.

அறிவின் ஊற்று:

தந்தை பெரியார் அவர்களின் 88-ம் ஆண்டு

பிறந்த தினத்தில் எமது மனங்கனிந்த

நல்வாழ்த்துக்கள்.

உரிமையாளர்:

பெ. வீரண்ணன்.

செயலாளர்:

நகர. தி. க. கரூர்.

எமது வாடிக்கையாளர்களுக்கும்
அன்பர்களுக்கும்
நல்வாழ்த்துக்கள் !

போன் : 32

R. தர்மலிங்கம்

நெல் வியாபாரம்

திருத்துறைப்பூண்டி.

தந்தை பெரியார்
89–வது பிறந்த நாளில்
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

V

சிவானந்தம் சன்ஸ்

பீப்பிள்ஸ் ஸ்டோர்

(மளிகை)

மன்னார்குடி.

H. P. சைக்கிள் மார்ட்

பஸ் ஸ்டாண்ட் ரோடு

தருமபுரி

எங்களிடம் எல்லாவிதமான சைக்கிள்
களும், ஸ்பேர் பார்ட்ஸ்களும்,
சைக்கிள் டயர், ட்யூப்
சாமான்களும்
கம்பெனி விலைக்கு
கிடைக்கும்.

உசேனி பிரான், N. S.

ஊரிமையாளர்.

எமது வாடிக்கைகாரர்களுக்கும் பொது
மக்களுக்கும் வணக்கத்திற்குரிய
தந்தை பெரியார் அவர்களின்
89-வது பிறந்த நாள்
வாழ்த்துக்கள்

இரே. காந்தி

இரும்பு & பெயிண்ட் வணிகர்

912, கீழவாயில்,

தஞ்சாவூர்-1.

வகுப்புவாரி உரிமையும்-நீதிமன்றங்களும்

வழக்கறிஞர் பி. ரெங்கசாமி, பி.ஏ.பி.எல்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, ஆட்சியிலிருந்த நீதிக் கட்சியினர், சமுதாயத்தில் பின் தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக சர்க்கார் கல்விக்கூடங்களிலும், உத்தியோகத்துறையிலும், அவர்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுத்து, ஊக்குவிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன், வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை (கம்யூனல் ஜி. ஒ.) ஏற்படுத்தினார்கள்.

முன்னேற்றம்

இதன்படி, மருத்துவக் கல்லூரி, என்ஜினீரிங் கல்லூரி முதலிய தொழிற் கல்லூரிகளில் பல வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் அவரவர்கள் எண்ணிக்கைக்குத் தக்கபடி விகிதாச்சாரமாக மாணவர்கள் சேர்க்கப்பட்டு வந்தார்கள். கூடிய வரையில் அதே விகிதாச்சாரப்படி பல வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கும் உத்தியோகங்களும் கொடுக்கப்பட்டு வந்தன. இதனால் தாழ்த்தப்பட்டவர்கள், மற்ற பின் தங்கிய வகுப்பினர்கள் கல்லூரிகளில் பட்டம் பெற்று, உயர் உத்தியோகங்களில் அமர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக சமுதாயத்தில் முன்னேற ஆரம்பித்தார்கள்.

இந்த முறை, கால் நூற்றாண்டிற்கு மேல், 26-1-1950ந்தேதி இந்திய அரசியல் சட்டம் அமுலுக்கு வரும் வரையிலும் அதன் பின்பும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

அரசியல் சட்டத்தால் ரிட் மனுக்கள்

7-6-1950-ல் திருமதி சம்பகம்-துரைராசன்என்பவர், தான்மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து படிக்க அரசியல் சட்டம் 15 (1,) 29 (2) பிரிவுகள், தனக்கு இருக்கும் அடிப்படை உரிமைகள் (தான் பார்ப்பன வகுப்பைச் சார்ந்தவராய் இருப்பதால்) பாதிக்கப்படும் வகையில் வகுப்பு வாரி உரிமை முறை இருக்கிறது. அந்த முறை செல்லாது; அதை அரசு அமுல் படுத்தாது தடுக்க வேண்டுமென்று கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார்.

அதே மாதிரி திரு. சீனிவாசன் என்பவர் தனக்கு இன்ஜினீரிங் கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டுமென்று மற்றொரு மனுவும் தாக்கல் செய்தார்.

வகுப்புரிமை பற்றிய தீர்ப்பு

அந்த இரு மனுக்களையும் மூன்று நீதிபதிகள் விசாரித்து 27-7-50-ல் சென்னை மாநில அரசின் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை, அரசியல் சட்டத்திற்கு முரணாக இருப்பதால், அது செல்லாது என்று தீர்மானித்தனர்.

அதில் ஒரு நீதிபதி சுட்டிக் காட்டியது

அந்த ஆண்டில் இன்ஜினீரிங் கல்லூரியில் அடியிற்கண்டபடி மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தார்கள். வகுப்புவாரி உரிமை அமுலில் இல்லாமல் தகுதியின் (Merit) பேரில் அவர்கள் சேர்க்கப்பட்டிருந்தால் இரண்டாவது கலத்தில் கண்டபடி மாணவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும்.

பிராமணரல்லாத இந்துக்கள் பின் தங்கிய இந்துக்கள்	}	224 .. 112
பிராமணர்கள்		77 . 249
அரிஜனங்கள்		26... 0
கிருஸ்தவர்கள்		51... 22
முஸ்லீம்கள்		26... 3

வகுப்புவாரி உரிமை அமுல் செய்யப்பட்டதால் 172 பார்ப்பன மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய இடம் கிடைக்கவில்லை. 112 பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு அதிகமாக இடம் கிடைத்துள்ளது. அரிசனங்களுக்கு தகுதி அடிப்படையில் ஒரு இடம் கூட கிடைத்திருக்காது. ஆனால் சாதி அடிப்படையில் அவர்களுக்கு 26 இடங்கள் கிடைத்துள்ளன. இம்முறை சாதி அடிப்படையிலும் மக்களிடையே வேறுபாடு காண்பிக்கும் வகையிலும் ஏற்பட்டதாகும். இதனால் 450

மார்க்குகள் வாங்கிய பிராமண பையனுக்கு இடம் கிடைக்காமல் 350 மார்க்குகள் வாங்கிய மற்ற வகுப்பைச் சார்ந்த பையனுக்கு இடம் கிடைக்கிறது என்று ஒரு நீதிபதி சுட்டிக்காட்டி அதனால் அந்த முறை அரசியல் சட்டத்திற்கு முரணானது, செல்லத் தக்கதல்ல என்கிறார்.

சுப்ரீம் கோர்ட்டு அப்பீல்

சென்னை மாநில அரசின் வகுப்பு வாரி உரிமை முறை செல்லாது என்று அய்க்கோர்ட் அளித்த தீர்ப்பின் பேரில், நம் மாநில அரசு, டில்லி சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்தது. 9-4-51ல் அந்த அப்பீல்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

தைரியச் செயல் !

சுப்ரீம்கோர்ட்டு விசாரணையின் போது, திருமதி சம்பகம்-துரைராசன் எந்த மருத்துவக் கல்லூரிக்கும் மனு செய்யாதிருந்தும் அவருக்கு மருத்துவக் கல்லூரியில் ஒரு இடம் ஒதுக்கியிருந்ததும் தெரிய வந்தது. அவர் 1934ம் வருடம் பி. ஏ., பட்டம் பெற்றவர், 1950ல் மருத்துவக் கல்லூரிக்கு மனு செய்யாது வழக்கு தொடர்ந்தது மிகவும் தைரியச் செயலாகும் !

சுப்ரீம் கோர்ட்டிலும் ஓர் மனு தாக்கல்

திரு. வெங்கட்டரமணா என்பவர் வகுப்புவாரி உரிமை முறையால் தனக்கு டிஸ்டிரிக்ட் முன்சீப் வேலை கிடைக்கவில்லை என்றும், அந்த முறை செல்லாது என தீர்ப்பளிக்கவும், நேராக சுப்ரீம் கோர்ட்டில் அரசியல் சட்டம் 32வது பிரிவின்படி மனு தாக்கல் செய்திருந்தார். அதன் பேரிலும் விசாரணை நடந்து 9-4-51ல், வகுப்புவாரி உரிமை உத்தியோகங்கள் வழங்குவதிலும் செல்லாது என்றாகி விட்டது.

அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம்

உடனடியாக அரசியல் சட்டத்தைத் திருத்தினார்கள். சமுதாயத்தில் கல்வித் துறையில் பிற்போக்கடைந்தவர்களின் (Socially and educationally backward classes) முன்னேற்றத்திற்காக, சர்க்கார் தனி ஏற்பாடுகள் செய்வதை அரசியல் சட்டத்தின் எந்த பிரிவுகளும் தடை செய்ய முடியாது என்று அச்சட்டத்தின் 15வது பிரிவில் 4-வது உட்பிரிவைச் சேர்த்தார்கள்.

மைசூர் மாநிலத்தில் வகுப்புரிமை சர்ச்சைகள்

அதன் பிறகு சமூகத்திலும்—கல்வியிலும் பின் தங்கிய வகுப்பினர்களைப் பாகுபாடு (Clasify) செய்து கலை-தொழில் இயல் கல்லூரிகளில் இடம் ஒதுக்க வேண்டியது மாநில சர்க்கார் கடமை ஆகிவிட்டது. அதுமாதிரி சலுகைகள் காணபித்து பின் தங்கிய வகுப்பினர்களை முன்னேற்றமடையச் செய்ய எல்லா மாநில அரசுகளும் முயற்சி எடுத்து வருகின்றன. ஆனால் மைசூர் மாநிலத்தில் 1958 முதல் ஒவ்வொரு ஆண்டும், பின் தங்கிய வகுப்பினர்களைப் பாகுபாடு செய்து, அவர்களுக்கு இடங்கள் ஒதுக்கி பிறப்பித்த அடியிற்கண்ட உத்தரவுகள் உயர்நீதி மன்றத்தில், உடனுக்குடன் வழக்குத் தொடரப்பட்டு அவைகள் செல்லாது என்று தீர்ப்புகள் ஏற்பட்டன.

1. 1958ல் பார்ப்பனர்களைத் தவிர மற்றெல்லா வகுப்பினர்களும் பின் தங்கியவர்கள்; அவர்களுக்காக ஒதுக்கப்பட்டது 75 சத விகிதம்.

2. 1959ல், பார்ப்பனர்கள்—பணியாக்கள்—காயஸ்தர்கள்—முஸ்லீம்கள்—கிருஸ்தவர்கள்—ஜைனர்கள், தவிர மற்றவர்கள் பின் தங்கியவர்கள்; அவர்களுக்கு ஒதுக்கிய இடம் 65 சத விகிதம்.

3. 1960ல் டாக்டர் நாகன்ன கவுடர் தலைமையில் இயங்கிய கமிட்டியின் தற்காலிக ரிப்போர்ட்படி 60 சத விகிதம் தகுதிக்காகவும், 40 சத விகிதம் பின் தங்கியவர்களுக்காகவும் இடம் ஒதுக்கியது.

4. 1961ல் 81 வகுப்பினர்களைப் பின் தங்கிய வகுப்பினர்கள் என்றும், 135 வகுப்பினர்கள் அதிக பின் தங்கிய வகுப்பினர்கள் என்றும் பாகுபாடு செய்து மொத்தம் பின் தங்கியவர்களுக்காக 48 சத விகிதமும் ஒதுக்கியது.

5 1962ல், 68 சத விகித இடங்களை ஒதுக்கியது. மேலே கண்ட சத விகிதத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு (Scheduled castes) 15 சத விகிதமும், மலை சாதியினருக்கு (Scheduled Tribes) 3 சத விகிதமும் ஒதுக்கப்பட்டதை எல்லா கோர்ட்டுகளும் சரி என்று ஒப்புக் கொண்டன.

முதல் 4 உத்திரவுகளும் மற்ற பின் தங்கிய வகுப்பினர்களுக்கு ஏற்பட்ட சத விகிதமும் அவர்களைப் பாகுபாடு படுத்திய விதமும் அரசியல் சட்டத்திற்கு முரணானது

என்று மைசூர் உயர்நீதி மன்றம் ஒவ்வொரு ஆண்டும் ரத்து செய்துவிட்டது.

கடைசியாக 1962ல் ஏற்பட்ட உத்திரவு செல்லாது என்று சுப்ரீம் கோர்ட்டில் அரசியல் சட்ட 32வது பிரிவுப்படி 23 பேர் மனு செய்தார்கள். 68 சத விகித இடங்கள் ஒதுக்கப்பட்டது, "Fraud on the Constitutional power conferred on the State by Article 15(4)" என்றும், பின்தங்கியவர்களுக்காக ஒதுக்கப்படும் இடங்கள் 50 சத விகிதத்திற்கு குறைவாகவே இருக்க வேண்டுமென்றும், எவ்வளவு குறைவாக இருக்கவேண்டும்என்பது அந்தந்தமாநிலத்தின் சூழ்நிலையைப் பொறுத்ததாகுமென்றும் பிந்தங்கியவர்களை எப்படி பாகுபாடு கள் செய்ய வேண்டுவது என்பதைப் பற்றி குறிப்பிட்டு 28-9-62ல் சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பு ஏற்பட்டது.

மீண்டும் முயற்சி!

அந்த தீர்ப்பை அனுசரித்து மைசூர் மாநில அரசு 1963ல் பின்தங்கிய வகுப்பினர்களின் பட்டியல் ஒன்று தயார் செய்து அவர்களுக்கு 30 சத விகிதமும் வழக்கம் போல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 15 சத விகிதமும், மலைவாசிகளுக்கு 3 சத விகிதமும் பள்ளிகளில் இடம் ஒதுக்கி உத்திரவுகள் பிறப்பித்தன. அதையும் எதிர்த்து 473 ரிட் மனுக்கள் மைசூர் அய்க்கோர்ட்டில் தாக்கலாயிற்று. இதில் மருத்துவக் கல்லூரிக்காக 226 மனுக்களும். என்ஜினீயரிங் கல்லூரி மனுக்கள் 227ம ஆகும்.

ஆக்கநல அரசுக்கு
"தகுதி" முக்கியமல்ல

அத்த ரிட் மனுக்களின்பேரில் மைசூர் சர்க்கார் பின்தங்கியவர்களைப் பாகுபாடு செய்தது, சாதியையும் (Caste) அடிப்படையாக வைத்து கவனிக்காதது பெருங் குறை (defect) அல்ல என்றும், மைசூர் மாநில அரசு வகுத்த முறையும், ஒதுக்கிய இடங்களும் சரி என்று தீர்ப்பு சொல்லப் பட்டது. தகுதிக் கொள்கையை அதிகக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தால் சமுதாயத்தில் சமூக நீதி லட்சியத்தை அடைய முடியாது என்றும் உயர்நீதி மன்றம் தம் தீர்ப்பில் தெளிவுபடுத்தியது. "We have pledged ourselves to establish a welfare state. Social justice is an important ingredient of that concept. That goal cannot be reached if we over emphasise the "merit theory". ∴

பரிமளம் உணவு விடுதி

கீழவாசல் மார்க்கெட், தஞ்சாவூர்.

கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு சுவைமிக்க

பிரியாணி, சாப்பாடு, கறி வகைகள்,

சிற்றுண்டி முதலியன தயாரித்து

அளிக்கின்றோம்.

உரிமையாளர் :

P. N. கமால்தீன்.

வாழ்க பெரியார்!

செல்லப்பன் தேநீர் விடுதி

கொக்கோ கோலோ வினியோகஸ்தர்

(வெண்ணெய்மலை ரோடு, கார்னர்)

புதுத் தெரு, கரூர்.

சுகாதாரமான

சுவையான சிற்றுண்டி உணவுவகைகளுக்கு

சிறந்த இடம்

அனைவரும் வந்து ஆதரவு தருக.

உரிமையாளர்:

T. K. செல்லப்பன்.

தந்தை பெரியார் 89-வது ஆண்டு

பிறந்த தின நல்வாழ்த்துக்கள்

குழந்தைகளின் நண்பன்

கிருஷ்ணா பிஸ்கட்ஸ்

மிக சிறந்த சத்துள்ள தின்பண்டம்

கிருஷ்ணா பிஸ்கட் பாக்டரி

மன்னார்குடி (தஞ்சை மாவட்டம்)

நிறுவனம்: 1927 போன்: 308

THE LION OF ERODE!

A.P.JANARTHANAM,M.A.,

The old order entrenched itself in India two thousand years ago. It divided society into castes, sanctified humbug, enthroned superstition and elevated lazy drones into the highest position. It reduced the natural sons of the soil to slavery. Whole classes were denied knowledge and condemned to perpetual degradation by birth.

The people were exhorted to despise this world and prepare themselves for an unknown world. Earthly existence was dismissed as a mirage. Consequently we became a very backward pepole in this world.

The great Buddha and the Siddhas strongly protested against this. Buddhism was driven out of this land. The Siddhas took to the jungles. The dissidents were liquidated.

Periyar Ramaswami is the greatest challenger of the twentieth century. He has the courage of a lion. With a good band of Rationalists, he spread his gospel of reason. He carried his message to the nook and corner of the country. He founded the Self-Respect Movement which dispels darkness and superstition.

Through the anti-Hindi movement, through his compaign for separation, through his relentless struggles against Congress fascism and exploitation, he built a strong base for the coming to power of his disciples. He is all praise for Anna's administration which is based on Reason and Socialism.

Periyar is entering the nineties. Despite many ailments, he is determined to campaign strongly for what he feels right. He does not falter or waver. His views are strong and clear-cut. He is prepared to swim against the current. Just like Bernard Shaw he shocks the people and goads them to action. His love for English, plea for abolishing the slums, and his desire for scraphing prohibition, all point out to his independent stand.

Periyar's speeches are clear, plain and direct. He thunders against sham and superstition. He does not hesitate to pour out his ideas even though they may be unpalatable. He talks to the people direct. For hours together he Lampoons, attacks and denounces the puranic characters. With rare courage he exposed Rama and Sita in Cawnpore and Lucknow. His disarming frankness, naturalness and sincerity, make his speeches very effective. For over forty years he has produced a very strong impression on all the facets of life. For generations to come, Periyar will remain the model for a new order in Tamilnad Shorn of pedantry, Periyar's thoughts are entirely original. Unfettered by convention and diplomacy, he goes to the roots

with Socratic insight. He is Ravana, Socrates, Bradlaugh and Shaw to the Dravidians.

What 'Spark' was to Lenin what 'Harijan' was to Gandhi, 'Kudi Arasu' was to periyar. With a galaxy of brilliant writers like Swami Kaivalyam, M. Singaravelu, S. Guruswami and Anna, the 'Kudi Arasu' was the bulldozer which cleared the jungle of superstition. Revolutionary ideas ranging from communism to birth-control virtually electrified the land. If Tamilnad is more brilliant than the rest of India, it is largely due to the self-respect movement. With spartan discipline, with unflagging zeal, Periyar shaped his disciples into the champions and heralders of a Dravidian Renaissance.

Periyar's bravery is very astounding. He unmasked the gods and the mahatmas. He exposed priestly tomfoolery. He attacked the salt satya-graha. He denounced Kadhi as barbarous. He refused to rejoice on the transfer of power. His anti-hindi movement and clarion call for separation have elevated Tamil and Tamilians. He always thunders for the oppressed and the depressed. The lion's roar has a shattering effect on the citadels of obscurantism and orthodoxy. After Buddha, he is the bravest fighter against Manu.

Periyar has courted imprisonment several times. His agitations though revolutionary and dynamic, are singularly free from violence. He has a magnetic hold over his followers. The Non-brahmins hail him as their champion and saviour.

With filial affection he has welcomed the new ministers. He is a great tower of strength to the ministry. He is extremely happy to note that self-respect marriages are being given legal validity.

Periyar will certainly be hailed as the Ravana of the twentieth century, the morning star of Dravidian Renaissance and the greatest fighter against Brahmin domination.

He has lived to see his dreams fulfilled. His disciples rule the land. His statue is being erected in Trichy. More honours will be coming. But he will go on campaigning to the end, for Reason and a homeland.

Mrs. Mani Ammaiyar is to be thanked for preserving Periyar for us.

Long live Periyar!

கோவை லாட்ஜ்

(போர்டிங் & லாட்ஜிங்)

பழைய பஸ் ஸ்டாண்டு

தருமபுரி-2

எங்கள் லாட்ஜில் சுகாதார முறைப்படி தயார்செய்த சுவைமிக்க பிரியாணி, மட்டன் வகையறாக்கள் கிடைக்கும்.

காற்றோட்டமுள்ள ரூம்கள் குறைந்த வாடகையில் தங்குவதற்கு கிடைக்கும்.

உரிமையாளர்.

V. R. நாராயணன்

தமிழகத்தின் பொதுச்சொத்து

— க.பா.பழநி

தாழ்ந்து கிடந்த தமிழினம் தலைநிமிர-வீழ்ச்சியுற்றுக் கிடந்தோர் மாட்சிமை பெற்று மாண்புற்றுத் திகழ—மடமை என்னும் குட்டையிலே மூழ்கிக் கிடந்தோர் மறுமலர்ச்சி பெற—கூனிக்கிடந்த கூட்டம் வீறு கொண்டு நிற்க—வித்திட்டு வெற்றிகண்ட தலைவர் தந்தை பெரியார் அவர்கள்!

தமிழர்களின் நலிவுநீக்கி வலிமையும் வளமையும் பெருக உழைப்பவர்; அதற்கெனத் தன் வாழ்வையே ஒரு போராட்டக் களமாக்கிக்கொண்ட போர் வீரர்!

ஆம்! அவர் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் நமக்கு பயன்படுத்திய அய்யா தன் எண்பத்தி ஒன்பதாவது ஆண்டிலே அடியெடுத்து வைக்கிறார்!

பொதுத் தொண்டிற்கே புதியதொரு இலக்கணம் வகுத்து அதற்கு இலக்காகத் திகழ்கிறார். "பொதுமக்கள் மத்தியிலே நல்ல பெயர் வாங்குவது பொதுத் தொண்டல்ல. அவர்களது நன்மைக்கானவற்றை சொல்வதும், செய்வதுமே பொதுத் தொண்டு" என்ற புதிய சித்தாந்தத்தை அவனிக்கே அளித்திட்ட பெருமை அய்யாவையே சாரும்!

பொதுமக்களின் பாராட்டுதலையோ, போற்றுதலையோ எதிர்பாராதவகையில் தனது லட்சியங்களை வகுத்துக்கொண்ட காரணத்தால்தான் அவரே எத்தனையோ கல்லடிகளையும், சொல்லடிகளையும் ஏற்க நேர்ந்தது! அத்தனையும் ஏற்று அவர் தொடர்ந்த தொண்டுகாரணமாகத்தான் இன்று தமிழர்களின் இதயத்தில் நீங்கா இடம்பெற்று ஒளிவிளக்காய் திகழ்கிறார்.

மாபெரும் தேசிய இயக்கமாகிய காங்கிரசிலே தன் பொது வாழ்வைத் துவங்கி, தான் கொண்ட கொள்கையை அதன்மூலம் செயல்படுத்த இயலாதென எண்ணி வெளியேறி—அவ்வப்போது சில அமைப்புகளை உருவாக்கி—இறுதியாக திராவிடர்கழகம் என்ற அமைப்பின் தலைவராய் நின்று தன் தூய தொண்டினைத் தொடர்ந்து வருகிறார்.

சமுதாய சீர்திருத்தமே தன் பேச்சாகவும், மூச்சாகவும் கொண்டு செயல்புரியும் அய்யா திராவிடர் கழகத்தின் தனிப்பெரும் தலைவராய்த் திகழ்ந்தபோதிலும், அவர் கழகத்திற்குமட்டும் சொந்தமானவர் அல்ல. சிந்திக்கும் ஆற்றல்படைத்த தன்மான உணர்வுள்ள தமிழர்கள் அத்தனைபேருக்கும் அவர் தலைவராவார்.

தமிழகத்திலேயுள்ள பல்வேறுபட்ட அரசியல் கட்சித் தலைவர்களையும் உருவாக்கியது-அல்லது உருவாகக் காரணமாக தந்தை பெரியார் இருந்தமையால்தான் எல்லோராலும் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

எல்லா கட்சிகளாலும் இன்று பேசப்படுகின்ற ஏற்றமிகு சமதர்ம சமுதாய அமைப்

பென்னும் மாளிகைக்கு சாதிமத இன ஒழிப்பு போன்ற சமூக சீர்திருத்தமென்ற அடித்தளத்தை அமைத்த பெருமை அய்யாவையே சார்ந்தது.

தமிழர்களின் நல்வாழ்வு ஒன்றையே தன் இதயத்தில் கொண்டு செயல்புரியும் பெரியார் காலத்திற்குக் காலம் கையாளும் யுக்தியை மேலெழுந்தவாரியாகப் பார்ப்போர்க்கு அவர் ஒரு புதிராகத் தென்படுகிறார். ஆனால் அது தமிழர்களின் நல் வாழ்வினை அடிப்படையாகக் கொண்டது என்பதைச் சீரிய சிந்தனையாளர்கள் மட்டுமே அறிவர்!

பாரத நாட்டிலே வாழும் அய்ம்பத்திரண்டுகோடி மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர் காமராசர் அவர்களே "அய்யா போட்டுக்கொடுத்த பாட்டையிலே நான் செல்கிறேன்" என்று போற்றக்கூடிய அளவிற்கு தமிழகத்தில் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட தலைவராக திகழ்கிறார்.

அவ்வப்போது அவர் எடுக்கும் முடிவு காரணமாக போற்றியவர்கள் தூற்றுவதும் தூற்றியவர்கள் போற்றுவதும் தமிழக அரசியலில் ஓர் சர்வசாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

அந்தவகையில் அவர் தன்னை ஓர் புதிர் மனிதராகவே உருவாக்கிக் கொண்டார் என்பதும் மிகையாகாது.

கடந்த முப்பது ஆண்டுகளாக தமிழக அரசியல் கட்சிகளில் ஏற்படும் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இவர் ஓர் பின்னணி சூத்ரதாரியாக இருந்தபோதிலும் அதிகார அரசியலில் அங்கம் வகிக்கவே விரும்பாத ஓர் தன்மானத் தலைவராவார்.

விண்ணைமுட்டும் இமயமும்—அழகொழுகும் தாஜ்மகாலும் எவ்வாறு இந்தியாவிற்கு சொந்தமென்றும்—தேசிய சின்னமென்றும் பெருமிதம் அடைகிறோமோ அதேபோல தந்தை பெரியார் தமிழர் சமுதாயத்தின் தேசியச் சின்னம். தமிழர்களின் பொதுச் சொத்து!

தமிழர் சமுதாயம் மேலும் மேலும் உயர—எல்லோர்க்கும் எல்லாம் என்ற ஏற்றமிகு சமதர்ம சமுதாயம் அமைய—எண்பத்தொன்பது வயது இளைஞராகத் திகழும் பெரியார் பன்னெடுங்காலம் நீடுவாழ வாழ்த்துவோமாக.—அவர் வாழ்வில்தான் நம் வளர்ச்சி இருக்கிறது என்ற ஒரே காரணத்தால்!

வாழ்க பெரியார். ∴

டி. என். டி. சி.

தமிழ்நாடு தனிப்பயிற்சிக் கல்லூரி
தெப்பக்குளம் (வடகரை),
திருச்சிராப்பள்ளி–2.

எஸ். எஸ், எல். ஸி.
(அக்டோபர் 67 அண்டு மார்ச் 68)
சென்னை பி. யூ. சி.
(I, II & III பாகங்கள் செப்டம்பர் '67)
மதுரை பி. யூ சி. ,,
மதுரை மெட்ரிக் (மார்ச்சு '68)

(அ) மதுரை மெட்ரிக் தேர்வுக்கு எல்லாப் பாடங்களும் தமிழில் படித்து தமிழில் எழுதலாம்.

(ஆ) 5-ம் வகுப்புத் தேறியவர்கள், 1-3-68-ல் 20 வயது நிரம்பியவர்களாக இருந்தால் மதுரை மெட்ரிக் வகுப்பில் சேரலாம்.

(இ) அஞ்சல் மூலமாகவும், நேரிலும் படிக்கலாம்.

மெட்ரிக் தேறியவர்கள்

(அ) எந்தக் கல்லூரியிலும் P. U. C. வகுப்பில் சேர தகுதி உண்டு.

(ஆ) உத்யோக உயர்வுக்கும், அரசாங்க உத்யோகம் பெறவும் இது வே போதிய தகுதியாகும்.

(இ) மெட்ரிக் வகுப்புகள் மாலைநேரத்தில் நடைபெறும்.

E S. சாமிநாதன், முதல்வர் M.A., L.T.
வித்வான் து. தயாளசாமி, செயலாளர்.
வே. ஆனைமுத்து, தாளாளர்.

வாழ்க பெரியார் ! வளர்க கழகம் !! ஓங்குக தமிழகம் !!!

Greetings To The Imm0rtal Dravidian

வெள்ளத்தனைய மலர் நீட்டம் ; மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு.

"சிலதவிடத் தொல்கார் உரவோர்
புதையம்பிற் பட்டுப் பாடுன்றுங்களிறு"

அன்பின் அணிகலன், கருணைக்கடல், கொடைவள்ளல் தந்தை பெரியார் அவர்களின் நன்கொடையும், உள்ளூர் வெளியூர்ப் பெரு மக்களின் அன்பளிப்புக்களுங்கொண்டு நிறுவப்பெற்றிருக்கும், திருச்சி பெரியார் சுயமரியாதை பிரச்சார நிலையத்தின் நகர திராவிடர் கழகக் கட்டிடத்தில் இயங்கும் நூல்நிலையம் & படிப்பகத்திற்குப் புத்தகங்கள் பத்திரிகைகள் நன்கொடை வழங்கும் பெரியோர் பெருமக்கட்கு இந் நன்னாளில் எங்கள் உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் செலுத்திக் கொள்ளுகின்றோம்.

நகர திராவிடர் கழகம்,
அருப்புக்கோட்டை.

வாழ்க பெரியார் !

எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும்
பெரியார் பிறந்த தின நல்வாழ்த்துக்கள்

ராஜகுரு மரம் அறுவை மில்
ராஜகுரு டிம்பர் டிப்போ

மரம், ஓடு, பெயிண்டு, சிமெண்ட் & இரும்பு வியாபாரம்

எமது இணை ஸ்தாபனங்கள் :

T. A. L. C. குருசாமி நாடார் & கோ.

மரம், ஓடு, பெயிண்டு, சிமிண்டு & இரும்பு வியாபாரம்.
அறந்தாங்கி.

T. A. L. C. குருசாமி நாடார் & கோ.

மரம், ஓடு, பெயிண்டு, சிமிண்டு & இரும்பு வியாபாரம்.
இராமநாதபுரம்.

ANAR FABRICS

TRADE MARK REGISTRATION NO. 214818

டெலிபோன் நெ. 172 தபால் பெட்டி நெ. 77

கைத்தறி பெட்ஷீட்டுகள், மேஜை விரிப்புகள்,
தலையணை உறைகள், காட்டன் அணிகள் முதலியன—

சாயம் உத்திரவாதம், திடம் சரக்குகள்—பலவித
டிசைன்களிலும் சைஸ்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

K. முத்துசாமி கவுண்டர் அண்டு கோ

நெசவுச்சாலை,

செங்குந்தபுரம், கரூர்.

பெரியார் நீடூழி வாழ்க!

போன்: 2823

SRI RAJAGOPAL TRANSPORTS (P) LTD.

B, 28, 2nd Cross, Thillainagar, Tirnchirappalli—3.

பஸ் ரூட்களின் விவரம்:

திருச்சி—ஆத்தூர்—(வழி: துறையூர், தம்மம்பட்டி, கெங்கவல்லி)
திருச்சி—ஆத்தூர்—(வழி: துரையூர், தம்மம்பட்டி, மல்லியகரை)
திருச்சி—செந்தாரப்பட்டி—(வழி: துறையூர், கொப்பம்பட்டி)
திருச்சி—விசுவாம்பாள் சமுத்திரம்—(வழி: துறையூர், கொப்பம்பட்டி)
திருச்சி—எறகுடி—(வழி: துறையூர், உப்புலியபுரம்)

தொலைபேசி எண் 283 தபால் பெட்டி எண் 9

சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுத் தந்தை, வைக்கம் வீரர்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 89-வது ஆண்டு

பிறந்த நாளில், அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து, நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றி, அவர் தம் கொள்கைகள் சமுதாயத்தில் நிலைபெறுவதைக் கண்டு களித்து வாழ வாழ்த்துகிறோம்.

M. U. V. லாரி சர்வீஸ்

திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

தமிழ்நாடு மற்றும் கேரளாவில் உங்கள் சரக்குகளை காலதாமதமின்றி குறித்த நேரத்தில் பழுதின்றி சேர்ப்பவர்கள்.

தொலைபேசி எண் : 83

முத்தையா உணவு விடுதி

திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

ருசிமிக்க சிற்றுண்டியும், அருஞ்சுவை உண்டியும், குளிர்ந்த தீஞ்சுவை பழரச பானங்களையும் சிறந்த முறையில் அளிப்பவர்கள்.

INDO-CEYLON HOTEL

THANJAVUR.

இந்திய-இலங்கை ஹோட்டல்

84, மார்க்கட் ரோடு, மணிக்கூண்டு

தஞ்சாவூர்

சாப்பாடு, பிரியாணி வகைகளுக்குச் சிறந்த இடம்

உரிமையாளர் : K. சுவாமிநாதன்

ஸ்ரீ விஜயலட்சுமி ஸ்டோர்ஸ்

கடைவீதி, தருமபுரி-2

போன் : 63

தந்தை பெரியார் 89-வது
பிறந்த நாளில் எமது வாழ்த்துக்கள்

திருமணம், பொங்கல், திருவிழாபோன்ற நாட்களுக்கு வேண்டிய காஞ்சிபுரம், பனாரஸ் பட்டு சேலைகள் மற்றும் மில் & கைத்தறி ஜவுளிகள் வாங்க சிறந்த இடம்.

N. S. சையத் சாகிப் பீரான்

த பெ எண். 320 போன் எண். 16

கடைவீதி, தர்மபுரி-2.

எங்களிடம் பிரிட்டானியா பிஸ்கட், பேரீஸ் மிட்டாய்கள், பேரி உரங்கள், லிவர் பிரதர்ஸ் இந்தியா லிமிடெட்டின் சோபிவகைகள், டாய்லட், டால்டா, முல்லர் & பிப்பிஸ், பாண்ட்ஸ், டைகர் பூட்டுகள், ரோகா பாக்குத்தூள், வேலூர் நான்கு முத்திரை பீடிகள், மங்களூர் கணேஷ் பீடிகள், சேலம் மூன்று தாமரைப் பீடிகள் சேலம் திவான் பீடிகள், சலாம் பீடிகள், டபுள் பாப்பு பீடிகள், 346 புகையிலை, ஊதுபத்தி, சுருட்டு யானைத்தலை சோப் மொத்தமாகக் கிடைக்கும்.

89-ம் பிறந்த நாள் வாழ்த்து

பெரியார் நீடூழி வாழ்க!

V

A. O. சோமசுந்தரம் செட்டியார்

இரும்பு & பெயிண்ட் வியாபாரம்

H. O. அய்யங்கடைத் தெரு, தஞ்சாவூர்.

B. O. கீழவாசல் ,,

சமுதாயத்தின் கலங்கரை விளக்கம்!

நெ. து. சுந்தரவடிவேலு, M.A.L.T.

எனக்கு அய்யா அவர்களை வெகு நாட்கள் முன்னதாகவே தெரியும். என்னை அய்யா அவர்கள் தெரிந்துகொண்டது 1935-ல் காலஞ்சென்ற திரு. வரதராஜுலு நாயுடு நடத்திய தமிழ் தினசரியில் தமிழ் நாடு நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய பொழுது. ஆனால் டைரெக்டர் ஆன பிறகுதான் ரொம்ப தூரமாக இருக்கிறோம்.

சமுதாயத்தின் கலங்கரை விளக்கம்

அய்யா அவர்கள் கலங்கரை விளக்கு மாதிரி. அது சுழன்றுகொண்டே இருக்கும். கண்ணுக்கு கூச்சம் தந்துகொண்டே சுழலும். அய்யா அவர்கள் மிக உயரத்தில் சுழன்று கொண்டே வெளிச்சம் தருகிறார்கள். கண்கள் கூசும். அய்யா அவர்கள் எதையெல்லாம் பேசுகிறார்கள். புனிதமானவைகள் என்று சொல்லப் படுவனவற்றை யெல்லாம் தூக்கியெறிகிறார்களே! எனவே திகைப்பு அதிர்ச்சி. எப்படி கலங்கரை விளக்கம் சுழன்று சுழன்று பாறைகளையும், மண் மேடுகளையும், வெளிக்காட்டுகிறதோ, அது போல அய்யா அவர்கள். சமுதாயத்திலே இருக்கும் பாறைகளையும் மண் மேடுகளையும் சுட்டிக் காட்டிக்கொண்டே யிருக்கிறார்கள்; காட்டிக்கொண்டே அய்யா இன்னொரு ஆபத்தையும் செய்கிறார்கள். கலங்கரை விளக்கம்போல் சுற்றிக்கொண்டே, காட்டிக் கொண்டே இரும்பதோடு இல்லாமல் அதில் வலிவுள்ள பீரங்கியையும் பொருத்தியுள்ளார்கள். அய்யா என்னும் கலங்கரை விளக்கம் சுழன்றுகொண்டே தவறுகளை சுட்டிக் காட்டுவதோடு அமையாது தவற்றினைச் சுட்டெரித்துக் கொண்டும் சுழலுகிறது! ஆகவே பலருக்குத் துடிப்பு! வேதனை! வெறுப்பு!!!

அய்யாவைப் பற்றி சி. எஸ்.

அய்யா அவர்கள் புகழுக்கு வெட்கப் பட்டார்கள். வெட்கப்பட்டு என்ன செய்வது? புகழ் வந்துகொண்டே யிருக்கிறதே! மிகை இல்லை. அவர்களைவிட புகழில் சிறந்தவர்கள் இருக்கிறார்களா? அவ்வளவு உயர் நிலையில் இருக்கிறார்களா? காரணம் உண்டு. 1961-ல் டிசம்பரில் கனம் சி. சுப்ரமணியம் அவர்கள் இங்கு கல்வி அமைச்சராக இருந்தபொழுது அவர்கள் அய்யாவைப் பற்றி விளக்குவதைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தேன். 1961-ல் சேலம் நகர சபையில் காமராசர் படத்தை அய்யா அவர்கள் திறந்துவைத்தார்கள், அப்படத் திறப்பிற்குப் பின்னர் காரமங்கலம் பள்ளிச் சீரமைப்பு மாநாட்டிற்கு கனம் சி. சுப்ரமணியம், மத்திய கல்வி அமைச்சர் ஸ்ரீ மாலி, கனம் எஸ். வி. இராமசாமி ஆகியோர் வந்திருந்தார்கள். நானும் வந்தேன். ரயில்வே துணை அமைச்சருடன் சலூனில் உட்கார்ந்திருந்தோம், சேலம் காங்கிரஸ் இளைஞர்கள், காங்கிரஸ் கவுன்சிலர்கள் உட்பட பலர் வந்து கனம் சி. சுப்ரமணியத்தைப் பார்த்தார்கள், காமராசர் படத்தை பெரியார் திறந்து வைத்தாரே! நிகழ்ச்சிகள் அனைத்தும் நன்றாக நடந்தனவா? கனம் சி. சுப்ரமணியம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் சிறப்பாக நடந்தது, எங்களுக்கு ஒன்று ஆச்சரியமாகப் போச்சு என்றார்கள். என்ன ஆச்சரியம் என்று சி. எஸ். கேட்டார். புரகிராம் போட்டாச்சு. பெரியார் வருகிறாரே, கடவுள் வாழ்த்துப் போடுவதா, வேண்டாமா என்ற குழப்பம் ஏற்பட்டது. கடவுள் வாழ்த்துப் போட்டால் பெரியார் மனம் புண்படுமே என்று குழம்பி அவர் கொள்கையை ஏற்பதா? நம் கொள்கையை விடுவதா? என்றெல்லாம் விவாதித்துக் கடைசியில் கடவுள்

வாழ்த்துப் போட்டுவிடுவோம். அப்படி பெரியார் வந்தால், கடவுள் வாழ்த்துக்குப் பிறகு நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்லலாம் என்று இருந்தோம். ஆனால் அய்யா அவர்கள் வந்து எல்லோருக்கும் முன் வந்து உட்கார்ந்து விட்டார்கள். கடிகாரத்தைப் பார்த்துவிட்டு தொடங்கலாமா என்றார்கள். நிகழ்ச்சி நிரலைப் பார்த்தார்கள். கடவுள் வாழ்த்து என்று போட்டிருந்தது இவர்கள்தான் எல்லோருக்கும் முன் தடியை ஊன்றிக்கொண்டு நின்றார்கள். பக்கத்தில் இருந்தவர்கள் நீங்கள் உட்காருங்கள் என்றார்கள். நிகழ்ச்சியின் முறைக்கு மாறாக நடக்கமாட்டேன் என்று எழுந்து நின்றார். இது எங்களுக்கு வியப்பாக இருந்தது என்றார்கள். "இதை நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். இதற்குக் கனம் சி. சுப்ரமணியம் அவர்கள் சொன்னார்கள்—

இந்தியாவிலேயே புகழ்மிக்க தலைவர் பெரியார்

"நீங்கள் பெரியாரை நன்கு புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம். பெரியார் எந்தக் கூட்டத்தை, எந்த மக்களை எந்தச் சாராரையும் தாக்கவில்லை? ஒரு குழுவிலே ஒரு அமைப்பிலே தனக்குத் தோன்றுகின்ற தவற்றை தாக்குகிறார். ஆயினும் இன்று இந்தியாவிலே, புகழ்மிக்க தலைவராக இருக்கிறார். காரணம். அவர் வகுத்துக் கொண்ட ஒழுங்கு. தன்னடக்கம் பொறுப்பு தான். இதைத்தான் நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்கள்.

மாணவர்கட்கு ஒழுங்கு, கடடுப்பாடு அவசியம்

இதைத் தம்பிகளுக்கு ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். இப்பொழுது பெரியார் அவர்கள் கடவுள் என்றெல்லாம் பேசினார்கள். கல்லூரி என்பதால் இதோடு விட்டார்கள். கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும் இங்குள்ள முறைக்குக் கட்டுப்பட்டு எழுந்து நின்றார்கள். இதைத் தம்பிகளுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன். ஒழுங்குக் கட்டுப்பாடு வேண்டும் என்பதற்காக அவர்கள் எழுந்து நின்றார்கள் என்றால் சாமி கண்ணைக் குத்திவிடும் என்றெல்லாம் பயந்தா? இல்லை.

வயது ஆகியதைக் காட்டிக்கூட உட்கார்ந்திருக்கலாம். ஆனாலும் எழுத்து நின்றார்கள் என்றால் ஒழுங்குக் கட்டுபாட்டிற்குத்தான். நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களோ, இல்லையோ, எந்த ஒரு பாடம் அல்லது மொழி வேண்டும் அல்லது வேண்டாம் என்கிறீர்களோ அது பாடத் திட்டத்தில் வத்துவிட்டால் அதற்கு உரியவர்கள் வந்து மாற்றுகிறவரையில் அதற்குக் கட்டுப்பட வேண்டும். அதுதான் ஒழுங்கு அதனை அய்யா அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

அய்யாவைவிட பெரியவர்கள் யார் இருக்கிறார்கள், வயதில், செல்வத்தில், துணிச்சலிலே பெரியவர்கள்? அப்படிப்பட்ட துணிச்சல் உள்ளவர்கள் இந்தக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடந்தார்கள். நீங்கள் அதைத்தான் பின்பற்ற வேண்டும்.

பரீட்சையில் நல்ல தேர்ச்சி

இரண்டு இலக்கங்களிலே 100-க்கு 100 தமிழிலே, பொருளாதார சரித்திரத்திலே தமிழில் 100-க்கு 100 வாங்குவது இந்த யுகத்தில்தான் நடக்கும். தமிழில் கால், அரை மார்க்குக்கெல்லாம் போட்டதுண்டு. எனினும் தமிழிலே 100-க்கு 100 தேறியது சிறப்புத்தான். பொருளாதாரத்திலும் 100-க்கு 100. அது ஆங்கிலத்தில் எழுதவேண்டும் அந்த முறையில் 100-க்கு 100 என்றால், இங்குள்ள ஆசிரியர்கள் மட்டுமல்ல மாணவர்களும் தரமானவர்கள். பாடுபடுபவர்கள் என்று தெரிகிறது. மற்ற பாடங்களிலும் 100-க்கு 60, 80, 90 என்று வாங்கி யிருக்கிறார்கள் ஒன்றே ஒன்றில்தான் ஆங்கிலத்தில் 39 சத விகிதம்; இந்த ஆண்டு இல்லை சென்ற ஆண்டு! சென்ற ஆண்டு ஒரு சங்கடமான ஆண்டு. எல்லோருக்கும் தெரியும். சித்தனைச் சிதைவு, குழப்பம் எல்லாம் ஏற்பட்டது: மேலும் ஆங்கிலம் என்றால் அன்னிய மொழியென்று தவறான கருத்தை வளர்த்துக் கொண்டார்கள்.

ஆங்கிலம் அன்னிய மொழியா?

நான் கேட்கின்றேன். இந்த சொக்காய் என்னுடையது. இரவல் இல்லை. நிச்சயம் நீங்கள் நம்பலாம். இந்த சொக்காயை நான் தைத்தது இல்லை; நூலைக் கூட நூற்றது இல்லை. ஆனாலும் என்னுடையது அதற்குரிய விலையைக் கொடுத்து என்னுடையதாக்கிக் கொண்டேன். அது போல உரிய விலையைக் கொடுத்த பிறகு

ஆங்கிலம் எங்கிருந்து வந்தால் என்ன என்று கேட்கிறேன். 6000 மைலுக்கு அப்பால் இருந்து வந்தால் என்ன? நம்மை ஆண்டவன் மொழியாக இருந்தால் என்ன? நமது இந்திய மொழிகளில் சிலவற்றைப் பற்றி சொல்கிறீர்களே, படிக்கக் கூடாது என்று! ஆங்கிலத்தைப் படித்தால் நாக்கை அறுத்துவிடுவேன் என்றா சொல்வான்? நாம் அவனைவிடக் கெட்டிக்காரனாக அல்லவா ஆங்கிலம் பேசுகிறோம். அந்த மொழி எப்படி அன்னிய மொழி? தெரியாத வரையில் அன்னிய மொழி; தெரிந்த பிறகு, கற்ற பிறகு எந்த மொழியும் நம் மொழி, இதை மாணவர் சமுதாயம் நன்கு உணர வேண்டும். ஆகவே இந்த ஆண்டாவது அக்கறையுடனும், பொறுப்புடனும் படிக்க வேண்டும். ஆங்கிலத்திலும் 100-க்கு 100 தேறவேண்டும் என்று சொல்லுகிறேன், எல்லாப் பாடத்திலும் 100-க்கு 100 வாங்க வேண்டும் என்ற வைராக்கியம் தேவை.

நாம் சொல்லிக் கொள்கிறோம். பெருமையாக மூத்தகுடி, முதல்குடி என்று! கம்பன் பரம்பரை என்கிறோம்! இளங்கோ பரம்பரை என்கிறோம். பாரதி பரம்பரை என்கிறோம். நானும் ஏற்றுக் கொள்கிறேன். இவ்வாறு எல்லாம் சொல்லிவிட்டு, 100-க்கு 40 வாங்க முடியவில்லை என்று சொன்னால் உண்மையாக இருக்க முடியுமா?

மாணவர் ஆசிரியர், உழைப்பு அதிகம் தேவை

அனுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன். பட்டி தொட்டிகளெல்லாம் போனேன். கல்லூரிகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும்' நிறையப் போயிருக்கிறேன்.

இந்தக் கல்லூரிக்குத்தான் 12 ஆண்டுகள் கழித்து, முதன்முறை வருகிறேன். ஏன் என்றால், நான் வந்து தூண்டிவிட வேண்டிய அவசியம் இல்லை. தூண்டாமலேயே எல்லாம் நடக்கிறது. மாட்டுத் தொழுவத்தில் நடக்கிற ஆரம்பப்பள்ளி, கொட்டகையில் நடக்கும் உயர்நிலைப் பள்ளி; மாட மாளிகையில் நடக்கும் கல்லூரிகள் இந்த நாட்டில் பலவற்றையும் பார்த்திருக்கிறேன். அதேபோல் 2, 3 நாடுகளையும் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். இவ்வளவையும் பார்த்துவிட்டுச் சொல்லுகிறேன். தமிழ் நாட்டுப் பையனிடத்திலோ, பெண்ணிடத்திலோ, அறிவில் ஒரு குறையும் இல்லை ஆனால் ஒன்றிலே குறை இருக்கிறது உழைப்பிலே குறை யிருக்கிறது. இந்த நாட்டு மாணவ மாணவிகள் குறைவாக உழைக்கிறார்கள். இந்த நாட்டு மாணவர்கள் குறைவாக உழைப்பதுபோல வேறு எந்த நாட்டிலும் மாணவர்கள் குறைவாக உழைக்கவில்லை.

ஆசிரியப் பெருமக்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. இந்த நாட்டில் ஆசிரியர்கள் குறைவாக உழைப்பதுபோல வேறு எந்த நாட்டிலும் உழைக்கவில்லை. இங்கு நல்ல ஆசிரியர் என்றால் நன்றாகச் சொல்லித் தருவார். மாணவர்கள் தெரிந்து கொள்ளலாமேயன்றி அவற்றில் ஈடுபடக் கூடாது. தெரிந்து கொள்வது வேறு, ஈடுபடுவது வேறு. தெரிந்துகொள்ள வேண்டியதில் எல்லாம் ஈடுபடுவது என்று சொன்னால், நாம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்தான் இருக்கவேண்டும். தெரிந்து கொள்வனவற்றில் சிலவற்றில் ஈடுபடலாம். ஆனால் அது நிலைமையைப் பொருத்தது. தேவையைப் பொருத்தது. பருவத்தைப் பொருத்தது. நீங்கள் படிக்கும் பருவத்தில் இருக்கிறீர்கள். படிக்க வேண்டுவன அனைத்தையும் படியுங்கள்! பரீட்சைக்கு மாத்திரமல்ல, அறிவுக்கும், சுயமாக சிந்திக்கவும், படியுங்கள்! இவை பாடம் புத்தகத்தில் இருக்காது. அய்யா அவர்கள் அதைப்பற்றி சொன்னார்கள்.

பாடத்திட்டம்மட்டும் அறிவை பெருக்காது!

அது ஒரு குறை. பாடத்திட்டம் என்பதெல்லாம் 30, 40 ஆண்டுகள் பிந்தியனவாக இருக்கும். நடப்பவைகளெல்லாம் இருக்காது.

அப்பொழுதுதான் பாத்திரமாகச் சொல்லிக் கொடுக்க முடியும். பரீட்சை எழுத முடியும். பாடத்திலுள்ளதைப் படிப்பதானால் மட்டுமே அறிவு வந்ததாக நினைத்துவிடாதீர்கள். அறிவு வளர வேண்டுமானால் நீங்கள் சுயமாகப் படிக்க வேண்டும். நிறையப் படிக்கவேண்டும், பலவற்றைப் படிக்கவேண்டும். வாழ்க்கையைப் பற்றி, உயர் கொள்கையைப் பற்றி எதிர் கோணத்தில் நின்று படிக்க வேண்டும்.

பல் மாறுபட்ட கருத்துக்களைப் படிக்க வேண்டும். சுயமாக சிந்திக்க வேண்டும்.

உலக அரசு அமைக்கும் அறிவைத் தேடுக!!

வாழ்க்கை என்பது பெரிய ஓட்டம், நீண்ட ஓட்டம் பல சோதனைகள், தடுப்புக்கள் உள்ள ஓட்டம். Hurdles race மாதிரி பல நிலைகளைத் தாண்டவேண்டும். அதற்கு சிற்றறிவு போதாது. இங்கொரு மேற்கோள், அங்கொரு மேற்கோள். படித்தால் போதாது. புதிய காலத்திற்கு வேண்டிய அறிவைத் தேடவேண்டும். சென்ற காலத்திற்கு அல்ல. தொல்காப்பியர் காலத்திற்காக உங்கள் அறிவைத் தேடுகிறீர்கள். சிலப்பதிகாரக் காலத்திற்காக? நீங்கள் ராஜ ராஜன் காலத்திற்கா பல்லவன் காலத்திற்கு செல்ல அல்ல அறிவைத் தேடிக் கொள்வது. உலக அரசுக்கு ஆயத்தம் செய்துகொள்ள அறிவைத் தேடுங்கள். நமது குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் அமெரிக்கா சென்றிருந்த பொழுது. உலக அரசு ஏற்பட்டால்தான், மனித குலம் தழைக்கும் என்று சொன்னார்கள். இங்கிலாந்திலும் அதனையே சொல்லிவிட்டு இந்தியா வந்தார். சில மாதங்கள் கழித்து, இந்தியா வந்த அட்லியும் எவ்வளவு சீக்கிரத்தில் உலக அரசு ஏற்படுத்துகிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் நாம் பிழைப்போம் என்றார். உலக அரசு உங்கள் காலத்தில் நிச்சயம் ஏற்படும்.

சுயசிந்தனை அவசியம்!

எனவே நீங்கள் சுய சிந்தனை உள்ளவர்களாக சுய முயற்சி உள்ளவர்களாக, சுய முடிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் தானியங்கிளாக இருக்க வேண்டுமேயன்றி எடுப்பார் கைப்பிள்ளையாக, சொக்கட்டான் காய்களாக இருக்கக் கூடாது. எனவே படியுங்கள். நன்றாகப் படியுங்கள்.

காந்தியும் மாணவர்களும்

காந்தியடிகள் மாணவர்களுக்கு என்ன சொன்னார் என்பதையும் குறிப்பிட வேண்டும். இந்தியர்களுக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுக்கலாம் என்பதை தீர்மானிக்க சைமன் கமிஷனைப் பகிஷ்கரியுங்கள் என்றார் காந்தியடிகள். அலகாபாத்தில் எதிர்ப்பு

பார்ப்பனப் பெண்ணின் சாதி ஆணவம் பற்றி தெ. பொ. மீனுட்சிசுந்தரனார்

"கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த காலத்தே நீதிக் கட்சி இயக்கத்தின் சமுதாயச் சீர்திருத்தத்திலெல்லாம் பங்கு கொண்டேன். மேல்சாதி என்ற வேற்றுமையை அகற்ற வேண்டுமென்ற உணர்ச்சி உச்சநிலையை அடைந்தது. எனது இல்லத்தின் பக்கத்தே அய்யர் குடும்பங்கள் பல இருந்தன. அய்யர் குடும்பப் பெண்கள் அனைவரும் பால்காரன் ஒருவனை "அடா" என்றே அழைத்து வந்தனர். எனக்கு இச்செயல் ஆத்திரம் மூட்டியது, நான் அந்தப் பால்காரனை அழைத்து "இனி மேல் அவர்கள் உன்னை "அடா" என்று அழைத்தால் 'நான் உங்களை அடி" என்று நாளைக் காலை அழைப்பேன்" என்று "நோட்டீசு கொடு" என்றேன். அதன் முடிவு மறுநாள் காலை "அடா" என்ற சொல் "வாப்பா" என்று மாறியது ஈவெரா. அவர்களின் சமுதாயச் சீர்திருத்தங்களை ஒப்புக்கொண்டாலும் அவரது அரசியற் கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

—தெ. பொ. மீ. மணி விழா மலர்.

ஊர்வலம் நடந்தது. அதை நடத்திய பண்டித ஜவஹர்லால் நேரு கைதானார். நான் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தேன். சென்னை மாணவர்கள் "நேருவை விடுதலை செய்" என்று வேலைநிறுத்தம் செய்தார்கள். 60 சதவிகித மாணவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். 40 சதவிகித மாணவர்கள் கல்லூரிக்குச் சென்றார்கள்.

அந்நாளில் மாணவர் பண்புடன் நடந்தனர்!

வேலைநிறுத்தம் செய்த மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்யாத மாணவர்களை தடுக்கவில்லை. ஊர்வலமும் செல்லவில்லை, மாணவர் தலைவர்கள் 5, 6 பேர். இன்று பெரியவராக ஒருவர் இருக்கிறார். வேலை நிறுத்தம் வெற்றியெனினும், நேரு விடுதலை ஆகும் வரையில் தொடர்ந்து வேலைநிறுத்

தம் நடக்கும் என்றும், வாழ்த்துங்கள் என்றும் காந்திக்குத் தந்தி கொடுத்தனர். இரண்டு மணி நேரத்தில் பதில் வந்தது. எல்லோரும் கல்லூரிக்குத் திரும்பிச் செல்லுங்கள் என்ற பதில் வந்தது. அடுத்த நாள் எல்லோரும் கல்லூரிக்குச் சென்றனர். வேலைநிறுத்தம் செய்தவர்கள். செய்யாத வர்களைக் கிண்டல் செய்யவில்லை. பிறகு சில மாதங்கள் கழித்து வேலூர் வந்த காந்தியடிகள் மாணவர்கள் கூட்டத்தில் பேசுகையில் 'இந்தப் படிப்பு, அடிமைப் படிப்பு' வேண்டாம் என்கின்றேன். ஒன்று படிப்பை உதறித்தள்ளிவிட்டு. என்னுடன் சேருங்கள், அல்லது படிப்பில் கவனம் செலுத்துங்கள். ஆற்றில் ஒருகால், சேற்றில் ஒருகால் வேண்டாம். அப்படிப் படித்துக் கொண்டே தேசத் தொண்டு செய்ய வேண்டுமெனில் விடுமுறை நாட்களில் கிராமந்தோறும் சென்று தேசபக்தியை ஊட்டுங்கள் என்றார்.

எனவே தம்பிகளே! நீங்கள் விதை நெல்லாக இருக்கின்றீர்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். வேறு எளிய வர்கள், உங்களை, விதை நெல்லைக் குத் சாப்பிட் இடமளிக்காதீர்கள்.

மார்க் மோசடி

மார்க்கைப் பற்றி அய்யா அவர்கள் சொன்னார்கள். மார்க் 60, 70 என்று கேட் கிறீர்களே. என்ன யோக்கியதை? என்று கேட்டார்கள். சமீபோதய . இயக்கத்தின ரால் நடத்தப் பெற்று மதுரையிலிருந்து வெளிவருகிற இராமராஜயம் என்னும் பத்தி ரிக்கையில் 4—3—66 இதழில் உயர்தர கல்வி கிராம மக்களுக்கு எட்டவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறது புள்ளி விபரமும் தந் திருக்கிறார்கள். எஞ்சினியரிங் கல்லூரி களில் கிராமப்புறத்தாருக்கு 30 சதவிகிதம் இடம் கிடைத்துள்ளது. நகரத்திலுள்ளோ ருக்கும் 70 சதவிகிதம். ரீஜனல் இன்ஸ்டி யூட் கிராமப் பையன்களுக்கு கிடைத்த இடம் 25 சதவிகிதம். கிண்டி அய் அய். டி - யில் 15 சதவிகிதம். சம்பள அடிப்படையில் பார்த்தால் தொழிளாளர் வீட்டுப் பிள்ளை கள் அய். அய். டி. யில் 5 சதவிகிதம். ரீஜ னல் இன்ஸ்டியூட்டில் 8 சதவிகிதம் மாநில இன்ஜினியரிங் கல்லூரிகளில் 12 சதவிகிதம் இடம் பெறுகிறார்கள் என்று அப்பத்திரிகை சுட்டிக் காட்டியிருக்கிறது.

இன்னும் கல்வி வெள்ளம், கிராமத்துப் பிள்ளைகளுக்கு போய்ச் சேரவில்லை. ஆரம் பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் இவை எல்லாம் வளர்ந்தும் இன்னும் பொறியியற் கல்லூரிகளுக்கு கல்வி வெள்ளம் போய்ச் சேரவில்லை. சேராதபடி பல ஓட்டைகள். இவற்றையெல்லாம் அடைக்கவேண்டும். அத்தகைய ஓட்டை களிலே ஒன்றுதான் 'மார்க்' என்பது என்னு டைய பையன் 80 சதவிகிதம் வாங்குகிறான், கடைநிலை ஊழியர், சேவகர் பையன் 40 சத விகிதம் வாங்குகிறான் என் பையன் கெட் டிக்காரன் என்றும் அவன் பையன் முட்டாள் என்றும் தானே நீங்கள் சொல் கிறீர்கள். கடைநிலை சேவகர் பையன்தான் என் பையனைவிடக் கெட்டிக்காரன் என்று இன்றல்ல, நேற்றல்ல என்றைக்கும் சொல்லி வருகிறேன்.

ஏழைகள் படிக்க வசதிக் குறைவு

கடைநிலை ஊழியன் குடியிருப்பது ஓர் அறை வீடு. ஒரு மூலையில் சமயல் நடக்கும். அடுப்புப்புகை ஒரு பக்கம். இன்னொரு பக் கம் தகப்பன், நான் கொடுத்த டோசை அங் குக் கொடுத்துக் கொண்டிருப்பான். பெண் டாட்டியை ஒரு மூலையில் உட்காரவைத்து திட்டிக்கொண்டிருப்பான்.

இதற்கிடையில் ஒரு சின்னக் காடை விளக்கு வைத்துக்கொண்டு படிப்பான பையன். அந்தப் பையன் 40 சதவிகிதம் வாங்குவது என் பையன் 80 சதவிகிதம் வாங்குவதைவிட உயர்ந்தது, நியாய புத்தி உள்ளவன், கல்வியாளன், யோக்கிய மானவன் இதைத்தான் புரிந்துகொள்ள வேண்டும். பெரிய ஆபீசர் வீட்டுப் பிள்ளைகளுக்கு எல்லா வசதிகளும் உள்ளன மின்சார விசிறியில் காற்று, வேறு வசதிகள், இன்னும் சிலபேர் வீடுகளில் (air conditoing) எல்லாம் உண்டு. பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர், இங்கிலீசுக்கு ஒரு ஆசிரியர், தமிழுக்கு ஒருவர். ஆகவே அவன் 80 சதவிகிதம் மார்க் வாங்கினால் அது கெட்டிக்காரத்தனமா? ஆக சூழ் நிலையைத்தான் கவனிக்கவேண்டும். ரூ. 5 முதல் வைத்து நாணயமாகப் பாடுபட்டு ரூ 500 ஆக்கினால் அவன் திறமைசாலி. ரூ. 5 லட்சம் வைத்து மேற்கொண்டு ரூ 5000, 6000 மட்டும் சேர்த்தால் இவனும் திறமைசாலி என்று சொல்ல முடியுமா?

மார்க்கை நினைக்கிறபோது அவன் சூழ்நிலையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏன் சலுகைகள் வைத்திருக்கிறார்கள். அதனால் தான் முதல் தலைமுறை கல்லூரிகளை எட்டிப் பார்க்கிறார்கள்.

அமெரிக்காவிலே மாணவர்களுக்கு திடீர் திடீர் என்று சோதனை போடுகிறார்கள். மார்க்கைப் பார்க்கிறார்கள். தெரிகிறது, ஜானுக்கும், ஜேம்ஸ்க்கும் இங்லீஷ் வரமாட்டேன் என்கிறது. இன்னும் மூன்று பையன்களுக்கு கணக்குக் கஷ்டம் எனத் தெரிகிறது. வேறு நான்கு பேர்களுக்கு விஞ்ஞானம் கஷ்டம் எனத் தெரிகிறது. (பெண்களுக்கு விஞ்ஞானம்தான் நன்றாக வருகிறது. பெண்கள் கோபித்துக்கொள்ள வேண்டாம்) மார்க் குறைந்தவர்களை மாங்கனியைப் பிரிப்பதுபோல் பிரிக்கிறார்கள். கெட்டிக்காரர்களைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. மற்றவர்களைப் பிரித்து விட்டு, உனக்குப் படிப்பு வராது என்று சொல்வதில்லை.

பலவீனம் மாணவரிடம் தனிக் கவனம்

மார்க்குக் குறைந்தவர்களைக் கூடச் சேர்த்துக் கொள்கிறார்கள். ஒருவனைப் படிக்கவவக்க பல ஆயிரம் டாலர் ஆகிறதே. மார்க் வாங்காத பையன்களை சேர்க்கிறீர்களே என்று கேட்டேன். மார்க் வாங்காதவர்கள் இந்த நாட்டிலேதான் வாழ்வார்கள். சேர்க்காவிட்டால் வெறுப்பு கொள்வார்கள். மார்க் குறைந்தாலும் பரவாயில்லை. சேர்த்துக்கொண்டு மேலும் 2 மணி நேரம் படியுங்கள் என்றால் படிப்பார்கள். முடியாமல் தாங்களாகவே விட்டுச் சென்றாலும், திருப்தியுடன் செல்வார்கள். அதையேதான் நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். வெறுப்பை வளர்க்கப் போகிறீர்களா? அல்லது ஒற்றுமை, சமத்துவத்தை வளர்க்கப் போகிறீர்களா? இதற்காக தியாக உணர்ச்சியுடன் மார்க் குறைந்த பின்னைகளை எடுக்கவேண்டும்.

தியாகராய கல்லூரி முதல்வர் சண்முகனாரின் தியாகம்

சென்னை வண்ணாரப்பேட்டை தியாகராய கல்லூரி முதல்வர் திரு. எம். கே. சண்முகம் மார்க் குறைந்த பிள்ளைகளையே சேர்த்தார். மார்க் உள்ளவர்களை விவேகானந்தா, கிருஷ்டியன், லயோலா, கல்லூரிகளுக்குச் செல்லுங்கள் என்றார். மார்க் வாங்காதவர்களை நிறையத் தேறவைத்தார். எதனால்? தன் தியாக உணர்ச்சியினால் எல்லா ஆசிரியர்களும் மார்க்கு வாங்காத மாணவர்களை முன்னேறச் செய்வதினைத் தொண்டாகக் கருதவேண்டும். ஆசிரியர்கள் தியாக உணர்ச்சியுடன் கசப்பில்லாது பாடுபடுபவர்கள் சென்ற தலைமுறையாக இருந்தது. இந்தத் தலைமுறை படிப்பு வராது பலருக்கு என்ற எண்ணத்தைத் துடைக்கும் தலைமுறையாக இயங்கவேண்டும்.

[6—3—66ல் ஈரோட்டில் சிக்கைய நாய்க்கர் மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற நிறுவனர் நாள் விழா பேருரைப் பகுதி]

வள்ளுவர் பதிப்பகம்

வடக்கு இராச வீதி, புதுக்கோட்டை

1. அண்ணல் சுப்பிரமணிய னார் மணிமலர் ரூ. 3-00
2. திருக்குறள் மூலம் (மையடக்கப் பதிப்பு) ரூ. 0-50
   டாக்டர் சி. இலக்குவனார் M.A., M.O.L., Ph. D. அவர்கள் வழங்கிய நூல்கள்
3. தொல்காப்பிய ஆராய்ச்சி ரூ. 5-00
4. பழந்தமிழ் ரூ. 4-00
5. இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்ககாலம்) ரூ. 2-50
6. திருக்குறள் எளிய பொழிப் புரை (இரண்டாம் பதிப்பு) ரூ. 2-50
   கவிஞர் முடியரசனார் வழங்கும்
7. பூங்கொடி (மொழிக்கொரு காப்பியம்) ரூ. 4-00
8. வாழ்வு நெறி (தொகுப் பாசிரியர் டாக்டர் வி.கே. இராச்சந்திரன் M.D. (அச்சில்)

எம் தலைவர்போல்

எவரே உண்டு?

பாவலர் பாலசுந்தரம்


தன்னாலே நீக்கொண்ணாத துன்ப நாளும்,
தரித்திரத்தைப் போக்கொண்ணாத் தொல்லை நாளும்,
பிண்ணாக்கு வழக்கொன்று நேர்ந்த நாளும்,
பிணிநீங்கா தென்றுபயம் கொண்ட நாளும்,
இன்னுயிருக் காபத்து வந்த நாளும்,
எதிரிகளால் சூழ்ந்துயிரை வாங்கு நாளும்,
உண்ணமுதுக் கில்லாது போன நாளும்,
ஒருவனுண் டென்றறிவை இழக்கு நாளே.

தெய்வத்தை வேண்டினான் குழந்தை வாழ,
சீக்கான குழந்தையின் உயிரைக் காக்கப்
பைநிறையக் காசள்ளிப், பூசைப் போடப்,
பற்பலவூர்க் கோயிலெல்லாம் சென்றான்; வந்தான்.
மெய்யான சிவபக்தன் விட்ணு பக்தன்,
மேனியெலாம் பூச்சாக இருக்கும் பக்தன்;
மெய்சோர்ந்து சேயினுயிர் பிரிதல் கண்டான்,
மெய்யறியும் நாத்திகனாய் மாறிவிட்டான்.

என்னாலே முடிந்தவரை சிகிச்சை செய்வேன்;
ஈசனுண்டு காப்பாற்ற என்று சொல்லும்
புண்ணான வார்த்தைகளால் டாக்டர் வாழும்
பொல்லாத காலம்தான் தொலைவ தெந்நாள் !
எண்ணிஎண்ணி இந்தப்பணம் எதற்குத் தானே ?
ஏழெட்டு முறையலைதல் வீணே தானோ ?
மண்ணான மூடபக்தி கொண்ட டாக்டர்
மதிகொண்டு கவனித்தல் எந்த நாளோ ?

பெற்றவற்றை வளர்த்திடவோ அறியா முட்டாள்,
பீப்பாய்போல் உணவூட்டித், துருத்த வைத்து,
முற்றிவிட்ட நோய்கண்டு, மூன்றே காசை
முடிந்து விட்டால் காளிவந்தா சிகிச்சை செய்வாள் ?
உற்றதுணைப் பகுத்தறிவால் உணர்ந்து பார்த்து
உன்னிலையைத் திருத்திக்கொள் ! என்று சொல்லும்
பொற்றலைவர் எம்தந்தை பெரியார்கொள்கை
பொலிவடைவ தின்னாட்டில் எந்த நாளோ ?

அண்ணனுன்டு, தம்பியுண்(டு), அக்காள் உண்டு,
அப்பனுண்டு, தங்கையுண்(டு), அம்மாள் உண்(டு),
அண்ணியுண்(டு), அத்தையுண்(டு), அத்தான் உண்டு,
அருமைமறு மக்களுண்(டு), அம்மான் உண்டு,
சின்னப்ப னுண்டு, சித்தி, பாட்டி உண்டு,
சீராட்டப் பாட்டனுண்டு. ''தந்தை'' என்று
இந்நாடே முறைகொண்டு மகிழ்வதற்கு
எம்தலைவர் பெரியார்போல் எவரே உண்டு ?



88 — 89

இடையில்!

தந்தை பெரியார் அவர்களின் சுற்றுப்பயணம்

1966 செப்டம்பர் 17 முதல் தொடர்ந்த பயணக் குறிப்பு

செப்டம்பர் 1966 — **ஊர்கள்**

17-ம் நாள்	...	அரியலூர் காலை: (திராவிடர் கழக மாநாடு) மாலை: (பிறந்தநாள் விழா)
18 ,,	...	அரியலூர் (சமதர்ம மாநாடு)
19 ,,	...	சீரங்கம் (பிறந்தநாள் விழா)

செப்டம்பர்

20 ,, ... திருச்சி (பெரியார் சுயமரியாதை ஸ்தாபன - பள்ளி களின் நிறுவனர் நாள்)

30 ,, ... சென்னை மயிலாப்பூர் (பொதுக்கூட்டம்)

அக்டோபர்

1-ம் நாள் ... தஞ்சை
காலை 10 மணி: (மனிதை வர்த்தகர் சங்க வரவேற்பு)
மாலை 5 மணி, (தபால் இலாகா ஊழியர் தேனீர் விருந்து)
மாலை 7 மணி: (பொதுக்கூட்டம்)

2 ,, ... திருச்சி: மேலப்புதூர்

3 ,, ... ஆம்பூர்

4 ,, ... குடியாத்தம்

5 ,, ... சத்துவாச்சாரி

6 ,, ... ஊளுர்

7 ,, ... ஆற்காடு

8 ,, ... பூதலூர் (தஞ்சை மாவட்டம்)

12 ,, ... கரூர்: தாந்தோனிமலை
காலை: யூனியன் மருத்துவர் சங்க கட்டிட அடிக்கல் நாட்டுவிழா
மாலை: (பொதுக்கூட்டம்)

20 ,, ... அரக்கோணம்

23 ,, ... காலை: சித்தலவாய் (திருமணம்)
மாலை: பசுபதிபாளையம் (கரூர்) பொதுக்கூட்டம்

25 ,, ... கோபிச்செட்டிபாளையம்

26 ,, ... கோயமுத்தூர்

27 ,, ... பொன்மலை (திருமணம்)

30 ,, ... காலை: பாண்டிச்சேரி (திருமணம்)
மாலை: கடலூர் (பொதுக்கூட்டம்)

நவம்பர்

6-ம் நாள் திருவாரூர் (சுயமரியாதை மாநாடு)

12 ,, ... நாச்சியார்கோயில்

நவம்பர்

13 ,, ... சோழபுரம் (பிறந்தநாள் விழா)

14 ,, ... காலை : ஆலங்குப்பம் (காதணிவிழா)
மாலை : பெரிய ஆனைவாரி (பொதுக்கூட்டம்)

18 ,, ... சென்னை திருவல்லிக்கேணி (74-வது வட்டம்)

27 ,, ... மதுரை (மாவட்ட சுயமரியாதை சோஷ்யலிச மாநாடு)

29 ,, ... எடகீழையூர் (மன்னார்குடி)

டிசம்பர்

2-ம் நாள் ... மேலவாசல் (மன்னார்குடி)

3 ,, ... தஞ்சை (திராவிடர் கழக மாநாடு)

4 ,, ... ,, (சமதர்ம மாநாடு)

9 ,, ... கும்பகோணம்

10 ,, ... விழுப்புரம் (திராவிடர் கழக மாநாடு)

11 ,, ... ,, (சமதர்ம மாநாடு)

14 ,, ... காலை : முசிரி (புதுமனை புகுவிழா)
மாலை : திருச்சி (பொதுக்கூட்டம்)

16 ,, ... திருச்செங்கோடு (திராவிடர் கழக மாநாடு)

17 ,, ... ,, (சமதர்ம மாநாடு)

18 ,, ... காரைக்குடி : (இராமநாதபுரம் மாவட்டம்) பெரியார் பிரசாரத்திட்ட வழிவகுப்பு மாநாடு

19 ,, ... ,, (திராவிடர் கழக சமதர்ம மாநாடு)

21 ,, ... புள்ளம்பாடி (லால்குடி வட்டம்)

22 ,, ... திருச்சி—மார்சிங்பேட்டை

24, 25 ,, ... திருநெல்வேலி :
(திருநெல்வேலி—கன்னியாகுமரி மாவட்ட சமதர்ம மாநாடுகள்)

27 ,, ... சேலம் :
மாலை 3 மணி : (நகர தி. க. கமிட்டி கூட்டம்)
இரவு 7 மணி : (பொதுக்கூட்டம்)

28 ,, ... வேலூர் : நாமக்கல் வட்ட (சுயமரியாதை—சமதர்ம மாநாடு)

29 ,, ... உரத்தநாடு : (உரத்தநாடு வட்ட திராவிடர் கழக மாநாடு)

30 ,, ... ,, (சமதர்ம மாநாடு)

ஜனவரி 1967

3	,,	...	குடவாசல் (நன்னிலம் வட்ட திராவிடர் கழக மாநாடு)
4	,,	...	,, (சமதர்ம மாநாடு)
6	,,	...	திருச்சி (பொதுக்கூட்டம்)
7	,,	...	சென்னை பெரியார் திடல் ராதா மன்றம் (சென்னை மாவட்ட மாநாடுகள்) சமதர்ம மாநாடு
8	,,	...	,, (திராவிடர் கழக மாநாடு)
9	,,	...	ஆவடி (பிறந்த நாள் விழா)
19	,,	...	திருச்சி—பீமநகர்
20	,,	...	,, பென்சனர் தெரு
21	,,	...	கரூர் (திருச்சி மாவட்ட வாக்காளர் மாநாடு)
22	,,	...	,, தி. க.—சமதர்ம மாநாடுகள்
23	,,	...	திருவையாறு
24	,,	...	கந்தர்வக்கோட்டை
25	,,	...	சேத்தியாத்தோப்பு, ஓடாக்க நல்லூர்
26	,,	—	நெய்வேலி
27	,,	...	ஸ்ரீமுஷ்ணம், குமரக்குடி, சிதம்பரம்
28	,,	...	வேலூர் (வடாற்காடு மாவட்ட மாநாடுகள்—சமதர்ம மாநாடு)
29	,,	...	,, (திராவிடர் கழக மாநாடு)
30	,,	...	திருவத்திபுரம்
31	,,	...	பெரணமல்லூர்

பிப்ரவரி

			சென்னை (பொதுக்கூட்டங்கள்)
1-ம் நாள்		...	,, ஆலந்தூர், கோட்டூர்–அடையாறு, வண்ணாரப்பேட்டை
2	,,	...	,, பட்டாபிராம், புரசவாக்கம், பெரம்பூர்
3	,,	...	சேலம் I சேலம் II தொகுதிகள்
5	,,	...	காஞ்சிபுரம் : (செங்கற்பட்டு மாவட்ட தி. க.—சமதர்ம மாநாடுகள்)
			தொடர்ந்து தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள்
6	,,	...	வலங்கைமான், பாபனாசம்

பிப்ரவரி

7	,,	...	மாயவரம்
9	,,	...	திருச்சி
10	,,	...	ஈரோடு
11	,,	...	நாமக்கல், கபிலமலை
12	,,	...	பட்டுக்கோட்டை
13	,,	...	வேதாரண்யம்
14	,,	...	மன்னார்குடி
15	,,	...	தர்மபுரி
16	,,	...	திருவண்ணாமலை
17	,,	...	துறையூர், உப்பிலியபுரம்
18	,,	...	காலை 10 மணி : பண்ணைக்காடு
			பகல் 2 மணி : கொடைக்கானல்
			மாலை 6 மணி : தேவதானப்பட்டி
			இரவு 8-30 மணி; பெரியகுளம்
19	,,	...	திருவையாறு

ஏப்ரல்

7-ம் நாள்		...	காலை : ராயபுரம் (மன்னார்குடி) திருமணம்
			மாலை : மன்னார்குடி (பொதுக்கூட்டம்)
8	,,	...	காலை : காவாலக்குடி (காதணிவிழா)
			மாலை : கண்கொடுத்தவனிதம் (பொதுக்கூட்டம்)
9	,,	...	திருச்சி : (சுயமரியாதை இயக்க—திராவிடர் கழக தனிக் பேரவைக் கூட்டம்
17	,,	...	கரூர் (திருமணம்)
18	,,	...	தஞ்சை (பள்ளி ஆண்டு விழா)
22	,,	...	பேட்டைவாய்த்தலை (திருமணம்)
23	,,	...	திருச்சி
25	,,	...	வேப்பத்தூர் (கும்பகோணம்)
26	,,	—	காலை : பூந்தோட்டம் (திருமணம்)
			மாலை : ஆலங்குடி (பொதுக்கூட்டம்)

ஏப்ரல்

27 ,, ... காலை : மன்னார்குடி
மாலை : நன்னிலம்

28 ,, ... காலை : ஓசூர் (பள்ளிக் கட்டிட திறப்பு விழா)
மாலை : சிதம்பரம் (நகர மன்ற வரவேற்பும், பொதுக் கூட்டமும்)

29 ,, ... மணப்பாறை (காதணிவிழா)

30 ,, ... காலை : ரங்காபுரம் (திருமணம்)
மாலை : திருப்பத்தூர் (பொதுக்கூட்டம்)

மே

19-ம் நாள் ... புதுக்கோட்டை (திருமணம்)

21 ,, ... நாகரசம்பட்டி (திருமணம்)

22 ,, ... இரும்புலிக்குறிச்சி

24 ,, ... விடயபுரம் (திருமதிக்குன்னம்) சுயமரியாதை பிரச்சார பள்ளி திறப்பு விழா

27 ,, ... திருநெல்வேலி

28 ,, ... நாகர்கோவில்

31 ,, ... வடபாதிமங்கலம்

ஜூன் மாதம்

1-ம் நாள் ... இன்னம்பூர்

3 ,, ... திருச்சி—காலை : (திருமணம்)

7 ,, ... திருச்சி மாலை : (பொதுக்கூட்டம்)

9 ,, ... ,, (திருமணம்)

10 ,, ... பெலாகுப்பம்

11 ,, ... இரும்புலிக்குறிச்சி

12 ,, ... காலை : சிதம்பரம் (திருமணம்)
மாலை : திட்டக்குடி

18 ,, ... குளித்தலை :
காலை : (திருமணம்)
மாலை : (தாலுக்கா தி. க, கமிட்டிக் கூட்டம்)
இரவு : (பொதுக்கூட்டம்)

(ஜூன் மாத பிற்பகுதியில் தந்தை பெரியார் அவர்களுக்கு உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டதை யொட்டி பல்வேறு நகர—கிராமங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டன)

ஜூலை மாதம்

9-ம் நாள்	...	தர்மபுரி (திருமணம்)
14 ,,	...	காரைக்கால்: காலை: (முருகன் லாட்ஜ் திறப்புவிழா) மாலை: (பொதுக்கூட்டம்)

(ஜூலை 15ல் தஞ்சாவூரில் ஒரு நிகழ்ச்சிக்காக சென்ற நேரத்தில் தந்தை பெரியார் அவர்களுக்கு மீண்டும் உடல்நலக்குறைவு ஏற்படவே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதால் பல்வேறு நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன)

ஆகஸ்ட்

9 ,,	...	திருச்சி: "திருமதி பெரியார் ஈ. வெ. ரா. மணியம்மை குழந்தைகள் விடுதி" அடிக்கல் நாட்டுவிழா
21 ,,	...	மத்தூர் (திருமணம்)
23 ,,	...	கரூர் (திருமணம்)
26 ,,	...	சென்னை (திருமணம்)

தமிழர்களின் தன்மான உணர்ச்சியினைத்
தட்டி எழுப்பும் 'விடுதலை' நாளிதழ்
வாங்கிப் படியுங்கள்

மனிதராக வாழும் மனிதர் பெரியார்

பெ. எதிராஜ், எம்.எல்.சி.,

(செயலாளர், தஞ்சை மாவட்ட காங்கிரஸ்)

மனிதர்களாகப் பிறந்திருப்பவர்கள் எல்லோருமே மனிதர்கள் என்றுதான் அழைக்கப்படுகிறார்கள், ஆனால் மனிதர்களாகப் பிறந்தவர்களில் எத்தனை பேர் மனிதர்களாக வாழ்த்தனர்? இப்போதும் வாழ்ந்துகொண்டுடிருக்கின்றனர் என்பது பற்றிய உண்மையை யாரும் பரிசீலிப்பதில்லை. மனிதர் என்றால் அவர் மனிதாபிமானமுள்ளவராக இருக்கவேண்டும். இந்த மனிதாபிமானம் என்பது எப்போது ஒரு மனிதருக்கு ஏற்படும்? எல்லோரையும் சமத்துவமாக மதிக்கும்போதுதான் மனிதாபிமானம் ஏற்படும். மனிதர்களாகப் பிறந்தவர்களில் எல்லோரையும் சமத்துவமாக மதிக்கும் மனிதர்கள் எத்தனை பேர்?

பிறவியிலேயே இவன் தாழ்ந்தவன், அவன் உயர்ந்தவன்; பாபம் செய்தவன் தாழ்ந்த குலத்தினனாகவும், புண்ணியம் செய்தவன் உயர்ந்த குலத்தினனாகவும் பிறக்கிறான் என்று சொல்லுகிற மனிதர்களை மனிதர்கள் என்று சொல்ல முடியுமா? ஒருவன் ஏழையாக இருப்பதற்கும், ஒருவன் பணக்காரனாக இருப்பதற்கும் அவனவன் செய்த கர்ம வினைதான் காரணம் என்று சொல்லும் மனிதர்களை மனிதர்கள் என்று கூற முடியுமா? ஒருவன் நன்றாக படிப்பதற்கும், ஒருவன் படிக்காமலிருப்பதற்கும் சரஸ்வதி கடாட்சந்தான் காரணம் என்று சொல்லுகிறவர்களை மனிதர்கள் என்று அழைக்க முடியுமா? ஒருவன் நோயாளியாக இருப்பதும், ஒருவன் பிச்சை எடுப்பதும் கடவுள் தண்டனை என்று சொல்லுகிறவர்களை மனிதர்கள் என்று பேசலாமா?

ஆனால் இன்றைய சமூக அமைப்பில் பிறவியிலேயே உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை–பணக்காரன் என்பதை எல்லோரும் நம்பும்படியாக கடவுள், மதம், தருமம் என்ற பெயர்களால் மதவாதிகள் மக்களைக் கட்டுப்பாடாக ஏமாற்றி விட்டனர். மனித உண்மை என்னவென்பது பற்றிக்கூட மக்கள் புரிந்து கொள்ளமுடியாத ஒரு சூழ்நிலையை எங்கும் உண்டாக்கி விட்டவர்கள்தான் மனிதர்களுக்கென பல தருமோபதேசங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். இத்தகைய மனிதர்களின் எழுத்துக்களை நம்பியே நாம் நாசமாகி விட்டோம். இந்த நாசத்திலிருந்து மனித சமூகத்தை மீட்கும் பணியில் பல மனிதர்கள் உலகெங்கும் தீவிரமாக ஈடுபட்டார்கள். அவ்வாறு ஈடுபட்ட பலரில் சிலருக்கு தக்க சூழ்நிலை இல்லாமையாலும், சிலர் தமது லட்சியத்தில் உறுதியாக இல்லாமையாலும், சிலர் மற்றவர்களின் தயவு தாட்சண்யத்துக்கென லட்சியத்தைத் தளர்த்தியதாலும் அவர்களால் மனிதர்களை உண்மையான மனிதர்களாக ஆக்க முடியவில்லை.

ஏதோ ஒரு சிலர் மட்டுமே தமக்கேற்பட்ட எல்லா இடர்களையும், எதிர்ப்புக்களையும் சமாளித்து வெற்றி பெற்றிருப்பதாக வரலாறுகள் கூறுகின்றன. சாதியில் உயர்வு, தாழ்வு கற்பிப்பது ஏமாற்றுவேலை. ஏழையைச் சுரண்டுகிறவர்கள் பணக்காரர்

களாவதற்குக் காரணம் ஏழைகளின் அறிவின்மை. படிப்பு வராமைக்குக் காரணம் சூழ்நிலை, மனிதர்களுக்குள் எல்லோருக்கும் சமசந்தர்ப்பமும் சமவாய்ப்பும் கொடுக்கப்பட்டால் எல்லோருமே உண்மையான மனிதர்களாக ஆகிவிடுவார்கள். இந்த உண்மையை மனிதர்கள் என்றுக் கூறிக் கொள்ளும் எல்லோரும் உணருவதில்லை. அவ்வாறு உணர்ந்தபலரும் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறவில்லை. இதையெல்லாம் செய்யாதவர்களை மனிதர்கள் என்று எவ்வாறு அழைப்பது?

தந்தை பெரியார் அவர்கள் நீண்ட காலமாக ஒரு புதிராகவே இருந்தார். இந்தியசமுதாயத்தில் ஒரு களங்கமான மனிதர் என்றே கருதப்பட்டார். கடவுள் எதிரி, மத விரோதி, பணத்துக்குப் பகைவர் என்றெல்லாம் கூறப்பட்டது. அதே சமயத்தில் தந்தை பெரியார் அவர்கள் மனிதர்களைப் பார்த்து முட்டாள்களே, அறிவிலிகளே, உண்மையற்றவர்களே, ஒழுக்கம் கெட்டவர்களே, மற்றவர்களுக்குப் போதிக்கின்ற புத்தியில்லாதவர்களே, திருந்துங்கள் உண்மையை உணருங்கள், கற்றுக்கொள்ளுங்கள் சிந்தனை செய்யுங்கள், தெளிந்து துணிவு கொள்ளுங்கள், அறிவுக்கேற்றதை உடனே செய்யுங்கள், ஏமாற்றுகிறவர்களையும் சுரண்டுகிறவர்களையும் முடிந்தால் திருத்துங்கள், திருத்த முடியாவிட்டால் அடக்குங்கள். ''எல்லோரும் வாழவேண்டும், எல்லோரையும் வாழவைக்கவேண்டும்'' என்பதே மனிதாபிமானம். மனித தருமம், மனிதத்தன்மையாகும் என்று மனிதர் என்பதற்கான இலக்கண உண்மையை உணர்த்தி வருகிறார். இந்த மனித குணத்துடன் வாழ்கிற சிலருள் தந்தை பெரியார் அவர்கள் முதன்மையானவர்கள். எனவே தான் 'மனிதராக வாழும் மனிதர்-பெரியார்' என்று அழைக்கிறோம். மற்றவர்களையும் மனிதர்களாக்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் தந்தை பெரியார் அவர்கள் நீடுழி வாழவேண்டும் என்றும் விரும்புவோம்.

'பார்ப்பனரை நஞ்சினும் கொடியராக நினைத்து ஒதுக்குவீர்!'

'' தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குப் பலவகையிலும் தடையாய் நிற்கும் ஆரியப் பார்ப்பனர் தம்மை அணுகுவதற்கும் தாம் அவர் சொல்லைக் கேட்டு நடத்தற்கும் தமிழர் எவரும் சிறிதும் இடந்தருதல் ஆகாது. தமிழ்நாட்டுத் திருமடங்களின் ஆசிரியர்களும் குறுநில மன்னர்களும் (சமீந்தார்கள்). செல்வர்களும். கற்றவர்களும், பிறரும் இப்போதும் தம்முடைய சீரும் சிறப்பும் அறிவும் புகழும் இழந்து தமது மேனிலை குலைந்து சிறுமை எய்தி அல்லல் உழப்பதெல்லாம் ஆரியப் பார்ப்பனரைத் தம்முடன் சேர்த்து அவர் வழி நடத்துதலினாலேயாம். தமிழரின் செல்வமும், சிறப்பு உடையார் இவரென்று கண்டால் ஆரியப் பார்ப்பனன் உடனே அவர்பாற் சென்று சூழ்ந்து அவருக்கு இணங்கியபடியாக எல்லாம் நடந்து, அவர்பால் தாம் பெற வேண்டியன எல்லாம் நயமாகப் பெற்றுக் கொண்டு, அவர் அச் செல்வமும் சிறப்பும் இழத்தற்கு வேண்டும் வழிவகைகளெல்லாம் திறமையாகச் செய்து முடிவில் அவர் வறியராகி தாழ்வடைந்தபின் அவரைவிட்டு நீங்குவர்; தம்மாற் சிறுமையடைந்த அவரைப் பின்னர் திரும்பியும் பாரார்; அவரைக் காண நேர்ந்தால் அவரை அறியாதார் போல் அகன்று ஒளித்துப் போவர். இங்ஙனம், முன்னமேயே உயர்ந்து நிற்கும் தமிழ்ப் பெரியாரையும் கரவாகக் கொத்துத் தாழ்த்தித், தாழ்ந்து கிடக்கும் தமிழரையும் உயரவொட்டாமல் பெருந்தடைகளையும் விளைவித்து தமிழ் மக்களெல்லார்க்குந் தொடர்பாக நீதி புரிந்துவரும் பார்ப்பனரை நஞ்சினும் கொடியராக நினைந்து அவர் எவ்வகையிலும் தம்பால் அணுகுதற்கு இடந்தராது விழிப்பா யிருத்தலே தமிழர் ஒவ்வொருவரும் கருத்தூன்றிக் கைக்கொள்ளற்பாலதாகிய முதற் பெருங் கடமையாகும்.

—மறைமலை அடிகள்
'வேளாளர் நாகரிகம்'
என்ற நூலில்.

தி. மு. க. அரசும்-பார்ப்பன ஏடுகளின் போக்கும்!

அண்மையில் அமைந்த தி. மு. க. அமைச்சரவை குறித்து பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வாறு சித்தரித்தன என்பதைக் கீழ்க்காணும் கேலிச் சித்திரங்கள் விளக்கும் என்பதால் இவற்றை வெளியிடுகிறோம். —ஆ-ர்.



'தி. மு. க.வோடு தேன்நிலவு முடிந்தது'

தி. மு. க. மந்திரிசபை அமைத்து அதன் தனித்தன்மையோடு இயங்க ஆரம்பித்ததையும், தந்தை பெரியார் அவர்களைச் சந்தித்து அவர்களது வாழ்த்தைப் பெற்றதையும் கண்ட ஆச்சாரியார், டெல்லியில் தி. மு. க.வோடு சுதந்தராவின் 'தேன்நிலவு' முடிந்தது எனக் குறிப்பிட்டதை 'மித்திரன்' விளக்கிய வகை !

'குடும்ப வாழ்க்கை துவங்கியது!'



தி. மு. க.வோடு தேன்நிலவு முடிந்தது என்றால் குடும்ப வாழ்க்கை துவங்கியது என்று பொருள் என முதல்வர் திரு. அண்ணாதுரையவர்கள் கூறியதற்கு 'மெயில்' தந்த பட விளக்கம்.

பார்ப்பனர் பார்வையில் தி. மு. க. அமைச்சரவை



I AM FORTUNATE IN HAVING THE LEGACY OF THREE CROSS-CURRENTS IN THE POLITICS OF THE COUNTRY, SAYS MR ANNADURAI.

நீதிக்கட்சி பாரம்பரியம், சுயமரியாதை இயக்கத்தின் புரட்சிக் கொள்கைகள், கடந்தகால காங்கிரஸ் நிர்வாகத்தின் அனுபவம் ஆகியவை இந்த தி மு. க. ஆட்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று முதல்வர் பேசிய பேச்சுக்கு 'மெயில்' தந்த விளக்கம்!

விஞ்ஞான விந்தைகள்:

பக்தியால் அல்ல! புத்தியால் ஆனது!!

தொகுப்பு: சி. பி. சர்வாதிகாரி, இரும்புலிக்குறிச்சி

வெந்நீர் ஓடும் ஆறு!

மூனிச்: வெந்நீர் ஓடும் ஆறு ஒன்று மேற்கு ஜெர்மனியில் இருக்கிறது. தென் பகுதியில் உள்ள ஆல்ப்ஸ் மலைச் சரிவுகள் ஐரோப்பாவிலேயே உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கு மிகவும் உகந்த இடம். எல்லா நாட்களிலும் இங்கு ஏராளமான உல்லாச பிரயாணிகள் வந்து தங்கிச் செல்கிறார்கள். இந்த மலைச் சரிவு இயற்கை யெழில் நிரம்பியது. இயற்கைச் சூழ்நிலையில் இங்கு பொழுது போக்குவதற்கான எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. குளிர் நீர் ஓடும் ஆறும், வெந்நீர் ஓடும் ஆறும் இங்கு செயற்கையாக அமைக்கப்பட்டுள்ளன. வெந்நீர் வேண்டுவோர் வெந்நீர் ஆற்றில் குளிக்கலாம். வெந்நீர் நீச்சல் குளமும் இங்கு உள்ளது. பனிச் சருக்கு விளையாடுவற்கும் இது பொருத்தமான இடம். உல்லாசப் பிரயாணிகள் தங்குவதற்கு இங்கு சகல வசதிகளுடனும் அறைகள் கட்டப்பட்டுள்ளன.

∴

ஏரிக்கு மேலாக 20 சாலைகள்!

ஹாம்பர்க்: ஹாம்பர்க் நகரின் நடுவில் அமைந்துள்ள "ஆல்ட்ஸர்" என்ற ஏரி, இது வரையிலும் போக்குவரத்திற்குப் பெரும் இடைஞ்சலாக இருந்து வந்தது. இப்போது இந்த ஏரியின் குறுக்கே 20 சாலைகள் போடப்பட்டு வருகின்றனர். இவற்றில் நான்கு ரயில்பாதைகள், தரைமட்டத்திலிருந்து 12 அடி உயரத்தில் ஏரியின் குறுக்கும் நெடுக்குமாக அந்தரத்தில் நிற்பதுபோல் இந்தச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. இது வரை மேற்கொள்ளப்படாத மிகப் பெரிய சாலை அமைப்புத் திட்டமாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. இச் சாலைகளை எல்லாம் போட்டுவிட்டால் வாகனங்கள் ஏரியைச் சுற்றி வளைத்துச் செல்லவேண்டிய சங்கடம் ஏற்படாது.

∴

மொழி பெயர்க்கும் இயந்திரங்கள்!

மாஸ்கோ: ஒருவரது பேச்சைப் பல பாஷைகளில் விரைவாக மொழி பெயர்க்கும் மின்சார இயந்திரம் இந்த நூற்றாண்டின் இறுதியில உண்டாகப்பட்டுவிடும் என்று சோவியத் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சில விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளுக்கு ஏற்ப பல்லாயிரகனக்கான ஆங்கிலச் சொற்களையுடைய அகராதிகளை சோவியத்நிபுணர்கள் தொகுத்து வருகிறார்கள். இத்தகைய அகராதி இருந்தால், 100க்கு 99 சொற்களை மின்சார கணக்குமானிகள் இனம் கண்டுபிடித்து விடும்.

இது ஒரு முக்கியமான சாதனை ஆகும். ஆண்டுதோறும் உலகெங்கனும் பல்வேறு மொழிகளில் கட்டுரைகள் வெளிவருகின்றன. இவற்றைப் படிக்கக் கூட மொழி பெயர்ப்பாளர்களுக்கு நேரமில்லை. மின்சார மொழிபெயர்ப்பு இயந்திரங்கள் வந்து விட்டால் இவற்றை மொழி பெயர்ப்பதுடன் வேண்டிய தகவல்களை வேகமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

∴

சந்திரன் மீது ரஷ்யக் கொடி நடப்பட்டது!

மாஸ்கோ: சந்திரன் மீது ரஷ்யக் கொடியையும் அரசாங்கச் சின்னத்தையும்

''லூனா-9'' என்ற ரஷ்ய விண்வெளிக் கப்பல் ஊன்றியது.

சிவப்பு நிறமும் முக்கோண வடிவமும் கொண்ட அக் கொடியின் வலப்புற மேல் மூலையில் ரஷ்ய அரசாங்கச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அச்சின்னத்திற்குக் கீழ் 'சோவியத் சோஷ்யலிஸ்ட் குடியரசு ஒன்றிப்பு' என்ற வார்த்தைகள் உள்ளன.

∴

பேரறிவாளர் சங்கத்தில் 8 வயது சிறுமி!

லண்டன்: மிகுந்த அறிவுத்திறன் கொண்ட பிரிட்டிஷ் மென்சா சங்கத்தில் பேலாஜா ரைட்ஸ் என்னும் 8 வயது சிறுமி மெம்பராக இருக்கின்றாள். அவளுக்கு அச்சங்கத்தின் மற்ற மெம்பர்களைப் போலவே முழு ஓட்டுரிமை உள்ளது.

இச்சங்கத்தின் வருடாந்திர மகாநாட்டில் பர்மிங்ஹாம் சர்வகலாச் சாலையைச் சேர்ந்த டாக்டர் ஜாக்கோஹன் கருவியல் பற்றி ஒரு பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தபோது அச்சிறுமி பற்றிய தகவல் வெளியாகியது.

∴

செயற்கை இருதயம் (அணுசக்தியால் இயக்கம்)

வாஷிங்டன்: அணுசக்தியால் இயங்கும் செயற்கை இருதயம் ஒன்றை அமெரிக்காவின் அணுசக்திக் கமிஷன் உருவாக்கக் கூடும்.

உடம்பு முழுவதிலும் இரத்தத்தைப் பாய்ச்சக்கூடிய சிறு குழாய் ஒன்றுக்கு வேண்டிய விசையை வழங்க கதிர் வீச்சுகள் ஐசடோப்பைப் பயனபடுத்துவது என்பது மசாசுசட்ஸ் நிறுவனமொன்றின் கருத்தாகும்.

அந்தச் செயற்கை இருதயத்தை ஆரம்பத்தில் உடம்புக்கு வெளியே வைத்துப் பயன்படுத்தலாம் என்று அணுசக்திக் கமிஷனின் ஆரோக்கிய மருத்துவத் துறையின் துணை நெறியாளரான டாக்டர் புரூனர் கூறுகிறார். ஆனால் உடலுக்குள் வைக்கத் தக்க அளவுச்சு மிகச் சிறியதாக அதைச் செய்ய நெடுங்காலமாகாது.

''அதை பொறியியலாரால் செய்துவிட முடியுமென் நான் நினைக்கிறேன்'' என்று டாக்டர் புரூனர் கூறினார்.

மணம் நிறைந்த பஸ் புகை!

சாண்டா மேனிகா: டீசல் பஸ்களிலிருந்து கிளம்பும் புகையை மணமுள்ளதாக செய்வதற்காக கலிபோர்னியா விலுள்ள உல்லாச நகரான சாண்ட மோனிகாவிலுள்ள போக்குவரத்து ஸ்தாபனம், பஸ் சொந்தக்காரர்களுக்கு சப்ளை செய்யும் டீசல் எண்ணெயில் வாசனைப் பொருளைக் கலந்து விற்கிறது.

∴

ஆணா. பெண்ணா?

கேம்பிரிட்ஜ்: என்ன குழந்தை பிறக்கும் என்பதை முன் கூட்டியே அறிய முடிவதில்லை. விரும்பும் குழந்தையும் பலருக்கு பிறக்காது. ஆனால் கேம்பிரிட்ஜில் நடக்கும் ஒரு ஆராய்ச்சி வெற்றி பெற்றால், பெற்றோர்கள் தாங்கள் விரும்பும் ஆண் அல்லது பெண் குழந்தையைப் பெறலாம். இத்தகவலை விவசாய ஆராய்ச்சி கவுன்சிலைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

இந்திய விஞ்ஞானி டாக்டர் பாய்ராம் பட்டாச்சார்யாவின சித்தாந்த அடிப்படையில் 176 பசுக்களைக் கொண்டு அக்கவுன்சில் பரிசோதனையை நடத்தி வருகிறது

இப்பசுக்கள் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யப்பட்டுள்ளன.

ஜீவ அணுக்கள் இயற்கையாகவே இரண்டாகப் பிரிக்கின்றன. அவற்றை ஒரு சோதனைக் குழாயில் விட்டு வைத்தால் மேல் பாகத்துக்கு வருவது ஆண் ஜீவ அணு, அடிப்பாகத்தில் பெண் ஜீவ அணு. இது இந்திய விஞ்ஞானியின் சித்தாந்தம்.

பசுக்கள் அக்டோபரில் கன்றுகளை ஈனும்போது இப்பரிசோதனையின் முடிவு தெரியும்.

∴

டிரைவர் இன்றி ஓடும் ரயில்!

டிரைவர் இல்லாமல் தானாக ஓடும் ரயில் மேற்கு ஜெர்மனியில் முதன் முதலாக போக்குவரத்திற்கு விடப்பட்டிருக்கிறது. ரூர் பகுதியில் பரிசோனை முறையில் இந்த ரயில் இப்போது விடப்பட்டிருக்கிறது.

ஜெர்மன் நிபுணர்கள் இதைத் தயாரித்திருக் கிறார்கள். இந்த ரயில் இயங்கும் முறை முழு அளவில் திருப்தியளித்திருக்கிறது. இந்த ரயிலில் டிரைவர் கிடையாது. மின் னியக்கச் சாதனத்தின்(எலக்ட்ரானிக்) மூலம் இந்த ரயில் இயக்கப்படுகிறது. 1967 ஆம் ஆண்டு வாக்கில் மேற்கு ஜெர்மன் ரயில்வே யில் மேலும்பல இம்மாதிரியான மின்னியக்க ரயில்கள் விடப்படும்.

∴

செயற்கைக் கடல்!

ஹாம்பர்க்: ஆழ்கடலில் ஒரு கப்பல் அலை மோதல்களை எந்த அளவுக்குத் தாங்கக் கூடியது என்பதைப் பரிசோதனை செய்து அறிந்து கொள்வதற்காக மேற்கு ஜெர்மனியில் உருவாக்கி ஹாமபர்க்கிலுள்ள உலகப் புகழ் பெற்ற கப்பல்கட்டும் தளத்தில் 'செயற்கைக் கடல்' ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது இங்கு தயாரான கப்பலை இந்தக் கடலில் மிதக்கவிட்டு கடல் அலை மோத லினால் கப்பல் எப்படியெல்லாம் அசை யுமோ அதே போன்று மின்சார சாதனங் கள் மூலம் கப்பலை அசைய விடுகிறார்கள். அப்போது கப்பலின் தாக்குப் பிடிக்கும் ஆற் றலைக் கணக்கிடுகிறார்கள். மணிக்கு 70 மைல் வேகத்தில் இக்கடலில் கப்பலை ஓட் டியும் சோதனை செய்கிறார்கள்.

∴

உடல் உஷ்ணம் காட்டும் பொத்தான்!

நியூயார்க்: உடல் உஷ்ணத்தைக் காட்டும் உஷ்ணமானி அடங்கிய கஃப்லிங்கு கள் (சட்டையின் கைப் பொத்தான்) இப் போது நியூயார்க்கில் சிறிஸ்துமஸ் பரிசுப் பொருளாக விற்பனையாகின்றன. அவற் றில் ஒரு கஃப்லிங் சென்டி கிரேட்டில் உடல் உஷ்ணத்தைக் காட்டுகிறது. மற்றொன்று பாரன் ஹீட்டில் காட்டுகிறது.

∴

ஓசையின்றி ஓடும் கார்!

பிரான்ஸ்விக்: சிறிதும் சப்தமில்லா மலும் பெட்ரோல் வாசனை சிறிதும் வெளி வராமலும் ஓடக் கூடிய புது வகை கார்கள் மேற்கு ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டு வரு கின்றன. "எலக்டிரோமோபைல்" என்ற இந்த புது வகை கார் அண்மையில் வெள் ளோட்டம் விடப்பட்டது. இந்த காரில் சூடாகும் எஞ்சினுக்குப் பதில் மின்சார மோட்டார் பொருத்தப்பட்டிருக்கிறது. இதில் 'கியர்'களும் கிடையாது. எனவே டிரைவர் அடிக்கடி 'கியர்' மாற்றத்தேவை யில்லை. நீர் வாயு அல்லது மெதனால்

கடவுள் எத்தனை?

மனிதனது கண்களுக்கும், மனதுக் கும், புத்திக்கும் எட்டாத வஸ்து இருக் கிறது என்பதை ஒப்புக்கொண்ட பிறகு அது ஒன்று இருந்தால் என்ன? பல அது இருந்தால் என்ன. ஒன்றுதான் இருக் கிறது என்பதை எப்படி ஒருவன் கண்டுபிடித்தானோ அப்படியே பல கடவுள்கள் இருக்கின்றது என்றதையும் கண்டுபிடித்திருக்கிறான். ஆகவே எப்படி ஒரு கடவுளைக் கண்டு பிடித்தவனைவிட, பல கடவுளைக்கண்டு பிடித்தவன் முட் டாள் ஆவானென்பது விளங்க வில்லை.

ஒரு கடவுளை கண்டு பிடித்தவன் அதைக் காட்டக்கூடுமானால் பல கடவு ளைக்கண்டு பிடித்தவனும் காட்டத்தயா ராயிருப்பான்

அப்படிக்கில்லாமல் "ஒரு கடவுள் தான் உண்டு, பல கடவுள் இருக்கிறது என்பது முட்டாள் தனம்" என்பது ஆண வமும், கைபலமுமே யாகும். நடு நிலமை உள்ள ஒருவன் யோக்கியனாகவும், புத்தி சாலியாகவும் இருந்து இருவர் ரூபித்ததை யும் கேட்டு முடிவு சொல்வது என்றால் 'ஒரு கடவுளும் இருக்க முடியாது, பல கடவுளும் இருக்க முடியாது" என்றோ தான் சொல்லித்தீருவான். அப்படிக் கில் லாதவன் தோழர் காந்தியாரைப் போல் எல்லோரையும் திருப்தி செய்ய தந்திரமாய்தான் பேசி தப்பித்துக் கொள் ளப்பார்ப்பான்?

—"சித்ரபுத்திரன்"

மின்கலங்களின் மூலம் மின்சார மோட்டாருக்கு மின்சாரம் கிடைக்கிறது. இப்போது மாதிரிக்காகவே இந்தக் கார்கள் தயாரிக்கப் படுகின்றன. இனனும் 10 ஆண்டுகளில் ஜெர்மன் சாலைகளில் இந்தக் கார்களே ஓடிகொண்டிருக்கும்.

ஃ

மரணத்தை விரட்டும் அதிசய இயந்திரம்!

ஆம்ஸ்டர்டாம்: மூச்சு அடைப்பு நோயினால் அவதியுறுபவர்களுக்கு ''மின்னல் சிகிச்சை'' அளிப்பதற்கான பிரமாண்டமான இயந்திரம் ஒனறை டச்சு விஞ்ஞான நிபுணர்கள் தயாரித்திருக்கிறார்கள். சாகும் தருவாயிலுள்ள நோயாளிகளைக்கூட காப்பாற்றக் கூடிய இந்த அதிசய இயந்திரம் உலகிலேயே மிகப்பெரியது. மிகப் பெரிய மதுபானப்புட்டி வடிவத்தில் அமைந்துள்ள இந்த இயந்திரத்தின் உயரம் 39 அடி; அகலம் 10 அரை அடி. இந்த இயந்திரத்தைக் கொண்டு இருதயத்தில் உயர் அழுத்த ரண சிகிச்சை செய்யலாம். சிகிச்சை நொடிப் பொழுதில் நடந்து விடுகிறது. அதனால் மின்னல் சிகிச்சை என்கிறார்கள். உலகிலுள்ள முதலாவது அழுத்த ரண சிகிச்சை இயந்திரம் இதுவாகும். ஆம்ஸ்டர்டாமிலுள்ள வில்ஹெல்மினா ஆஸ்பத்திரியில் இந்த இயந்திரம் உள்ளது. மூச்சடைப்பு நோயினால் சாகும் தறுவாயிலுள்ள பலரை இதன் மூலம் காடபாற்றி இருக்கிறார்கள்.

∴

செயற்கை இருதயம் (விரைவில் சாத்தியமாகலாம்)

நியூயார்க்: மோசமான இருதயத்தைக் கொண்டவர்கள் அவற்றுக்குப் பதிலாக புதிய இருதயங்களைப் பொருத்திக்கொள்ளும் காலம் விரைவில் சாத்தியமாகலாம் என்று அமெரிக்க தேசிய இருதயச் சங்கம் கருத்து கூறியுள்ளது.

மனிதர்களுக்குப்புதிய இருதயங்கள் இன்னும் 3 ஆண்டுகளில் வந்து விடலாம் இதுவரை சுமார் 17 வகை செயற்கை இருதயங்கள் பிராணிகளிடம் வைத்துப் பூர்வாங்கமாக பரிசோதிக்கப் பட்டுள்ளன என்று அச்சங்கம் கூறுகிறது.

ஃ

ஆறு மாதம் கெடாத பால் (பிரிட்டிஷ் பால் நிறுவன சாதனை)

லண்டன்: ஆறுமாத காலம் வரை கெடாமல் புத்தம் புதியதாய் இருக்கும் பால் ரகம் ஒன்றை பிரபல பிரிட்டிஷ் பால் சேமிப்பு நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

குளிர்ப்பதன சாதன உதவியின்றியே எத்தகைய பருவத்திலும் இந்தப்பால் கெடாமல் இருக்கும்.

சாதாரண பாலுக்கும் இதற்கும் சுவையிலோ, சத்துப்பொருள்களிலோ எத்தகைய வேற்றுமையும் கிடையாது. சாதாரண பாலின விலையைவிட இந்த பாலின விலை அதிகமும் இல்லை.

பல்வேறு பருவ நிலைகளுள்ள 22 நாடுகளுக்கு இந்தப் பால் அனுப்பப்பட்டு அங்குள்ள விஞ்ஞான நிபுணர்களால பரிசோதிக்கப்பட்டு திருப்தி தெரிவிக்கப் பட்டுள்ளது

ஃ

பறக்கும் சைக்கிள் (ரஷ்யாவில் தயாராகிறது)

மாஸ்கோ: ''பறக்கும் சைக்கிள்'' என்னும் புதிய விமானம் சோவியத் யூனியனில் உருவாக்கப்பெற்றுள்ளது. இவ்விமானம் பறவையைப்போல் இறக்கைகளை அடித்துக்கொள்ளும். இந்த இறக்கைகள் ஒரு இயந்திரத்துடன் பொருத்தப்பட்டுள்ளன. இதனைக் கண்டுபிடித்தவர் இவான் வினோகிரதோல் என்னும் விமானப் பொறியாளர்

இவ்விமானத்தில் ஓர் ஆள் மட்டுமே சவாரி செய்யலாம். ஒரு ஸ்கூட்டர் அல்லது மோட்டார் சைக்கிளில் இறக்கைகள் பொருத்தப் பெற்ற விமானம் இது!

எல்லோரும் வாங்கக்கூடிய விலையில் இப்''பறக்கும் சைக்கிள்'' அடுத்த ஆண்டில் விற்பனைக்கு வரும்.




அமைச்சர் பதவி ஏற்குமுன்
முதல்வருடன் திருச்சி சென்று
அய்யா ஆசி பெற்றனர்



9-8-67 திருச்சியில் பெரியார் ஈ.வெ.ரா. மணியம்மை-
-குழந்தைகள் விடுதி அடிக்கல் நாட்டு விழா

கடந்த ஆண்டில் கழுகு டைரி



1966 ஆகஸ்டுக்கும் 1967 ஆகஸ்டுக்கும் இடையில்...

(சில முக்கிய நடவடிக்கைகள் மட்டும்)

இராமாயணத்தை அழித்தே தீரவேண்டும்''

சென்னை—7-8-66

தமிழக சட்டமன்றத்தில் இராமாயணத்தை தந்தை பெரியாராவர்கள் குறை கூறுவதாக கிளப்பப்பட்ட பிரச்னையை எதிர்த்து சென்னை மாவட்ட தி.க.வினரால் திருவல்லிக்கேணி கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் பொதுக் கூட்டத்தில் ''இராமாயணத்தை நான் குறை கூறுவதோடு நிற்கவில்லை; அதை அடியோடு அழித்தே விடவேண்டும் என்றல்லவா நான் எச்சரித்து வருகிறேன்'' என்று தந்தை பெரியார் அவர்கள் இராமாயணதாசர்களை மூச்சடைத்துப்போகச் செய்தார்கள்.

ஃஃ

பார்ப்பனர், தமிழர் வாழ சம்மதிக்கவே மாட்டார்கள்

சென்னை—9-8-66

ஆகஸ்டு முதல் வாரத்தில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக, சுத்தத் தமிழரான திரு. அழகிரிசாமி அவர்கள் நியமிக்கப்பட்டதை எதிர்த்து இரண்டு பார்ப்பனர்கள் [அய்க் கோர்ட்டில்] தடுப்புவழக்குத் தொடுத்ததையும் பொதுவாக பார்ப்பனர்கள், எந்த வகையிலும் தமிழர் வாழ சம்மதிக்கவே மாட்டார்கள் என்பதனையும் எடுத்து விளக்கி தமிழர்களுக்கு இன உணர்வூட்டி ''அய்க் கோர்ட் ஜட்ஜ்கள்'' எனும் தலைப்பில் ''விடுதலை'' தலையங்க மூலம் தந்தை பெரியார் அவர்கள் எச்சரித்தார்கள்.

ஃஃ

தமிழர்களே! சிந்தியுங்கள்!!
சிந்தியுங்கள்!!!

சென்னை—11-8-66

இந்து', 'மெயில்', 'எக்ஸ்பிரஸ்' மற்றும் பார்ப்பன ஏடுகள் அத்தனையும், இராமாயணத்தை எதிர்த்துவரும் அய்யாமீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எழுதியதைக் கண்டு புலியெனச் சீறியெழுந்து ''இன்று நாம் நம்மை சிறிதளவாவது மானமுள்ள சமுதாயமென்று காட்டிக் கொள்ளாவிட்டால் மிகமிகக் கீழான நிலையிலிருத்தப்பட்டு விடுவோம்'' என்று தமிழர்களைத் தட்டி எழுப்பும் வகையில் ''கொளுத்துங்கள்! இராமாயணத்தைக் கொளுத்துங்கள்!'' என்று ''விடுதலை'' தலையங்கம் மூலம் அய்யா எச்சரித்தார்கள்.

∴

தீ! இராமாயணத்துக்குத் தீ!

சென்னை—11-8-66

தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்

இணங்க மறுநாளே சென்னை மைலாப்பூரில் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு இராமாயணத்துக்குத் தீவைத்து சாம்பலாக்கினர்.

∴

ஆச்சாரியார் ஆசை பலிக்கவில்லை!

சென்னை—12-8-66

இந்துக்களின் மத உணர்ச்சியை புண்படுத்தும் வகையில் அய்யா அவர்களின் நடவடிக்கைகள் இருப்பதாகவும் இதைத்தடுத்து கடுமையான தண்டனையும் கொடுக்க, தற்போதுள்ள இன்டியன் பினல்கோடின் படியே வகை உள்ளது என்றும் அரசாங்கத்தை தூண்டிவிடும் வகையில் திரு சி. ராஜகோபாலாச்சாரியார் 14-8-66 'கல்கி' ஏட்டில் கட்டுரை எழுதியதற்கு உடன் நடவடிக்கையாக "எனது மத ஒழிப்பு பிரசாரம் வெளிநாடுகளுக்கும் பரவட்டும்" என்று "இராஜாஜியின் ஆசை" எனும் தலைப்பில் அய்யா 'விடுதலை'யில் தலையங்கம் எழுதினார்கள்.

∴

தாய்மார்களே! நீங்களும் வெளியில் வாருங்கள்!

சென்னை—21-8-66

"பார்ப்பனர் நம்மீது படையெடுத்து விட்டார்கள். இரண்டு தமிழர்களுக்கு அய்க்கோர்ட் ஜட்ஜ் பதவி கொடுத்தவுடன் அது செல்லாது என்று 'ரிட்' போட பார்ப்பனர் துடித்துவிட்டனர். இனி நாம் பொறுக்கவே கூடாது. உங்கள் உயிரை, உயிரினும் சிறந்த மானத்தை நல்ல காரியத்திற்கு பயன்படுத்துங்கள் என்று "பொது மக்களுக்கு வேண்டுகோள்" எனும் தலைப்பில் அய்யா அறிக்கை விட்டார்கள்.

∴

அய்யாவுக்கு நோட்டுகள் அன்பளிப்பு!

பட்டுக்கோட்டை—15-9-66

பட்டுக்கோட்டை பொதுமக்கள் தத்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பெருவிழாவெடுத்து, பிரபல வர்த்தகர் திரு. ஏ லட்சுமணன் அவர்கள் மூலம் 88 ஒரு ரூபாய் நோட்டுகள் பதித்த பொன்னாடை அய்யா அவர்களுக்குப் போர்த்தினார்கள்.

∴

தமிழர்க்கு விகித உரிமைப்படி பதவி தருக!

அரியலூர்—17-9-66

தந்தை பெரியார் அவர்களின் 88-வது பிறந்தநாள் விழாவை அரியலூர் வட்டார தி. க. தோழர்கள் திராவிடர் கழக மாநாடாக மிகப் பெரிய ஊர்வலமும் நடத்தி சிறப்பாகக் கொண்டாடினார்கள். அதில் கலந்து கொண்ட அய்யா அவர்கள் "தமிழர்க்கு விகித உரிமைப்படி பதவி தருக! அதற்கேற்ப அரசியல் சட்டத்தை திருத்தி அமுல் செய்க!" "தமிழரை இழிவு படுத்தும் நூல்கள், புராணங்கள், ஏடுகள் ஆகியவைகளைத் தடை செய்க" என்பன போன்ற பல தீர்மானங்களை நிறைவேற்றச்செய்தார்கள்.

∴

பினாங்கில் அய்யாவின் பிறந்தநாள் விழா!

பினாங்கு—18-4-66

கடற்கடந்தும் மலாயா—சிங்கப்பூரில் வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தமிழர்களின் கடவுளே தந்தை பெரியார் அவர்கள் தான் என்று போற்றி பினாங்கு கெக் அசோஷியேன் மண்டபத்தில் பினாங்கு மாநில ம. இ. கா. தலைவர் பெருநிலக்கிழார் திரு. நா. த சீ ஆறுமுகனார் ஏ. எம். என். அவர்கள் தலைமையில் அய்யாவின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினார்கள்.

∴

'ஆனந்த விகடனுக்கு அறிவுரை

சென்னை—1-10-66

"ஜாதி. சமய, பழக்க வழக்கங்களில் அரியாமையின் காரணமாக காலப்போக்கில் கலந்துவிட்ட தீமைகள் விலகி நல்லவையெல்லாம் மீண்டும் புதுப் பொலிவுடன் பிரகாசிக்குமானால் பெரியார் செய்த தொண்டு வீண்போக வில்லையென்றே செல்லவேண்டும்" என்று "ஆனந்த விகடன்" ஏடு எழுதி

யிருந்ததற்கு அறிவுரை கூறும் வகையில், 'நான் சொல்வது ஜாதி, சமய, பழக்க வழக்கங்கள் அனைத்துமே ஒழிக்கப்படவேண்டும் என்பதுவே தவிர, சீர்திருத்த வேண்டும் என்றல்ல'' என்று ''ஆனந்த விகடன் அறிவுரை'' எனும் தலைப்பில் அய்யா அவர்கள் ''விடுதலை''யில் தலையங்கம் எழுதினார்கள்.

∴

வெள்ளியால் செய்த படம் அன்பளிப்பு

குடியாத்தம்—4-10-66

இங்கு அய்யா அவர்களின் பிறந்த நாள் விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அப்போது வேலூர் தோழர் ஒருவர் ''சமதர்மத்தில் நம்பிக்கை இருக்கும் எவரும் தம் வீட்டிலுள்ள 'சாமி படங்களை உடைத்தெறியவேண்டும்'' என்ற தந்தைபெரியாரின் அறிக்கைக்கிணங்க, தம் வீட்டில், இராமன், லட்சுமணன், சீதை, அனுமார் ஒருசேர வெள்ளியால் செய்யப்பட்டிருந்த படத்தை தந்தை பெரியார் அவர்களிடம் கொடுத்து அதனை உருக்கி வெள்ளியை ஸ்தாபனத்துக்கு எடுத்துக்கொள்ளும்படி அன்பளித்தார்.

∴

மாணவர்இல்லத்துக்கு அடிக்கல் நாட்டு விழா

தாந்தோனிமலை—12-10-66

கரூரை அடுத்த தாந்தோணிமலையில் திரு. டி. எம். நல்லுசாமி எம். எல் ஏ. தலைமையில் மருத்துவர் சங்க மாணவர் கட்டிடத்திற்கு தந்தை பெரியார் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

∴

உண்ணாவிரதம் என்பது அசிங்கமான ஒரு சண்டித்தனமே!

சென்னை—17-10-66

'பசுவதை தடுப்புக்கோரிக்கை' என்னும் பெயரில் உண்ணாவிரதமிருந்த சங்கராச்சாரியையும், உண்ணா விரத கிளர்ச்சி முறையையும் கண்டித்து அய்யா அவர்கள் ''சங்கராச்சாரியார் உண்ணாவிரதம்'' எனும் தலைப்பில் ''விடுதலை'' தலையங்கம் மூலம், 1962 முதலே உண்ணாவிரத முறையை தாம் கண்டித்து வருவதையும், பெரும்பாலோர்க்கு உணவாகப் பயன்படும் பசுவைக் கொல்லக் கூடாது என்பது முட்டாள்தனமென்றும் அறிவுறுத்தினார்கள்.

∴

காமராசரைப் பாதுகாருங்கள்

சென்னை—14-11-66

பசுவதைத் தடுப்பு என்னும் பெயரில் கிளர்ச்சி நடத்திய சமதர்ம எதிரிகள் 7-11-66ல் டில்லியில் அ. இ. காங். தலைவரான திரு. காமராசர் அவர்களைக் கொல்ல அவர் வீட்டுக்கே தீ வைத்ததைக் கண்டித்து 'டில்லியில் காமராசர் தங்கியிருந்த வீட்டுக்கு நெருப்பு வைத்து விட்டார்கள் பார்ப்பனர்கள். ஏன் இப்படி சொல்லுகிறேன் என்றால் நெருப்புவைத்த நாளில் சிருங்கேரி சங்கராச்சாரி, பூரி சங்கராச்சாரி போன்ற பார்ப்பனத் தலைவர்கள் டில்லியிலே இருந்து பசுவதையை எதிர்க்கிறோம் என்று சென்னதால் தான்'' என்று அய்யா அவர்கள் பார்ப்பனரின் திட்டமிட்ட சதியை அம்பலப்படுத்தி 'கத்தி வைத்துக் கொள்ளுங்கள், சீக்கியர் போல'' என்று ''விடுதலை'' தலையங்கம் மூலம் அறிவித்தார்கள்.

∴

சுயநலம் மேலோங்கினால் மானம், வெட்கம்கூட மறந்து போகும்

சென்னை—18-11-66

காமராசரைக் கொல்ல முயன்றதைக் கண்டிக்க 20-11-66ம் நாளை கண்டன நாளாகக் கொண்டாட அய்யா அறிக்கை விட்டதையொட்டி அதற்கு தமிழக அரசு தடைவிதித்தது.

''சுய நலம் மேலோங்கினால் எப்படிப்பட்டவர்களும் நீதி, நேர்மை மாத்திரமல்லாமல் பலருக்கு மான-வெட்கங்கூட மறந்தும் பறந்தும் போகும். ''மனம் பதறுகிறது; ஆனால் என்ன செய்வது?'' எனும் ''விடுதலை'' தலையங்கத்தின் மூலம் அறிவித்து அய்யா அவர்கள் தேர்தல் சமயமாதலால் ஆட்சியை எதிர்க்காமல் விட்டுவிட்டார்கள்.

சங்கராச்சாரி என்றால் பெரிய பூதமா? முனியா?

சென்னை—24-11-66

பசுவதைத் தடுப்புப் பேரால் காமராசரை கொலை செய்ய முயன்றதோடு தொடர்ந்து கிளர்ச்சி நடக்கும் வகையில் பூரி சங்கராச்சாரி உண்ணாவிரத மிருந்ததைத் தடுத்து அவரை அரசாங்கம் கைதுசெய்தது. அதை எதிர்த்து சங்கராச்சாரி கைது செய்யப்படுவது நட்க்கக்கூடாத அநியாயம் என்று பார்ப்பனர் கூச்சலிட்டதைக் கண்டித்து அய்யா அவர்கள் 'விடுதலை'யில் ''சங்கராச்சாரி என்றால் பெரிய பூதமா? முனியா?'' என்று தலையங்கம் எழுதினார்கள்.

∴

பசு பாதுகாப்பு என்பது அயோக்கியத் தனம்!

சென்னை—25-11-66

பார்ப்பனர்கள் பசு பாதுகாப்பு' என்று கூச்சல் போடுவதைக் கண்டிக்க ''பசு பாதுகாப்பு அயோக்கியத்தனம்'' என்று ''விடுதலை''யில் அய்யா அவர்கள் தலையங்கம் எழுதினார்கள்.

∴

காமராசர் கொலை முயற்சி சரித்திரம்

சென்னை—27-11-66

பார்ப்பனர், காமராசரைக் கொலை செய்ய முயன்றதை விளக்கியும், பார்ப்பனர் நீண்டகாலமாக பரம்பரை பரம்பரையாக செய்துவரும் சதிகளை எடுத்துக் காட்டியும் ''காமராசர் கொலைமுயற்சி சரித்திரம்'' எனும் ஒரு நூலை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு பொதுமக்கள் ஆதரவைத் திரட்டும் வகையில் ''விடுதலை''யில் அய்யா அவர்கள் அறிக்கை விட்டார்கள்.

∴

பேதமொழிப்புக்கு உழைத்தது சு. ம. இயக்கமே!

சென்னை—15-1-67

''பொங்கல் செய்தி'' எனும் தலைப்பில் அய்யா அவர்கள் தமது வாழ்நாள் அனுபவத்தை எடுத்துக் காட்டுமுகத்தான், பேத மொழிப்புக்குத் தாமும், தமது இயக்கமும் பாடுபட்டு எத்தகைய இன்னல்களைச் சந்திக்க வேண்டியதிருந்தது என்பதை ''விடுதலை'' மூலம் விளக்கினார்கள்.

∴

பசுவதைத் தடுப்புக்குக் கிளர்ச்சி படுதோல்வி

சென்னை—1-2-67

பசுவதைத் தடுப்புக்கோரி பார்ப்பனர்கள் பல்வேறு வகையில் தொடர்ந்து நடத்திய கிளர்ச்சி படுதோல்வியடைந்ததை விளக்கி ''உண்ணாவிரதம் கோவிந்தா! சங்கராச்சாரி கோவிந்தா! பசுவதைத் தடுப்பு கோவிந்தா!'' எனும்தலைப்பில் ''விடுதலை'' யில் அய்யா எழுதினார்கள்.

∴

மதுவிலக்கை ஒழிக்கவேண்டும்

சென்னை—4-3-67

''1938ல் காங்கிரஸ் [ராஜாஜி] பதவிக்கு வந்த காலத்தில், நமது கல்வி வளர்ச்சியை ஒழித்துக் கட்டுவதற்கு ஒரு ஆதாரம் தேட வேண்டும் என்கிற எண்ணத்தின் மீதே மது விலக்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்று அன்று முதல் இன்று வரை நான் அதை எதிர்த்து வருகிறேன்'' என்று மது விலக்கை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று தி. மு. க அரசுக்கு அறிவுறுத்தும் வகையில் 'மது விலக்கு'! என்று அய்யா ''விடுதலை'' தலையங்கம் எழுதினார்கள்.

∴

தி. மு. க. அரசும், சு. ம., தி.க. வும்

சென்னை—6-3-67

''இன்றை தி. மு. க. ஆட்சிக்கு நான் [சு.ம., தி.க] எதிர்ப்பு தெரிவிக்கமாட்டேன் என்றால் 'வம்புச் சண்டைக்கு போகமாட்டேன்' என்பதுதான் பொருளே தவிர அவர்கள் செய்யும் எதையுமே எதிர்க்கமாட்டேன் என்பது அர்த்தமல்ல'' என்றும் தம் கொள்கைக்கு பங்கமேற்கும்படி தி. மு. க. அரசு நடந்தால் உடனே நடவடிக்கை எடுப்பேன் என்று எச்சரித்தும் 'விடுலலை'யில் ''என்



சமுதாயத் தலைவரும் சமதர்மத் தலைவரும்



பட்டுக்கோட்டையில் பிறந்தநாள் விழா

ஆதரவு' என்று அய்யா தலையங்கம் எழுதினார்.

∴

ஆச்சாரியாரின் குள்ளநரித் தந்திரம்

சென்னை—7-3-67

"நிர்வாகத்தில் தலையிடதே" என்று ஆச்சாரியார் தி. மு. க. அமைச்சர்களுக்கு வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து அவரின் குள்ளநரித் தந்திரத்தை அம்பலப் படுத்தும் வகையில் "சோழியன்குடுமி சும்மா ஆடாது" எனும் "விடுதலை" தலையங்கம் மூலம் அய்யா தி. மு. க. அமைச்சரவையை எச்சரித்தார்.

∴

தி. மு. க. அரசுவில் நமது கடமை என்பதை விளக்க அறிக்கை

சென்னை—9-3-67

தி. மு. க. அரசாங்கத்தை திராவிடர் கழகத்தினர் எந்த எந்த வகையில் எதிர்க்க வேண்டும் என்பதை விளக்கி "விடுதலை" யில் "நம் தோழர்களுக்கு" என்று தலையங்கம் எழுதினார் அய்யா!

∴

அரிசிப் பிரச்னை அனாவசியப் பிரச்னையே

சென்னை—14-3 67

"அரிசி அரிசி என்று தேர்தல் கால வாக்குறுதியையே பிடித்துக்கொண்டு பேசினால் கடைசியில் மூளைக்கு 'சைபர்' மாக்குத்தான் கிடைக்கும்" என்று தி. மு. க. அமைச்சரவை அரிசிப் பிரச்னையையே பெரிதாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டித்து அய்யா 'விடுதலை'யில் எழுதினார்.

∴

கம்பன் விழாக் கொண்டாடுவது மானக்கேடு

சென்னை—19-3-67

தமிழர்கள் கம்பன் விழாக் கொண்டாடுவது தமிழனின் மானங்கெட்ட தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டேயாகும் என்பதை விளக்கி அய்யா அவர்கள் 'விடுதலை'யில் எழுதினார்கள்.

∴

இராமாயணத்தை கொளுத்திய ஆட்சி

சென்னை—27-3-67

இராமாயணத்தை எரித்தும், பிள்ளையார் சிலையை நொறுக்கியும் காரியம் நடத்தியவர்கள்தான் இன்றைய தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள். ஆகவே அவர்கள் இனிமேல் எப்படி நடக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம் என்று, பொதுமக்கள் சிந்தனைக்காக "நாத்திகர் ஆட்சி" என்று 'விடுதலை'யில் தலையங்கம் எழுதினார் அய்யா.

∴

தமிழர்நல ஆட்சிக்கே ஆதரவு

சென்னை—29-3-67

எந்த ஆட்சி வந்தாலும் தமிழர் நலம் தான் தமக்கு முக்கியம் என்று விளக்கி 'எனது நிலை' என்று அய்யா அறிக்கை விடுத்தார்கள்.

∴

ஆட்சிக்கு அறிவுரைகள்

சென்னை—1-4-67

தி. மு. க. அரசுக்கு தொடர்ந்து அறிவுறை கூறி அய்யா அவர்கள் 'விடுதலை'யில் 'யோக்கியமான ஆட்சி ஏற்பட வேண்டுமானால்' (1-4-67); 'உணவுப் பிரச்னை' (2-4-67); 'எது வேண்டும்? நிலவரி ரத்து அவசியமா?' (4-5-77); 'மொழித் தொல்லை' (5-4-67) என்று தலையங்கங்கள் எழுதினார்.

∴

புதிய ஆட்சி பற்றி கழக நிலை

திருச்சி—9-4-67

1967 பொதுத் தேர்தலுக்குப்பின் தமிழகத்தில் விளைந்துள்ள அரசியல், சமூக இயல் மாற்றங்களுக்கேற்ப செய்யப்படவேண்டிய முறைகள் பற்றி, தந்தை பெரியார் அவர்களின் ஆணையை ஏற்று திட்டம் வகுக்க

திருச்சியில் சுயமரியாதை—திராவிடர் கழக இயக்கத்தினரின் தனிக்கூட்டம் கூட்டப் பெற்றது. மாநிலத்தில் பல்வேறு பகுதி களிலிருந்து ஏராளமான கழக முக்கியத் தோழர்கள் திரண்ட அக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.

''காங்கிரசின் தோல்வியின் விளைவாக தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத் தைக் குறித்து கடந்த 27–2–67 முதல் நாளது வரையில் நமது இயக்கங்களின் நிரந்தரத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் 'விடு தலை' பத்திரிக்கையில் விடுத்து வரும் விளக்க அறிக்கைகள் நமது இயக்க நிலையை வெகு தெளிவாக எடுத்துக் காட்டும் வகை யில் உள்ளமையால் அவற்றை இக்கமிட்டி முழுமனதுடன் வரவேற்கிறது. அத்துடன் இன உணர்ச்சி உள்ள தமிழர்கள் அனை வரும் அவ்விளக்க அறிக்கைகளின் தத்துவத் தைப் பின்பற்ற வேண்டுமாய் தமிழ் பெருமக் களை இக்கமிட்டி வேண்டிக் கொள்கிறது.

நம் உயிர்போன்ற கொள்கைகளுக்கு இன்றைய ஆட்சியின் போக்கால் கேடுகள் நேராத வகையில் எவ்வித எதிர்ப்பும் காட்டவேண்டிய அவசியமில்லை என்றும், இதுவே நமது தெளிவான நிலை என்றும், தந்தை பெரியார் அவர்கள் வழங்கிய அறி வுரையை இக்கமிட்டி கட்டளையாக ஏற் றுக் கொள்கிறது.''

∴

கையெழுத்து இயக்கம்

சென்னை—18-4-67

'நான் நெற்றிக்குறி இட்டுக்கொள்ள மாட்டேன்; கோவிலுக்கு போகமாட்டேன்; எனக்கு ஜாதியுமில்லை; மதமும் இல்லை: நான் பகுத்தறிவுவாதி' என்பதற்கு உடன் படுபவர்களை ஒன்று திரட்ட கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்து ஒரு கையெழுத்து இயக்கத்தைத் தோற்றுவித் தார் அய்யா.

∴

உண்மையான கவிஞர் பாரதிதாசனே

வேலூர்—1-5-66

பாரதிதாசன் மன்ற சார்பில் வேலூரில் திரு. சி. எம். சுந்தரமூர்த்தி தலைமையில் நடந்த விழாவில் தந்தைபெரியார் அவர்கள் கலந்து கொண்டு உண்மையான கவிஞர் பாரதிதாசன்தான் என்றும். அவருக்கு இணையாக வேறுயாருமே இல்லையென்றும் பாராட்டினார்.

∴

சங்கிலித்தொடர் தலையங்கங்கள்

சென்னை 5-5-67

தி. மு. க. ஆட்சி, காங்கிரஸ் கட்சி, பொதுமக்கள் எல்லோருமே தமிழரின் நலத்தில் ஒன்றுபட வேண்டிய முக்கியத்தை விளக்கி 'விடுதலை'யில் தொடர்ந்து 'காங் கிரசும்—திராவிட முன்னேற்ற கழகமும்' (5-5-67); 'அரிசி விலைக்குறைப்பு அனாவசி யத் தொல்லை' (6-5-67); 'இந்த மந்திரி சபை ஒழிந்தால்...?' (11 5-67); 'உண்மைத் தலைவர் காமராசர்' (12-5-67) 'மந்திரி களுக்கு தலைவலி உதயம்' (13-5-67) 'இந் திய யூனியன்' (14-5-67) 'அதிகாரமில்லாத அரசர் பட்டத்திற்குவந்தார்' (15-6-67) 'கூட் டுறவுச் சங்கத்தில் மோசடி' (16-5-67) 'மந் திரிப் பதவி' (17-5-67)'சுயமரியாதை பிரசார இயக்கம்' (18-5-67); 'சிந்தித்துச் செயல்பட வும்' (19-5-67) 'அரசியல் வாழ்வு' (20-5-67); 'இறப்பும் பிறப்பும் மனிதர் செயலா? கட வுள் செயலா?' (21–5–67) 'சமுதாயச் சீர் திருத்தமும் பார்ப்பனரும்' (22-5-67) என்று அய்யாவின் தலையங்கங்கள் வெளிவந்தன.

∴

ஜீவா மகள் வாழ்க்கை ஒப்பந்தம்

திருச்சி 7-6-67

சுயமரியாதை இயக்க மூலம் நாட்டுக்கு அறிமுகமாகிய பிறகு கம்யூனிஸ்டுத் தலைவ ராகி மறைந்து விட்ட திரு. ப. ஜீவானந்தம் அவர்களது மகள் திருமதி. உஷா தேவிக்கும், திரு. அருணாசலம் பி. ஏ., டி. எஸ். எஸ். ஏக்கும் வாழ்க்கை ஒப்பந்தத்தை அய்யா அவர்கள் முன்னின்று தலைமை யேற்று 'பெரியார் மாளிகை'யிலேயே முடித்து வைத்தார்கள்.

—இதில் கலந்துகொண்ட முதல்வர் சுயமரியாதைத் திருமண சட்டத்தை தி. மு. க. அரசு பெரியரீர் அவர்களுக்கு காணிக்கை யரிக்குகிறது என்று கூறினரீர்.

∴

கடவுள் மறுப்பு

சென்னை—14-6-67

''கடவுள் இல்லை! கடவுள் இல்லை! கடவுள் இல்லவே இல்லை! கடவுளைக் கற் பித்தவன் முட்டாள்! களவுளைப் பரப்பிய வன் அயோக்கியன்! கடவுளைத் தொழுகிற

வன் காட்டுமிராண்டி!" என்று கழக சம்பந்தமான கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் அனைத்திலும் ஆரம்பத்திலேயே கடவுள் மறுப்புகூறி பிறகு நிகழ்ச்சியைத் துவக்க வேண்டுமென்று அய்யா அறிக்கை விட்டார்கள்.

∴

குழந்தைகள் விடுதிக்கு ரூ. 1 லட்சம் நன்கொடை

சென்னை—20-6-67

திருச்சியில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் குழந்தைகள் விடுதி ஒன்றைக் கட்டுவதற்காக அய்யா ரூ. 1 லட்சம் நன்கொடை அளித்தார். இத்தொகைக்கான 'செக்' திரு கி. வீரமணி (ஆசிரியர் 'விடுதலை') அவர்கள் மூலம் தமிழக முதலமைச்சர் திரு. சி. என் அண்ணாத்துரை அவர்களிடம் சேர்க்கப்பட்டது.

∴

ஊர்தோறும் பிரயாணி விடுதிகள் தேவை

காரைக்கால்—14-6-67

காரைக்கால் தி. க, பிரமுகர் திரு. சி.மு சிவம் அவர்களின் சகோதரர்களால் கட்டப்பட்ட 'முருகன் தங்கும் விடுதியைத் திறந்து வைத்த அய்யா அவர்கள் வெளியூர் பிரயாணிகளுக்காக ஊர்தோறும் விடுதிகள் வேண்டும். விருப்புடன் தங்கும் வகையில் வீட்டு வசதிகள் அனைத்தும் அமைக்கவேண்டும் என்று ஒரு பொது வேண்டுகோளை விடுத்தார்கள்.

∴

"திருமதி பெரியார் ஈ. வெ. ரா. மணியம்மை குழந்தைகள் விடுதி"

திருச்சி—9-8-67

தந்தை பெரியார் அவர்கள் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்ததுடன் அரசினர் மேலும் ஒன்றேகால் லட்சம் போட்டு இரண்டரை லட்ச ரூபாய் செலவில் மேற்கண்ட குழந்தைகள் விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழா புத்தூர் தலைமை மருத்துவ மனைத் திடலில் நடைபெற்றது. முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாத்துரை அவர்கள் அடிக்கல் நாட்டிவைத்தார். விழாவில் தந்தை பெரியாரும் அன்னை மணியம்மையாரும் கலந்து கொண்டார்கள். மற்றும் தமிழக

'மெயில்' ஏட்டில்



தந்தை பெரியார் ஆசியை முதல்வர் பெற்றது கண்டு பார்ப்பனர் கிலி!

அமைச்சர்கள், மருத்துவ டைரக்டர்கள், டாக்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

∴

எல். எம். பி. டாக்டர் படிப்புக்கு வழி செய்க.

சென்னை—10-8-67

கிராமமக்கள் நோயால் அவதிப்படுவதையும், எம். பி. பி. எஸ். டாக்டர்கள் கிராமப் புறங்களில் பணியாற்றவே மறுப்பதையும் சுட்டிக்காட்டி இதற்கு ஒருநல்ல வழிகாணும் முறையில் இரண்டாண்டு படிப்பில் எல். எம். பி. என்ற டாக்டர் படிப்புக்காக தனி மருந்துவக் கல்லூரிகளைத் திறந்து ஏற்பாடு செய்தால் தி. மு. க. அரசுக்கு ஒரு நல்ல பெயர் கிடைக்கும் என்று அறிவுறை கூறி 'மந்திரிகளுக்கு வேண்டுகோள்' எனும் தலைப்பில் அய்யா அவர்கள் 'விடுதலை'யில் தலையங்கம் எழுதினார்.

கடவுள் ஒழிந்தால் சாதி ஒழியும்!

சாந்த்ராம்

[பஞ்சாப் மாநிலத்தில் சாதி ஒழிப்புச் சங்கத்தை நிறுவி பல ஆண்டுகளாக உழைத்துவரும் திரு. சாந்தராம் அவர்கள் எழுதிய ''ராஷ்டிர ரக்ஷாகா உபாய்'' என்ற நூலில் காணும் ஒரு பகுதியினைத் தமிழாக்கி **தோழர் ப. திருவேங்கடம்** அவர்கள் சுவைபடத்தருகிறார்]

சாதிகள் அனைத்தும் ஒழிந்துபோய் கலப்புத் திருமணமே நேரான திருமணமெனக் கருதி, அதோடு மாநிலம் விட்டு மாநிலத்தவர்களுடன் உறவு கொள்வதே சகோதரத்துவத்திற்குச் சாலப் பொருத்தமானது. இதை உணர்ந்து மக்கள் முன்னேறிவிட்டால் மொழிச் சண்டைகளுக்கும், மாகாணச்சண்டைகளுக்கும் இடமேது? எல்லா வேற்றுமை உணர்ச்சிகளும் மாண்டொழிந்து போகுமல்லவா?

நான் லாகூரில் 'ஜாத்-பாத் தோரக மண்டலை' நிறுவி சாதி ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சமயத்தில் தென்னாட்டிலிருந்து திராவிடர் கழகப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் எனது இல்லம்ஏகினார். அவரும் என்னுடன் சேர்ந்து பஞ்சாப் பகுதிகளில் சாதி ஒழிப்புப் பிரசாரம் செய்தார். அவருடன் திராவிடத் தளபதி அறிஞர் அண்ணாத்துரையும் வந்திருந்தார்.

அப்போது அவர்களை நான் கேட்டேன்: 'சாதிதான் ஒழியவேண்டும்; கடவுளையும் ஏன் ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கூறுகிறீர்கள்?' என்று.

அதற்கு அவர்கள்: 'சாதி ஒழிய வேண்டுமென்று சாடினோம். சனாதனிகளெல்லாம் ஒன்றுகூடி சாதியை ஒழிக்கக் கூடாது. சாதிக்கு ஆதாரம் சாத்திரங்கள், சாத்திரங்கள் இருக்குமட்டும் சாதியை ஒழிக்க முடியாது என்று கூறினார்கள். அப்படியனால் முதலில் அந்தச் சாத்திரங்களைத் தீய்த்துத் தீர்ப்போம் என்றோம். அதற்கும் அவர்கள் இடங்கொடுக்காமல் சாத்திரத்தை ஒழிக்க முடியவே முடியாது. அவைகள் வேதங்களில் ஆழ வேரூன்றி நிற்கின்றன என்று சவால் விட்டார்கள். அந்தச் சவாலையும் ஏற்று வேதங்களையும் ஒழித்துக்கட்ட முனைந்தோம். அதற்கும் அவர்கள் விட்டுக் கொடுக்காமல் வேதங்களெல்லாம் கடவுள் வாயால் சொல்லப்பட்டு இன்றளவும் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. ஆகவே உங்களால் கடவுளை ஒன்றும் செய்துவிட முடியாது. கடவுள் வழிவந்த, கடவுளே மூலமாக உள்ள சாதியை உங்களால் அசைக்கவே முடியாதென்று எக்காளமிட்டனர். சரி! அப்படியானால் அந்தக் கடவுளையே ஒருகை பார்த்துத் தீர்த்துவிட்டு மறுவேலை பார்க்கிறோம்! என்று களத்தில் இறங்கிக காரியமாற்றுகிறோம்!

கடவுள் ஒழிந்தால்தான் சாதி ஒழியும் என்ற உண்மை விளக்கத்தைக் கண்டு, உறுதியோடு சாதியை ஒழித்துக் கட்டச் சகல துறைகளிலும் முயன்று வருகிறோம். இதிலென்ன தவறு? நீங்களே சிந்தித்துக் கூறுங்களேன்!'

இதைக் கேட்டதும் ஆச்சரியப்பட்டு, உண்மை உணர்ந்து, வாயே அடைத்துப் போனேன்!

சாதி வேண்டுமென்று சொல்லும் எந்தக் கடவுளானாலும் அது ஒழிந்தேதான் ஆகவேண்டும் என்ற முடிவையும் நானும் ஏற்கலானேன்.

இந்தியாவில் சாதிவெறி அறவே ஒழிந்தால், வடக்கு—தெற்கு என்ற மன வேற்றுமைக்குக் கூட இடமே இருக்காது.

சாதியை ஆழக் குழிதோண்டி மீண்டும் தலைதூக்காவண்ணம் புதைத்தொழிதது விட்டால் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்சனையே மறைந்தொழிந்துபோம்.

தீராப் பசியுள்ளவனுக்கு பழஞ்சோறு பஞ்சாமிர்தம்!

நல்ல தூக்கமுள்ளவனுக்கு தரையே பஞ்சுமெத்தை; கையே தலையணையாகி மெய்மறந்த தூக்கம் வரும்.

அதுபோல உண்மை அன்பு தவழ்ந்திடுமேயானால், அன்பு நிறைந்து வழியும்; இதயத்தில் சாதிக்கும், சாதி வேற்றுமைக்கும் இடமே இல்லாமற்போகும். அன்பு கனிந்த இதயத்தால் கட்டுண்ட ஏனைய மக்களும் ஒரே நேர்; எல்லாம் இந்நாட்டு மன்னர்; எல்லோரும் ஓர்குலம்! அவர்களை எவர்தான் துணிந்து பிரித்திட முடியும்? அவர்களை எந்த அன்னியன்தான் துணிந்து படையெடுத்து வென்றிட முடியும்? மக்கள் ஒற்றுமைச் சக்தியின் முன் எந்த ஆயுதபலமும் தூள் தூள்தான்! இதை இன்றையச் சமுதாயம் நன்கு உணர்ந்து காரியமாற்றத் துடித்தெழ வேண்டும்.

தென்னாட்டில் இந்தி எதிர்ப்பு இவ்வளவு பயங்கர உருவெடுத்து நிற்பதற்கு உண்மையான அடிப்படைக்காரணமென்ன? சந்தேகமின்றி வடமொழியும். இந்தியும் பேசும் மக்கட்பகுதியின் சாதித்திமிரே தான். சாதித் திமிர் அடங்கினால் எம் மொழியாயின் என்ன? மன உணர்வைப் பங்கிட்டுக்கொள்ள ஏதுவாக அமைந்தச் சாதனங்கள்தானே சகல மொழிகளும்? சாதிப்பித்து முறுக்கேறி, மொழி ஏகாதிபத்தியம் தன் கோரப் பற்களைக் காட்டினால், சாதியை ஒழிக்கவே முனைந்துள்ள சீர்திருத்தச் செயல்களால் — அத்தகு கோரப் பற்கள் உடைக்கப்படாமலா போகும்?

பல் உடைந்தும், திருந்தாமல் மீண்டும் மீண்டும் தலைதூக்கினால் தட்டித் தீர்ப்பார்களே ஒழிய தடவியா கொடுப்பர்?

மத வெறியர்களும், சாதி வெறியர்களும், மொழி வெறியர்களும் இவைகளை எல்லாம் நன்கு உணர்ந்து திருந்துவார்களாக!

ஒரு தமிழ்ச் சகோதரர் என்னுடன் பேசும்போது மேலே கூறியபடியே வாதிட்டுப் பேசினார். அவரது உள்ளத் துடிப்பையும், குமுறலையும், ஏக்கத்தையும் நன்கு உணர்ந்து கொள்ள எனக்கு ஒரு வாய்ப்பு கிட்டியது என்று பெருமையாகக் கூறிக் கொள்கிறேன்.

அந்தத் தமிழ்ச் சகோதரர் மேலும் கூறினார் — ஆங்கிலத்தால் நமது சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் பிறந்ததே ஒழிய வடமொழியைப்போல் இந்தியைப்போல் நம்மை சாதியால், பிறப்பால், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பிரித்துக் காட்டிடவில்லையே! சாதிகளுக்காகவே வாதாடிய துளசிதாசர் பேசின்றாரின் இந்திமொழி எங்களுக்கு வேண்டாம் என்றால் சரிதானே!

சாதிபேதத்தினால் இன்னல்கள் பல பட்டு, அவமானம் தாங்கமாட்டாது. மேற்கு பஞ்சாபில் சிற்பத் தொழில் வல்லுநர்களான தச்சர், நாவிதர், குயவர் கன்னார், நெசவாளர், வாணிபர், நடிகர், மந்திரவாதி, பாணர், வீட்டு வேலைக்காரர், ராஜபுதனத்து ஜாட் பரம்பரையினர், தெருக்கூட்டிடுவோர், தோட்டக்காரர் ஆகிய மக்களால் அந்தக் காலந்தொட்டே அதாவது பிரிவினைக்கு முன்பிருந்தே இந்து மதத்தில் இருக்க முடியவில்லை; சூத்திரத் தன்மையினின்றும், தாழ்ந்த சாதி கொடுமைகளினின்றும் விடுதலை பெறவே அனைவரும் முஸ்லிம்களாக மாறிவிட்டனர்.

இஸ்லாம் மதத்தில் உயர்வு தாழ்வு மனப்பான்மை கிடையாது. மகாராஜா முகம்மதுவும், கடைசிப் பணியாள் ஏழை அப்பாஸும் ஒரே வரிசையில் சமமாக மண்டியிட்டு 'நமாஸ்' படிக்கலாம். வேற்றுமை உணர்ச்சி அவர்களுக்குள் கிடையவே கிடையாது. அங்கே ஆண்டான் — அடிமை என்ற ஏற்றத் தாழ்வு எண்ணம் எழுவதில்லை.

இதற்கு நேர்மாறாக இந்துக்கள் கோயில் பக்கம் திரும்புங்கள். பார்ப்பானுக்கு முதலிடம். அடுத்து அடுத்து வரிசைக் கிரமமாக மற்ற மற்றச் சாதியார்களுக்கு! அதுகூட இல்லை தெருப் பெருக்கிடும் ''பங்கி'' என்று அழைக்கப்படும் தோட்டி மக்களுக்கு! இதற்குப் பெயர்தான் வர்ணாசிரம தர்மமா? பங்கி என்று சொல்லிக் கொண்டே தூரநில்! தொடாதே! சக்கிலி என்று சொல்லி எட்டிப்போ! நெருங்காதே! இதுதான் சாதியின் நியாயமா? எனினும் பங்கியையும், சக்கிலியையும் இந்து என்று

தானே ஏற்றுக் கொள்கிறோம்! அது போதாதா? என்று வினவுகிறார்கள் உச்ச இந்து தர்மாக்கள்.

என்னே பேதமை! உயர்வு-தாழ்வு கற்பிப்பது மத தர்மமா? தாழ்ந்தவனைத் தீண்டாதே என்று ஓலமிடுவதுதான் அறிவுடைமையா?

எங்கே சகோதரத்துவம்?
எங்கே சமத்துவம்?
எங்கே சுதந்திரம்?

இப்படிப்பட்ட நிலையில் நாடு உருப்படுமா? உருப்பட்டதே இல்லை. பன்னூறு ஆண்டு காலமாக அன்னியர்களுக்கும அடிமையானோமே!


தீண்டாமைக்கு மூலகாரணமே சாதி வெறிதான் என்பதை எவரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

சாதி நிலைத்து நிற்குமட்டும் தீண்டாமை ஒழியாது. சாதியை ஒழிக்க முன் வராமல் எவராகிலும் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுவதாகக் கூறினால் அது ஏமாற்று வேலையாகும்.

சாதி வெறியின் கேட்டால், இந்தியா மேலும் மேலும் நாசமடைந்துக்கொண்டே போனால், நேருவைச் சார்ந்த மரபினரும் லால்பகதூரைச் சார்ந்த மரபினரும் ஆட்சி பீடத்தில் அமரவே முடியாது.

சாதிக் கொடுமையால் அல்லவோ இரண்டு ரூபாய் கூலிக்கு மலமெடுத்து சுத்தஞ் செய்யும் பணியாள் அன்றும், அதாவது அந்நியன் ஆண்ட காலத்திலும் இன்றும், அதாவது சுதந்திரம் வந்த பிறகும் அதே கூலியைப் பெற்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறான்?

அவன் அந்தச் சாதியில் பிறந்த தோஷத்திற்காக கல்வி வாசனை ஏதும் கொடுக்காமலும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகைகள் செய்துவிடாமலும் அழுத்தியே வைத்திருப்பது எந்தவகை நியாயமாகும்? அவன் பரம்பரை பரம்பரையாக அடிமைதானா? தாழ்ந்தவன்தானா? தீண்டாதவன்தானா? சிந்தித்து திட்டம் தீட்டி அச் சமூகத்தையும் முன்னேறச் செய்ய வேண்டாமா?



இறைவன் பணித்ததே
நம்பணி என்று சொல்
எம் மனை யாளிடம்
குயிலே—ஈரோட்
டிறைவன் பணித்ததே
நம்பணி என்று சொல்!
—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

சாதிக் கோட்பாடு என்பதை பொதுவுடைமை, சமதர்மம் போன்றே ஒரு கொள்கையாக வகுத்து சமூகத்தை தொழில் வழி என்னும் போர்வையில் நடத்திப் பார்த்தார்கள். விபரீதங்கள் கற்பனைக்கும் எட்டாத அளவு நிகழ்ந்துவிட்ட பின்பு அதை அப்படியே விட்டொழித்து வேறு மார்க்கம் காண்பதுதான் விவேகம், அதை விடுத்து சாதி! சாதி!! என்று கட்டி அழுதால் இந்தியச் சமுதாய மக்களுக்குச் சமாதிதான் மிச்சம்!

எனவே சாதி ஒழிப்பென்பது எவ்வளவு பெரிய மகத்தான காரியமென்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் அதை ஒழித்திட முன்வந்து காரியமாற்ற வேண்டும். சாதியற்றச் சமுதாயத்தைக் கண்டே ஓய்வது என்று இடைவிடாமல் பணியாற்ற வேண்டும்; வெற்றி கண்டே தீருவோம் என உறுதியளிக்கிறேன். ஒழிக சாதி! வாழ்க நாடு! ஃஃ

வளர்க கல்விப்புரட்சி!

'பெயரிலான்'

அய்ம்பதாண்டுகளுக்குமுன். தமிழ் நாட்டின் நாட்டுப்புறங்களில், அய்ந்தாவதுவரை படித்தவரை காண்பதே அரிது தொடக்கப் பள்ளிகூட, பலவூர்களுக்கு ஒன்றாக இருக்கும். அதில் படிகதும் மாணவர் எண்ணிக்கை குறைவு. மாணவிகள் இரண்டொருவரும், தாழ்த்தப்பட்டோர் என்பவர்கள் இரண்டொருவரும், பள்ளிக்கூட பட்டியலில் இருப்பார்கள். பள்ளியில் இருக்கமாட்டார்கள். ஆண்டுச் சோதனையின்போது எப்படியோ 'ஆஜர்'படுத்தப்படுவார்கள். கல்வியைப் பற்றிய கவலை அன்று அரசுக்கும் இல்லை; மக்களுக்கும் இல்லை.

அக்கறையே கிடையாது

அரசுக்கோ, மக்களுக்கோ கல்வி பற்றி அக்கறை இருந்திருந்தால் 19 0-11 ஆண்டுகளில், தொடக்கக் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் ஆக்கவேண்டுமென்று திரு. கோபாலகிருஷ்ணகோகலே அன்றைய சமுதாய மன்றத்தில் கொண்டுவந்த தீர்மானத்தைத் தோற்கடிக்க முடிந்திராது.

இக்கால கல்வியின் முதலவையை உணராதிருந்த தமிழ்மக்களிடையே, ஏறத்தாழ அய்ம்பதாண்டுகளுக்கு முன் ஓர் விழிப்பு ஏற்பட்டது. அது பெருமளவல்ல; சிறிதளவே. நீதிக்கட்சியின் பிரசாரம், பார்ப்பனரல்லாதாரும் கல்வியின்மேல் கருத்தைச் செலுத்த ஓரளவு உதவிற்று; அவ்விழிப்பு பெரும்பாலும் மேட்டுக் குடிகளோடு நின்றுவிட்டது. எனவே, நீதிக் கட்சி நிறைவேற்றிய சென்னை தொடக்கக் கல்விச் சட்டத்தின் கீழ் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டிய கட்டாயக் கல்வி முறை தழைக்காது நின்று விட்டது.

விழிப்பேற்படுத்தியவர் பெரியார்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நாற்பத்திரெண்டு ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய சுயமரியாதை இயக்கமே பாமர மக்களிடையே பெரும் விழிப்பை ஏற்படுத்திற்று. அவ்வியக்கம் எல்லா நிலைகளிலும் இருந்த தமிழ் மக்களின் சிந்தனையை பெருங் கலக்குக் கலக்கிற்று, அதன் தீவிர கொள்கைகளை ஏற்கர்தவர்கள் கூட, அவற்றிற்கு பரம விரோதிகளாக கரட்டிக்கொண்டவர்கள் கூட அதன் அடிப்படையைத் தம்மை யறியாமலே ஏற்றுக்கொண்டார்கள்.

சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படை என்ன? மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வு கூடாது. மனிதர்களை மனிதர்களாக மதித்து, சமத்துவமாக நடத்த வேண்டும். படிப்பு என்பது எல்லோருக்கும் வரும்; திறமை என்பது, வசதியையும், சூழ்நிலையையும், வளர்ப்பினையும், வாய்ப்பினையும் பொறுத்தது; பிறப்பைப் பொறுத்ததல்ல.

இவ்வடிப்படை கருத்துகள் தமிழ்நாடு முழுவதும், நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும், பணக்காரர்களிடத்திலும் ஏழைகளிடத்திலும், மழைக்குக்கூட பள்ளிக் கூடத்தில் ஒதுங்கி அறியாதவர்களிடமும் பரவி வேரூன்றின. கற்க முடியும் என்கிற தன்னம்பிக்கையும் கற்கவேண்டும் என்கிற ஆர்வமும் பொதுமக்களிடம் செழித்து வளரும் வேளையில் முப்பதாண்டுகளுக்கு முன்

க்கட்டாய இந்தி என்ற முறை புகுத்தப்பட்டது. பொதுமக்களுடைய கல்விப் பயிரை, குறிப்பாக பின்னடைந்த தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்வி வளர்ச்சியை அழிக்க வந்த பூச்சி 'கட்டாய இந்தி' என்று கருதப்பட்டது. கட்டாய இந்தியை எதிர்த்துப் பெருங்கிளர்ச்சி நடத்தப்பட்டது, பெரியார் தலைமையில்.

கட்டாய இந்தி

இந்திய விடுதலை கிடைப்பதற்கு ஓர் பத்தாண்டு முன்னரே, புகுத்தப்பட்ட கட்டாய இந்தி, தமிழ் மக்களையெல்லாம் அரசியல் வழக்கில் இழுத்துவிட்டது. தமிழ் மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பிற்று. கட்டாய இந்தி எதிர்ப்பின் பேரால் நடந்த பொதுக் கிளர்ச்சி தமிழ் மக்களிடையே கல்வி ஆர்வத்தை ஊதிவிட்டது. 'பெரியவர்'களுக்கு சமமாக நம் வீடடுப் பிள்ளைகளும் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற விழிப்பும் துடிப்பும் ஏழை மக்களிடம் பரவி விட்டது.

குலக்கல்வி

ஏழைகள் படித்துப் பட்டம் பெற்று விட்டால் பதவி கோருவார்களே! பதவியில் இருப்பவர்கள், மற்றவர்களுக்கு வழி விடச் சம்மதிப்பார்களா? ஏழைகளின் கல்வி ஆர்வத்தைத் தூர்க்கத் திட்டமிடப்பட்டது. அத்திட்டம் என்ன? ஆச்சாரியாரது 'குலக் கல்வி' திட்டம், தொடக்கப்பள்ளி மாணவர்கள், அரைவேளை படித்தால் போதும். மறுவேளை தங்கள் குலத்தொழிலைக் கற்றுக்கொள்ளட்டும். குலத்தொழில் செய்து பிழைத்துக் கொள்ளட்டும்' இதைப் படித்தாலே பதறுகிறதல்லவா?

ஆம். தமிழ் மக்கள் பதறினார்கள். தமிழ் மக்களின் காவலர், வருவதறியும் பெரியார் பொங்கியெழுந்தார். போர் முரசு கொட்டினார். 'எல்லோருக்கும் சமவாய்ப்பு' விதியினை உடைய அரசியல் சட்டத்தை உருவாக்கிய, சமதர்ம சிற்பி ஏழை பங்காளர் காமராசரும் போர்க்கொடி உயர்த்தினார். அறிஞர் அண்ணாவும் படைதொடுத்தார்.

அன்றுவரை, விழிப்புப்பெறாத தமிழர்களையும், 'குலக்கல்வி'த் திட்டம் விழிப்புறச் செய்தது. கல்வி பற்றி ஏனோதானோ என்று இருந்தவர்களுக்கும் கல்வியார்வத்தைப் பெருக்கிற்று.

குலக்கல்வித் திட்டம் ஒடிற்று. 'எல்லோருக்கும் கல்வி' எல்லோருக்கும் எல்லாக் கல்வியும்' என்ற சிங்கநாதம் கிளம்பிற்று.

காமராசர் ஆட்சியில் கல்வி

விளைவு? காமராசர் ஆட்சியில் கல்வி வெள்ளம் கரை புரண்டோடிற்று. பள்ளியில்லா சிற்றூர்களைத் தேடித் தேடி, தொடக்கப் பள்ளிகள் வைக்கப் பட்டன. அதற்குமுன் காணாத வேகத்தில் பள்ளிகளின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்தன. இவ் வளர்ச்சி தொடக்க நிலையோடு நிற்கவில்லை. உயர்நிலைக் கல்வி; கல்லூரிக் கல்வி ஆகியவற்றிலும் பெரும் வளர்ச்சி கண்டது தமிழ்நாடு.

சிற்றூர்தோறும் தொடக்கப்பள்ளி, பேரூர்தோறும் — குறைந்தது அய்ந்து மைலுக்கு ஒன்றாகவாகிலும்—உயர்நிலைப் பள்ளி, மூன்று மைலுக்கு ஒன்றுவீதம் இடைநிலைப் பள்ளி, என்ற பெருநிலை தமிழ்நாட்டுன் நிலை. சாதி பாராமல் வருவாய் கணக்குக் கேட்காமல் எல்லோருக்கும் பள்ளி இறுதி வகுப்புவரை இலவசக் கல்வி கிடைக்கிறது, தமிழ்நாட்டில்.

கல்லூரி இலவசக் கல்வித் திட்டத்தை தொடங்கிய பெருமை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவைக்கு உண்டு ஏழைகள் அனைவருக்கும் புதுமுக வகுப்புக் கல்வி இலவசம் என்று ஆணையிட்டதன் மூலம் கல்விப் பயிரைச் செழிக்க வைப்பதில் தங்களுக்குள்ள உறுதியையும் ஆர்வத்தையும் அக்கறையையும் நாடறியச் செய்துள்ளனர். இலவசக் கல்லூரிக் கல்வி முறையை ஆண்டுக்கு ஆண்டு, மேல் வகுப்பிற்கு விரிவாக்குவதன் மூலம், கல்லூரிக் கல்வியை பொது உரிமையாக்கும் இன்றைய அரசு என்று நம்பலாம்.

கல்விப் பயிர் செய்ய—நாடு முழுவதிலும் பரவலாக கல்விப் பயிர் செய்ய, மக்கள் மனநிலத்தை தனித்து நின்று, பழைமையோடு எதிர்த்து நின்று, உழுது உழுது, பண்படுத்திய பெருமை, சிறப்பு வெற்றி, பெரியாருக்கும், அவரது சுயமரியாதை இயக்கத்திற்கும், அம் முன்னோடி

இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்த அறிஞர் அண்ணா போன்றவர்களுக்கும் உரியனவாம்.

பண்படுத்திய பெருமை பெரியாருக்கும் அவரது சீடர்களுக்கும். காத்த பெருமை பெரியாருக்கு. விதைத்து பயிரிட்ட பெருமை காமராசருக்கும், அண்ணாவிற்கும்.

எப்பக்கம் நோக்கினும், 'பச்சைப் பசேர்', என்று நிமிர்ந்து நிற்கும் தமிழ்நாட்டுக் கல்விப் பயிரைக் காக்க வேணடும், தொடர்ந்து நீர்ப்பாய்ச்ச வேண்டும். தேவைப்பட்டபோதெல்லாம் வேண்டிய அளவு உரமிட வேண்டும். விழிப்பாயிருந்து விரைந்து பூச்சிமருந்து தெளிக்கவேண்டும்.

அண்மைக் காலத்தில் நடந்தது பெரிது; வளர்ந்தது எவ்வளவோ! ஆயினும், இனியும் நடக்கவேண்டியது அதைவிடப் பெரிது; வளரவேண்டியதும் மேலும் பெருமளவு

கல்விக்குக் கரைபோட வேண்டுமென்ற கருத்துடையோர்களை வைத்துக் கொண்டே, கல்வி பரப்பவேண்டிய நிலையில் இருந்தது, முந்திய ஆட்சி. கல்வி கரைபுரண்டோடவேண்டும் என்னும் பொதுமக்களின் கருத்தைக் காட்டுபவர்களாகவே, அமைந்துள்ளது இன்றைய ஆட்சியின் நல்வாய்ப்பு. இந்நல்வாய்ப்பினை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதையே பொதுமக்கள், விரும்புகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள்.

பள்ளிக்கூடங்களின் நிலை, சிறப்பாக நாட்டுப்புற பள்ளிக்கூடங்களின் கட்டட, தளவாட, ஆசிரியர் நிலை பெரிதும் சீராக வேண்டும். இந்தியாவில் வேறெங்கும் நடவாத பள்ளிக்கூட சீரமைப்பு மாநாடுகளின் மூலம் எழுந்த கட்டடங்கள் பல. கிடைத்த தளவாடங்கள் கணக்கற்றன ஆயினும், இனியும் நீக்கப்பட வேண்டிய குறைகள் பலப்பல. வரிப்பணத்தால் மட்டும் அவற்றை நீக்குவதற்கு பல்லாண்டு முயற்சியாகிவிடும். பொதுமக்களுடைய நன்கொடைகளை இதற்குப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளுதல் நல்லது. மக்களது ஈடுபாடும், தியாகமும் கல்விப் பயிருக்கு உரமாகும்.

நடுப்பகல் உணவுத் திட்டத்தையும், சீருடை வழங்கலையும். இலவச பலகை நூல் வழங்கலையும், வளர்த்துவரவேண்டும் பத்தாண்டுகளுக்கு முன்னிருந்த விலைவாசி வேறு. இன்றிருக்கும் விலைவாசி வேறு. அன்று முடிவு செய்த பத்து காசில் இன்று சோறுபோட முடியாது. உணவு விகிதத்தை அதிகப்படுத்த வேண்டும். முடிந்தால்கூட, முழுக்க முழுக்க, வரிப் பணத்திலிருந்து பகல் உணவுத் திட்டத்தை நடத்துவது, இப்போதைக்கு நல்லதல்ல. வரிப் பணத்தில் இருந்து நடக்கும வளர்ச்சிகளெல்லாம், கால்ரூபாய் அளவுகூட பலன் கொடுப்பதில்லை. நம் பக்குவம் அப்படி. ஆகவே, உள்ளூர் பொதுமக்களுடைய ஈடுபாட்டோடும் பொருளுதவியோடும் இன்னும் சில ஆண்டுகளுக்கு நடக்கும்படி பார்த்துக் கொள்வதே நல்லது.

இதுவரையில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும். பெரியவர்கள் படிப்பிற்கு ஒன்றுமே நடக்கவில்லை; முந்தியவர்கள் சிலர், பிந்தியவர்கள் பலர்; மிகப் பலர், பெரியவர்கள் படிப்பிற்கு ஒன்றும் செய்யாதது குறை. இக்குறை இனியும் தொடர்ந்தால், தீங்காகவே முடியலாம். ஆகவே பெரியவர்கள் படிப்பைக் கவனிக்க வேண்டும். அதற்காவன செய்யவேண்டும். விரைவாகவும் பெருமளவும் செய்யவேண்டும்.

பெரியவர்கள், மூன்றுபிரிவினர்கள். ஒன்றுமே எழுதப் படிக்கத் தெரியாத முதியோர் ஒரு பிரிவினர். நான்கைந்து வகுப்புவரை படித்தவர்கள் இரண்டாம் பிரிவினர்கள். எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும் எட்டியவர்கள் மூன்றாம் பிரிவினர்கள். இம் மூன்று பிரிவினர்களுக்கும் படிக்க வசதி செய்ய வேண்டும்.

பின்னிரண்டுப் பிரிவினர்களை கவனிப்போம். அவர்கள் ஓய்ந்த நேரத்தில் நூல்களை எடுத்துப் படித்து அறிவைப் பெருக்கிக்கொள்ள, வாய்ப்பும் வசதியும் வேண்டும்? வாய்ப்பினையும் வசதிகளையும் எப்படிச் செய்து கொடுப்பது? நூலகங்களை ஏற்படுத்திச் செய்ய வேண்டும். ஊர்தோறும் பள்ளி வைத்த பிறகு, அதைத் தொடர்ந்து ஊர்தோறும் நூலகங்கள் அமைக்கவேண்டும். இதைத் தள்ளிப்போடக் கூடாது. அடுத்த சில ஆண்டுகளுக்குள்–மூன்றாண்டுகளுக்குள்ளாவது – தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஊர்களுக்கும் நூலகங்களை ஏற்படுத்தவேண்டும். சிற்றூராயின் 'வழங்கு முனை' என்கிற பகுதிநேர நூலகம் போதும்

சற்று பெரிய ஊர்தோறும் முழுநேரக்கிளை நூலகங்களை அமைக்கவேண்டும். முந்தியது ஆறாயிரம்; பிந்தியது ஆயிரம் அமைத்தால் போதும். செலவிற்கு மலைக்கத் தேவையில்லை.

தேங்கிக்கிடக்கிற நூலக வரியெல்லாம் நூலக ஆணைக்குழுவிற்குப் போய்ச் சேரவேண்டும். இதைக் கண்டிப்பாக நிறைவேற்றவேண்டும். புதிதாக திறக்கும் நூலகங்களின் செலவிற்காக பொதுமக்களிடமிருந்து பணமாக்கவும் வாடகை இல்லாக் கட்டடமாகவும், நன்கொடையாகவும் பெறலாம். முழு நேரக் கிளை நூலகங்களுக்கு ஓர் விகிதாசாரமும் வழங்கு முனைக்கு குறைந்த விகிதாசாரமும் குறித்து பெறலாம். பெற முடியுமா? முடியும். ஆயிரத்து அய்ந்நூறு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடமும், பள்ளியொன்றிற்கு பத்தாயிரம் ரூபாய் ரொக்க உதவியும் கொடுத்த மக்கள் எங்கும் சென்றுவிடவில்லை. இப்போதைய அரசிற்கு, மக்களிடம் உள்ள தொடர்பும் செல்வாக்கும் சிறிதும் குறைந்ததல்ல; சொல்லப்போனால் அதிகம். ஆகவே கிராமங்களின் ஒத்துழைப்போடு, ஆண்டிற்கு இரண்டாயிரத்து அய்ந்நூற்றுக்குக் குறையாத நூலகங்களையாவது, திட்டமிட்டு திறத்தல் சாலச் சிறந்தது. இது எளிதாகச் செய்து முடிக்கக் கூடியது.

படிக்காதவர்கள், எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளவும் வகை செய்தல் விரும்பத்தக்கது. முப்பது நாற்பது வயதானவர்களை தேடாவிட்டாலும் பதினைந்து இருபது வயதினருக்காகிலும் தனிப்பள்ளி வைத்து எழுத்தறிவூட்டவேண்டும். இதற்காக தனிக் கட்டடங்கள் தேவையில்லை. தளவாடங்கள் தேடவேண்டாம். உள்ள பள்ளிகளை மாலை நேரத்தில் இதற்காகப் பயன்படுத்தலாம். ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் பிறரையும் சமூகத் தொண்டு செய்ய துடிக்கும் லட்சிய மாணவர்களையும் இதில் எளிதாக ஈடுபடுத்தலாம். சீரணியினர் இதற்கான சூழ்நிலையை உருவாக்கி, கல்லாதவர்களை மாலைப் பள்ளியில் சேர்க்கும் பணியினை மேற்கொள்ளலாம். செல்லும் வாயெல்லாம் செய்து கல்லாமையைக் கல்வியெறிவதை இன்றைய ஆட்சி முதற்பணியாகக் கொள்ள வேண்டும்.

'வறுமையினால் ஒரு தமிழன் கற்கவில்லையென்றால், இங்குள்ள எல்லோரும் நாணவேண்டும்.' பாவேந்தர் புரட்சிக் கவிஞர் கட்டளை இது. நாணத்தை ஆக்கப் பணியாக்கும் அறிவும் ஆற்றலும், பிறர் துணையின்றி நிற்கும் தனி வலிமையும் முடைய தமிழ்நாட்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, 'எல்லோருக்கும் கல்வி' கொடுத்து, தன்மானம் ஊட்டி சமநிலை மனிதர்களாக நிமிர்ந்து நல்வாழ்வு வாழ, ஆவன செய்க! சிறக்கச் செய்க! செயற்கரிய செய்து, பெறற்கரிய பெரும்புகழ் பெறுக!

புளுகன் கம்பன்!

"தமிழனாகிய கம்பன் 'ஆரியம் என்றால் கேழ்வரகு" என்கிற வரையில் மாத்திரம் தெரிந்திருந்தானானால் அவனுக்கு வால்மீகி நூலை எடுத்தோதிய வேதியர்கள் புளுகியிருத்தல் வேண்டும். ஆனால் அக்காலத்து வேதியர்கள் புளுகர்கள் அல்லர் என்று யான் முழுதும் நம்பியிருத்தலினாலே புளுகென்று தோன்றிய முழுமையினையும் நம்மவன் கம்பன் புளுகென்றே யான் தீர்மானித்தேன். அவ்வளவு திறமையுடன் புளுகும் வன்மை புளுகுச் சக்ரவர்த்தியாகிய கம்பனையன்றி வேறு யார்க்கும் கிட்டக்கூடிய தென்று யான் நம்பவில்லை".

—பா. வே. மாணிக்க நாயக்கர்
(கம்பன் புளுகும் வால்மீகியின் வாய்மையும்)—பக்கம் 15.

"வள்ளுவரைப் பற்றி பார்ப்பனப்புரட்டு"

சு. ஒளிச்செங்கோ

திருவள்ளுவர் பார்ப்பனருக்கு பிறந்த தால்தான் திருக்குறளை இயற்ற முடிந்த தென்று, ஒரு பார்ப்பன வெறியர் பேசியதை திரு. க. அயோத்திதாச பண்டிதர் கேள்வி கேட்டு மடக்கிய நிகழ்ச்சியை அவர் எழுதிய 'நூதன ஜாதிகள் உற்பவ பீடிகை" என்ற சிறு நூலில் குறிப்பிட்டுள்ளதை கீழே தொகுத்துத் தந்துள்ளேன்.

அறிஞர் திரு. க. அயோத்திதாச பண்டிதர் இராயப்பேட்டைச் சாக்கிய பௌத்த சங்கத் தலைவராகயிருந்து தொண்டாற்றியவர். 'தமிழ்' என்ற வார இதழை 1907ல் துவக்கி ஆரியப் பார்ப்பன புரட்டுகளை அம்பலப்படுத்தியவர்.

இவர் "பார்ப்பன வேதாந்த விவரம்" "வேடப்பார்ப்பனர் வேதாந்த விபரம்" "நந்தன் சரித்திர விளக்கம்" "நூதன ஜாதிகள் உற்பவ பீடிகை" "திருவள்ளுவ நாயனார் பறைச்சிக்கும் பார்ப்பானுக்கும் பிறந்தா ரென்றும் பொய்க்கதை விபரம்" ஆகிய புத்தகங்களை எழுதியுள்ளார்.

அறிஞர் திரு. க. அயோத்திதாச பண்டிதர் தலைமை ஏற்று நடந்திய பௌத்த சங்கத்தைப்பற்றி திரு. வி க. "அவர்கள் சங்கம் எனது மதவெறியைத் தீர்க்கும் மருந்தாயிற்று" என்று போற்றுகிறார்.

1892ல் சென்னையில் மகாஜன சபை கூட்டம், திரு சிவநாம சாஸ்திரி தலைமையில் நடந்தது, கூட்டத்தில் அவர் பேசும் பொழுது "வள்ளுவர் பார்ப்பன வித்துக்கு பிறந்ததனால்தான் சிறந்த திருக்குறளைப் பாடினார்; சுக்கல—சுரோனிதம்' கலப்பரியாது என்று குறிப்பிடும்பொழுது கூட்டத்தில்கேட்டுக்கொண்டிருந்த அறிஞர் திரு.க. அயோத்திதாச பண்டிதர் எழுந்து நீங்கள் சொல்லியதை நான் ஏற்றுக்கொள்வ தென்றால், நான் சில கேள்விகள் கேட்க வேண்டும் என்றார்.

அதற்கு திரு. சிவநாம சாஸ்திரி "சரி, கேளும்" என்றார்,

'நமது நாட்டில் தீண்டாதவர்கள் என்று இழிவு படுத்தப்படும் பறையர்கள், என்பவர்கள் கிறித்துவ சங்கத்தார்களின் கருணையால் 'எம். ஏ,' 'பி. ஏ,' படித்துப் பட்டங்களைப் பெற்று உயர் பதவிகளில் அமர்ந்திருக்கிறார்களே? அவர்கள் யார் வித்துக்குப் பிறந்திருப்பார்களென்று எண்ணுகிறீர்' என்றார். அதற்கு திரு. சிவ நாம சாஸ்திரி ஒன்றும் பதில் கூறாமல் நின்று கொண்டிருந்தார்.

பிறகு அறிஞர் திரு. க. அயோத்திதாச பண்டிதர் 'தெரிந்துபெருங்குற்றங்களைச் செய்துசிறைச்சாலைகளில் அடைப்பட்டிருக்கும் பார்ப்பனர்கள் யார் வித்துக்குப் பிறந்திருப்பார்களென்று நீர் நினைக்கிறீர்' என்று கேட்டார்.

திரு. சிவ நாம சாஸ்திரி ஒன்றும் பதில் கூறாமல் திரு திரு என்று விழித்துக் கொண்டு நின்றார். அறிஞர் திரு. க. அயோத்திதாச பண்டிதர், 'ஏன்? பதில் சொல்லாமல் நிற்கிறீர், சொல்லும், என்று சினந்து கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது, கூட்டத்திலிருந்த ஆனரபில், திரு. பி. அரங்கைய நாயுடும், திரு எம். விரராகவாச்சாரியாரும் அறிஞர் திரு. க. அயோத்திதாச பண்டிதரை அமைதி படுத்தினார்கள்.

திரு. சிவ நாம சாஸ்திரியை கூட்டத்திலிருந்தவர்கள் இகழ்ந்து பேசினார்கள். திரு. சிவநாம சாஸ்திரி உட்கார்ந்து கொண்டார். பின்னர் மெல்ல கூட்டத்திலிருந்து நழுவி விட்டார்.

வையம் போற்றும் நூலாம் 'திருக்குறளை"த் தந்த பேரறிஞர் வள்ளுவரைப் பற்றி திரு. சிவநாம சாஸ்திரியார் இழிவு படுத்திப் பேசித் தம் ஆரிய நஞ்சைக் கக்கினார். இவ்வாறு நடப்பது இன்றல்ல, நேற்றல்ல; பல நூறு ஆண்டுகளாய் நடக்கின்றது. இன்றும் தமிழனை இழிவு படுத்துவதைத் தம் தொழிலாகத் தொண்டாகக் கொண்டுள்ளார்கள் பார்ப்பனர்கள்.

இத் தமிழ் நாட்டில் அறிவுச் சுடர் தந்தை **பெரியார்** தோன்றாதிருப்பின் இந்நாடு எந்நிலை அடைந்திருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

எண்பத் தெட்டாண்டுகளை இனிதாய் முடித்து எண்பத்தொன்பதாமாண்டைக் கனிவாய்க் காணும் தந்தை **பெரியார்** வாழ்க இனிது!

இன்னுமா அந்த கிளிப்பிள்ளைப்பாடம்?

கி.வீரமணி

காங்கிரசின் பிறப்பு

"அசூயையில்லாத புத்திமான்கள் மேற்படி நோக்கங்களை மறந்தது எவ்வித ஆட்சேபனையும் செய்ய இடமில்லை! எனினும் நம்மை பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்யும் ராஜ விரோதிகளின் கூட்டமென்று சில கனவான்கள் ஞானக் குறைவினால் சொல்லி விட்டனர்!

...நானும் இங்கு சூழ்ந்திருக்கும் எனது நண்பர்களும் செலுத்துவதைக் காட்டிலும் அதிகமாக, பிரிட்டிஷ் ராஜ்யத்தினிடம் உண்மையுடனும் உறுதியுடனும் நல்லெண்ணம் செலுத்துதல் வேறு யார்க்கும் அரிது. பிரித்தானியா நமக்கு அனுகூலமாக எவ்வளவோ செய்திருக்கிறாள். அதன் பொருட்டாக அவளிடம் நன்றியுடையோம்; சமாதானம் ஏற்படுத்தினாள். ரயில் மோட்டார், மதிப்பிடற்கரிய நலமாகிய மேற்குத்திசை கல்வியை தந்தாள். இதுபோதாது. இன்னும் எவ்வளவோ செய்யவேண்டும், கல்வியும் செல்வமும் பெருக பெருக ஜனங்களுக்கு ராஜ்ய விஷயங்களிலே அதிக நுட்பமான தோற்றமும் ராஜ்ய முன்னேற்றத்தில் அதிக தீவிரமான ஆவலும் தோன்றும்.

...இந்த விருப்பத்திற்கும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் முன்பு பூர்ணவிசுவாசத்துக்கும் விரோதமேயில்லை."

28—12—1885 பம்பாயில் கூடிய முதல் காங்கிரஸ் சபாநாயகர் உமேசந்திர பானர்ஜி பிரசங்கத்தில் ஒருபகுதி.

∴

இராஜவிசுவாசதீர்மானம்

"...இங்ஙனம் கூடுதல் நமக்கு பிரிட்டிஷ் ராஜ்ய மொன்றிலேதான் சாத்தியப்படும். இப்படிப்பட்ட ஆட்சி கிடைத்தது நமது அதிர்ஷ்டம். இங்கிலாந்தினராணியும் அதன் ஜனங்களும் ஆளும் கட்சி நம்மை நாகரீகத்துக்குத் தூண்டுதலிடக் கூடியது! இதன் கீழே கூடினோம் நம்மைத் தடுப்பாரில்லை பயமில்லாமல் திகைப்பில்லாமல், மனதில் உள்ளதை இஷ்டப்படி பேசலாம். நான் இப்போது தெளிவாக ஒரு கேள்வி கேட்கிறேன். இந்த ஜனசபை ராஜத் துரோகத்தையும் கலகத்தையும் வளர்க்கும் கூட்டமா? (அன்று) பிரிட்டிஷ் ராஜ்யத்திற்கு இஃதொரு ஸ்திரமான அஸ்திவாரக்கல் அன்றோ (ஆம்! ஆம்!!.)

இங்கிலீஷ் ராஜ்யத்தினிடம் நாம் பூர்ணமான அன்பும் ஆதரவும் கொண்டிருக்கிறோம். அவர்கள் நமக்குச் செய்த நன்றிகளையெல்லாம் மறக்கமாட்டோம். அவர்கள் நமக்குக் கொடுத்த கல்வியினால் நாம் ஒரு புதிய ஒளி பெற்றோம். ஆசியாவின் கொடுங்கோன்மை இருளுக்கிடையே ஆங்கிலேய நாகரீகத்தின் விடுதலை ஒளி நமக்குக் கிடைத்தது.

(கரகோஷம்)

அடுத்த வருஷம் நமது நல்ல ராணி —சக்ரவர்த்தினியாக ஆட்சி தொடங்கி அய்ம்பது வருஷங்கள் முடியும் திருவிழா இதையே காங்கிரஸ் தனது முதல் தீர்மானத்துக்குரிய விஷயமாகத் தெரிந்தெடுத்திருக்கிறது! காருண்ய மஹாராணிக்குமெழுச்சிகள் தெரிவிக்கிறோம..!

இங்கிலாந்தின் இருதய சுத்தத்தை நம்பி நாம் விடாமுயற்சியுடன் உழைக்க வேண்டும்,

நியாயமும் நீதியுமானதை எல்வளவு

நஷ்டப்பட்டும் இங்கிலீஷ் ஜாதி செய்து தனது யோக்யதையை நிலை நிறுத்திக் கொள்ளும்.

—கல்கத்தாவில் 1886ல் கூடிய இரண்டாவது காங்கிரசில் தாதாபாய் நவ்ரோஜு (தலைவர்) பேசிய பேச்சில் ஒரு பகுதி.

அதில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம்.

"மஹாராணியின் அனுகூலமான, என்றும் மறக்கமுடியாத கீர்த்திமிக்க ஆட்சியில் அய்ம்பது வருஷம் முடிவு பெற்றதைக் குறித்துச் சக்ரவர்த்தினியிடம் கடமைப்படி உண்மையான மகிழ்ச்சிகள் தெரிவிப்பதுடன் பாரத தேசத்தின் எல்லாப் பகுதிகளின்றும் வந்து கூடிய இந்த ஜனசபை பிரிட்டிஷ் ராஜ்யத்தின் மீது இம்மகாராணி இன்னும் பல பல வருஷம் ஆளவேண்டுமென்று வாழ்த்துகிறது."

∴

இங்கிலீஷ் ராஜ்ய சிறப்பு!

"நாளை—அதைக் கடவுள் தடுப்பாராக!—ருஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்கும் இந்த ராஜ்யத்தின் பொருட்டு போராட்டம் ஏற்பட்டால் ருஷிய ராஜ்யத்தைக் காட்டிலும் இங்கிலீஷ் ராஜ்யம் சிறந்ததென்ற விஷயம் யாருக்குத் தெரியும்? படித்த வகுப்பினருக்கா? பாமரருக்கா?

—மூன்றாவது காங்கிரஸ் 1887ல் சென்னையில் கூடியதற்குத் தலைமைதாங்கிய பக்ருதீன் தயாப்ஜியின் உரையில் ஒரு பகுதி.

∴

வெள்ளைக்காரர் தலைமை

"ஜனசபை (காங்கிரஸ்) விஷயத்தில் அவநம்பிக்கை ஏற்படும் ஆங்கிலேயருக்கு சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ஜனசபையை ஏற்படுத்தினோர் பிரிட்டிஷ் ராஜ்யத்தினிடம் மிகுந்த பற்றுதல் உடையவர்கள். இதை விட்டு ருஷியாவினுடைய ஆட்சியின் கீழ்ப் புகுவதை அவர்கள் ஒருநாளும் விரும்பமாட்டார்கள். இங்கிலீஷ் ராஜ்யம் நாகரீகமானது.

—ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் 1889 பம்பாய் 5வது காங்கிரசுக்குத் தலைமை வகித்துப் பேசிய பேச்சின் ஒரு பகுதி.

—இவை "சுதேசமித்திரன்" வெளியீடான காங்கிரஸ் சரித்திரம் முதல் பாகத்தில் உள்ளவை.

∴

வைஸ்ராய் மறைமுக உதவி

"முதன் முதலாக அகில இந்திய மாநாடு ஒன்றைக் கூட்ட ஹ்யூம் துரை உத்தேசித்தபொழுது அவர் அக் கூட்டத்தில் சமூக சீர்திருத்த சம்பந்தமான பிரச்னைகளைமட்டும் ஆராய்வது எனத் தீர்மானித்திருந்தார். சென்னை மகாஜன சபை, பம்பாய் மகாஜன சபைகளைப் போன்ற மாகாண ஸ்தாபனங்கள் அரசியல் விஷயங்களைப்பற்றி விவாதித்து முடிவு கட்ட வேண்டும் என்பது அவர் கருத்து.

இம் மாநாட்டைக் கூட்டு முன்பு அவர் அப்பொழுது இந்தியாவில் ராஜ்யப் பிரதிநிதி (வைஸ்ராய்)யாக இருந்த ஃடப்ரின் பிரபுவை அணுகினார். அவரிடம் தாம் கூட்டவிருக்கும் மாநாட்டைப் பற்றித் தெரியப்படுத்தி, அதிகாரவர்க்கமும் பொது ஜனங்களும் கலந்து சமூகவிஷயங்களைப் பற்றி ஆலோசனை செய்வது மிகுந்த பலனளிக்குமாதலால் மாகாண கவர்னரைக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்.

நாட்டினருக்கு உள்ள குறைகளையும் அவர்களது உண்மையான அபிப்பிராயங்களையும் சர்க்கார் அறிய விரும்பினால் அதிகாரிகள் கூட்டத்தில் தலைமை வகிப்பது அனுசிதமென டப்ரின் பிரபு எடுத்துக்கூறி. மாநாட்டைத் தேசத் தலைவர் ஒருவரைக் கொண்டே நடத்திவைப்பது மேல் என அபிப்பிராயப்பட்டார். ஹ்யூம்துரைக்கு அந்தரங்கமான நண்பர்களும் இதுவே சரியெனக் கூறியதால் மாநாட்டை அவ்விதமே நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆகவே உண்மையில் காங்கிரஸ் நடைமுறையை முதன் முதலாக நிர்ணயித்தவர் இந்திய ராஜ்யப் பிரதிநிதி ஒருவர்தாம். டப்ரின் பிரபு காங்கிரஸ் மாநாடு விஷயமாகச் சிரத்தை காட்டியது வெகுநாள் வரை வெளிப்படுத்தப்படவில்லை.

ஹ்யூம்துரை, மாநாட்டிற்கு ராஜ்யப் பிரதிநிதியின் ஆசீர்வாதத்தைப் பெற்றதும் சீமைக்குச் சென்றார்! அங்கு ரிப்பன். டல்ஹௌசி பிரபுக்களையும் இன்னும்

இந்தியாவின் அன்பர்களான பல பிரமுகர் களையும் கலந்துகொண்டார்.''

—டாக்டர் பட்டாபி சீத்தாராமய்யா எழுதிய ''காங்கிரஸ் மகாசபை சரித்திரம்' முதல் அத்தியாயம்-தமிழ்ப் பதிப்பு பக்கம் 25

∴

''ஹ்யூம் துரை, சிப்பாய்களின் போராட்டம் நடந்தபோது கலெக்டராக இருந்தவர். இனி இந்திய மக்கள் திருப்தியுடன் வாழ்ந்தால்தான் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு ஆபத்து இல்லை என்று இவர் துணிந்தார்.'

நமது காங்கிரஸ் (தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் வெளியீடு) -பி. ஸ்ரீ. தொகுப்பு

∴

'முதல் காங்கிரசில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்த பாக்கியம் சென்னைத் தமிழரான ஜி. சுப்பிரமணிய அய்யருக்கு உரியதாகும், இரண்டாவது காங்கிரஸ் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி என்ற பார்சி கனவானின் தலைமையில் கூடியது.

ராஜவிசுவாசத் தீர்மானத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. தன் குழந்தைப் பருவத்திலேயே ஒரு விவாத சபை போலத் தான் இருந்தது காங்கிரஸ். மழலைச் சொற்களால் குழந்தை மன்றாடுவதுபோல், 'அது வேணும்; இது வேணும்' என்று உயர்ந்த உத்தியோகங்களுக்காக மன்றாடியது. ராஜவிசுவாசத் தீர்மானம் நிறைவேற்றிய பின்பே பிரார்த்தனைகளும் விண்ணப்பங்களில் செய்துகொண்டது.

''இந்தக் காங்கிரஸ்காரர்களை அந்தக் காலத்து 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை 'பதவி வேட்டைக்காரர்கள்' என்று குறிப்பிட்டது. அரசாங்கம் காங்கிரஸ் சபையில் முதன்மையாக நின்றவர்களுக்கு பட்டமும் பதவியும் அளித்து அவர்களைத் தன் கையாளாக்கிக் கொண்டது.

பதினாலாம் காங்கிரஸ் 1898-ல் மூன்றாம் முறையாக சென்னையில் கூடியது. அறிவுக் கூர்மையும் வாக்குவன்மையும் படைத்த கர்சன்பிரபு அரசப் பிரதிநிதியாக வந்திறங்கியபோது கூடிய காங்கிரஸ் இது. இந்த தேசத்தின் நேசத்தில் தமக்கு ஆசை உண்டு என்று சொல்லிக்கொண்டு வந்த இவர்மீது இந்தக் காங்கிரஸ் நம்பிக்கை தெரிவித்து வரவேற்புத் தீர்மானமும் நிறைவேற்றியது.

—நமது காங்கிரஸ், பக்கம் 11

''கருணை தங்கிய சக்ரவர்த்தினியின் ஆட்சி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தில் மிகவும் நீண்டதும் மிக உபகாரமானதும், மனித சந்தோஷத்திலும் நாகரீகத்திலும் மிக முக்கியமான அபிவிருத்திகளுடன் பிணைக்கப்பட்டதுமாத்திரமல்லாமல் இந்த ஆட்சியில் அறுபது ஆண்டு முடிவுபெற்றமை கருதி அவருக்கு இந்த ஜனசபை வணக்கத்துடன் மசிழ்ச்சி தெரிவிக்கிறது.

1896 கல்கத்தாவில் நடந்த 12-வது காங்கிரசின் முதல் தீர்மானம்,

—சுதேசமித்திரன் வெளியீடான ''காங்கிரஸ் சரித்திரம்

மேற்காட்டிய எடுத்துக்காட்டுக்கள் போல இன்னும் எத்தனையோ ஆதாரங்கள் காட்டமுடியும்.

காங்கிரஸ் ஏன் பிறந்தது, எதற்காகப் பிறந்தது என்ற வரலாறு அறியாமலேயே கண்ணாடி மாளிகையில் நின்று கற்கோட்டையை நோக்கிக் கல்லெறிந்ததுபோன்று, திராவிடர் கழகத்தின்—நீதிக் கட்சியின் பரம்பரை ''வெள்ளைக்காரனுக்கு வால்

வாழ்க பெரியார்!

பெரியார் ஆண்டு 89:

படிப்புடன் நல்ல பண்பும் வளர பாடுபடுவோம்

பணவசதியுள்ளவர்கள் உங்கள் நெருங்கிய உறவினர்களில் ஒரு பிள்ளைக் காவது கல்வி அறிவு வளர உதவி செய்யுங்கள்.

அறிவுப்பணிபுரியும் பெரியார் அவர்களுக்கு
எங்கள் வாழ்த்தும், வணக்கமும்

ம. பெ. முத்துக்கருப்பையா

நிறுவியவரும் நிர்வாகியும்;

பெரியசாமி பூரணத்தம்மாள்

தருமஸ்தாபனம்

பெரியகுளம்-

(எவரிடமும் நன்கொடை வாங்கப்படுவதில்லை.)

பிடித்தவர்கள்; பிரிட்டிஷ்காரனின் பூட்ஸை நக்கினவர்கள் என்று நாலாந்தர நடையில் காங்கிரஸ் பிரசாரகர்களில் சிலர் பேசுகிறார்கள்! பேசுகிறவர்கள் வரலாறு அறியாதவர்கள் என்றால அதை எவரும் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை ஆனால் தங்கள் மெத்தப் படித்த மேதைகள் என்று கருதிக்கொண்டுள்ளவர்களே இப்படியொரு 'துருப்புச் சீட்டை' சதா அடித்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் பல்லாண்டுகளாக இம் மாதிரி சொன்னதையே திரும்பச் சொல்லும் கிளிப்பிள்ளைகட்கு உரைக்கும்படி, காங்கிரஸ் சரித்திரத்தை ஆரம்பமுதல் இறுதி வரை பிட்டுப்பிட்டு வைத்துப்பேசுவார்கள்!

என்றாலும் இன்னும் இந்த பாணியில் பலரின் பிரசாரம முடுக்கிவிடப்படுகிறது என்றால் அவர்களைப்பற்றி நாம் அலட்சியப்படுத்த நினைத்தாலும், இளைஞர்கள், இன்றைய தலைமுறையினர் இதுபற்றிய வரலாற்று உண்மையை அறிய வேண்டாமா?


பிரிட்டிஷ் தாசர்கள் என்று முத்திரை குத்திவிடுவதினாலேயே பெரியார் பரம்பரையினர் அஞ்சி நடுங்கி மூலையிலேயே முக்காடு போட்டுக்கொள்ள மாட்டார்கள்!

அந்த வெள்ளைக்காரன் — பிரிட்டிஷ்காரனின் — விஞ்ஞான சாதனைகளால்தான் நாம் ஓரளவாவது கல்வி அறிவு, வாழ்க்கை உயர்வு இவற்றைப் பெற்றுள்ளோம்!

பிரிட்டிஷ்காரன் இன்றி இந்தியா என்ற ஒரு நாடே இருந்திருக்க முடியாதே! "பழைய 56 தேச ராஜாக்கள்!" தானே மிஞ்சியிருப்பார்கள்.

இரண்டாவது உலகயுத்தத்தில் பிரிட்டன் மாத்திரம் தோல்வி அடைந்து நாஜிக்கள் வெற்றி வாகை சூடியிருந்திருப்பின் இந்தியாவின் "அரசியல் சுதந்திரம்" 1947 ஆகஸ்ட் 15ல் கிடைத்திருக்குமா?

உடன் பிறந்தானை, சொந்த மண்ணில் பிறந்தவனை, சரிசமமாகக் கருதாமல், நாலாஞ்சாதி, ஐந்தாம் சாதி என்ற இழிபட்டம ("சூத்திர, பஞ்சம"ப் பட்டம்) சுமத்தும் பார்ப்பனருக்குத் தரிசனாக, தாசானு தாசனாக இருப்பதைவிட, நம்மையெல்லாம மனிதராக மதித்து, தொட்டால் குளிக்க வேண்டுமென்று சொல்லாத, எல்லோருக்கும் கல்வியளிக்க முயற்சித்த பிரிட்டிஷ்காரனுக்கு தாசன் என்று பெயர் எடுப்பது எவ்விதத்திலும் இழிவுமல்ல; கேவலமுமாகாது. எனவே மீண்டும் தேசியவாதிகள் என்போர் இந்த கிளிப்பிள்ளை பாடத்தை படிக்க வேண்டாம்!



தமிழரே தமிழகத்தில்
தமிழரின் ஆட்சி காக்க
இமைமூடித் திறக்கு முன்னே
எதிரிகள் கோடி இன்னல்
சமைக்கின்றார் அவர்கள் தோளைச்
சாய்ப்பது பெரியார்பாதை

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

காங்கிரசைத் தோற்றுவிக்க மறைமுக உதவி செய்தது வெள்ளைக்கார வைஸ்ராய்!

காங்கிரசைத் துவக்கியவன் வெள்ளைக்கார அய். சி. எஸ். அதிகாரி!

காங்கிரஸ் போட்ட தீர்மானங்கள் எடுத்த எடுப்பிலேயே பிரிட்டிஷ் ராஜ—ராணி—விசுவாசத் தீர்மானங்கள்!

அதற்குப் பரிசு பெற முன்னணியில் நின்றவர்கள் பார்ப்பனர்கள்!

கூலி: அய்க்கோர்ட் ஜட்ஜ் பதவிகள்!
லண்டனில் கிளைஸ்தாபனம்!

இந்த பழைய வரலாறுகளை மறந்து விட்டவர்கள் மீண்டும் ஒருமுறை திரும்பப் படிப்பது நல்லது! நினைவில் நிறுத்துதல் அதைவிட முக்கியம்!! ∴

தொண்டு செய்வோம்

கலி.பூங்குன்றன்

ஆயிரங்கால்சிங்கமடா எங்கள் அய்யா
ஆர்ப்பரிக்கும் அலைகளடா அறிஞர் கூட்டம்
சூழ்ந்திருக்கும் தோட்டமடா தர்க்கம் என்னும்
பொன்வெடிக்கும் சுரங்கமடா சூரியன் போல்
பாரியக்கும் பார்வையடா புரட்சி என்னும்
புயல் வெடிக்கும் கர்ப்பமடா வரலா றெல்லாம்
ஊறிநிற்கும் வெள்ளமடா வைக்கவீ ரரடா!

சதியென்னும் பெருநெருப்பால், சமய மென்னும்
சதிகாரர் வலைவிரிப்பால், வெந்து வெந்து
பாதியான மனிதகூட்டம் பாடீவை பெற
பகுத்தறிவால் படையொன்றை வார்த்(து) தெடுத்து
வீதியெங்கும் உணர்ச்சி வெள்ளம் விண்ணை முட்ட
வரலாற்றைத் தன்போக்கில் திருப்பி விட்டார்
நாதியற்ற நாட்டிற்குத் தன்னைத் தந்து
நாளெல்லாம் நமைவளர்த்தார் நரையுமானார்!

உண்மைக்குத் தன்னுடலை விற்பார்-தமிழர்
உரிமைக்குத் தன்னுயிரை இழப்பார்-அறிவுக்
கண்ணுக்கு இமையாக இருப்பார்-ஆரியச்
சூதிற்குக் கொடுவாளாய் நிற்பார்-சொட்டும்
அன்பிற்கும் பிள்ளைக்கும் இனியார்-அட
அவர்படுத்தால் தமிழர்க்கு இனி யார்?-''என்றும்
'என்பத்து' தமிழரெல்லாம்'' என்றே எண்பத்(து)
தொன்பதிலும் ஓய்வறியார் ஓடித்திரிவார்!

உண்மைக்குச் சொல்கின்றேன் உரக்கக்கூவி
ஒருதலைவன் இனியிங்கே பிறப்ப தில்லை
தொண்டென்னும் தீயினிலே குளித்(து) தெழுந்த
புடம்போட்ட தங்கமினி வருவ தில்லை
தொண்டருக்கு முன்னின்று தூய மார்பைத்
தந்துவிடும் நெஞ்சமினி பூப்பதில்லை
கொண்டிருக்குந் தந்தையைத்தான் கரலவீ பெண்ணே!
காத்திடுவாய் காலமெல்லாம் தொண்டு செய்வோம்!

தெய்வமும் திருவள்ளுவரும்

சு.தமிழ்மறை

வள்ளுவர் தம் குறளில் இறைவன்-தெய்வம்-தாள்-அடி-அந்தணர்-வாலறிவினார்-புத்தேளிர்-எழுமை எழு பிறப்பு-அமிழ்தம்-வேள்வி-மறுமை-இம்மை-மேல் உலகம்-கூற்றம்-ஊழ்-இமையார்-அமரர்-தேவர்-இவை போன்ற இன்றைய சமய வழக்கில் பட்ட சொற்களை கையாண்டிருக்கிறார். கடவுள் என்ற சொல் மட்டும் எடுத்தாளப்படவில்லை முதல் அதிகாரத் தலைப்பைத் தவிர.

சமயக் கண்களோடு குறளைக் காண்போர், அவரவர் சமயத்துக்குத் துணையாக குறளைக் கொள்கின்றனர். வள்ளுவர் கடவுள் நம்பிக்கை கொண்டவரா? அவர் ஒரு சமயவாதியா? அவருக்கு மூடநம்பிக்கையுண்டா? என்று ஆராய்ந்தால், அல்ல அல்ல என்றே விடை தரும்.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் (355)—எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்க (423) என்று கூறியவர் அவர். பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் (972) என்கிறார்; அந்தணர் என்போர் அறிவோர் (29) என்கிறார்; பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (134) என்கிறார்; ஊழையும் உப்பக்கம் காண்பர் (614) என்கிறார்; தேவர் அனையர் கயவர் (1073) என்கிறார்; பரந்து கெடுக உலகியற்றியான் (1062) என்கிறார்; இத்தனை புரட்சிக் கருத்துக்களை அள்ளி வீசிய வள்ளுவரா சமயவாதி? பிற்போக்குவாதி?? அல்லவே அல்ல!

குறிப்பாக 'தெய்வம்" என்ற சொல்லை எடுத்துக்கொண்டால், இந்த உலகையும் உயிரையும் படைத்து காத்து அளித்து வரும் ஒரு சக்தி படைத்த பொருளாக-சொல்லாக உருவமாக, இன்று கருதப்படுகிறதல்லவா? இத்தகைய கருத்தில் வள்ளுவர் தெய்வம் என்ற சொல்லைக் கையாளவில்லை. இது வெறுங் கூற்றல்ல, உண்மை.

திருக்குறளில் 'தெய்வம்" என்ற சொல் 6 இடங்களில் கூறப்படுகின்றன, குறள் 43ல் தெய்வத்தை ஓம்புதல் தலை என்றும்-50ல் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும் என்றும்—, 55ல் தெய்வம் தொழாது கணவனைத் தொழுபவள் என்றும்—, 619ல் தெய்வத்தால் ஆகாது என்றும்—, 702ல் தெய்வத்தோடு ஒப்புக் கொள் என்றும்—, 1023ல் தெய்வம் மடிகட்டி முந்தி நிற்கும் என்றும் கூறுகிறார்.

இச் சொல்லுக்கு பரிமேலழகர் "தேவர்' என்றே பொருள் தருகிறார். வள்ளுவரோ தேவரனையர் கயவர் என்கிறார். அப்படியென்றால் தெய்வம் என்பதன் பொருள் என்ன? ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் கூறப்படுவது போல, காலத்தாலும் வேறு பொருள்கள் கூறப்படுவது இயல்பு. இத் தகைய கருத்தோட்டத்தோடுதான், முதற் கூறியபடி, வள்ளுவர் எடுத்தாண்டிருக்கிற சொற்களை ஆராய வேண்டும்.

தொல்காப்பியம்:—

115-7 'தோழியை வினவலும் தெய்வம் வாழ்த்தலும்'

(இல்லுறை கடவுட்கு ஓட்டுதும் பலியே)

150-4 'கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினும்'

(தலைவியைத் தலைவன் வரைந்து கோடல் குறித்துப் பரவிய தெய்வம்)

272-1 'தெய்வம் அஞ்சல் புரையறந்து தெளிதல்'

(தனக்குத் தெய்வம் தன்கணவனானதால் அத்தெய்வத்தினை தலைமகள் அஞ்சுதல்)

சிலப்பதிகாரம்:—

10-100 'மொழிப் பொருள் தெய்வம் வழித் துணையாகென'

(பொருள்: மொழி தெய்வம்)

15-144 'பொற்புடைத் தெய்வம் யாங்கண்டு இலமால்'

(கண்ணகியைப் போன்ற வேறு பொலிவினையுடைய தெய்வத்தை யாம் கண்டிலம்)

16-174 'தெய்வத் தோற்றம் தெளிகுவர் ஆயின், 175 வையகத்து உறுபொருள் காட்டியும் பெயர்குவர்'

(கள்ளர் தங்கள் தெய்வத் தோற்றத் தினை தினைப்பாராயின் கையிலகப் பட்ட பொருளைக்காட்டியும் தப்புவர் (இது உ. வே. சாமிநாதய்யர் குறிப்பு)

19-23 'செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம் பொருட்டால் 24 வம்பப் பெருந் தெய்வம் வந்தது இதுவென்கொல்'
(செம்பொன்னாலாகிய சிலம்பொன் றைக் கையிலேந்தி நம்மைக் கெடுத் தற் பொருட்டு புதுமையையுடைய பெரிய தெய்வம் இண்டு வந்தது. இதனால்யாது விளையுமோ)

மணிமேகலை :—

7-97 'திப்பியம் உரைக்குந் தெய்வக் கிளவி யின்'

(தெய்வத் தன்மையுடைய சொல்; அதாவது வடசொல் எனினும் அமை யும்) (உ. வே சா.)

நற்றினை :—

315-1 'ஈண்டுபெருந் தெய்வத்து இயாண்டு பல கழிந்தென்ப'
(நெருங்கிய பெரிய தெய்வமெனப் பெயர் கொண்ட யாண்டுகள் பல சென்றதனாலே)

பதிற்றுப்பத்து :—

51-13 'அரவழங்கும் பெருந்தெய்வத்து'
(பாம்புகள் ஆடுகின்ற பெரிய மலை யாகிய பெருந் தெய்வமும்)

கலித்தொகை :—

166-7 'உயர் பலி பெறூஉம் உருகெழு தெய்வம்'

(உயர்ந்த பலிகளையேபெறும் அச் சந்தரும் தெய்வம்)

ஆசாரக் கோவை :—

38-4 'தெய்வமும் செற்றுவிடும்'
மேலே கண்டவற்றுள் தெய்வம்எனும் சொல் மொழியாக,

வடசொல்லாக,
மா மலையாக,
கண்ணகியாக,
கணவனாக,
ஆண்டுகளாக,
பலி பெறும் தெய்வமாக,
செற்றுவிடும் தெய்வமாக,
கள்ளர் தோற்றமாக,

பல்வேறு பொருள்களில் சங்க இலக்கிய நூற் களில் கூறப்பட்டுள்ளன.

திருக்குறளில்கூட. 56-619 ம் குறள் களில் தெய்வம் என்பதை மனிதத் தன் மைக்கு குறைவாகவும்; 50—702ம் குறள் களில் மனிதனைத்தெய்வத்தோடு ஒப்பவும்; 4—1023ம் குறள்களில் தெய்வத்தை மனித னாகவும் காட்டுகிறார்.

பொதுவில், தெய்வம் என்ற சொல் சிறப்புச் சொல்லாக முயற்சியாக. சூழ்நிலை யாக, கொள்கிறாரேயொழிய உலக முதல் வன் என்ற பொருள்படக் கூறவில்லை.

'வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்'' என்பது, வானத்து சூரியன்—சந்தி ரன் போல பயன்படுவர். போற்றப்படுவர் என்பது தான் பொருள் ஆகும். காரணம் உ. வே. சா. அரும்பதவுரை யெழுதிய 'மணி மேகலையில்' 23-1 ''கடவுள் மண்டிலம் காரி ருள் சீப்ப'' என்பதில் கடவுள் மண்டிலம் என்பதற்கு சூரியன் மண்டிலம் எனத்தரப் பட்டிருக்கிறது.

திருவள்ளுவர் காலம் ஆரியம் பரவி நின்ற காலம். மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி பேசிவந்த காலம்; தேவர்கள் மட்டுமே வணங்கப்பட்ட காலம்; சிவனோ— விஷ்ணுவோ — முருகனோ—கிறிஸ்தவமோ தோன்றாத காலம். ஆகவே இன்றைய வணங்கும்படு தெய்வங்களாக, கடவுள் களாக, இறைவனாக இருப்பவைகளைப் பற் றியல்ல வள்ளுவர் குறளில் காணப்படுவது.

உலகைப் படைத்து இயக்குபவன் எனும் பொருளில் நாம் கொள்ள வேண்டும் எனக் கருதினால், அது 1062 வது குறள் தான். அதில் கெடுக என்று கனல் கக்க— கோபம் கொந்தளிக்கக் கூறுகிறார். முதல் அதிகாரத்துப் பத்துக் குறள்களிலும் கூறப் பட்டுள்ள ஆதிபகவன் முதலிய சொற்களும் மற்றும் தெய்வம்—இறைவன் முதலியசொற் களும் உலக முழு முதல்வன் என்ற பொரு ளில் கூறவேயில்லை. கூறியிருந்தால் 1062 வது குறள் பொருளற்றதாகும்.

"சோவியத் சாதனையை அன்றே பரப்பியவர்"

கே. டி. கே. தங்கமணி

தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக விருந்து, பின்னர் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்து, வைக்கம் வீரர் ஈ வெ. ராமசாமி எனப்பட்டம் பெற்று, திராவிடர் கழகத்தை அமைத்து, இன்று தமிழ் மக்களால் பெரியார் என்று அழைக்கப்படுகிறார். பிறந்த தினத்தன்று பல பெரியார்கள் இவரைப் பற்றி அரிய கட்டுரை எழுதி வருகின்றனர். அவைகளைத் தொகுத்து வெளியிட்டால் வருங்காலத்துக்கு பெரிய உதவியாகவிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.


"சுயமரியாதைத் திருமணம்" அவர் தோற்றுவித்தது எனலாம். முன்னெல்லாம் இம்மாதிரியான திருமணங்கள் ஆங்காங்கு நடைபெற்றது உண்மைதான். எனினும் திட்டமிட்டு தமிழகம் பூராவும் பரவச் செய்த பெருமை ஈ. வெ. ரா. வைத்தான் சேரும். திருச்சியில் 7–6–67-ல் அமரர் ஜீவாவின் மகளின் திருமணத்தை அவர் தலைமை தாங்கி நடத்தியபோது கலந்துகொண்ட தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாத்துரையவர்கள் மேற்படி திருமணங்களுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கொடுப்போம் என்ற வாக்குறுதி மிகவும் பொறுத்தமானதாகும்.

மாநிலங்களுக்கு அதிக நிதி தரவேண்டும் என எல்லா மாநில அரசுகளும் கோரும் இக்காலத்தில் மதுவிலக்கை ரத்துச் செய்ய வேண்டுமென அழுத்தமாகப் பேசியும் எழுதியும் வருகிறார். சட்டத்தின் மூலமாக ஓர் தவறான வழக்கத்தை மாற்ற முடியுமா? எனவேதான் மதுவிலக்குச் சட்டம் இருந்தும் நூதனவகையில் குடிக்கும் முறைகள் தோன்றியுள்ளதைக் காண்கிறோம். எத்தனை விதமான பானங்கள் தோன்றியுள்ளன. அவைகளால் மக்களுக்கு நன்மையா? கிடையாதே. எனவேதான் ஈ. வெ. ரா.வின் இந்நிலையை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

குறையுண்டு; மனிதனென்றால் இல்லாமல் இருக்குமா? பல காதர்களை (Cadre) வளர்த்தார். எனினும் அவர்களிடம் பணத்தின் அடிப்படையில் காட்டிய விருப்பு வெறுப்பு மனக் கசப்பை ஏற்படுத்தியது. பல முக்கிய தலைவர்கள் அவரைவிட்டுப் பிரிந்தார்கள். கடைசி உதாரணம் குத்தூசி குருசாமி! காரணங்கள் பல இருக்கலாம். குருசாமி போன்றவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். இம்மாதிரி சுட்டிக்காட்டுவதால் பெரியார் அவர்கள் கோபிக்கமாட்டார்களென நம்புகிறேன். அன்பான விமர்சனம் எனக் கொள்ள வேண்டும்.

இறுதியாக ஒன்று: அன்று சோவியத் யூனியன் உலக முதலாளித்வ நெருக்கடியில் சூழப்பட்டு கஷ்டப்பட்டபோது, அய்ந்தாண்டுத் திட்டமிட்டு முன்னேறியதை போற்றியுள்ளார், "லெனினும் மதமும்" என்ற புத்தகம் அக்காலத்திலேயே வெளியிடப்பட்டது. இன்று பலரும் சோசியலிசம் பேசுகின்றனர். அது கற்பனா சோசியலிசமாகவும், முதலாளித்வ சோசியலிசம், நிலப்பிரபுக்கள் சோசியலிசம், மதவாதிகள் சோசியலிசமென பல ரகமாக உருவாகியுள்ளன. மார்க்சிசத்தை அடிப்படையாகக் கொண்டு லெனின் நடத்திய புரட்சி உண்மை சோசியலிச நாட்டை உருவாக்கியது. பின்னர் ஸ்டாலின் அதை வளர்த்தார். இன்று பல நாடுகளில் சோசியலிச ஆட்சிகள் அமைந்துள்ளன. சோவியத் யூனியனும் 50 ஆண்டு நிறைவுபெற்று நிற்கிறது. சோசியலிச நாடுகளைப்பற்றி எடுத்துச் சொல்லவும் சோசியலிசப் பணியில் ஈடுபடும் ஊழியர்கட்கு உற்சாகமூட்டக் கூடியமுறையிலும் பெரியார் எழுதியும் பேசியும் வரவேண்டும் என்பதே என் அவா.

வாழ்க ஈ. வெ. ரா.!



சுயமரியாதைக் களஞ்சியம்:

சுயமரியாதை இயக்கம் பற்றி பெரியார்!

"சுயமரியாதை இயக்கமானது அரசியலின் பேரால் நமது நாட்டில் உள்ள பல கட்சிகளைப் போலல்லாமல் அன்னியர்களிடம் இருந்து யாதொரு விதமான சிறு விஷயத்தையும் எதிர்பாராமல் மக்களின் அறிவை விளக்கி அவரவர்களின் மனப்பான்மையை மாற்றுவதின் மூலமே உண்மையான விடுதலையையும், சமத்துவத்தையும், தன்மதிப்பையும் உண்டாக்கக் கூடியதான ஒரு இயக்கமாகும். இவ்வியக்கத்தின் முக்கியக் கொள்கையெல்லாம் கட்டுப்பட்டு அடைபட்டிருக்கும் அறிவுக்கு விடுதலையை உண்டாக்குவதேயாகும். ஆதலால் சுயமரியாதை இயக்கம் என்பதை அறிவு விடுதலை இயக்கம் என்றே சொல்லலாம். இதன் உண்மை விளங்க வேண்டுமானால், ஒரு நேர்மையான மனிதன் தனது அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் உள்ள கட்டுப்பாட்டையும் நிர்பந்தத்தையும் நினைத்துப் பார்ப்பானேயானால் இல்வியக்கத்தின் பெருமை தானாக விளங்கும்".

'குடி அரசு'
(25-8-1929)
தலையங்கத்தில் ஒருபகுதி

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பே

கர்ப்பத்தடையின் அவசியம் பற்றி பெரியார்!

[6-4-1930-ல் 'குடி அரசு' ஏட்டில் பெரியார் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி கீழே தரப்படுகிறது.]

கர்ப்பத்தடை என்பதுபற்றி சுமார் 2 வருஷங்களுக்குமுன் நாம் எழுதியது அநேகருக்கு திடுக்கிடும்படியான சேதியாயிருந்தது. ஆனால் இப்போது சிறிது காலமாய் அது எங்கும் பிரஸ்தாபிக்கப்படும் ஒரு சாதாரண சேதியாய்ப் போய்விட்டது.

கர்ப்பத்தடையின் அவசியத்தைப்பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும் மற்றவர்கள் கருதும் காரணங்களுக்கும் அடிப்படையான வித்தியாசமிருக்கின்றன. அதாவது பெண்கள் விடுதலை அடையவும் சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகின்றோம். மற்றவர்கள் உடல் நலத்தை உத்தேசித்தும் பிள்ளைகளின் தாஷ்டீகத்தை உத்தேசித்தும் நாட்டின் தரித்திரதிசையை உத்தேசித்தும் குடும்ப சொத்துக்கு பயமில்லாமலிருக்க வேண்டுமென்பதை உத்தேசித்தும் கர்ப்பத்தடை அவசியமென்று கருதுகின்றார்கள். இதை மேல்நாட்டினர் பலர்கூட ஆதரிக்கின்றனர்.

ஆனால் நமது கருத்தோ இவை எதையும் பிரதானமாய்க் கருதியது அல்ல. மற்றதைக் கருத முயன்றால் முன் சொன்னதுபோல் பொதுவாக பெண்களின் விடுதலைக்கும் சுயேச்சைக்கும் கர்ப்பம் விரோதமாய் இருப்பதால் சாதாரணமாய் பெண்கள் பிள்ளை பெறுவதையே அடியோடு நிறுத்திவிட வேண்டும்என்கிறோம். அது மாத்திரமல்லாமல் பல பிள்ளைகளைப் பெறுகின்ற காரணத்தால் ஆண்களும்கூட சுயேச்சையுடனும் விடுதலையுடனும் இருக்கமுடியாதவர்களாகவே இருக்கிறார்கள் இதன் உண்மை சாதாரணமாய் ஒவ்வொரு மனிதனும் ஸ்திரியும் தங்கள் தங்களுக்குக் கஷ்டம் வருகின்ற காலத்தில் பேசிக்கொள்வதைப் பார்த்தால் தெரியும்.

ஒரு மனிதன் தான் கஷ்ட நிலையில் பேசும்போது "நான் தனியாயிருந்தால் ஒரு கை பார்த்துவிடுவேன், 4, 5 குழந்தையும் குட்டியும் ஏற்பட்டுவிட்டதால் இவைகளைக் காப்பாற்றவேண்டுமே என்கின்ற கவலையால் பிறர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டு ஆளாயிருக்கவேண்டி இருக்கிறது" என்றே சொல்கிறான்.

அதேபோலவே ஒரு ஸ்திரியும் புருஷனாலோ அல்லது வேறு எதனாலோ சங்கடம் ஏற்படும்போது "நான் தனியாய் இருந்தால் எங்காகிலும் தலையின் மேல் துண்டைப்போட்டுக்கொண்டு போய்விடுவேன்; அல்லது ஆற்றிலாவது குளத்திலாவது இறங்கிவிடுவேன். இந்த கஷ்டத்தைச் சகித்துக்கொண்டு அரை நிமிஷமும் இருக்கமாட்டேன். ஆனால் இந்தக் குழந்தைகளையும் குஞ்சுகளையும் நான் எப்படி விட்டுவிட்டும் போகமுடியும்? என்றே சொல்லுகின்றான், ஆகவே இந்த இருவர்களுக்கும் அவர்களது சுயேச்சையையும் விடுதலையையும் கெடுப்பது இந்தக் குழந்தைகளும் குஞ்சுகளும் என்பவைகளேயாகும்.

உலகத்தில் மக்கள் கஷ்டப்பட்டு தன் தன் ஜீவனத்திற்கு பொருள் தேடுவதற்கே சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியமும் தலைக்குமேல் இருக்குமானால் அந்த இடத்தில் எப்படி சுயேச்சை இருக்கமுடியும்? ஆதலால் ஆண் பெண் இருவரது சுயேச்சைகளுமே கர்ப்பமாவதும் பிள்ளைகளைப் பெறுவதும் இடையூறான காரியமாகிறது.

அதிலும் பெண்கள் சுயேச்சைக்கு கர்ப்பம் கொடிய விரோதியாய் இருக்கிறது. அதனால்தான் நாம் கண்டிப்பாய் பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்தியே ஆகவேண்டும் என்கிறோம். அன்றியும் பெண்கள் வியாதியஸ்தர்கள் ஆவதற்கும் சீக்கிரம் கிழப்பருவம் அடைவதற்கும் ஆயுள் குறைவதற்கும் இந்த கர்ப்பம் என்பதே மூல காரணமாயிருக்கின்றது. தவிரவும் ஆண்களில் பிரமச்சாரிகளாகவும், சன்னியாசிகளாகவும், சங்கராச்சாரியார்களும் தம்பிரான்களும் பண்டாரச்சன்னதிகளும் ஏற்பட்டிருப்பதுபோல பெண்களில் பிரமச்சாரிகளும், சங்கராச்சாரி முதலியவர்களும் ஏற்படுவதற்கு இந்த கர்ப்பமே தடையாய் இருந்து வருகின்றது. இந்நிலையில்தான் பெண்களுக்கும் பெண்கள் விடுதலைக்கும் சுயேச்சைக்கும் முன்னேற்றத்திற்கும் அவர்கள் பிள்ளை பெறுவதை நிறுத்தவேண்டும் என்று நாம் சொல்கிறோம்." ஃ

மூடப்பழக்கத்தை ஒழிக்க...

"மூட நம்பிக்கைகளையுடைய எந்த புஸ்தகங்களையும் பாடப் புத்தமாகப் பள்ளிக் கூடங்களில் வைக்கக்கூடாதென்றும், உபாத்தியாயர்களைப் பயிற்சிக்கும் பள்ளிக் கூடங்களிலும் மூட நம்பிக்கையுள்ள பாடங்களைக் கற்பிக்கக்கூடாதென்கிற நிபந்தனை விதிக்க வேண்டுமென்றும், பகுத்தறிவு, தன் முயற்சி, ஆராய்ச்சி முதலியவைகளுக்கு அனுகூலமான விஷயங்களையே பாடமாகவைக்க வேண்டுமென்றும் டெக்ஸ்புக் கமிட்டியாரும் அறிவையும் தன் முயற்சியையும் உண்டாக்ககூடிய புத்தகங்களையே சிபாரிசு செய்ய வேண்டும்" என்று 1929-ம் ஆண்டிலேயே செங்கற்பட்டு சுயமரியாதை மாகாண மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சுயமரியாதை அரிச்சுவடி !

1. அடுத்த ஜென்மம் என்பது—முடிச்சு மாறிகள் பேச்சு.
2. ஆரியர் சூழ்ச்சி—அறிவு வீழ்ச்சி
3. இதிகாசம் என்பது-மதிமோச விளக்கம்.
4. உண்மையைச் சொல்ல—ஒரு போதும் தயங்காதே.
5. ஊழ்வினை என்பது — ஊக்கத்தைக் கெடுப்பது.
6. கருமாந்திரம் என்பது—காசு பறிக்கும் தந்திரம்.
7. கல்லை தெய்வமென்று-கற்பிக்க வேண்டாம்.
8. கோத்திரமென்பது — குலத்தை பிரிப்பது.
9. சனாதன தர்மம் என்பது—சண்டாள அதர்மம்.
10. சாமி சாமி என்பது—காமிகளின் உளறல்
11. சூத்திரன் என்றால்—ஆத்திரங் கொண்டடி.
12. திதி கொடுப்பது—நிதியைக் கெடுப்பது.
13. தெய்வ வழிபாடு—தேச மக்களுக்கு கேடு
14. பலதெய்வ வணக்கம்—பட்டு வீழ்க.
15. பார்ப்பனர்கள் என்பவர்கள் — பகற் கொள்ளைக் காரர்கள்.
16. புராணங்கள்—பொய்க் களஞ்சியங்கள்.
17. பேதகமென்பது—வேதியருக் கணிகலம்
18. மகாபாரதம்—பஞ்சமா பாதகம்.
19. மடத் தலைவர்கள் — மடைத் தலைவர்கள்.
20. மதக்குறி என்பது — மடையர்க்கறிகுறி.
21. முத்தி முத்தி என்று—புத்தியைக் கெடுக்காதே.
22. விதி விதி என்பது—மதியைக் கெடுப்பது.
23. வேதம் என்பது—சூதாய்ச் சொன்னது.
24. ஜாதி வேறுபாடு—ஜன சமூகத்திற்கு கேடு.
25. க்ஷேத்திரமென்பது—சாத்திரப் புரட்டு.

'குடி அரசு'
23-2-1930

தந்தை பெரியார் அவர்களின் 89-ம் பிறந்த நன்னாளில்
எமது நல்வாழ்த்துக்கள்

தரத்தில் உயர்ந்தது

பாலன்

சோப் அண்டு சேமியா

நிறுவனம் : 1935 பதிவு எண் : 227808

தயாரிப்பவர் : S. S. மணியம்

பாலன் சோப் & சேமியா பாக்டரி
புலிவலம் P.O., திருவாரூர், S. Rly.
தஞ்சை மாவட்டம்.

என்று தொலையும் இந்தச் சாதி?

தொகுப்பு: திருமங்கலம் மணிமாறன்

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நின்றே நினைமின...'.

—திருமூலர்.

∴

சாதி குலப் பிறப் பென்னும்
சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல்
அறுத் தாட் கொண்டு'

—மாணிக்கவாசகர்.

∴

சாதியாவ தேதடா சலம் திரண்ட நீரலோ
பூதவாசல் ஒன்றலோ பூதமைந்தும்
ஒன்றலோ
காதில் வாளி காரை கம்பி பாடகம்பொன்
ஒன்றலோ
சாதிபேதப் ஓதுகின்ற தன்மை என்ன
தன்மையே!
''பறைச்சி யாவதேதடா பனத் தியாவ
தேதடா
இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு
இருக்குதோ!''

—சிவவாக்கியர்.

∴

.'சாதி இரண்டொழிய வேறில்லை
—சாற்றுங்கால்
நீதி வழுவா நெறி நெறி முறையின்
—மேதினியில்''
—அவ்வையார்.

∴

''இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயி லெருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிவெட்டி மண்மூடிப்
போட்டு''

''மதித்த சமய மத வழக்கெலாம் சாய்ந்தது
ருணச் சிரமமெனும் மயக்கமும் சாய்ந்தது''

''சாதி சமயச் சழக்கை விட்டேன்
அருட்சோதியைக் கண்டேனடி!''
''சாதி சமயச் சழக்கெலா மற்றது
சன்மார்க்க ஞானசபை நிலை பெற்றது''

—ராமலிங்க அடிகள்.

∴

''குலம் ஒன்றுய் நீ படைத்த
குறியை அறியாமல் நான்
மலபாண்டத் துள்ளிருந்து
மயங்கினேன் பூரணமே!''

—பட்டினத்தார்.

∴

'சாதி பேத மில்லை—அகப்பேய்
தானாக நின்றவர்க்கே
ஓதி உணர்ந்தாலும்—அகப்பேய்
ஒன்றுந்தான் இல்லையடி!''

—அகப்பேய்ச் சித்தர்.

∴

''ஆதி கபிலர் சொன்ன
ஆகமத்தின் சொற்படியே
சாதி வகை இல்லாமல்
சஞ்சரிப்ப தெக் காலம்?''

—பத்திரகிரியார்.

∴

''சாதி குலம் பிறப்பிறப்புப்
பந்தமுத்தி அருவுருவத் தன்மை நாம்
மேதுமின்றி...''
''தர்க்கமிட்டுப் பாழாஞ்
சமயக் குதர்க்கம் விட்டு
நிற்குமவர் கண்ட வழி
நேர் பெறுவதெந் நாளோ!''

—தாயுமான சுவாமிகள்

∴

''நானென்றும் நீயென்றும் சாதியென்றும்
நாட்டினோர் உலகத்தோர்
பிழைக்கத்தானே!'

—அகத்தியச் சித்தர்

''சாதி குலமில்லை சற்குருவறிந்தால்
... நித்தியம் இதுவே''

—சேச யோகியார்.

'சாதி பேதந்தனைக் குறித்துத்
தயங்கி மயங்கித் தளராதே!
சாதியாவ தெவர் அறிவர்
சருவ உடலும் ஒன்றுச்சே!''

—சிவானந்த போதம்.

∴

''குலமு மொன்றே குடியுமொன்றே
இறப்பு மொன்றே பிறப்பு மொன்றே!''
''தென் திசைப் புலையன் வடதிசைக் கேகிற்
பழுதறவோதிப் பார்ப் பானாவான்!
வட திசைப் பார்ப்பான் தென்றிசைக்கேகில்
நடையது கோணிப் புலையனாவான்!''

—கபிலர்.

∴

''சாதி பேதங்கள் சொல்லுகிறீர்—தெய்வம்
தானென்றொருருவல் பேத முண்டோ?''

—கொங்கண நாயனார்.

∴

''காணப்பா சாதிகுலம் எங்கட்கில்லை
கருத்துடனே என் குலஞ்சுக் குலந்தான்
மைந்தா,
தோணப்பா தோணாமற் சாதிபேதஞ்
சொல்லுவான் சுருக்கமாய்ச் சுருண்டு
போவான்!

—காக புசுண்டர்.

∴

''சமயபேதம் பலவான சாதிபேதங்கள்
சகத்தோர்க்கேயல்லாது சற்சாதுக்களுக்கோ
சமயத்திலேறின பேர் சித்தம் மாறுமோ
சித்தர் சித்தாந்தந் தேர்ந்தாடு பாம்பே!
''சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்
சந்தை வெளியினிலே கோலை நாட்டு
வோம்!

—பாம்பாட்டிச் சித்தர்.

∴

''ஒவ்வா வென்ற பல சாதி—யாவும்
ஒன்றென்றறிந்தே உணர்ந்துற வோதிடீ
—பாபஞ் செய்யாதிரு மனமே!

—கடுவெளிச் சித்தர்.

''...நகையாதே, மானிடர் பல்சாதி ஏன்று
நம்பாதே, நல்வழியின் காலைப் பாரே!''

— அருணாசலகுரு

∴

''சாதி மதங்களைப் பாரோம்—உயிர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தினராயினும் ஒன்றே!''
''சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்''
''சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாபம்!''

—பாரதியார்.

∴

''சாதியைப் பிறப்பினாலே
சாற்றிடும் புராணக் காதை
ஆதியில் இல்லை அந்த
அவதியின் தோற்றம் பின்னே
நீதியை அழித்து நல்ல
நெறியினைக் குலைத்ததம்மா!''

—திரு. வி. க.

∴

ஆயிரம் சாதிகள் ஓப்பி—நரி
அண்ணவர் காலிடை வீழ்ந்து
நாய்களைப்போல் தமக்குள்ளே—சண்டை
நாளும் வளர்க்கும் மதங்கள்
தூயனவாம் என்று நம்பிப்-பல
தொல்லை யடைகுவ தின்றி
நீயெனல் நானெனல் ஒன்றே-என்ற
நெஞ்சில் விளைவது வாழ்வு!''

—பாரதிதாசன்.

∴

சாதியெனும் பகையுணர்ச்சி வாழு மட்டும்
தமிழ்நாட்டின் முன்னேற்றம் கானல் நீரே!
நீதிமுதல் நெறிமுறைகள் பிறர்க்கும் தந்து
நிலைத்திருந்த பெருமையெல்லாம் மண்
ணிற் சாயும்!
சாதியினால் நிம்மதியும் அழிந்தே போகும்
தலைமுறைகள் பலங்குன்றிச் சாயும் அந்தச்
சாதியினைத் தவிர்த்தொன்றும் வாழ்வ
தில்லை!
தமிழகமே! இனியுனக்கு மீட்சி இல்லை!''

—கண்ணதாசன்.

வீண் விரயம் தடுக்கப்படுமா?

'பொருளாதாரன்'

பல இலட்சம் ரூபாய் செலவில் பால் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டது. எங்கோ நாட்டுப் புறத்தில் அல்ல; இராச்சிய தலைநகருக்கு அடுத்து அய்ந்தாறு மைல் தூரத்தில். பண்ணையால் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்க வில்லை. பால் அருகி விட்டது. ஆனால் செலவு கணக்கு பெருகி விட்டது. மக்களுக்குப் பால் கிடைக்க வில்லை. அந்தப் பால்பண்ணையில் அருமையான, 'ஏர்கண்டிஷன்' விருந்தினர் விடுதி அச்செலவு, பால் பெருக்குத் திட்டச் செலவு அதைப் பராமரிக்கும் செலவும், அதற்கான நூட்பத்தொழில் ஆட்களுக்கும்குறைவில்லை விடுதியில் வந்து தங்கியவர் விரல் விட்டு எண்ணக் கூடியவர்.

தொழிற் துறைக் கல்வி அலுவலகம் அதற்குப் பின்னால், அதைச் சேர்த்து, 'ஏர் கண்டிஷன்' விருந்தினர் விடுதி. அதைக் கட்ட செலவு; பராமரிக்கச் செலவு. அத்தனை பாரமும் தொழிற்துறைக்கல்வி வளர்ச்சியின் மேல்.

'பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம், காட்டினேன். இரு 'ஏர்கண்டிஷன்' விடுதிகள் மட்டுமே, எங்கோ தவறி நுழைந்துவிட்டதாக நினைக்காதீர்கள். வளர்ச்சித் திட்டங்களின் பேரால், தேவையில்லாத; எடுத்துக் கொண்ட திட்டங்களை நிறை வேற்றுவதற்குத் தேவையில்லாத, பல 'டம்பாச்சாரி பகுதிகள் பல நூற்றுக்கணக்கிலே நுழைந்திருக்கின்றன. இவை எல்லாத்துறைகளிலும் நுழைந்துள்ளன, அங்கிங்கு எனாதபடி எங்கும் நுழைந்துள்ளன வியர்த்தங்கள்.

கல்வி மேதைகள் ஆராய்ச்சியொன்று ஏற்பாடு செய்தார்கள். என்ன ஆராய்ச்சி தெரியுமா? பள்ளியிறுதித் தேர்தவில் ஃபெயில் ஆகிவிடுகிறவர்கள், பொருளாதார அடிப்படையில் எந்தப் பிரிவினர்; பெற்றோர் கல்வி நிலையில் எந்த தரத்தினர். என்பது ஆராய்ச்சி. நிறையப் படித்த கல்வியாளர்கள் பல மாதங்கள் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பை வெளியிட்டார்கள். அருமையான கண்டுபிடிப்பு! என்ன தெரியுமா?

பட்டதாரிப் பெற்றோர்களின் குழந்தைகள் ஃபெயில் ஆவது, மிகக் குறைந்தபட்சம் அதிகாரிகள், உயர்நிலைப் பள்ளி கல்லூரி ஆசிரியர்களின் குழந்தைகள் 'ஃபெயில்' ஆவது குறைந்த பட்சம். படிக்காத பெற்றோர்களின் குழந்தைகளே அதிகம் 'ஃபெயில்' ஆகிறார்கள். பொருளாதார அடிப்படையில் பார்த்தால், 'குறைந்த வருவாய்' நிலையில் உள்ள வீட்டுப் பின்னைகள் அதிகபட்சம் தவறிவிடுகிறார்கள். வருவாய் நிலை உயர உயர 'ஃபெயில்' விகிதம் குறைந்துகொண்டே வருகிறது. மிக உயர்ந்த வருவாய் நிலையில் உள்ள வீட்டுப் பிள்ளைகள் 'ஃபெயில்' விகிதம் மிக மிகக் குறைவு. இவைகளே ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள்.

இவை எல்லோருக்கும் தெரிந்ததுதானே! கல்லூரி காணாத காமராசர் பல ஆண்டுகளுக்கு முன்னரே, இதே படிப்பிடிப்பைக் காட்டியிருக்கிறாரே என்று சொல்லாதீர்கள். செலவு செய்து கண்டுபிடித்தால்தான் உண்மை என்பது இன்றைய சூரண்டல் நாகரீகம். எவ்வளவு செலவு செய்தார்கள் தெரியுமா இந்த ஆராய்ச்சிக்கு? நாற்பதாயிரம் ரூபாய்! இதே மாதிரி கண்டுபிடிப்புகள்? அதற்கான செலவுகள். அத்தனை வெட்டிச் செலவுகளும் 'கல்வி வளர்ச்சி,க் கணக்கில் எழுதப்பட்டன. இனியும் இத்தகையசெலவுகள் வளரும். இவற்றால் கல்வி வளருமா?

ஆரம்பப்பள்ளிகளில் மாணவர்கள், ஒரே வகுப்பில் ஈராண்டு மூவாண்டு என்று தேங்கி விடுகிறார்கள். சில ஆண்டுகளில் சலிப்பு வந்துவிடுகிறது. ஆகவே பள்ளிக் கூடத்தை விட்டு விடுகிறார்கள். 'தேக்கம் வியர்த்தம்' இவற்றைப்போக்குவது எப்படி? இதைப் பற்றி திரும்பத்திரும்ப, ஒரே ஜிராச்தியத்தில், பல முறை, ஆராய்ச்சி என்கிற பெயரால், கிடைத்தற்கரிய பணத்தையும், படித்தவர்களையும், மக்களது கவனத்தையும் பாழாக்கினோம். பாழாக்குகிறோம்.

கல்வி ஆராய்ச்சி என்கிற பெயரால், சென்ற சில ஆண்டுகளாக, ஆண்டுதோறும் அய்ந்தாறு கோடி ரூபாய்கள், தேவையற்ற திட்டங்களிலும், பட்டவர்த்தனமாகத் தெரிபவைகளை ஆராய்வதிலும், அரைத்தமாவை அரைக்கும் திட்டங்களிலும் வேறு சூழ்நிலையில் உள்ள பிறநாடு எதிலோ நடக்கும் சோதனைகளை நமக்குப் பொருத்தமில்லாத சோதனைகளை மேற்கொள்வதிலும் செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். கடலிலே கரைத்த பெருங்காயமாக கல்விக்கு ஒதுக்கிய பணம், பயனற்றுப் போகிறது.

பொதுமக்களை உணரவைத்து, பொதுமக்களை நன்கொடை கொடுக்க வைத்து பள்ளிகளைச் சீரமைக்கும் திட்டமொன்று தமிழ்நாடு முழுவதும் நடந்தது. அத்திட்டத்திற்கு தனி அதிகாரி இல்லை. சர்க்கார் நிதி ஒதுக்கீடு இல்லை. அத்திட்டத்தால், தமிழ் நாட்டின் கல்வி ஓரளவு உயர்ந்தது. வெளியில் எனன யன்?

இந்திய சர்க்கார், இதைப் பார்த்தார்கள். 'பொதுஜன ஒத்துழைப்பைப் பற்றி சிந்திக்க 'செல்' ஒன்றை ஏற்படுத்திவிட்டார்கள். முந்நூறு நானூறு ரூபாய் சம்பளத்தில் இருந்த, பெரியவர்களுக்கு வேண்டிய சிலரை, இரண்டு மூன்று பங்கு சம்பளத்தில் 'செல்'லுக்கு நியமித்து விட்டனர். சென்ற சில ஆண்டுகளாக அந்த 'செல்' சிந்தித்துக் கொண்டேயிருக்கிறது. எப்போதாவது ஒரு வேளை, சென்னையில் என்ன நடந்தது. எங்கே என்ன செய்தார்கள் என்று, மலையைக் கல்லி எலியைப் பிடிக்கும் சிறு வெளியீடுகளை வெளியிடுகிறார்கள். இந்த செல் செய்யும் பணியெல்லாம். உள்ள சிறு நிதியையும் 'செல்'லரிப்பதுதான்.

விவசாயிக்கு வேண்டியது காலா காலத்தில் தண்ணீர்; நேரா நேரத்தில் பண உதவி, பொறுக்கு விதை உதவி, உர உதவி; இவை ஓரளவே கிடைக்கிறது. கருத்தரங்கும் உபதேசமும் முழுக்க முழுக்க, திணறத் திணறக் கிடைக்கிறது. முந்தியதைப்பற்றி கவனித்து, உடனுக்குடன் செயலாற்றவேண்டிய பெரியவர்கள், பிந்திய முயற்சிகளில் பெரிதும் மூழ்கி விடுகிறார்கள். பிந்திய செலவுகளுக்கு பணம் கிடைக்கிறது. நேரமும் கிடைக்கிறது ஏன்? இவை வெளிச்சம் போடும்; பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்பும்.

இந்நிலை திடீரென இன்று நேற்று தோன்றிவிடவில்லை. பல ஆண்டுகளாகவே, வேகமாகவே பரவி வருகிறது. அநேகமாக தேச வளர்ச்சிப் பயிரை தேவையில்லாதகாட்டுக் கொடிகள், புறம்பான திட்டங்கள், மூடிவிட்டன. இவற்றை களைந்தெடுத்து, ஓரளவாவது தேச நலனைக் காப்பாற்ற முடியுமா? இதுவே இன்றைய கேள்வி.

திட்டம் தேவை; திட்டமிட்ட வளர்ச்சி தேவை. ஆனால், 'உடனடித் தேவை என்ன; பலருக்கும் கைமேல் பலன் கொடுப்பது எவை; அடிப்படை எவை; அலங்காரம் எவை என்ற தெளிவு இல்லாமல் போய் விட்டது' பெரும் குறை. அடிப்படை, கவர்ச்சி காட்டாது; அலங்காரம் ஊர் மெச்ச விளங்கும்' என்ற போக்கில் இன்னும் பல ஆண்டுகளுக்குத்தேவைப்படாத, பலஆண்டுகள்வரைத் தள்ளிப்போட வேண்டிய, ஆயிரக் கணக்கான 'டம்பாச்சாரி' பகுதிகளையெல்லாம், எல்லாத் துறைகளிலும் புகுத்தி விட்டோம். புகுத்

திக் கொண்டே இருக்கிறோம். இதுவரையில் ஆனசெலவால், 'பொதுமக்கள்' பெற்ற நன்மையைவிட பெருமக்கள் பெற்ற நன்மையே பெரிது. 'பொதுமக்கள்' பெற்ற நன்மையைப் பற்றி பெருமை இல்லை. படித்துவிட்டு பலன் உள்ள பணி ஏதும்செய்யாது புதிய வெளிச்சம் போட்டுக் கொண்டே காலம் தள்ளும் நிறையச் சம்பளம் பெற்றும் ஆற்றாது கூப்பாடு போடும் புதிய புல்லுருவிகளை நாடு முழுவதிலும் உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறோமே! அது தான் பொல்லாத வினை. நம் நாட்டின் முதுகெலும்பை முறிக்கும் வினை.

'பெருகினது செலவு வளர்ந்தது கொஞ்சம்' என்ற நிலை மாறுமா? பதில் சொல்ல முடியாத கேள்வி. மத்திய அரசிலோ, இராச்சிய ஆட்சிகளிலோ, இன்று நடப்பது என்ன? சென்ற தீமைகளைக் களைவதா? தேவையற்ற நிதியையெல்லாம் உறிஞ்சும் அமைப்புகளையும் திட்டங்களையும்விடவோ மாற்றவோ ஆன முயற்சிகளா? அத்திட்டங்களால் நன்மை பெறுவோர், அவ்வமைப்பு களால் சோம்பேறி ஆனவர்கள், ஆனால் செல்வ வாழ்க்கை வாழ்வோர்களின் சார்பில் பொழியும் பரிந்துரைகளால் அவை தொடர்ந்து விரயத்திற்குக் காரணமாகவுள்ளன. அவை போதாதென்று, புதிய தாயத்துகளை புதுச்சர்க்கார்கள் விளம்பரப்படுத்துகிறார்கள். இந்தகைய தாயத்துகளில் ஒன்றே தாய்மொழிமூலம் உயர் கல்வி. இது வரையில் யாருக்கு எங்கு எந்நோய் குணமாகப்பட்டிருந்தாலும், மருந்தால், மருத்துவரின் இடைவிடாத விழிப்பான, கவனமான புத்திசாலித்தனமான கவனிப்பால் மட்டுமேயாகும்; யார் கொடுத்த 'தாயத்து'களாலுமல்ல, இன்று நாட்டின் பல்வேறு நோய்களுக்கு பெரும்பான்மையாக, போதிய காலம், போதிய அளவு, திறமையாளவர்களைக் கொண்டு மருந்து கொடுப்பதை விட்டு விட்டு, விளம்பரத் தாயத்துகளை, பெரியவர்களே விற்க முனைந்துள்ளபோது, 'தாயத்துக் கட்டிக் கொள்வதற்கு மேல் வளராத பொது மக்கள் என்ன செய்வார்கள், பாவம்!

இன்றைய நிலையில் பக்தர்கள் சொல்லுவதுபோல, நம் எதிர்காலம் நம் கையில் இல்லை, 'அவன்' கையில் விட்டுவிட வேண்டியதுதானா! ஃ

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்" — குறள்

"எம்மிடம் ஒருபொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பியிருப்பவரைக் கண்டால், அவனுடைய அறியாமையை எண்ணி நிலமகள் தன்னுள் சிரிப்பாள்."

விவசாய உற்பத்தியைப் பெருக்கி நாடும், தானும் பயன் பெற விரும்பும் விவசாயிகளுக்கோர் அரிய வாய்ப்பு!

* நிலங்களைச் செப்பனிட
** டிராக்டர் போன்ற விவசாயக் கருவிகள் வாங்க
*** கிணறு வெட்ட, நீர் இறைப்பதற்குப் பம்புசெட்டுகள் அமைக்க

இவைபோன்ற நில அபிவிருத்தி சம்பந்தமான செலவினங்களுக்கு உதவும் வகையில் தாலுக்காக்கள் தோறும் இயங்கிவரும் கூட்டுறவு நில அடமான வங்கிகள் குறைந்த வட்டி விகிதத்தில் நீண்டகாலத் தவணையில் கடன்கள் வழங்கி வருகின்றன.

மேலும் விவரங்களுக்கு உங்கள் தாலுக்காவிலுள்ள நில அடமான வங்கியை அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

சென்னை கூட்டுறவு மத்திய நில அடமான வங்கி,
லஸ், மயிலாப்பூர், சென்னை - 4.

செயற்கரியச் செய்த சம்மல்

செல்வி பொன். பகுத்தறிவு, எம்.எஸ்.ஸி.

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார்'' என்றுஇற் றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இப்பரந்த உலகில் வாழும் மக்கட்கு நாடு, மொழி, இனம் என்ற வேறுபாடுகளின்றி வாழும் வழி வகுத்துக் காட்டி 'பண்புடை யார் பட்டுண்டுலகம் அதுவின்றேல், மண் புக்கு மாய்வது மன்' என்று உய்ந்து வாழு தற்கரிய காரணமும் பண்புடையார் எனப் படுவோரே என்று இலக்கணமும் கூறியுள் ளார் தமிழ்மறை வகுத்த வள்ளுவனார்.

'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற படி பெரியார் இன்று நாட்டில் செயற்கரிய செய்யாத செயலில்லை என்றே அறுதியிட் டுச் சொல்லலாம். வாழ்வியல் துறைகளி லும், கல்வித்துறையிலும், அறிவுத் துறையி லும் பெரியார் செய்து காட்டியிருக்கின்ற அருஞ்செயல்களை எண்ணிப் பார்க்கும் பொழுது இந்த செயற்கரிய செய்யும் பெரி யாருக்கு ஒப்புமை அவரேதான் என்று கூற முடியுமேயொழிய அவருக்கு நிகராக எந்த அறிஞரையும் இவ்வுலகத்து சான்று காட் டவேமுடியாது.

முடியுடை மூவேந்தர்கள் சிறப்புற ஆட்சி செய்த அக்கால முதல் இந்தியத் துணைக்கண்டம் உரிமை பெற்று ஆட்சி புரியும் இக்காலம்வரை பார்ப்பனர் நம்மை அடிமைப்படுத்தாத துறை எதுவும் கிடையாது. அவர்கள் நம் அறிவுக்கு முன்னேற்றத்திற்கு எல்லாவகை யானும் முட்டுக்கட்டை போன்று விளங்கி வந்துகொண்டிருப்பதோடு இன்று இந்தி யத் துணைக்கண்டத்தினைவிட சிறிய நாடு களான சப்பான், மலாயா போன்ற நாடுகள் உலகில் எல்லாத் துறைகளிலும் முதன்மை பெற்று விளங்க இந்தியா மட்டும் தாழ்ந்து கிடப்பதற்குக் காரணம் இந்தப் பார்ப்பனர்களும், அவர்கள் நம்மை அடிமை யாக்க முதன்மையாகக் கொண்ட கருவி களான, சாதியும், மதமும்தான் என்ற உண் மையைத்தன் நுண்மான் நுழைபுலனறிவால் உணர்ந்து அதனைத் தகர்த்தெறிய அரும் பாடுபட்டு அத்துறையிலே இன்றைக்குப் பெருமளவு வெற்றியும் கொண்டுள்ளார் என் றால் இதனைவிடஓரினம் தழைத்தோங்குவ தற்கு செய்யக்கூடிய ஒரு செயற்கரிய செயல் இன்று வேறு ஏதாவது இருக்க முடியுமா?

அறிவும், திருவும், 'தோன்றிற்புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவரின் தமிழ்மறைக் கேற்ப புகழ் பெற்றுத் திகழும் பகுத்தறிவுப் பாசறையாம் பெரியார் அவர்கள் தான் நேர்மையிலிருந்து சிறிது விலகியிருந்தால் அவர் வகிக்காத பதவியே இன்று இந்நில வுலகில் இல்லை என்று கூறுகின்ற அளவிற் குப் பல பதவிகளை வகித்திருக்கலாம்! டாட்டா, பிர்லா இவர்களெல்லாம் பெரியார் அவர்களிடம் சென்று இரந்து நிற்கும்படி யான பல கோடிப் பொருட்களைத் திரட்டிக் கோடீசுவராராகியிருக்கலாம். இன்றைக்கு ஏறக்குறைய ஈராயிரத்தைநூறு ஆண்டு கட்குமுன் தோன்றிய புத்தர் போன்று அரச வாழ்க்கையைத் துறந்து, மக்கட்பணியே செய இருக்கும் எப்பணிக்கும் முதல் பணி

யாம் என பொதுப்பணி செய்து வருகின்றார் என்றால் இதனைவிட செயற்கரிய செயல் செய்தவர்கள் யாராயிருக்க முடியும்! தங்கள் நலனுக்காகவும், தங்கள் மனைவி மக்கட்காகவும் உழைக்கின்ற மக்கள்கூட ஓய்வு, உறக்கம் இவை கெடப் பணியாற்றுவதில்லை. அங்ஙனமிருக்க, மழையானாலும் வெம்மை விளைக்கும் வெயிலானாலும், குளிரானாலும் பகலானாலும் இரவானாலும் ஓய்வின்றி, உறக்கமின்றி, அயர்வின்றி, சுணக்கமின்றி சலியாது மக்கட்பணியாற்றி வரும் பெரியார் அவர்கள் கைம்மாறு கருதாது செய்து வரும் தொண்டினைவிட செயற்கரிய தொண்டு இன்று உலகில் இருக்க முடியுமா? செய்பவர்கள்தான் யார்? இன்று நேற்றல்ல! அரை நூற்றாண்டாகக் கைம்மாறு கருதாது தன்னலம் பேணாது ஆற்றி வரும் செயற்கரிய தொண்டுகளும் அதன் பயன்களும் எண்ணிலடங்கா!

ஆரியர்கள் என்றாலே அறிவுக் கூர்மையுள்ளவர்கள், எத்துறைக்கும் தகுதி படைத்தவர்கள், அவர்கள் தம் அறிவுக்கும் திறமைக்கும் நிகர் யாரெனக் கூற முடியாது என்று மார்தட்டித் தமிழனை அடிமையாக்கி அறிவுக்கு அணைபோட்டுக் குடத்திலிட்ட விளக்காய் விளங்க வைத்த பார்ப்பன இனக் காவலராம் திரு. இராசாசி அவர்களின் மனுதர்ம ஆட்சியை இருமுறை தன் அரிமாநிகர் ஆண்மையால் யாரும சொல்ல முடியாத, செய்ய முடியாத சொற்களைத் துணிந்து எடுத்துக்கூறி அரசியல்வாதி இராசாங்கத் தந்திரி எனறெல்லாம் பெயர் பெற்று, சக்கரவர்த்தியாகத்தன்னையாக்கிக் கொண்ட பார்ப்பன நரியை பதவியை விட்டு ஓடச் செய்ததோடு மட்டுமின்றி, அவர் ஆட்சி செய்தகாலத்திலேயே இந்தியை, செத்தபின் பிணத்திற்குக் கருமாதி செய்யவும், மக்களை ஏமாற்றிச் சுரண்டுவதற்குச் சாதகமாகவும் பார்ப்பனர்கள் ஆக்கிக்கொண்ட வடமொழியை நாட்டில கட்டாயமொழியாக்க வேண்டுமென்று அவர் கொணர்ந்த சட்டத்தை தனித்தமிழ் தனித்தியங்கும் தன்மையுடையது! இந்தி ஆட்சிமொழியாவதற்கு என்ன தகுதி படைத்துள்ளது? ஆரியம் வேறு, தமிழ் வேறு என்று வரையறுத்துத் துணிந்துமொழிந்த பல்கலைக்குரிசிலும், தனித்தமிழ்க் கடலும், பன்மொழிக் கலைஞருமான மறைமலையடிகளார்தம் துணைக்கொண்டு ஆச்சாரியாரின் செயலை

நேஷனல் லாட்ஜ்

கோயமுத்தூர் ரோடு, கரூர்.

டெலிபோன் நெ. 115

சுவைமிக்க சிற்றுண்டி, பிரியாணி உணவு வகைகளுக்கும்

தூய்மைக்கும், உளங்கனிந்த உபசரிப்புக்கும்

சிறந்த இடம்

கே. எஸ். ராமசாமி,

உரிமையாளர்.

ஊமையன் கண்ட கனவிற்கொப்பத் தகர்த் தெறிந்து நாட்டிலே, ஆட்சியிலே அவருக்கு இருந்த செல்வாக்கை வேரறக் களைந்து விட்ட செயலும், அவர் கூட்டத்தின் கேள் போல் பகைவர் தொடர்பு என்ற குண நலனை மக்களுக்கு எடுத்துக்காட்டி 'சர்' பட்டம் இல்லாவிடினும், தன்னைச் சக்கர வர்த்தி என ஆக்கிக்கொள்ளாவிடினும் ஆபிரகாம்லிங்கனைப் போன்று சூத்திரன் என்று சொல்லக்கூடிய தமிழினத்திலே தோன்றி அறிவுக்குக் கரையென்று ஒன்று இல்லையென்பதுபோன்று தன்னிடத்துப் பொருந்தியுள்ள அறிவுக்கும்; திறமைக்கும் எல்லையில்லாவண்ணம் தேங்கிக்கிடப்பதை 'கொக்கொக்கக் கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த விடத்து' என்ற வள்ளுவ ரின் வாய்மொழிப்படி காலத்தினாற் பயன் படுத்தும் தலை சிறந்த பண்புடைத் தமிழ் மகன், தமிழினக் காவலராம் பெரியார் அவர்கள் இன்று உலகம் வியக்கத் தான் கொண்ட கருத்தைச் செயலாக்கச் சிறப்பாக் கத் தமிழ் மக்களின் இல்லங்களிலே அவர் தம் சிறார் பழுதில் கல்வி பயில கல்வி நீரோடையைப் பரவச் செய்யவும், தொழில் வளம் பெருக்கி நாட்டை உய்விக்கவும் தூண்ட, தமிழினப் புரவலராம் அப்பெருந் தகையும் தமிழ்மறையில் கூறப்பட்ட 'பெரி யாரைத் துணைக்கோடல்' என்ற வள்ளுவ ரின் வாய்மொழிகளின்படிப் பின்பற்றி நடக்க வும், உலகெங்கும் அவர் தம் புகழ் பரவி நிற் கவும் செய்த இச்செயல்களைவிட செயற் கரிய செயல்கள் உலகில் வேறென்ன உளது! இம்மட்டோ...!

தான் உலகம் சுற்றி வந்தபோது கண்டு, கேட்டு, உய்த்து உணர்ந்தவற்று ளெல்லாம் தலையாய சீர்திருத்தமானது பெண்அடிமை தீர்தல் என நீக்கமற உணர்ந்து, பெண்ணுரிமை பேசுபவரை அறி விலி எனஎள்ளி நகையாடிய அன்றேதனது ஆண்மைசேர் கருத்துக்களால் 'அடுப் பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' எனறு கூறியவர் இன்று இருந்தால் வெட்கித் தலைகுனியும் வண்ணம் 'ஆவதும் பெண் ணாலே அழிவதும் பெண்ணாலே' பெண் ணினம்தான் ஒரு நாட்டின் உயிர்நாடி என்று கூறிப் பெண்ணுரிமை பேசியதோடு மட்டுமல்லாமல் இன்று பெண்ணுக்கு ஆணுக்கு நிகராக சரி சம உரிமை, சொத் துரிமை, மணவிலக்குரிமை, அரசியலிலே பங்கு முதலானவற்றையெல்லாம் போராடி வாங்கித் தந்ததோடு அவற்றை யாவும் சட்டமாகவும் செய்ததன் பொருட்டு இன்று இந்தியத் துணைக் கண்டத்தின் பெரு முத் லமைச்சாய் பெண் மகள் திகழவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உணரும்போது இதனைவிட செயற்கரிய செயல் வேறு ஏதாவது இருக்க முடியுமா!

பார்ப்பனரின் கொட்டத்தை அடக்க, தமிழன் நல்வாழ்வு பெற வகுப்புவாரி உரிமையெழுப்பி அதன்படி கல்வி முதலான பல்வேறுதுறைகளிலும் தமிழன் மிளி ரக் காரணமாயிருந்த அவர்தம் செயலைவிட செயற்கரிய செயல் யாதுளது! தமிழினம் தழைக்கத் தோன்றிய பெரியார் எழுப்பிய உரிமைக் குரலை மக்கள் உணர்ச்சி யோடு, சிந்தித்து வீறுகொண்டு செயல்பட அவர் கொள்கைக்குப் புத்துயிர் கொடுக்க புரட்சிக்குரல் எழுப்பிக்கொண்டு புலியென முழக்கம் செய்ய சுயமரியாதைக் கருத்துக்க ளைத் தனித்தமிழில் யாப்பிசைத்துப் பண் சேர்த்துப் புரட்சிப் புலவர் பாடக் காரணமா யிருந்தவர் நம் தகைமைசால் பெரியார் அவர்கள்தாம் என்றால் இதனைவிட நாட்டில், இந்நிலவுலகில் செயற்கரிய செய்ய வல்லார் யார்!

இவையல்லாது, இன்று தமிழகத்திலே இருக்கின்ற அமைச்சரவையினரும் 'பெரி யாரைப் பிழையாமை' 'பெரியாரைத் துணைக்கோடல்' முதலான திருவள்ளுவ ரின் கொள்கைகளை இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே எம்மதத்தார்க்கும், எந்நாட்டார்க்கும் பொதுவாகக் கருதப்படு கின்ற உலகமறையாம் திருக்குறளைப் படைத்த வள்ளுவனாரின் 20ம் நூற்றாண் டில் அறிவியற் புத்தராய் தமிழகத்தில் தோன்றியிருக்கும் இத்தமிழினக்காவலரைக் கற்பனைக் கண்ணில் நிறுத்தித்தான் இவ் விரு அதிகாரங்களைப் படைத்திருக்கிறார் என்பதைத் தெளிவாக உணர்ந்ததோடு மட்டுமின்றி, பெரியாரைப் பிழைத்தாலும், பெரியாரைத் துணைக்கோடாவிட்டாலும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் அறிந்து, பெரியாரைப் போற்றி அவர் கருத்துக்களைப் பின்பற்றி நடக்க முன் வந் திருக்கும் தன்மை பெரியாரின் செயற்கரும் செயல்களை கலங்கரைவிளக்கென மிளிர வகை செய்கின்றது என்பதில் சிறிதும் அய்ய மில்லை.

இவ்வாறெல்லாம் பல்லாற்றானும் நாட்டிற்கு, மொழிக்கு, தமிழினமக்கட்கு மக் கள் வாழ்வியல்துறை முதலானவற்றிற்கு அருந்தொண்டாற்றிய செயல்களையெல்

லாம் உணர்ந்து 'ஒரு வானில் பன்னிலவாம் உயர் தழிழப் பெண்களெல்லாம், பல்கலைக் குரிசலாம்' மறைமலையடிகளார் அவர்கள் தனித் தமிழ் மொழியில் செப்பவும், உரை வளம் பெருக்கவும் ஒல்லும் வகையெல்லாம் உறுதுணையாய்விளங்கிய அவர் தம் பெறற் கரிய செல்வியார் திருவாட்டியார் நீலாம பிகை அம்மையாரின் தலைமையின் கீழ் ஒன்று கூடி, செயற்கரிய செய்து வரும் செயல் வீரர், தமிழினம் உய்ய வந்த திருவிளக்கு, பகுத்தறிவுப்பகலவன் ஆகியவ ராம் ஈ. வே. இரா அவர்கட்கு 'பெரியார்' என்னும் தனிச் சிறப்புப் பட்டமளித்து, இன்று பெரியார் என்றால் இந்நிலவுலகத்து ஈரோட்டிலே 'இவர் தந்தை எந்நோற்றார் கொல்' என்று இயம்பும் வண்ணம் விளங் கிய செல்வத்திரு, வேங்கடசாமி அவர்கட் கும், 'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனைச் சானறோன் எனக் கேட்ட தாயா'க விளங்கிய சின்னத்தாயம்மையார் அவர்கட்கும் பெறற்கரும் புதல்வராய்ப் பிறந்த ஈ. வே. இராமசாமி அவர்களைத் தவிர வேறு யாரையும் குறித்துவிடாமல் பெயருடன் சேர்த்து தனிச்சிறப்புப் பெற்று வரும் அப்பட்டத்தை வழங்கியுள்ளார்கள் என்பதனை எண்ண எண்ண உள்ளம் இறும்பூதெய்கின்றது.

'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்' என்ற புரட்சிக் குரலுக்கு உயிர்கொடுத்த ஒளிச் சுடராம் பெரியாரின் கருத்து இன்று நன வாகியுள்ளது புறநானூற்றுப் பாடலிலே பொருந்தியுள்ள கருத்துப்படி யாண்டு பல வானாலும் குன்றா இளமைநெஞ்சமும், ஆண்மையும் வீறும், ஊக்கமும்பெற்று இன் னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்மக்கட்கு உறுதுணையாய் விளங்க, தமிழின மக்க ளாய நாம் அவர்கொள்கையினால் ஒன்றுபடு வோம! கருத்துக்களைச் செயலாக்குவோம்! பிறந்தநாளாம் செப்டம்பர் 17-ஆம் நாள் தமிழற்குப் பெறற்கரிய பொன்னாள், நன் னாள் எனக் கொண்டு பெரியாரைப் பல் லாண்டு வாழ்க! வாழ்க!! அவரது புகழ் இவ் வுலகம் நிலைத்துள்ளவரை நின்று விளங் குக என வாழ்த்துவோமாக!! ∴

எங்களிடம் எல்லாவகை
மருந்துகளும் கிடைக்கும்

சித்ரா மெடிகல்ஸ்,

இங்கிலீஷ் மருந்து கடை,

பஸ் ஸ்டாண்ட்,

தருமபுரி.

அழகிற்கு அழகு
செய்வது
நல்ல ஆடைகளே!

∴

சிறந்த
ஆடைகளுக்கு
வருகை தாருங்கள்.

பா. பண்டரிநாதன்

சவுளிக்கடை, இடைப்பாடி.

உங்களுக்குத் தெரியுமா?

உலக மதங்கள் எதற்கும் நாட்டு எல்லை நிர்ணயித்து வரையறுக்க இயலாது மதவாதிகளும் மத நம்பிக்கை யில்லாதவர் களும் பல நாடுகளிலும் பரவலாகவே கலந்து வசிப்பதே காரணம். மலைவாசி களும் நாகரீகத்தில் பின்தங்கியிருப்பவர் களிலும்கூட மதங்களைப் பொருட்படுத்தி யிருப்பவர்கள் ஒரு சிலரே காணலாம். யூதர்கள் போன்று தனித்த கொள்கையுள் ளோரும் பலருண்டு. ஆயினும் மதக்கோயில் கள் வழிபாட்டு நடவடிக்கைகளைக் கொண்டு ஒருவாறு மதங்களைப்பற்றியும் அனுசரிப்பவர் எண்ணிக்கை பற்றியும் அறியலாம்.

ஆராய்ச்சியாளர் தரும் விவரம்

இந்து மதம்: பல கடவுள்களையும் பல கடவுளச்சிகளையும் வழிபடுபவர்கள். பிரம் மம் என்ற தத்துவ அடிப்படையாக அவதா ரங்கள், ரிஷிகள், யோகிகள் பலரால் பல காலத்தில் போதிக்கப்பட்ட கருத்தக்களி லும் ஆத்மா பல பிறவிகளை எடுத்து பின் பிரம்மத்தில் கலப்பதென்பதிலும் நம்பிக்கை யுள்ளவர்கள்.

பவுத்தம்; கி. மு. 563-483-ல் கவுதம ரால் தோற்றுவிக்கப்பட்டது. பிராமண மதத்தை சீர்திருத்துவதாக உண்டாக்கப் பட்டது. அறிவு-ஆராய்ச்சிக்கும் சிந்தனைக் கும் இடந் தருவது. இந்தியாவின் வடக்கே தோன்றி ஆசிய நாடெங்கும் பரவியுள்ளது.

இஸ்லாம்: கி. பி. 570—632-ல் மகம் மதுவால் உண்டாக்கப்பட்டது. மத்தியக் கிழக்கு நாடுகளிலும் மத்திய ஆசியாவிலும் மத்திய அய்ரோப்பிய நாடுகளிலும் ஆஃ பிரிக்காவிலும் பரவியது. ஷியா, சுள்ளி என்ற இரு பிரிவினராயுள்ளர். மத நூல் குரான்.

கிருஸ்தவம்: நாசரெத்தில் பிறந்த ஏசு என்பவரால் ஜெருசலத்தில் உண்டாக்கப் பட்டது, அய்ரோப்பாவில் பரவி மற்ற உலக நாடுகள் எங்கிலும் பரவியது. ஏசுவைக் கொண்டு ஒரு சகாப்தம் ஏற்பட்டுள்ளது. மத நூல்-பைபிள் 16-வது நூற்றாண்டில் இதில சீர்திருத்தம் ஏற்பட்டு இரு பிரிவுகள் நிலவியுள்ளன.

மற்றும் சீனாவில் கனஃபூஷ்ய மதம், ஜப்பானில் ஷிண்டோ, ரஷ்யாவில் மதங்கள் இரண்டாமிடமாக்கப்பட்டு கம்யூனிசம் என்ற கொள்கைக்குக் கட்டுப்படுதல், யூதர் களுக்கான தனி மதம், சீக்கிய மதம், பார்சி மதம் முதலிய தனித்த மதங்கள் உள்ளன.

புள்ளிவிவரங்கள்

(சுமாராகக் கணக்கிடப்பட்டவை)

கிருஸ்தவ மதம்: பிராடெண்டுகள் (சீர் திருத்தகாரர்கள்) கத்தோலிக்கர் (பழைய கொள்கையிலிருப்பவர்) ஆகிய இரு பிரிவின ரும் சேர்ந்து அய்ரோப்பாவில் 29 35 கோடிப் பேர்; வட அமெரிக்காவும் தென் அமெரிக் காவும் 26.20; ஆசியாவில் 3.9 கோடிப்பேர்; ஆஸ்திரேலியாவில் 1.15 கோடிப் பேர்; ஆஃ பிரிக்காவில் 2.66 பேர். ஆகமொத்தம் உலக கிருஸ்தவர் சுமார் 63 26 கோடி.

கீழ்நாடுகளில் ஆத்திகர்கள்: கீழ் நாடு களில் உள்ள ஆத்திகர்கள் ஆயினும் கம்யூ னிசக் கொள்கையுடன் இருப்பவர்கள, மதத்தை வெளியில் காட்டாதவர்கள் அய் ரோப்பாவில் 1.12 கோடிப்பேர்; ஆசியாவில் .8 கோடி; ஆஃப்ரிக்காவில் .6 கோடி; வட அமெரிக்கா..2 கோடி; ரஷ்யாவில் 9 கோடிப் பேர் ஆகமொத்தம் கம்யூனிசக் கொள்கை யுடையவர். 10·28 கோடி.

இஸ்லாம் மதம்: மகம்மது நபி வழியில் செல்லும் சுள்ளி வகுப்பினரும் மகம்மது அலியைப் பின்பற்றி நடக்கும் பிரிவினரும் சேர்ந்து அய்ரோப்பாவில் 1.27 கோடிப் பேர்; ஆசியா, மத்திய ஆசியநாடுகள் திபேத் சேர்ந்து 27 கோடிப்பேர்; ஆஃப்ரிக் காவில் 8 கோடிப் பேர்; ஆகமொத்தம் உலக இஸ்லாமியர் 36 27 கோடி

'இந்து'மதம்: 'இந்து' என்று கூறப் படும் ஆரிய மதத்தினர் பல்வேறு பிரிவினரு மாகச் சேர்ந்து ஆசியாவில்—இந்தியாவில்

30.3 கோடிப்பேர்; இன்றைய சீக்கிய மதத்தினர் 60 லட்சம் பேர்; ஜெயினர் 15 லட்சம்; பார்ஸி மதத்தினர் ஒன்றேகால் லட்சம் பேர்; ஆக 30.76 கோடி.

பவுத்த நெறியாளர்: இந்தியாவிலிருந்து கீழ்த்திசை நாடுகள் முழுதும் பரவியுள்ள புத்த நெறியாளர் சீனாவில் 10 கோடிப்பேர்; ஜப்பானில் 4.2 கோடிப்பேர்; பர்மாவில் 1 6 கோடி; இலங்கையில் 60 லட்சம் பேர்; கம்போடியாவில் 40 லட்சம் பேர். ஆகபவுத்தர்கள் 16.8 கோடிப்பேர்.

கன்பூஷ்ய மதம், டாவோசியம் என்னும் சீன மதம்: பவுத்த நெறியுடன் இந்த மதங்களையும் சீனர்கள் பின்பற்றுவதால் பிரித்துக் கூறுவதற்கில்லை. சீனர்கள் கம்யூனிஸக் கொள்கை உடையவர்கள் ஆசிய நாடுகளில் மொத்தம் 30 கோடி.

ஷிண்டோ-மதம்: ஜப்பானியர்கள் சூரியனை வணங்குபவர்கள் புத்த நெறியையும் கடைப் பிடிக்கிறார்கள். மொத்தம் 3.4 கோடி.

மலை வகுப்பினர்; ஆசியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களில் வசிக்கும் மலை ஜாதியினர் தங்களுக்கென்று தனித் தனி வழிபாடு கொண்டவர்கள். மொத்தம் 10 கோடி.

ஜூடாய்சம் என்னும் யூத மதம்: யூதர்கள் பல நாடுகளிலும் பரவி வசிப்பவர்கள். இஸ்ரெயில் நாட்டில் 20 லட்சம்பேர்; அமெரிக்காவில் 52 லட்சம் பேர்; ரஷ்யாவில் 30 லட்சம் பேர்; அய்ரோப்பாவில் 1 லட்சம் பேர்; ஆசியாவில் 20 லட்சம் பேர். ஆக 1.21 கோடி.

ஆக உலகில் உள்ள மதவாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் சுமார் 192 கோடிப் பேர்கள் இருக்கின்றனர், மற்றும் 100 கோடிப் பேர் வரை எந்த மதப் பற்றும் இல்லாதவர்கள் என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்புள்ளிவிவரங்கள் "ரீடர்ஸ் டைஜெஸ்ட் கிரேட் ஒர்ல்டு அட்லாசி" லிருந்துஎடுக்கப்பட்டவை.

சோவியத் கல்வித் துறை: சில புள்ளி விவரங்கள்

1897-ஆம் வருடத்திய ஜனசங்கியையின்படி, புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் 9 வயதிற்கு மேற்பட்ட மக்களில் 74 சதவீதத்தினர் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர். பெண்களில் இந்த வீதாசாரம் 86 சதவீதமாக இருந்தது.

∴

புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் வசித்துவந்த 71 தேசிய இனங்களில் 48 தேசிய இனங்களுக்கு அவர்களுக்கெனச் சொந்த எழுத்து, மொழி கிடையாது. லட்சோப லட்சக்கணக்கான உக்ரைனியர்கள், பைலோரஷ்யர்கள், லெத்இனத்தவர், லித்துவேனியர்கள், எஸ்தோனியர்கள் மற்றும் பலர் தங்களுடையசொந்த மொழிகளிலேயே போதிக்கப்படும் பள்ளிக்கூடங்களைப்பெறும் உரிமையும், வாய்ப்பும் இல்லாமலிருந்தனர்.

∴

1919, டிசம்பர் 26-ல், மக்கள் கமிசார்களின் கவுன்சில், "ருஷ்ய சமஷ்டியின் மக்களிடையே எழுத்தறிவில்லாமையைப் போக்குவது குறித்து" என்ற ஆணையை வெளியிட்டது. அதில் வி. அய். லெனின் கையொப்பமிட்டிருந்தார். 1920-ல் ஏற்படுத்தப்பட்ட, எழுத்தறிவின்மையைப்போக்குவதற்கான அகில-ருஷ்ய விசேஷக் கமிஷன், எழுத்தறிவின்மை-எதிர்ப்பு இயக்கத்தைப் பல ஆண்டுகள் நடத்தியது.

∴

ருஷ்யக் கம்யூனிஸ்டுக்கட்சியின் (போல்ஷிவிக்ஸ்) 8-வது காங்கிரஸ் 1919 மார்ச்சில் அங்கீகரித்த கம்யூனிஸ்டுக் கட்சியின் திட்டம் சோஷலிசக் கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகள், நீண்டகாலத் திட்டம், சோஷலிசக் கல்வியைப் பரப்பும் வழிகள் ஆகியவற்றை வரையறுத்துத் தந்தது.

1917 ஆம் ஆண்டிலிருந்து, தன் இறுதிக் காலம் வரையிலும் லெனினது துணைவியாரும், நெருங்கிய நண்பரும், போராட்ட சகாவுமாகிய நதேழ்தா கே. குருப்ஸ்கயா, எழுத்தறிவின்மையைப்போக்குவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளை மேற்பார்வை பார்த்து வந்தார். 1929ஆம் ஆண்டிலிருந்து அவர் ருஷ்ய சமஷ்டிக் குடியரசின் கல்வித் துறைக்கான மக்கள் துணை கமிசார் பதவியை வகித்து வந்தார்.

சோவியத் யூனியனில் நான்காண்டுக் கட்டாய ஆரம்பக கல்வித்திட்டம் 1930ஆம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

∴

1939-ஆம் ஆண்டுக்குள் சோவியத் யூனியனில் எழுதத்தறிவு பெற்ற மக்கட் தொகையின் வீதாசாரம் 62.6% சதவீதத்திற்கு உயர்ந்தது.

∴

1939-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நாடு தழுவிய ஜன சங்கியையின்படி 9க்கும் 49க்கும் இடைப்பட்ட வயதினரில் 89.1 சதவீதத்தினர் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தனர்.

∴

1939ல் சோவியத் யூனியனில் உடலுழைப்புத் தொழிலாளிகளில் ஆயிரத்தில் 43 பேர் உயர்நிலைக் கல்வி அல்லது மேற் கல்வி பெற்றிருந்தனர்; 1959-ல் இந்த எண்ணிக்கை 316ஆக உயர்ந்தது. இன்று தொழிலாளிகளில் 50 சதவீதத்திற்கு அதிக எண்ணிக்கையினரும் உயர்நிலைக் கல்வி அல்லது மேல்நிலைக் கல்வி பெற்றுள்ளனர்.

∴

1959ஆம் வருடத்திய ஜனசங்கியையின் படி 9க்கும் 49க்கும் இடைப்பட்ட வயதினரில் 19 லட்சம் பேர்களே எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர். அதாவது, இந்த வயதுப் பிரிவினரில் உள்ள மொத்த மக்களில் 1.5 சதவீதத்தினரே எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தனர். பார்க்கப் போனால் 100க்கு 100 சதவீதம் எழுத்தறிவு பெற்ற மக்கள் வாழும் நாடாக சோவியத் யூனியன் வளர்ச்சியடைந்துள்ளது.

∴

1914-15 பள்ளி ஆண்டில் ருஷ்யாவின் பொதுக் கல்விப் பள்ளிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 96,56,000; 1965-66-ஆம் ஆண்டில் பள்ளிகளில்

தொலைபேசி எண்: 123

மகாலிங்கம் அச்சகம்

தெற்கலங்கம், தஞ்சை.

எல்லா வகையான அச்சுவேலைகளும், நூற்பதிப்புக்களும், வண்ண அச்சுவேலைகளும், சுவரொட்டிகளும், கணக்குநோட்டு, புத்தகம் முதலிய கட்டுவேலைகளும் குறித்த காலத்தில் அழகாகவும், சிறப்பாகவும் செய்து தரப்படும்.

எங்களிடம்
அலுவலகத் தொடர்பான கருவிப் பொருள்கள்,
பள்ளிக்கூட நோட்டுப் புத்தகங்கள்,
விண்ணப்பத்தாள்கள், குத்தகைப் பத்திரங்கள்
முதலியன மொத்தமாகவும் சில்லரையாகவும்
கிடைக்கும்.

சேர்ந்திருந்த மாணவர்களின் தொகை 4, 82, 45, 000 ஆகும்.

∴

சோவியத் பள்ளிகளில் இன்று 24 லட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ளனர். இவர்கள், சோவியத அறிவுத்துறையினரில் மிகப் பெரும் பிரிவுகளில் ஒன்று ஆவர்.

∴

சோவியத் யூனியனில் 3,800க்கு மேற்பட்ட தனித்தேர்ச்சி உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் சுமார் 40 லட்சம் மாணவர்கள், மாணவிகள் பயிலுகின்றனர்.

∴

1966-ல் சோவியத் யூனியனின் மேற் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை 756 ஆகும். இவ்வாண்டின் நூற்றின் 43-வது பல்கலைக் கழகம் கலினின்கிராடு நகரத்தில் துவக்கப்பட விருக்கிறது.

∴

தற்பொழுது சோவியத் யூனியனின் மேற் கல்வி நிலையங்கள் அமெரிக்காவைப் போல் நான்கு மடங்கு இஞ்ஜினியர்களுக்குப் பட்டம் வழங்கி வெளியே அனுப்புகின்றன. சோவியத் யூனியனில் 1965ல் 1,70,000 புதிய இஞ்ஜினியர்கள் பயிற்சி பெற்றனர்; ஆனால் இதே காலத்தில் அமெரிக்காவில் பயிற்சி பெற்ற இஞ்ஜினியர்களின் எண்ணிக்கை 42,000தான்.

∴

1917-ம் வருடத்திய மாபெரும் அக்டோபர் சோஷலிச புரட்சிக்கு முன்னர் பைலோரஷ்யாவில் மேற்கல்வி நிலையமோ, அல்லது ஆராய்ச்சி நிலையமோ மருந்துக்குக்கூட ஒன்று கிடையாது. இன்று இந்தக் குடியரசில் 28 மேற்கல்வி நிலையங்கள் உள்ளன. அதனுடைய பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி நிலையங்கள், தனித்தேர்ச்சி உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் பதிந்து கொண்டுள்ள மாணவர்களின் தொகை 2,50,000 ஆகும். 1965ல் பைலோரஷ்ய மக்கட் தொகையில் 10,000ல் 120 மாணவர்கள் வீதம் இருந்தனர். இத்தொகை இத்தாலியிலோ அல்லது ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலோ உள்ள மாணவர்களின் தொகையைப் போல் 3 மடங்கு ஆகும்.

∴

அக்டோபர் புரட்சிக்கு முன்பாக, உஸ்பெக்கிஸ்தானிலோ, கஜாக்கஸ்தானிலோ, மேற்கல்வி நிலையம் ஒன்று கூடக் கிடையாது, கிர்கீசியா, தாஜிக்கிஸ்தான், துருக்கிஸ்தானைப் பொருத்தமட்டிலும் மேற்கல்வி நிலையங்களோ, அல்லது தனித் தேர்ச்சி உயர்நிலைப் பள்ளிகளோ அறவே கிடையாது. இன்று சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகளும் கஜாக்கஸ்தானும் 90 மேற்கல்வி நிலையங்களையும் 340 தனித் தேர்ச்சி உயர்நிலைப் பள்ளிகளையும் கொண்டுள்ளன. இவற்றில் 7,40.000க்கு மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். இந்த எண்ணிக்கை, புரட்சிக்கு முந்திய ருஷ்யா முழுவதின் மேற்கல்வி நிலையங்களிலும், தனித் தேர்ச்சி உயர்நிலைக் கல்வி நிலையங்களிலுமிருந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைப் போல் நான்கு மடங்காகும்.

∴

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப் பட்ட பாட்ரிஸ்லுமும்பா நட்புறவுப் பல்கலைக் கழகத்தில் இன்று, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் 82 நாடுகளைச் சேர்ந்த 3,500 யுவர்களும், யுவதிகளும் கல்வி பயில்கின்றனர். நடப்புக் கல்வி ஆண்டில் 600 அயல்நாட்டு மாணவர்களும், 200 சோவியத் மாணவர்களும் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆதாரம்: "சோவியத் பலகணி"

IND. No. 163

எடப்பாடி எண்ணெய்த்
தொழிலாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம்
லிமிடெட்.,

எடப்பாடி P. O. சேலம் Dt.

∴ கலப்படமற்றது

∴ சத்துக்கள் நிறைந்தது

∴ சுகாதாரத்திற்கேற்றது

நாட்டுச் செக்கில் குளிர்ந்த நிலையில் தயாரிக்கப்படும் எடப்பாடி எண்ணெய்த் தொழிலாளர் கூட்டுறவு சங்க "நாட்டுச் செக்கு" எண்ணெய்களையே உபயோகியுங்கள்.

S. உத்தண்டி,
தலைவர் & நிர்வாகக் குழுவினர்

மனிதன் கடவுளை நம்புகிறானா?

தந்தை பெரியார்

மனிதனுக்குள் புகுத்தப்பட்ட (கற்பிக்கப்பட்ட) கடவுள் சர்வ சக்தி யுள்ளது, எல்லாம் வல்லது, யாவுமா யிருப்பது, கடவுளன்றி அணுவும் அசையாது, கடவுளன்றி உலகில் எந்தக் காரியமும் நடவாது. யாவற்றையும் கடவுளே நடத்துகிறார் என்றெல்லாம் கடவுளைப் பற்றிக் கூறித்தான் மனிதனுக்கு கடவுள் புகுத்தப்பட்டிருக்கிறது. மனிதனும் இந்தத் தன்மைகள், சக்திகள் இருக்கிறது என்கின்ற "உண்மை"யோடு தான் கடவுள் நம்பிக்கைக்காரன் ஆகிறான். ஆனால் வாழ்வில் மனிதன் எந்தத் துறையிலாவது, நடப்பிலாவது இந்தபடி நம்பி நடந்து கொள்கிறானா ?

மனித மற்றும் ஜீவராசிகள் யாவும் ஆண் பெண் சேர்க்கையால்தான் சூல் ஆகிப் பிறக்கின்றன. இதில் எதுவும், எவனும் கடவுளை நம்புவதுமில்லை. கடவுளை எதிர் பார்ப்பது மில்லை.

பாடுபடாமல் முடியுமா ?

மனிதன் ஜீவன் பிள்ளை பெற மருத்துவம் வேண்டியிருக்கிறது. அந்தப் பிள்ளைக்குத் தாய்ப்பால் கொடுக்கவேண்டும். பிறகு சோறூட்ட வேண்டும். பெரியதானால் துணி வாங்கி உடுத்தவேண்டும். பள்ளிக்கு அனுப்பவேண்டும். உபாத்தியாயர் படிப்பு சொல்லிக் கொடுக்கவேண்டும். பையன் கஷ்டப்பட்டு, கவலை கொண்டு படிக்க வேண்டும். பரிட்சையில் பையன் தேற வேண்டும், பிரமோஷனாக வேண்டும், பிள்ளைக் குடிகள் பெறவேண்டும், அதுகளைப் படிப்பிக்கவேண்டும், இப்படியாக ஒரு துறையில் இவ்வளவு வேலை பெற்றோர் செய்தாகவேண்டும் இப்படி மனிதனுக்குவாழ்வில் எத்தனைத் துறைகள் இருக்கின்றனவோ அத்தனைத் துறைக்கும் பெற்றோர்களும் பிள்ளைகளும் அவரவர்கள் முயற்சித்துப் பாடுபட்டு செய்தால்தான் வாழ முடிகிறது.

மற்றும் மனிதன் உணவு ஜல மலம் கழித்தல் உறங்கல், கலவி செய்தல் முதலிய சகல காரியங்களும் அவனே முயற்சித்துப் பாடுபட்டு பக்குவப்படுத்திக் கொண்டுதான் வாழ்கிறான். இப்படியே நோய் வந்தாலும் அதற்குப் பரிகாரம் அவனே செய்துகொள்ள வேண்டும். கோயில் பரிகாரத் தன்மைக்கு ஏற்ப குணமடைவது, சாவது மூதலியவை மனிதனால் அல்லாமல் இவ்வளவு காரியங்களுக்கும் எவன் கடவுளை நம்பி கைகட்டிக் கொண்டிருக்கிறான்? ஆனால் வாழ்வில் எல்லாத்துறையிலும் எல்லா நிலையிலும் அறிவற்றத்தனமாயும் கடவுள் செயல் கடவுள் செயல் என்று சொல்லிக் கொண்டு தனது முயற்சிக்கெல்லாம் கடவுளைவேண்டுவது போல் நடித்துக்கொண்டும், நடந்து கொண்டும் இருக்கிறான் என்பதல்லாமல் எந்த மனிதன் எந்த ஒரு சிறு காரியத்திற்கு கடவுளை நம்பி எதிர்பார்த்து காத்துக் கிடக்கிறான்? நடந்து கொள்கிறான்?

கடவுள்-சம்பிரதாயச் சொல்லே !

மனிதனுக்கு மனிதன் கண்டால் 'வாங்க' "வாங்க" "சௌக்கியமா?" என்று கேட்பது போலும், மகராஜனாய் நீடுழிவாழவேண்டும் என்று ஆசி கூறுவது போலும், தொட்டதற்கெல்லாம் கடவுள் செயல், கடவுள் செயல் என்கின்ற சொல் ஒரு சம்பிரதாயச் சொல்லாக ஆகிவிட்டது. அதேமாதிரிதான் மனிதன் கோவிலுக்குப் போவது, கும்பிடுவது ஒரு பழக்கத்தில், சம்பிரதாயத்தில் பட்டுவிட்டது.

அப்படியேதான் கோவிலுக்கும் போகும் போது தேங்காய், பழம், மற்ற பொருள்

ஆராதனை முதலியவையும் ஏற்படுத்தி விட்டது.

சாமிக்கு வைக்கும் ''நைவேத்தியம்'' ''ஆராதனை'' பொருள்கள் சாமி சாப்பிடுகிறது என்றோ, சாமிக்குப் பயன்படுகிறது என்றோ எந்த அறிவாளியாவது மடையனாவது சொல்ல முடியுமா? அப்படியேதான் சாமிக்கு உருவங்கள் கற்பிக்கப்பட்டவையும்; சாமிக்கு உருவம் உண்டு என்று சாமியைக் கற்பித்தவன் சொல்லவே இல்லையே. சாமிக்கு உருவம் இல்லை, குணம் இல்லை. பிறப்பு இல்லை, இறப்பு இல்லை, ஆதி இல்லை அந்தமில்லை என்பதாக ஒன்றும் இல்லை-இல்லை-இல்லை என்று சொன்னானே தவிர சாமிக்கு ஏதாவது இருக்கிறது என்று எவன் சொன்னான்? இப்படி இருக்க பிறகு எப்படி சாமி (கடவுள்) மனிதனைப்போல நன்மை செய்தவர்களுக்கு நல்லது செய்வான் கெட்டது செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பான் என்பது.

பிரார்த்தனை செய்தவர்களுக்கு நல்லது செய்வான். செய்யாதவர்களைக் கவனிக்க மாட்டான் என்பதும், பாவம், புண்ணியம் என்பதும் (கடவுள்) மன்னிப்பு என்பதும் இப்படிப்பட்ட காரியங்களை எப்படி கடவுடன் சம்பந்தப்படுத்தப்பட்டது? மற்றும் உருவமே இல்லாதவனுக்கு மனித உருவம் வேண்டுதலே இல்லாதவனுக்கு பெண்டாட்டி வைப்பாட்டி, பிள்ளை, வீடு, நகை, கல்யாணம் முதலிய இவை எப்படி ஏற்பட்டது?

கருணையின் வடிவமா?

கருணைசாலி யாரையும் காப்பாற்றும் உதாரகுணசாலி என்பவனுக்கு கத்தி, வேல் வில், சக்கரம், மழு இவை எதற்கு? மற்றும் அவனைக் கொன்றான், இவனைக் கொன்றான், கோடிக் கணக்கான பேர்களைக் கொன்றான் என்பது எதற்காக? மற்றும் அவனை மோட்சத்தில் வைத்தான், இவனை நரகத்தில் வைத்தான் இதெல்லாம் எதற்காகச் சொல்லுவது மற்றும் கடவுள் ஒழுக்கசீலன் என்று சொல்லிவிட்டு அவன் பெண் டாட்டியைக் கெடுத்தான், இவன் பெண் டாட்டியைப் பலாத்காரம் செய்து ஏமாற்றிக் கெடுத்தான், இரண்டு பெண்டாட்டி மூன்று பெண்டாட்டி, ஆயிரம் பெண்டாட்டி, பத்தாயிரம் பெண்டாட்டி, பல்லாயிரம் பெண்களிடம் சுகம் அனுபவித்தான் என்பதெல்லாம் எதற்கு? இவை மனிதனுக்குஉள்ள கடவுள் நம்பிக்கையைக் காட்டுகிறதா? மனிதன் கடவுள் நம்பிக்கையால் சுத்த காட்டு மிராண்டி ஆகிவிட்டான்—ஆகி வருகிறான் என்பதைக் காட்டுகிறதா? இவற்றைக் கடவுள் பிரச்சாரக்காரர்கள் உணர வேண்டும். கடவுள் நம்பிக்கை இருந்தால் மானம், வெட்கம், அறிவு, தெளிவு இருக்கக்கூடாது என்பது நிபந்தனையா என்று கேட்கிறேன்.

P. P. SONS தயாரிப்பு

ருசியுள்ளது

மணமுள்ளது

தங்கம் டீலக்ஸ்

துவரம்பருப்பு

தயாரிப்பாளர்கள்:

பெ. பழனிச்சாமி நாடார்

தூத்துக்குடி.

திருமணங்கள் பற்றிய புரட்சிகரமான சிந்தனை!

அமெரிக்கக் கருத்தரங்கில் திருமதி சாட்டிர் விளக்கம்.

'திருமணம் என்பது துவக்கத்திலிருந்தே ஒரு நிரந்தர ஏற்பாடாக இருத்தல் சரியல்ல. குடும்பநல வாழ்க்கைக்குத் தங்கள் தகுதியை பரிசோதித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் படி முதலில் அய்ந்து ஆண்டுகளுக்கு ஒரு வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அது வெற்றிகரமாக இருந் தால் மேலும் அய்ந்து ஆண்டுகளுக்கு அதை புதுப்பித்துக்கொள்ளலாம். வெற்றி காணா விட்டால், தகராறுகள், கெட்ட பெயர், கோர்ட்டு செலவு தொல்லைகள் இன்றி திரு மண ஒப்பந்தத்தை ரத்து செய்துவிடலாம்''

—என்று கலிஃபோர்னியாவைச்சேர்ந்த திருமண—குடும்ப வாழ்க்கை உறவு பற்றிய விஷயங்களில் ஆராய்ச்சி செய்துள்ள நிபு ணரான திருமதி சாட்டிர் ஒரு கருத்தரங்கில் தனது கருத்தை விளக்கினார்.

அமெரிக்க உளஇயல்சங்கம் இந்த கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் திருமதி சாட்டிர் ஒரு அரியக் கட்டு ரையைப் படித்துக் காட்டினார்.

அக்கட்டுரையில் அவர் மேலும் விளக் கியதாவது :—

திருமணம் என்பதுதான் என்ன? கூடி வாழும் நிலைக்கு ஆன ஒரு ஒப்பந்தம் தானே? ஆனால் தற்போது அந்த ஒப்பந் தத்துக்கு காலவரம்பு இல்லாமல் வாழ்நாள் பூராவுக்கும் ஆன நீண்டகால ஒப்பந்தமாக உள்ளது, இதை மறு பரிசீலனை செய் வதற்கு வாய்ப்பும் இல்லை. ஒப்பந்தத்தை ரத்து செய்யவேண்டுமென்று விரும்பினால் அதற்கு சமூகக் கட்டுப்பாடுகள் இடந்தருவ தில்லை. சமூகம் ஏற்கும் வழியுமில்லை. கற்பனையாகக் கற்பைக் காப்பது என்பதன் பேரால் முக்கியமான வாழ்க்கையை அலட்சி யப்படுத்துவதாக இருக்கிறது.

அனுபவ அறிவு போதிய அளவு இல் லாத ஆரம்பகாலத்தில் வாழ்க்கைத் துணை வர்களைத் தேடிக்கொள்வதில் தவறே ஏற் படாமாட்டாது என்று கொள்ள முடியுமா? தவறு இராதென எதிர்பார்க்க முடியாது.

பயிற்சிக்கு வாய்ப்பு வேண்டும்

வாழ்க்கைத் துணைவராகும் ஆணும் பெண்ணும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு பயிற்சிக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் இந்தக் காலத்தில் அவர்களின் மன ஒற்றுமை ஒருவருக்கொரு வர் அறிந்து சோதித்துக்கொள்ளலாம், கற்பனையான ஒரு கற்பு என்ற தத்துவத் தின் பேரால் இந்த முக்கியமான படிப்பினை அலட்சியம் செய்தல் கூடாது. மனமொத்த வாழ்க்கை நடத்த முடியாவிடில் பிரிந்து கொள்ள வசதி ஏற்பட வேண்டும்

இப்படி ரத்து செய்யப்படும் வாழ்க்கை ஒப்பந்தங்களில் பிறக்கும் குழந்தைகளை வளர்த்துப் பாதுகாக்க குழந்தை வளர்ப்பில் தனிப் பயிற்சி பெற்ற செவிலித்தாய்களின் வசம்விட்டு கவனித்துக்கொள்ளச் செய்ய லாம், இரத்தபாசம் என்பதெல்லாம் அவ ரவர் மூளையில் உதிப்பதேயாகும். இவ் வாறு திருமதி சாட்டிர் தமது கட்டுரையில் விளக்கியுள்ளார்.

ஈ. வெ. ரா.

-: குறிப்பு :-

பேய் இருக்கிறது என்பது எவ்வளவு பொய் சங்கதியோ அவ்வளவு பொய் சங்கதி கடவுள் இருக்கிறது என்பதும் பொய்யே யாகும்.

தேவர்கள் என்பதும் பெரும் பொய்யே யாகும்.

மேல் உலகம் என்பதும் மகா மகா பொய்யே யாகும். ஏனெனில் இந்த உலகத்திலிருந்து ஆகாயமார்க்கத்தில் சுமார் மூன்று கோடி மைல் தூரத்தில் சூரியன் இருக்கிறது. அதுவரை தூரதிருஷ்டிக் கண்ணாடியால் ஆகாயம் பார்க்கப்பட்டாய் விட்டது. எங்கேயும் உஷ்ணம் தவிர எந்த உலகமும் தென்படவில்லை. இது வான சாஸ்திரிகள் கண்டுபிடித்த செய்தி.

இராட்சதர் என்பதும் சுத்தப் பொய். ஏனென்றால் இராட்சதர், அசுரர் என்பவர்கள் எல்லாம் இந்தப் பூமியில் இருந்ததாகத் தான் சொல்லப்படுகிறது. இதற்குப் பாட்டிக் கதைகளை, புராணங்களைத்தவிர எந்த ஆதாரமும் இன்னமும் இல்லை.

இவர்கள் கடவுள்களுக்கு எதிரிகளாக இருந்து கொல்லப்பட்டார்கள் என்றால் 'கடவுளுக்கு' எதிரி இருக்க முடியுமா?

ஜோசியம் என்பதும் பெரும் பொய்; வெறும் ஏமாற்றுதலே ஆகும்.

சகுனம் பொய்.

இராகுகாலம், குளிகை, எமகண்டம், நல்லநேரம், கெட்டநேரம் எல்லாம் பொய். பட்சி சாத்திரமும் பச்சைப் பொய். நட்சத்திர பலன், கிரகப்பலன், வாரபலன், மாத பலன், வருடபலன் என்பவை யாவும் பொய்.

பல்லி விழும் பலன், கனவு காணும் பலன், தும்மல் பலன் எல்லாம் பொய். கழுதைக் கத்துதல், ஆந்தை அலறுதல், காக்கை கரைதல், நாய் ஊளையிடுதல் ஆகியவற்றிற்கு, பலன் என்பதெல்லாம் பொய்.

மந்திரம், மந்திரத்தால் அற்புதம் செய்தல் முதலிய எல்லாம் சுத்த பித்தலாட்டம் பொய்.


எண்ணிக்கையில் மூன்று, பதின்மூன்று. எட்டு, பதினெட்டு எண்ணிக்கைகள் கெட்டவை என்பவை சுத்தப் பொய். இன்னும் இவைபோன்ற அநேக காரியங்கள் மூட நம்பிக்கையின் பாற்பட்டதேயாகும்.

"தெரியாத புரியாதக் கடவுளை மனிதன் நம்பித்தான் ஆகவேண்டும்" என்பதான கட்டாயம் ஏற்பட்டு மனிதன் நம்ப ஆரம்பித்ததின் பலனே இவ்வளவு பொய்களையும் மனிதன் நம்பவேண்டியவனாகி விட்டான்.

நம்பினதின் பலனாக பலன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கவலைப்படாமல் அவைகளுக்குத் தன்னை சரிப்படுத்திக் கொள்ளுகிறான்.

பஞ்சேந்திரியங்களுக்குத் தட்டுப்படாத விஷயம், பொருள், நடப்பு எதுவானாலும் அது பொய்.

இதுதான் பகுத்தறிவுவாதியின் கொள்கை.


T. ARASU